ஈழத்துத் தமிழ் நாவல் வரிசை

# காலங்கள் சாவதில்லை

தெளிவத்தை ஜோசப்

புனைவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு

அனுமதிப்பத்திரம்

அனுமதிப்பத்திரம் : EPAB/02/18878

புத்தகத்தின் பெயர் : காலங்கள் சாவதில்லை

நூலாசிரியர் : தெளிவத்தை ஜோசப்

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கிறேன்.

விஜித வெலகெதர

செயலாளர்

கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

2017 செப்டெம்பர் மாதம் 20

கல்வி அமைச்சு "இசுருபாயா" பத்தரமுல்ல

அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி 2022.09.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்கள் சாவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காலங்கள் சாவதில்லை (நாவல்)* • *தெளிவத்தை ஜோசப் எழுதியது* • *முதல் பதிப்பு 1974* • *புனைவகம் பதிப்பு 2014* •*வெளியீடு: புனைவகம், 39, 36வது ஒழுங்கை, கொழும்பு 06. தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்:* kumbhlk@gmail.com, *இந்தியாவில்: 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை - 600 026. யாழ்ப்பாணத்தில்: வேம்பன் ஒழுங்கை, உரும்பராய், யாழ்ப்பாணம்* • *அச்சு: குமரன் அச்சகம், 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06.* • *வெளியீட்டு எண்: 05*

Kaalankal Saavathillai (Novel) • by S. Joseph • First Edition 1974 • Punaivakam Edition 2014 • *Published by* Punaivakam, 39, 36th Lane, Colombo -06, Tel. - 011 2364550, E.mail: kumbhlk@gmail.com, India: 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026. Jaffna: Vamban Lane, Urumpirai, Jaffna • *Printed by* Kumaran Press (Pvt) Ltd.39, 36th Lane, Colombo -06. • Publication No. 05

ISBN 978-955-0350-04-9

**சமர்ப்பணம்**

பேராசிரியர் க. அருணாசலம்

அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், ஆய்வாளர், கட்டுரையாளர், விமர்சகர் என பன்முக ஆளுமை பெற்றுள்ள - அண்மையில் மணிவிழா கண்ட நாடறிந்த எழுத்தாளராகிய தெளிவத்தை ஜோசப் அவர்கள் இன்று போல் பரவலாக அறியப்படாத இலக்கியச் சூழலில் ஏறத்தாழ 38 வருடங்களுக்கு முன்னரெழுதிய 'காலங்கள் சாவதில்லை' என்ற நாவலே இன்று மறுபதிப்புக் காண்கின்றது. மலையக இலக்கியம் இன்று ஆரோக்கியமான வளர்ச்சியை எய்தியுள்ள சூழலில் இந்நாவலின் முக்கியத்துவத்தினை எடை போடுவதற்கு மலையக நாவல் வரலாற்றுப் பின்புலத்தில் அதனை வைத்து நோக்குவதே பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

ஏறத்தாழ இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழக மக்கள் மலையகத்திற்கு ஏமாற்றப்பட்டு அழைத்து வரப்பட்டமை, நீண்டவழி நடைப்பயணம், முன்பின் கண்டிராத ஈழத்து, மலையகத்துச் சூழல் முதலியன பற்றி சிறப்பாக 'தூரத்துப் பச்சை' விவரிக்கின்றது. பின்னர் சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளளவில் உருவான பிரஜாஉரிமைப் பிரச்சினைகள், தமிழகம் செல்லவேண்டிய நிர்ப்பந்தம், தமிழகம் சென்றோர் நிலை, தமிழகம் செல்ல முடியாதோர் நிலை முதலியன பற்றி சில நாவல்கள் சித்திரித்துள்ளன. எழுபதுகளில் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்ட நிலையில் ஏற்பட்ட விளைவுகள் பற்றி ஓரிரு நாவல்கள் பேசுகின்றன. பேரினவாத பின்புலத்தில் உருவான வன் செயல்கள் பற்றிச் சில நாவல்கள் விவரிக்கின்றன. தோட்ட அதிகாரி களினாலேற்படும் கஷ்டங்கள், கொடுமைகளை சில நாவல்கள் அம்பலப் படுத்துகின்றன. இவ்விடயம் பற்றி கவனம் செலுத்தும் நாவல்களுள் முதனிலை நாவலாக 'காலங்கள் சாவதில்லை' என்ற இந் நாவல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் சற்று விவரிப்பதாயின் துரைமார், கங்காணிமார், கண்டக்டர்மார், ஆபிஸ் உத்தியோகத்தர்கள் என வெவ்வேறு நிலைகளில் தொழிலாளர்களுக்கு மேலதிகாரிகளாக இருப்பவர்களை குறிப்பாக கிளாக்கர்மாரை முதன்மைப்படுத்தி (அவரோடு சின்னத்துரையும்) அத்தகையோர் செய்கின்ற அடாவடித்தனங்களை அம்பலப்படுத்துவதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவற்றுக் கெதிராக தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை - இந்நாவல் விரிவாக விளக்க முற்படுகின்றது. இவ்விதத்திலேயே மலையக நாவல் வரலாற்றில் தனக்கென்றொரு நிலையான இடத்தினை இந்நாவல் பெற்றுள்ளது. தொடர்ந்தும் அத்தகைய நிலையைத் தக்க வைத்தும் வருகின்றது. இந்நாவல் வெளிவந்த காலப்பகுதியில் ஏனைய நாவல்களை விட இந்நாவல் கடுமையான சர்ச்சைகள் சிலவற்றிற்குள்ளாகியிருந்தமை காரணமாகவும் ஏனைய மலையக நாவல்களைவிட இந்நாவல் முக்கியம் பெற்றிருப்பது இன்று பின்நோக்கி பார்க்கின்ற போது புலப்படுகின்றது. (பார்க்க: பின்னிணைப்பு).

தீவிர வாசிப்பும் தேடலும் விழிப்புணர்ச்சியும் அதிகரித்துள்ள இன்றைய ஆரோக்கியமான சூழலில்-காலங்கள் சாகாத நிலையில் மலையகச் சூழல் பற்றி வாசகர்களையும் விமர்சகர்களையும் மறுபடி ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுவதற்கு இந்நாவலின் மீள் வரவு வழி சமைக்குமென்பதில் ஐயமில்லை.

**பேராசிரியர் செ. யோகராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பின்

## முன்னுரை

இந்த நாவலில் வரும் அத்தனை பாத்திரங்களும் மலையகத்துத் தோட்டங்களில் ரத்தமும் சதையுமாக வாழ்பவர்கள். உழைப்பையே நம்பி வாழும் ஒரு மக்கள் கூட்டத்தின் அபிலாசைகள், விருப்பு வெறுப்புக்கள், நலிவு நம்பிக்கைகள் பற்றியும், அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகள் பற்றியும் இந்த நாவல் கூறுகின்றது.

இனம், மொழி, மதம், அரசியல் போன்ற எந்தவித பிரிவினாலும் மக்கள், மக்களை வெறுக்கக் கூடாதென்று திடமாகக் கருதுகிறவன் நான்.

வீரகேசரி எழுத்தாளன் என்று பொதுவாகவும், நல்ல சிறுகதை எழுத்தாளன் என்று இலக்கியக்காரர்களாலும் கருதப்படும் என்னுடைய இந்த நாவலை, வீரகேசரி தனது 21-வது பிரசுரமாக வெளிவர முன்னின்று உழைத்த அனைவருக்கும் எனது நன்றி.

இந்த முன்னுரையை எழுதுவதற்காக மறுபடியும் ஒருமுறை இந்த நாவலை வாசித்த போது நன்றாக இருப்பதாகத்தான் எனக்குப்பட்டது. நீங்களும் வாசியுங்கள். உங்களுக்கும் பிடிக்கும்.

**தெளிவத்தை ஜோசப்**

கொழும்பு

*1.6.1974*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலங்கள் சாவதில்லை

## 1

ஆபீஸுக்கேறும் படிகளில் மிக அவசரமாக ஏறிக் கொண்டிருந்தான் ஆறுமுகம்.

'தன்னுடைய பெயரைக் கூப்பிட்டார்களோ என்னவோ" என்ற துடிப்பில் கால்களைவிட மனம் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

முதல் பெரட்டிலிருந்து சம்பளம் போடுவதென்றால் அவன் பிந்தி யிருக்க முடியாது. போனமாதம் முதல் பெரட்டிலிருந்து போட்டதால் இந்த மாதம் கடைசிப் பெரட்டிலிருந்துதான் போடுவார்கள்.

செக்ரோலில் ஐநூறு பெயர்கள் இருக்கின்றன என்றால் எப்படியும் இருபத்தெட்டு அல்லது முப்பது பக்கம் எழுதப் பட்டிருக்கும். முதற் பக்கத்தில் 'சின்னக்கலப்பன் கங்காணி செவத்தானும்', கடைசிப் பக்கத் தில் 'வீரமுத்து கங்காணி சண்முகமும்' இருந்தால் ஒவ்வொரு மாதமும் முதன் முதல் சம்பளம் வாங்குவது செவத்தானாகவும், கடைசி ஆளாகச் சம்பளம் வாங்குவது சண்முகமுமாகவே இருக்கும்.

நாலு நாலரைக்குச் சம்பளம் போடத் தொடங்கினால் செக்ரோலில் பாதி முடிய எப்படியும் ஐந்து ஐந்தரை ஆகும். முடியாத பாதிப் பக்கங் களில் இருக்கும் ஆண்கள், பெண்கள், நடக்கச் சக்தியற்ற கிழடுகள் அனைவரும் இருட்டிய பிறகே சம்பளம் வாங்கிக் கொண்டு வீடு போக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றார்கள். இதற்கு அவர்கள் செய்த பாவம் செக்ரோலின் கடைசிப் பக்கங்களில் அவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருப்பதே!

மற்றவர்களைப் போலவே மழை, வெய்யில் பாராது உழைத்தும் இவர்களுக்கு வெளிச்சத்தில் சம்பளம் வாங்கி, வெளிச்சத்தில் வீடு போக முடிவதில்லை.

"இன்னைக்கு சம்பளம், ஆத்தா றொட்டி வாங்கித் தருவா", "இன்னைக்கு சம்பளம் அப்பா மிட்டாய் வாங்கித் தரும்" என்ற ஆசை யில் அரைநேரப் பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போட்டு விட்டு பகலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்தே ஆபீஸைச் சுற்றி ஏங்கித் திரியும் சின்னஞ் சிறுசுகளின் ஆசையைப் பூர்த்தி செய்ய அவர்களால் முடிவதில்லை.

ஒருபாதி மக்கள் மட்டுமே இந்த அவதிகளை மாதா மாதம் அனுபவிப்பதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் ஒருமாதம் முதல் பக்கத்திலிருந்து சம்பளம் போட்டால் மறுமாதம் கடைசிப் பக்கத்திலிருந்து சம்பளம் போடுவார்கள்.

இந்த மாறுதல் முறைப்படி இந்தமாதம் கடைசிப் பெரட்டிலிருந்து சம்பளம் போடுவார்கள். ஆகவே ஆறுமுகத்தின் பெயர் இந்நேரம் வாசிக்கப்பட்டிருக்கலாம். அல்லது வந்து கொண்டிருக்கலாம்.

"பேர் இந்நேரம் வந்திருக்காட்டி போனதும் டக்குன்னு வாங்கிக் கிட்டு ஓடியாந்துறலாம்........"

மனதின் வேகம் கால்களை விரட்டியது.

கறுத்து மெலிந்த அவனுடைய கால்கள் 'விசுக், விசுக்' கென்று ஏறின. உந்தி ஏறும்போது குலுங்கியாடும் கெண்டைச் சதையின் உரோமங்கள் மெல்லிய ஸ்பரிங்போல் குலுங்கின.

கீழே பெரட்டுக் களத்திலிருந்து மேலே ஆபீஸுக்கு ஏறும் படிக் கட்டின் இருபுறமும் ஒரே நிழல் பொட்டல். பெரிது பெரிதாக வளர்ந்து கிளை பரப்பி நிற்கும் நாலைந்து பெயர் தெரியாத மரங்கள். அந்த ராட்சத மரங்களில் பெரிது பெரிதாகப் பூத்துக் கிடக்கும் குருதிநிறப் பூக்கள்.

நன்றாகப் பூத்திருக்கும் நாட்களில் மரம் பச்சையாக இல்லாமல் ஒரே சிவப்பாக இருக்கும். நாலைந்து மரங்களும் பூத்துக்குலுங்கும் போது பச்சைக்கு இடமேயிருக்காது. செஞ் சுடர் பற்றி எரிவதுபோல் ஒரே சிவப்பாக இருக்கும்.

படிக்கட்டின் இரு மருங்கிலும் சப்பாத்துப் புல் சொள சொள வென்று வளர்ந்து கிடந்தது. புல்லின் அடியில் தண்ணீர் தேங்கி நின்று நின்று சேறும் சகதியுமாயிருந்தது.

நடுவானத்தில் சூரியன் நிற்கும் போது கூட இதற்குள் வெய்யில் விழுவது கிடையாது. படிகளில் இருக்கும் கல்லெல்லாம் எப்போதும் ஈரமாகவேதான் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்திலிருந்து விழும் பெரிய சிவப்புப் பூக்கள் கற்களின் மேல் அழுகிச் சொத சொதத்துப் போய்க் கிடக்கும். அடி வைப்பவர்கள் நிதானத்துடன் வைக்காவிட்டால் அழுகிக் கிடக்கும் பூவின் மேலோ அல்லது புல்லுக்கு அடியில் சேற்றிலோதான் காலை ஊன்ற நேரிடும்.

ஈரமும் புல்லும் இருந்தால் அட்டைகளுக்குக் கேட்க வேண்டுமா? விரலளவுக்குத் தலைதூக்கி நின்று ஆடிக் கொண்டே இருக்கும், மனித வாடை வீசுகிறதா என்று மோப்பம் பிடித்துக்கொண்டு.

ஆறுமுகம் அவசரமாக நடந்தாலும் நிதானமாகவே நடந்தான்.

ஆடிப்பூசை கோவிலடிபோல் சந்தடி மிக்கதாக இருக்கிறது சம்பள வாசல். பங்களாவிலிருந்து சற்றுத் தள்ளிக் கடைகள் விரிக்கப்பட்டிருக் கின்றன.

காய்கறி, கருவாடு, மீன், வெற்றிலை பாக்கு, துணி மணி, ரொட்டி, மிட்டாய், இன்னும் பொட்டணிக்காரன், வளையல்காரன் என்று கொடுக்கும் சாமான்களுக்குப் பணம் வாங்குபவர்களும்; ஏற்கனவே கொடுத்த சாமான்களுக்குப் பணம் வாங்க வந்தவர்களுமாக தோட்டத் துக்கு ஒரு புதுப் பொலிவை யூட்டிக்கொண்டிருந்தனர் இப் புது மனிதர்கள்.

சம்பளம் வாங்கியவர்களில் ஒரு சிலரே வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தனர். மற்றவர்கள் திரும்பத் திரும்பக் கடைத் தெருவைச் சுற்றிக் கொண்டிருந்தனர். அதில் தான் எத்தனை குஷி, எத்தனை தெம்பு!

தடதடவென்று படிகளில் ஓடிவந்துகொண்டிருந்தாள் கண்ணம்மா.

அவளுடைய அழகான கண்களைப் பார்த்தோ, அல்லது பாரதியின் பாடல் நினைவுக்கு வந்தோ அவளுக்கு யாரும் அப்படிப் பெயர் வைத்துவிடவில்லை.

ஆஸ்பத்திரியில் பிள்ளை பிறந்தவுடன், ‘என்ன பேர்?” என்றார் டாக்டரய்யா. டக்கென்று ஒரு பெயரைச் சொல்லாவிட்டால், ‘மலை யாளம் அல்லது மண்டபம்' என்று எழுதிக் கொள்வார்.

இதற்குப் பயந்து ஏதோ அப்போது ஞாபகத்தில் வந்த பெயரைச் சொல்லிவைத்தார்கள். அது இப்போது அப்படிப் பொருந்திவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களென்றால் கண்கள். அப்படியொரு கண்கள் அவளுக்கு. அழகிய அந்தக் கண்களுக்குள் விழிகள் உலாவுவது ஒரு 'வித்தை' போலிருக்கும்.

உழைத்துக் கறுத்த உடலில் ஒரு லாவண்யம். அழகான கட்டுக் கோப்பு!

ஏதோ ஒரு சினிமாப் பாட்டை உதட்டுக்குள்ளாக முனகியபடி, குப்புறத் தள்ளும் படிக்கட்டில் திடுதிடு வென்று ஓடி வந்தவள், அவசரமாக ஏறிக்கொண்டிருக்கும் ஆறுமுகத்தைக் கவனிக்கவில்லை. அடுத்த அடி வைக்க காலைத் தூக்கிய பிறகே எதிரே ஆள் இருப்பது இரு வருக்கும் தெரிந்தது.

ஒரு வினாடி கண்ணம்மாவும் ஆறுமுகமும் மோதிக்கொள்ளப் பார்த்தார்கள். தடுமாறிப்போன ஆறுமுகம் 'சதக்' என்று சேற்றுக்குள் காலை ஊன்றினான்.

கண்ணம்மா 'க்ளுக்' என்று பல்லெல்லாம் சிந்திவிடுகிற மாதிரி சிரித்துவிட்டாள்.

"நீயா இருந்தாவாசி விடுகிறேன்" என்றான் ஆறுமுகம்.

"ஐயே! ஆசைதான் பொண்டுக மோதுவாளுகன்னு வீரசிங்க மில்லே....." என்றவள் குடுகுடென்று நாலைந்து படி இறங்கியோடி நின்று திரும்பப் பார்த்தாள். ஆறுமுகம் காலைக் கழுவிக் கொண்டிருந் தான். தற்செயலாகத் திரும்பியவன், கண்ணம்மா நின்றுதிரும்பத் தன்னைப் பார்ப்பதைக் கண்டான்.

காளை நெஞ்சம் குதூகலித்துக் கொண்டது. கண்ணம்மாவின் பெரட்டுக்கு முந்தியது அவனுடையது. இப்போதுதான் கண்ணம்மா சம்பளம் வாங்கியிருப்பாளென்றால் அவன் ஆபீஸ் போவதற்கும், அவனுடைய பெயர் கூப்பிடப்படுவதற்கும் சரியாக இருக்கும்.

"இந்தா கண்ணம்மா! நீ நேரே ஆபீஸிலே இருந்தா வாறே....?"

"இல்லாட்டி! வங்களாவுலருந்தா வர்றேன்." அவளுக்கு எதிலுமே கிண்டல் தான்.

"நானு போயிறலாமா..... கூப்பிடங்காட்டியும்?"

"போயிறலாம்னு நெனைக்கிறேன். இல்லாட்டித் தானென்ன? நாளைக்கிக் காலையில் போய் வாங்கிக்கிறது......." அவள் குதித்தோடி விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சிட்டெனப் பறந்தான்.

கவுனும் தானுமாகப் பூந்தோட்டத்தில் நின்று கொண்டிருந்த துரை சாணியம்மாவைப் பார்த்ததும் பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொண்டு விரைந்தான் ஆறுமுகம்.

ஈரப்பலாமரத்தைத் தாண்டி ஆபீஸ் படியில் அவன் கால் வைக்கும் போது அவனுடைய பெயர் கூப்பிடப்படுவது கேட்டது.

"வெள்ளையன் ஆறுமுகம்......"

"வெள்ளையன் ஆறுமுகம்......"

"வெள்ளையன் ஆறுமுகம்....."

கிளாக்கரய்யா முதல் கூறி, அடுத்து துரை கூறி, கடைசியில் பெரிய கங்காணியும் கூறிவிட்டார்.

"தொரை செலாங்க" என்று அவன் துரையின் ஜன்ன லண்டை நிற்கையில்," வெள்ளையன் சின்னாத்தா" என்றார் அய்யா.

"நான் ஆறுமுகங்க...."

"வெலகு அங்கிட்டு; பேர் கூப்பிடயில இல்லாட்டி கடசில வாங்கு; நிற்க முடியாதுன்னா நாளைக்கு வா...." என்று கிளாக்கரய்யா உள்ளே யிருந்து கத்தினார்.

" அதுதானே ஒதுங்கேண்டா நின்று கடைசியிலவாங்கேன்" பெரிய கங்காணி வெளியேயிருந்து கத்தினார்.

"நல்லா ஒத்து ஊதுங்க. அப்பதான் கன்னம் உப்புறமாதிரி வயிறும் உப்பும்..." என்று ஆறுமுகம் பதிலுக்கு இரைந்தான்.

"ஏய் மிச்சம் பேசாதே வெலகிக்கோ; சம்பளத்துக்கு நிற்கிற பொம்பளை ஆளுக்கு எடம் குடு...."

"நான் ஒண்ணும் மிச்சத்தைப் பேசலே. மொத்தத்தைத்தான் பேசு கிறேன்.... எனக்குக் குடுத்திட்டு சின்னாத்தாளுக்குக் குடுங்க...."

"பேசப் படிச்சிக்கிட்டானுக நல்லா..... பேரு கூப்பிடயில செரக்கவா போயிருந்தே....? இப்ப வந்து கலாட்டா பண்ணிக் கிட்டிருக்கே..."
"இந்தாங்க கங்காணியாரே, நாங்க பேசப் படிச்சிக்கிட்டிருக்கோம். அதே மாதிரி நீங்களும் பேசறத்துக்கு படிச்சிக்கிடுங்க. செரைக்கவா போனே அப்படி இப்படின்னா அப்பறம் செரைச்சே காட்டிறுவேன்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா பயமா காட்டுறே! தொரைகளே என்ன சொல்றான் பாத்தீங்களா? இவனுக்குத் தெண்டம் போடுங்க. பத்து ரூவா தெண்டம் போடுங்க..."

"தெண்டம் போடச் சொல்லுறியா? போட ஏலுமா கங்காணி உன்னாலே?" என்றவன், கங்காணியாரின் இடுப்பு வேட்டிக்குள் கையை விட்டு அவரை இழுத்தெடுத்து உலுப்பினான்.

பெரிய கங்காணியையும் ஆறுமுகத்தையும் பிரித்தெடுத்தார் தலைவர்.

"என்னடா நீயும் இப்படி மடத்தனமா நடந்துக்கிறே. கங்காணி மேலே உன் கை பட்டிச்சுன்னா உன்னை சும்மா உட்டுறுவானுகளா..... நாமளே வேண்டாத மருமக்களா இருக்கோம். கை பட்டா குத்தம் கால்பட்டா குத்த முன்னு...... விட்டுறு.... விட்டுத்தொலை."

பெரிய கங்காணியின் இடுப்பு வேஷ்டி அவிழ்ந்து விழாத விதத்தில் ஆறுமுகத்தை விலக்கி, கள்ளி மரத்து ஓரத்துக்கு அவனை அழைத்துச் சென்றார் தலைவர்.

ஆறுமுகம், கங்காணிமேல் பாய்ந்த பாய்ச்சலில் பயந்து போன துரை, பயத்தைக் காட்டிக் கொள்ளாமல், "கமான் ஸ்டொப் தட்" என்று மேசையில் ஓங்கிக் குத்தினார்.

மேசையில் இறங்கிய குத்தில் ஜன்னலின் கொக்கி சிணுங்கிக் கொண்டது.

ஜன்னலின் உயரத்துக்கே துரையின் மேசை இருப்பதால் ஜன்னலின் பலகையும் மேசையும் ஒன்றோடு ஒன்று ஒட்டிப் போடப்பட்டிருந்தன. அந்த ஒட்டுதலால் ஏற்பட்ட அதிர்ச்சி தான் கொக்கியைக் குலுக்கியிருக் கிறது.

மேசையில் கும்பல் கும்பலாய் சம்பளம் பணம் குவிந்து கிடப்பதை உணர்ந்த துரை, எழுந்து எக்கி ஜன்னலை இழுத்து மூடிவிட்டு வெளியே வந்தார்.

சம்பளத்தை அத்துடன் நிறுத்தி விடுவார்களோ என்று பயந்தவர்கள் ஆறுமுகத்தை நோக்கி முணுமுணுத்தனர். நேரங் கழித்து நாட்டுக்குப் போனால் சுவையான கள் கிடைக்காதே என்று ஏங்கிய கிழடுகள் தங்களுக்குள் முனகிக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறாந்தை வழியாக வெளியே வந்து ஜன்னலருகில் நின்ற துரையைப் பார்த்த பெரிய கங்காணி, மரியாதையுடன் குனிந்தபடி கூறினார்: "ஐயா! ஆபீஸுக்குள்ளே போங்க அவன் கெடக்குறான் கழுதை நீங்க சம்பளத்தைப் போடுங்க. இவனுகளை மாதிரி எத்தனைப் பயலுகளைப் பார்த்திருப்பேன்" என்று தனது மகிமைகளை மானசீகமாக வாழ்த்திக் கொண்டார்.

"தட் செப் இஸ்டேம் டு மச்" என்று கூறியபடி ஜன்னலைத் திறந்து விட்டார் கிளாக்கரய்யா.

மேல் கொக்கியைத் திறப்பதற்காக அவர் கையை உயர்த் திய போது, கிழிசல் வழியாக 'கம்கட்' தெரிந்தது. மற்றக் கையால் நாசூக்காக மறைத்துக் கொண்டார். கால் சட்டைக்குள் திணித்து விட்டிருந்த சட்டை மேலே வந்து விட்டதால் வெளுத்துக் கொழுத்த அவருடைய இடுப்புத் தெரிந்தது. அதை மறைத்துக் கொள்ள அவரிடம் இன்னொரு கை இல்லை.

கம்கட்டுக் கிழிசலைப் பார்த்தும் பார்க்காதது போல் பாவனை செய்து கொண்ட துரை, கிளாக்கரய்யா சொல்லியதை ஒத்துக் கொண்டார், "எஸ்.எஸ்.ஹீ இஸ்ஃபெட் ஹெடட்" என்று முனகிக் கொண்டதன் மூலம்.

எப்போதோ மலையில் அவன், அவரிடம் தகராறு பண்ணியது நெஞ்சில் ஓடியிருக்க வேண்டும்.

கிளாக்கரய்யா கூறுவது எதையுமே துரை ஏற்றுக்கொள்வார். அதுவும் அப்படியே ஏற்றுக்கொள்வார். அவர்களின் இந்த அபூர்வ உறவுக்குக் காரணம் அய்யாவின் அழகான மனைவி என்பது தோட்டத்து மக்களின் ஒரு முகமான அபிப்பிராயம். இது உண்மைதானா என்பது ஒருபுற மிருக்கட்டும். இருவரும் பெர்னாண்டோக்கள். இருவரும் அண்டி இன்டியன்ஸ். இருவரும் ஒரே அரசியல் கட்சியின் தீவிர ஆதர வாளர்கள். இது போதாதா இவர் சொல்வதை அவரும், அவர் சொல்வதை இவரும் அப்படியே ஏற்றுக்கொள்வதற்கு!

கிளாக்கரய்யா கை கிழிந்த, கம்கட்டு கிழிந்த சட்டைகளாகப் போட்டுக் கொள்வதெல்லாம் துரையின் அனுதாபத்தைப் பெற்றுக் கொள்ளத்தான். தோட்டத்துத் துரை என்றால் பட்டத்து ராஜா போல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய அனுதாபமும் ஒத்துழைப்பும் இருந்துவிட்டால் என்னென்ன சாதனைகள் புரியலா மென்பது புரியாத ஒன்றல்ல.

மீண்டும் சம்பளம் போட ஆரம்பித்துவிட்டார்கள். கள்ளி மரத் தடியில் உட்கார்ந்திருந்த ஆறுமுகம் மௌனமாகக் கண்ணீர் வடித்தான்.

கங்காணியிடம் ஏறுமாறாக நடந்துகொண்டோமே! துரை சம்பளம் தரமாட்டாரோ! தெண்டம் போட்டு விடுவாரோ என்றல்ல அவன் கவலைப்பட்டது! கண்ணீர் விடுவது!

கண் வரம்பில் ஊறிநின்று, மூக்கடியில் ஓடிவந்து பொட்டென்று உதட்டில் விழுந்த கண்ணீரை விட மோசமாகக் கரித்துக்கொண்டிருந்தது காலையில் நடந்துவிட்ட நிகழ்ச்சிகள்.

"த்தூ" என்று கண்ணீரின் உப்புத் தனத்தை எச்சிலுடன் துப்பினான்.

அவன் துப்பிய சத்தம் கேட்டு கங்காணியார் அவனை முறைத்தார். அவன் திரும்பிக்கொண்டான்.

அன்று காலையில் மலைக்குப் போன அவனுடைய தாய், ஒன்பது மணிக் கொழுந்து நிறுத்ததும், "லேசாக மயக்கம் வருகிறது" என்று றோட்டருகில் உட்கார்ந்தாள். சிறிதுநேரம் நிழலில் இருந்ததாலும், யாரோ யாருக்கோ கொண்டுவந்த ஆறிப்போன தேநீரில் ஒரு 'நாலு மொடக்கு' ஊற்றிக் கொண்டதாலும் சற்றுத் தெம்பாக இருந்ததை உணர்ந்தாள். மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் கங்காணி கத்தியிருக்கிறான். எழுந்திருக்க முடிந்ததால் அவளும் மூச்சைப் பிடித்துக் கொண்டு இறங்கி ஓடினாள்.

வயிறு தனியாக ஓடிப்போகும்படியாக வலித்தது. இடமோ சறுக்கல் காடு; மிகவும் நிதானமாகவே காலை ஊன்றினாள்.

"இது ஏன்தான் உண்டாச்சோ..... எளவு! யாரு அடிச்சிக் கிட்டா இல்லே இல்லேன்னு" என்று அறிகுறிகள் தென்பட்ட நாளிலிருந்தே அடித்துக் கொள்ளுகின்றாள். என்றாலும் அதுவும் உருண்டு திரண்டு நிற்கிறது "அந்தா இந்தா" என்று!

பெத்துப் போடும் இறுதியன்றைக்குக்கூட மலையேறி உழைக்க வேண்டிய பரிதாபம் இந்த ஒரு கூட்டத்துக்கு மட்டும் எப்படியோ அழிக்க முடியாத தலையெழுத்தாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னதான் அப்படிப் பெற முடியாத இன்பத்தை பெத்துக்கிற துக்காக இதுக்கு இடம் கொடுத்தேனோ? அர்த்தராத்திரியில் ஆறேழு சின்னஞ்சிறிசுகளை சுத்திப் போட்டுக்கிட்டு, எது முழிச்சிக்கிறுமோ, எது கத்துமோன்னு பயந்து பயந்து உசுரைக் கையிலே புடிச்சிக் கிட்டு.."

மனம் கசப்பான எண்ணங்களை இழையோட்ட, கவனம் சறுக் கலில் கால் வைப்பதில் லயிக்காதிருக்க, அசட்டையாகக் கால் வைத்துச் சறுக்கி விழுந்துவிட்டாள்.

முழு மலையுமே அவளைச் சுற்றித்தான் நின்றது. கதண்டு கூடு கலைந்ததுபோல் ஆரவாரம்.

ஆறுமுகத்துக்கும் சேதி பறந்தது.

ஒரு வினாடி மலைத்துப் போனாலும் உடனே சுதாகரித்துக் கொண்டான்.

"மனுஷனை இழுபறியில விடாமே செத்துத் தொலைஞ் சுட்டா பரவாயில்லை" என்று சட்டென்று எண்ணிய மனதை அடித்து அமுக்கிக் கொண்டான்.

தாய் இன்னும் ஒன்றைச் சுமக்கத் துணிந்திருக்கும் சமிக்ஞைகள் தெரியத் தொடங்கிய அன்றிலிருந்து அவன் அவளுடன் முகம் கொடுத்துப் பேசுதில்லை. "இது என்ன எளவுக்கு இப்ப" என்னும் கோபந்தான். அவனுக்கு இதெல்லாம் புரிந்து விட்ட நாளிலிருந்தே, "தாய் அப்படி இருக்கிறாள்" என்று தெரிந்தபோதெல்லாம் அவள் ஆசுப்பத்திரிக்குப் போய்த் திரும்பி வரும்வரை முகத்தை இழுத்துக் கொண்டேயிருப்பான்.

இதோடு நாலாவது தடவை. அவனுக்கு பதினெட்டு, பத்தொன்பது வயது நடக்கும் போதிருந்தே இது போன்ற அருவருப்பை உணர ஆரம்பித்தான். இப்போது அவனுக்கு இருபத்திநாலோ, இருபத்தைந்தோ! இந்த ஆறு வருடத்துக்குள் நாலுதடவை அவளும் வயிற்றை இழுத்துக் கொண்டு திரிந்து விட்டாள்.

அவனால் முகத்தைத் தூக்கிக்கொண்டு திரிவதைத் தவிர வேறு ஒன்றும் செய்துவிட முடியாது.

உள்ளேயே புகைந்து, எரிந்து, குமுறிக் கொண்டிருப்பவனிடம், "உன் அம்மா இடுப்புவலி கண்டு மலையில் விழுந்து கிடக்கிறாள்" என்று சொன்னால், "மனுஷனுக்குத் தொந்தரவு கொடுக்காமல் செத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைஞ்சால் போதும்" என்று நினைக்காமல் வேறு என்ன நினைப்பான்?

தன்னுடைய தாயைப்பற்றித் தானே அப்படி எண்ணுவது அபாண்டம் என்பதை உடனே உணர்ந்துகொண்டவன், கங்காணியிடம் காதோடு காதாக ஏதோ கூறி விட்டு, மேகத்தைக் கிழித்துக் கொண்டிறங்கும் மின்னலைப் போல் தேயிலையைக் கிழித்துக் கொண்டிறங்கினான்.

ஒன்பது மணிக் கொழுந்தை ஏற்றிக்கொண்டு ரெட்டை வாங்கி வளைவில் லொறி ஏறிக்கொண்டிருந்தது. லொறி கேட்டு ஓடுவது அபத்தம் என்பது அவனுக்கே தெரியும். ஏற்றிக்கொண்டுபோகும் கொழுந்தை யெல்லாம் இறக்கிப் போட்டுவிட்டு ஸ்டோரிலிருந்து லொறி திரும்ப வந்து ஏற்றிக்கொண்டு போவதற்குள் அவள் பிணமாகி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கீழே பார்த்தான். கணபதியின் கார் நின்று கொண்டிருந்தது. மனதில் திருப்திப்பட்டுக் கொண்டான்.

அவளை ஏற்றிக்கொண்டு தோட்டத்து டிஸ்பென்சரிக்குப் போய் அவர்கள் கையை விரித்துவிடவும், அப்படியே பதுளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

அரசாங்க ஆஸ்பத்திரியில் அதுவும் ஒரு தோட்டத்து தொழிலாளி ஒரு நோயாளியைச் சேர்த்து விடுவதென்றால் அதே சிம்ம சொப்பனம்.

ஒருமணிவரை அவளுக்கு நினைவு திரும்பவில்லை. பிறகு மெது வாகக் கண்களைத் திறந்தாள். நாலு மணிபோல் ஆறுமுகத்தைப் பார்த்துச் சிரித்தாள். அதன் பிறகே அவன் வெளியே வந்தான். ஓடிப்போய் சம்பளத்தையும் வாங்கிக் கொண்டு வீட்டில் உள்ளதுகளுக்கும் விஷயத் தைக் கூறிவிட்டு வரலாம் என்று ஓடி வந்தான்.

ஓடி வந்தவனுடைய மனநிலை இருந்த இருப்பில் ஆபீஸில் உள்ளவர்கள் நடந்து கொண்ட விதமும், பெரிய கங்காணி ஒத்தூதிய விதமும் கோபத்தைக் கிளறியது. அது தான், 'தடபுடா' என்று பேசி விட்டான்.

கவலையுடன் உட்கார்ந்திருந்தவன் எழுந்தான். இனிக் காத்திருந்து பயனில்லை. ஆஸ்பத்திரிக்கும் போகவேண்டும். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தவனாக ஆபீஸ் படிகளில் இறங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாற்பத்தெட்டு அறுபது..."

கிளாக்கரய்யா யாருக்கோ சம்பளம் வாசித்தார்.

ஆறுமுகம் திரும்பிப் பார்த்தான். கண்ணுச்சாமி நின்று கொண்டிருந் தான்.

"எனக்கு வெவரம் வேணும்." இது கண்ணுச்சாமி.

"தகராறு பண்ணாதே. வாங்கிக்கிட்டுப் போ." இது கங்காணி.

"என்ன பெரியாணி அக்கிரமம் இது? செஞ்ச வேலைக்குச் சம்பளம் வாங்கையில வெவரம் கேட்டா தகராறு பண்ணாதேங்கிறீங்க..... நாங்க என்ன குத்தவாளிங்களா? அல்லது கைதிங்களா வாயைத் தொறக்காமல் இருப்பதுக்கு?"

"விடாதே கண்ணா, வெவரம் கேளு. என்னதான் நடக்குதுன்னு பார்ப்போம்" என்று அவனுக்குக் கேட்கும்படி கூறிவிட்டு மறுபடியும் படியேறிக் கள்ளி மரத்தடியில் உட்கார்ந்துகொண்டான் ஆறுமுகம்.

பெரிய கங்கானி ஆறுமுகத்தை அறைந்து விடுவது போல் பார்த்தார்.

"அவனை மொறைச்சிப் பெரயோஜனம் இல்லை. எனக்கு வெவரம் கேட்டுக் குடுங்க, அப்பத்தான் சம்பளம் வாங்குவேன். கம்பளிக்கு அஞ்சி ரூபா, கறுப்புக் கம்பளிக்கு அஞ்சி ரூபான்ன காலம் செத்துப் போச்சி?"

"ஒனக்கு சம்பளம் வாங்க ஏலாட்டி நீ வெலகு"

ஆறுமுகம் சந்தோஷத்தில் கள்ளி மரத்தை உலுக்கினான். மொட்டை மொட்டையான அதன் கிளைகள் ஆபீஸ் தகரத்தில் கீறு போட்டன.

"அம்பது ரூபா எம்பது சதம், நாப்பது ரூபா இருபது சதம்ன்னு அவுக பாட்டுக்குப் பாட்டுப் பாடிக்கிட்டு இருப்பாக. நாங்க பாட்டுக்கு தலையாட்டிட்டு வாங்கிக்கினு போயிடணும். எப்படி ஏன் எதுக்காகன்னு கேட்டுறக் கூடாது. அப்பத்தானே செக்றோல்ல ஒன்னு இருக்க இவுக வாயில் ஒன்னு வரும்...."

ஆறுமுகம் சற்றுப் பலமாக முனகினான். பெரிய கங்காணி, தலைவர், ஆபீஸுக்குள்ளே இருப்போர் ஆகியோருக்கு அவனுடைய முனகல் எரிச்சலை ஊட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய் ஆரது அங்கே தேவையில்லாத பேச்சுப் பேசுகிறது. செக் றோல்ல ஒன்னிருக்க வேறொன்னை எப்படி வாசிக்கிறது.....?"

"சரிதாங்கையா சும்மா பத்தினி வேஷம் போடாதீங்க..... எனக்கு நாப்பது ரூபா எம்பது சதம் இருக்குதுன்னா, நாப்பது ரூபா முப்பது சத முன்னு சொல்வீங்க.....யாரு பாத்தா, யாரு பாக்குறா......?"

ஆறுமுகம் விட்ட இடத்தில் கண்ணுச்சாமி தொட்டுக் கொள்ளு கின்றான்.

"நீ ரெண்டு பேரும் பேசி வச்சிக்கிட்டா வந்தது" இன்னைக்குச் சம்பளம் போடுறதைக் கொளப்ப எந்த நேரத்தில் ஆரம்பிச்சமோ ஒரே சனியனாப் போச்சு! இது கிளாக்கரய்யா.

"ஒங்கிட்ட ஐம்பது சதத்துக்குப் பொய் சொல்லி தோட்டம், கோட்டை கட்டப்போறதா?" இது துரை.

"எம்பது சதத்துக்குப் பதிலா முப்பது சதம்னு போட்டா யாரும் பாக்கமாட்டாகளா? ஆடிட்டர்மாறுக செக்பண்ண மாட்டாகளா?" இது பெரிய கங்காணி.

"இந்தாங்க கங்காணியாரே உங்க தலைக்குள்ளே நொழையாத பெரிய விஷயங்களைப்பத்தி பேச வராதீங்க. நான் ஏன் வெவரம் வேணும்னு புடியா நிக்கிறேன்ங்கிறதுக்கு வெளக்கம் நான் குடுத்துக்கி றேன்" என்று கங்காணியாரை அடக்கி வைத்த கண்ணுச்சாமி தொடர்ந் தான்.

"பேசப் படிச்சிக்கிட்டானுக" என்று முனகியபடி பெரிய கங்காணி அமைதியானார்.

அவன் துரையிடம் ஏதோ விளக்கத் துவங்கவும், "இது நல்லதுக் கல்ல" என்று எண்ணிய கிளார்க் சரி சரி நிப்பாட்டு. இந்தா வெவரம் தானே உனக்கு வேணும் என்றபடி இரு விரல்களை செக்றோலின் கோடுகளின் மேல் ஒட்டியவாறு வாசிக்கத் தொடங்கினார்.

துரையிடம் பேசிக்கொண்டிருப்பவனை இடையில் மறித்து இப்படிக் குறுக்கிட்டுப் பேச எந்தக் கிளார்க்காலும் முடியாது. எந்தத் துரையும் இதற்கு சம்மதிக்கவும் மாட்டார். ஆனால், இங்கே நடப் பவைகள் புதினமானவைகள். அதுதான் அய்யாவுக்கும் துரைக்குமுள்ள அபூர்வ ஒற்றுமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளாக்கரய்யா கூறியவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த கண்ணுச்சாமி, "ரெண்டேகால் ஏக்கரா கொந்தரப்பு" என்றான்.

தகராறு திசை திரும்புவதைக் கண்ணுற்ற கிளாக்கரய்யா "எனக்கு வந்த கணக்கு ரெண்டேகால் ஏக்கர் தான். நீ எத்தனை ஏக்கர் வெட்டுற துன்னு எனக்குத் தெரியுமா? கண்டாக்கய்யாவைப் போய்க் கேளு அல்லது பெரியாணியைக் கேளு" என்று மிகவும் விளக்கெண்ணெய்த் தனமாக நழுவிக் கொண்டார்.

தான் பேசியவைகளைத் துரையும் கவனிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவருக்கு விளங்கும்படி விரிவாகப் பேசினார். அதில் தான் இருக்கிறது அய்யாவின் சாமர்த்தியம்.

"ஏக்கர் கணக்கு வித்தியாசப்பட்டால் கிளாக்கரய்யா என்ன செய்வார்" என்ற அனுதாபம் துரை மனதில் ஏற்பட வேண்டும்.

"என்ன கங்காணி" என்று கேட்டான் கண்ணுச்சாமி.

"இந்தாடாப்பா நல்லா யோசிச்சிப்பாரு, மொதக் கெழமை, மழை பேஞ்சதுனால கொந்தரப்புக்கு ஆளே வரல்லே, தொரக் கணக்குல ஆள்போட்டு காலேக்கர் வெட்டலியா? உனக்கு மொத்தம் ரெண்டரை ஏக்கர் தானே!" என்று விளங்கப்படுத்தினார் பெரியகங்காணி.

"சரிங்க கங்காணி" என்று ஒத்துக்கொண்ட கண்ணுச்சாமி கையை நீட்டினான்.

"ரெண்டு கை ரெண்டு கை" என்று அதட்டினார் பெரிய கங்காணி.

"ஒன்னுமில்லாதத்துக்குத்தானே இத்தனை றாங்கி பேசுறான்" என்று ஆங்கிலத்தில் துரையிடம் கூறிக் கொண்டார் கிளாக்கரய்யா.

"எஸ் எஸ்" என்றபடி நீண்ட அவனுடைய கைகளில், எண்ணி எடுத்த பணத்தை வைத்தார் துரை.

கள்ளி மரத்தடியில் உட்கார்ந்திருந்த ஆறுமுகம் கைதட்டி ஆர்ப்பரித் தவாறு எழுந்து நடந்தான்.

இருவரும் ஜோடியாக நடப்பதைக் கண்ட கிளாக்கரய்யாவும், பெரியகங்காணியும், "பயல்கள் பேசி வைத்துக் கொண்டுதான் வந்திருக் கிறான்கள் குழப்பம் செய்ய" என்னும் முடிவுக்கே வந்தனர்.

"தொரையும், கௌாக்கனும் ஒத்துப்போறருதி நம்மளால் ஒன்னும் செய்ய ஏலாது ஓய்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொரைக்கு ஒரு பெட்டிசன் எழுதிக் குடுப்பமா?"

"அதைக் கொண்டுபோய் அவங்கிட்டத்தானே இவன் குடுப்பான்".

"சரி சரி, யோசிச்சிப் பாப்போம் முயன்றா முடியாமலாப் போயிறும், நான் போறேன். ஆஸ்பத்திரிக்குப் போவணும்" என்று சம்பாஷணைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு கால்களை எட்டிப்போட்டு இறங்கி ஓடினான் ஆறுமுகம்.

"இந்த இடத்தில்தான் முட்டிக் கொண்டோம்" என்று எண்ணிச் சுகித்தபடி இறங்கியவன், "என்ன கார்ச் சத்தம் கேட்கிறதே" என்று கீழே பார்த்தான்.

கிளாக்கரய்யாவின் பச்சை வண்ண ஆஸ்டின் வந்து கொண்டிருந்தது.

"படுவாப்பய இந்த வாயில்லாப் பூச்சிகளை ஏமாத்தி வயித்திலடிச்சி காரோட்டுறிகளோ கார். நாங்கல்லாம் செத்தாலும் காலம் சாகாது. அது தான் உனக்குப் பாடம் படிச்சிக் குடுக்கும்" என்று கறுவிக் கொண்டான்.

இன்று சம்பளநாள் ஆனபடியால் பதுளையில் எப்படியும் 'வாத்தியார்' படம் ஒன்று புதிதாகப் போடப்பட்டிருக்கும். ஆறு மணி ஷோவுக்குப் பறக்கும் கார்களில் ஒன்றில் தொத்திக் கொண்டு ஆஸ்பத் திரிக்குப் போய் விடலாம் என்ற தைரியம் அவனுக்கிருந்தது.

பள்ளிக்கூடத்து வளைவை அவன் தாண்டும்போது 'பீலிமொடக்கில்' பெண்கள் கூட்டம் தெரிந்தது.

அவர்களைத் தாண்டி மாமரத்துச் சந்தில் இறங்கியவன், குளித்து முடித்து ஈரத்தலையுடன் இறங்கிக் கொண்டிருந்த கண்ணம்மாவைக் கண்டான்.

துவண்டு தொங்கிய கூந்தலில் வடிந்திறங்கிய நீர், பின் இடுப்பின் சேலையை தொப்பையாக நனைத்திருந்தது. சற்றே ஒடிந்து நின்ற இடையில் குடத்துக்குப் பதிலாக தவலை இருந்தது. தவலையில் உள்ள நீர் தளும்பாதிருக்க, இலை முருங்கைக் கொத்தொன்றைத் தவலைக்குள் போட்டிருந்தாள். என்றாலும், நீர் தளும்பித் தளும்பி ஊற்றிக் கொண்டே இருந்தது.

மெல்ல நடந்து கொண்டிருந்த அவளையும், அவளது அழகை ரசித்தபடி பின்னால் நடந்து கொண்டிருந்த அவனையும் 'சரக் சரக்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்று செருப்பு ஒலி எழுப்ப முந்திக்கொண்டு நடந்தான் ரொட்டிக் காரன்.

அவன் தலையில் ரொட்டிக்கூடை இல்லை. ஆனால், கையில் 'நோட்புக்' இருந்தது.

செருப்புச் சத்தம் கேட்டுத் திரும்பியவள் ஆறுமுகத்தைக் கண்டதும் 'களுக்' என்று சிரித்தாள்.

"என்ன இளிப்பு வேண்டியிருக்கு. சேத்துல நான் காலை விட்டுக் கிட்டதுக்கு நீ குளிச்சிட்டியோ"

"சேத்துல விழுந்தா மட்டும் குளிக்கிற சாதியில்ல இது. சம்பளம் வாங்கியாச்சோன்னு நெனைச்சேன், சிரிப்பு வந்துடிச்சு" என்றபடி கண்களால் அவனை நோண்டினாள்.

"ஆமா ஆமா வாங்கியாச்சு. இதோ பாரு! டொபி பொட்டலமும், லவிக்கைத் துணியும் வாங்கியாந்திருக்கேன்" என்று வெறும் கையை வீசிக் காட்டினான்.

"ஐயே இவுக லவிக்கைத் துணி வாங்கித் தருவங்கன்னு தானே மொட்டையா..." என்று தொடங்கியவள் பல்லைக் கடித்துக்கொண்டாள்.

முகம் கறுப்பென்றாலும் அதில் சிவப்பேறி ஒரு தனி சோபையைக் கொடுத்தது.

வெட்கத்துடன் குனிந்து கொண்டிருந்தவளைத் தாண்டி நடந்தவன், "மொட்டையா வச்சி வாங்கித் தர்றேன் பயப்படாதே" என்றபடி அவள் கன்னத்தில் விரலால் தட்டி விட்டு நடந்தான்.

மண்ணதிர அடி வைத்துச் செல்லும் ஆறுமுகத்தை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டே நின்றவள் மெதுவாக நடக்க ஆரம்பித்தாள்.

## 2

கணபதி, லயத்தில் கடை போட்டிருந்தான். இஸ்த்தோப்பின் அரைச்சு வரை முழுச் சுவராக்கியதன் மூலம் அதை ஓர் அறையாக்கிக் கொண்டிருந் தான். அது தான் லயத்துக் கடை,

பத்து பக்கெட் திரிறோஸ், பத்துப் பண்டல் பீடி, கொஞ்சம் நெருப்புப் பெட்டி என்று ஆரம்பித்தவன், சிறுகச் சிறுக அதை ஒரு சில்லறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையாக்கிக் கொண்டான். அரிசி, மாவு, சீனியிலிருந்து லாம்பெண்ணெய், தேங்காயெண்ணெய் வரை அத்தனை சாமான்களும் கணபதி லயத்தில் கிடைக்கும்போது, ஒரு மைல் தாண்டி ஒத்தைக் கடைக்கு யார் போகப் போகின்றார்கள்.

மாலை நான்கு மணிக்கு மேல் கணபதிக் கடையில் வியாபாரம் களைகட்டி நிற்கும். புத்தகம் போட்டுக் கணக்கெழுதிக்கொண்டு சாமான் கொடுக்கும் அளவுக்குக் கூட கடை வளர்ந்து விட்டது. முன்பெல்லாம். 'பெலாமரத்து லயமாக' இருந்தது, இப்போது 'கணபதி லயமாக' மாறியதற்குக் காரணமே இந்தக் கடைதான்.

கடை கணபதிக்குப் பெயர் கொடுத்தது. கணபதி லயத்துக்குப் பெயர் கொடுத்தான். இப்போதெல்லாம் 'பெலா மரத்து லயம்' என்ற பெயர் மறந்தே போய் விட்டது.

கிளாக்கரய்யாவுக்கு காட்ட இயலாத ஒன்று தோட்டத்துத் தமிழன் ஒருவன் நன்றாக இருக்கிறான் என்பது. கணபதி கொஞ்சம் தலையைத் தூக்கிக்கொண்டு திரிவதைப் பார்க்க அவருக்கு உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. "இரு படவா ஒனக்கு வைக்கிறேன் வேலை" என்று கறுவிக் கொண்டே இருந்தார்.

கணபதி கடை ஆரம்பித்த நாட்களில் கிளாக்கரய்யாவின் காரில்தான் சாமான்கள் ஏற்றிக்கொண்டு வருவான். முதல் முறை ஒரு பண்டல் பீடியைக் காணவில்லை. அடுத்த தடவை ஊதுவர்த்தி, அதற்கடுத்த தடவை பால்டின், தீப்பெட்டி என்று ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு சாமான் குறையத் தொடங்கியது. கடையில் கிடைக்கும் லாபம் இதிலேயே அடிபட்டுப் போகும். சாமான்களைக் காணவில்லை என்று கேட்கவும் முடியாது. "என்னையே களவாணின்னு கேக்குறியா" என்று கிளாக்கரய்யாவின் டிரைவர் கேட்டானென்றால், அது எதில் போய் முடியும் என்பது கணபதிக்குத் தெரியாததல்ல. அய்யாவின் டிரைவர் என்பதெல்லாம் பெயருக்குத்தான்.

அவன் அய்யாவின் கடைசித்தம்பி. ஆகவே, கிளாக்கரய்யாவின் தம்பிக்குத் திருட்டுப் பட்டம் கட்டவும் அவன் விரும்பவில்லை. அதனால் ஏற்படும் விளைவுகளை ஏற்றுக் கொள்ளவும் விரும்பவில்லை. அதற்காக இப்படி ஒவ்வொன்றாகச் சாமான்களைப் பறிகொடுக்கவும் இஷ்டப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, அடுத்த தடவை வேறொரு காரில் சாமான்களை ஏற்றிக் கொண்டு வந்துவிட்டான் கணபதி. அது போதாதா அய்யாவுக்கு! ஹயர் கிடைக்கிறது தானே தனக்கு என்று இத்தனை நாளும் பொறுத்துக் கொண்டிருந்தார். இப்போது அதுவும் போய்விடவே பொங்கி எழுந்தார்.

கணபதி கண்டக்டரய்யாவின் நன்மதிப்பைப் பெற்றிருந்தான். எந்த வேலைக்குத் தள்ளினாலும் தகராறு செய்ய மாட்டான். அரை குறையாக வேலை செய்து அவருடைய பெயரைக் கெடுக்கமாட்டான். ஆகவே, அவன் மேல் அவருக்கு நல்லபிப்பிராயம். கணபதி லயத்தில் கடை போட்டிருந்தாலும் மலை வேலை முடிந்த பிறகே கடையைத் திறப்பான். மலைக்குப் போவதாகப் போக்குக் காட்டி விட்டு லயத்துக்கு இறங்கி 'பிஸ்னஸ்' பண்ணமாட்டான். இதெல்லாம் கண்டக்டரய்யாவுக்கு நன்றாகத் தெரியுமாதலால், அவனிடம் வீண் கரைச்சலுக்குப் போகமாட்டார்.

சாமான் கொண்டுவர கணபதி கார் மாற்றிய அன்றே கிளாக்கரய்யா கண்டக்டரய்யாவிடம் கூறினார். "அந்தப் பயலைக் கொழுந்துக்குப் போடுங்கள்" என்று.

கொழுந்தென்றால் மூன்றரை மணிவரை கொழுந்தெடுக்க வேண்டும். பிறகு, நிறுத்து முடிய ஐந்து ஆறாகும். அதன் பிறகு, எங்கே கடை நடத்துவது, என்பது தான் கிளாக்கரய்யாவின் திட்டம். இதற்குக் கண்டக்டரய்யா ஒத்துவரவில்லை, "அதெல்லாம் ஏலாது" என்று நேரடியாக அவரிடம் கூறாவிட்டாலும், "சரி பார்ப்போம்" என்றதுடன் நிறுத்திக் கொண்டார்.

பொக்கெட் செக்றோல் ஆபீசுக்கு வந்ததும், அய்யா துருவித் துருவிப் பார்ப்பார். கணபதி கொழுந்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றானா என்று. கண்டக்டரய்யா அவனுக்கு 'சலுகை' செய்கின்றார் என்ற முடிவுக்கே அவரால் வர முடிந்தது. கணபதி கடை போட்டிருப்பதன் மூலம் கண்டக்டரய்யாவுக்கு ஏதோ 'வாசி' இருக்கிறது என்று எண்ணிக் கொண்டார். என்னவாக இருக்கலாம் என்று ஆராய்ந்தவர் பளீரென ஒரு முடிவுக்கு வந்தார். கண்டக்டர் ஒரு ஹார்ட் ஸ்மோக்கர். சராசரி ஒரு நாளைக்கு நூறு திரீ ரோசஸ் முடிப்பார். அவதாவது, பெரிய பாக்கெட் ஐந்து. பணமாகப் பார்த்தால் பத்து ரூபாயும் சொச்சமும். அவருடைய சிகரெட் செலவைக் கணபதி 'கட்' பண்ணுகின்றான் என்பது தான் பளீரென அவருக்குத் தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்தோப்பைக் கடையாக்கி, அவன் செய்யும் வியாபாரம், நாளைக்குப் பத்து ரூபாய் டொனேஷனைத் தாங்குமா என்பதைப்பற்றி யெல்லாம் சிந்திக்க அவருக்கு அவகாசம் கிடையாது. தான் சொன்னபடி அவனை இவர் கொழுந்துக்குத் தள்ளவில்லை. ஆகவே, அவரைப்பற்றி ஏதாவது குறைபட்டுக் கொள்ளும் திருப்தி அவருக்குத் தேவையாக இருந்தது அவ்வளவுதான்!

கிளாக்கரய்யாவுக்கும், கண்டக்டரய்யாவுக்கும் அவ்வளவு சுமூகமான உறவு இல்லை. இருந்தும் ஒருவரை மற்றவர் பகைத்துக் கொள்ளவும் இல்லை. "நீ ஒரு திருட்டுப்பய, நான் ஒரு திருட்டுப் பய!" என்பது தான் காரணம்.

கண்டக்டரய்யா வெளியே எங்காவது போவதென்றால், கிளாக்கரய்யாவின் காரில் தான் போவார். அப்போதெல்லாம் கிளாக்கரய்யா தம்பியைக் கூப்பிட்டு, "அவரு ஓசியில் கார் ஓடப்பார்ப்பது, அயர் குடுக்கமாட்டது. அதனால், பெட்றோல் அடிக்கக் காசு வாங்கிக்கோ" என்று கூறித்தான் அனுப்புவார். கிளாக்கரய்யாவின் இது போன்ற சில்லறைத்தனங்கள் கண்டக்டரய்யாவுக்குப் பிடிப்பதில்லை. ஆகவே, இருவருக்குமிடையே உறவு நல்லதாக இருந்ததே கிடையாது.

ஒரு நாள் காலை ஒன்பதரை மணி இருக்கும். துரை இன்னும் ஆபீசிலேயே இருந்தார். "இந்தா பொடியேன் இங்கே வா" என்று தபால் பையனைக் கூப்பிட்டார் அய்யா, பையன் வந்து நின்றான். "கணபதி கடையில் போய் ரெண்டு சுருட்டும், ஒரு நெருப்புப் பெட்டியும் வாங்கியா."

கிளாக்கரய்யாவும் லயத்துக் கடையில் சாமான் வாங்குவது துரைக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனாலும் அவர் ஒன்றும் கூறவில்லை.

பத்து நிமிடத்தில் பையன் வந்து நின்றான். இரண்டு சுருட்டும் அழகாக கடதாசியில் சுற்றப்பட்டிருந்தது. அதை வாங்கி மேசையில் ஒரு ஓரத்தில் போட்டபடி பையனிடம் கேட்டார் "யார் இருக்குது கடையில்......?"

"கணபதி யண்ணந்தாங்க" என்றபடி பையன் போய் விட்டான். பையன் மறைந்ததும் கிளாக்கரய்யா துரையிடம் வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாருங்க சார் கணபதி இன்னும் லயத்தில் தான் இருக்கின்றான். வியாபாரம் செய்து கொண்டு. மணி ஒன்பதே முக்கால், அந்திக்குப் பார்த்தால் செக்றோலில் பேர் இருக்கும்."

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்து விட்டார் அய்யா.

அய்யாவும் லயத்துக் கடையில் சாமான் வாங்குவது பற்றி தான் எண்ணியது எத்தனை தவறு என்று வருத்தப்பட்ட துரை கிளாக்கரய்யாவின் சாதுர்யத்தை எண்ணி வியந்து கொண்டார்.

"ஐ வில் கேட்ச் தீஸ் றாஸ்கல்ஸ்" என்று எழுந்தவர் கோல்ட் லீப் சிகரட்டை டொக் டொக்கென்று சிகரட் பக்கெட்டில் தட்டி வாயில் திணித்துக் கொண்டார்.

லைட்டரைக் கொண்டுவர மறந்துவிட்ட துரையின் தடுமாற்றம் அய்யாவுக்குத் தெரிந்தது. கணபதி கடை நெருப்புப் பெட்டி துரையின் மேசைக்கு வந்தது.

★

கணபதியின் மனைவி சிந்தாமணி நல்ல கொழுந்துக்காரி. கொழுந்துக் காலங்களில் மூன்று நேரமும் இவ்விரண்டு கூடை நிறுப்பாள். சம்பளமும் இரண்டு கை நிறையவே வாங்குவாள்.

நல்ல உயரம். உருண்டு திரண்ட கை கால்கள். உறுதியான கறுத்த உடல். அவள் எதற்காவது ஆபீசுக்கு வந்தால் கணபதி மேல் தனக்கிருக்கும் கோபத்தையும் மறந்து அவளிடம் இரண்டொரு கேள்விகள் கேட்டு, பதில் சொல்லத் தெரியாமல் திணறிச் சிவக்கும் அவளுடைய கறுத்த முகத்தைத் திருட்டுத் தனமாக ரசிப்பதில் கிளாக்கரய்யாவுக்கு ஒரு அலாதி ஆனந்தம்.

சிந்தாமணி கணபதியின் மனைவியாகு முன்பிருந்தே தோட்டத்தில் அவளுக்கு ஒரு மதிப்பு. அழகானவள் என்று. அவள் பெயர் பதிந்து மலையேறும் முன்பிருந்தே கிளாக்கரய்யாவுக்கு அவள் மேல் ஒரு கண்.

ஆபீசிலோ அல்லது பாதையிலோ அவளைக் காணும் போதெல்லாம் வலிய அவளுடன் அரட்டை அடிப்பதுடன் இவளை எப்படியாவது ஒரு தடவை.... என்று எண்ணிக் கொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பேர்ப்பட்ட அழகிய சிந்தாமணி ஒருநாள் அவரிடம் வசமாக அகப்பட்டாள்.

ஒன்பது மணி ஷோவுக்கு தனக்கு ஒரு அயர் இருப்பதாகக் கூறினான் அய்யாவின் டிரைவர் தம்பி.

"இதோ காசு" என்று பதினைந்து ரூபாவைக் காட்டியவன் பத்து ரூபாவை அய்யாவிடம் நீட்டிவிட்டு. ஐந்து ரூபாவை பெட்றோல் செலவுக்கென்று வைத்துக் கொண்டான்.

"யார் யார் போவது ?" என்று கேட்டார் அய்யா.

"கணபதிதான் அயருக்குப் பொறுப்பு. யார் யார் போவது என்று தெரியவில்லை" என்றான் டிரைவர்.

எட்டு மணிபோல் தோட்டம் இருட்டைப் போர்த்திக் கொண்டிருக்கும் போது, கணபதியுடன் சேர்ந்து. ஐந்து ஆண்களும், சிந்தாமணியுடன் சேர்த்து மூன்று பெண்களுமாக எட்டுப்பேர் அய்யா வீட்டடியில் நின்றார்கள். டிரைவர் வந்து கதவைத் திறந்துவிட்டு, வசதிபோல் ஏறிக் கொள்ளும்படிக் கூறிவிட்டு உள்ளே போய் விட்டான்.

ஆண்கள் ஐவரும் பின் சீட்டில் நெருங்கிக் கொள்ள மூன்று பெண்களும் முன்னால் நுழைந்து கொண்டனர்.

டிரைவருக்கு அருகே இருப்பது சிந்தாமணி, இரண்டு பேருக்கு இடம் கொடுத்து அவள் இருக்க வேண்டும் என்னும் போது அவள் தான் டிரைவரோ என்று சந்தேகிக்குமாறு இருந்தது.

ஜன்னல் வழியாக இந்தக் காட்சியைக் கண்ட அய்யா மனதுக்குள் சிரித்துக் கொண்டார். தம்பியைக் கூப்பிட்டு சாவியை வாங்கிக் கொண்டார். ஐந்து ரூபாவையும் வாங்கிக் கொண்டு சாரத்துக்கு மேல் சட்டையை மாட்டிக் கொண்டு காரில் வந்து அமர்ந்தார். காருக்குள் லைட்கிடையாது.

கொழுத்த அவருடைய கால்கள் சிந்தாமணியின் கால்களுடன் ஒட்டி உட்கார்ந்தன. ஸ்டியரிங் கைப்படித்திருந்த இடது கையின் முழுங் கை சரியாக அவளுடைய மார்புடன் நின்றது. இந்தத் திடீர் தாக்குதலை அவள் எதிர்பார்க்கவில்லை. தன்னைச் சுதாரித்துக் கொண்டு கொஞ்சம் விலக முயற்சித்தாள். அய்யாவின் பின் முழங்கை நெஞ்சுக்குள் அழுந்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சீட்டில் இருந்த கணபதி 'தடாபுடா' வென்று கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான்.

கணபதி காரைவிட்டு இறங்கியதும் முன் சீட்டில் இருந்த பெண் களும் இறங்கி விட்டனர். "அய்யா காரோட்ட நாங்கள் படம் பார்க்கப் போகணுமா.....? ஒரு மருவாதி வாணாம்" என்று அவன் அடம் பிடிக் கவே வேறு வழியின்றி அய்யா பின்வாங்கிக் கொண்டார்.

"டிரைவரய்யாவுக்குச் சரியான சுகமில்லை. அது தான் பார்த்தேன்" என்றவர் ஏமாற்றத்தால் தொங்கிப் போன முகத்துடன் உள்ளே மறைந்து கொண்டார்.

அய்யா தன்னிடம் வலிய வலிய அரட்டை அடிப்பதை எல்லாம் அவள் கணவனிடம் கூறாமலா இருந்திருப்பாள். கிளாக்கரய்யாவின் பெண் சபலம் உலகறிந்த ஒன்று. அழகான தன் மனைவியை ஒட்டி உரசிக்கொண்டு உட்காரவிட்டால் அவருடைய குரங்கு மனம் என்ன செய்யும் என்பதை அறிந்து கொண்ட கணபதி நிலைமையை அழகாகச் சமாளித்து விட் டான்.

அவன் தன்னை வெட்டிவிட்ட விதம் அய்யாவுக்கு விளங்கிற்று.

"ஹப்பா, பெரிய ஊர்ல இல்லாத பெண்டாட்டியைக் கண்டுட்டான் படவா" என்று சினந்து கொண்டார். அவன் மேல் உள்ள கோபம் இதாலும் நாலைந்து மடங்கு கூடிற்று.

அவனை வீட்டில் வைத்துக்கொண்டு கண்டக்டரய்யா அவனுக்குப் 'பேர்' போடுவதாக கிளாக்கரய்யா துரையிடம் பற்ற வைத்த அன்று சாயந்திரம் எதிர்பாராத விதத்தில் கண்டக்டரய்யா பங்களா முன் நின்றார் துரை.

தான் ஆபீசாக்கிக் கொண்ட முன் அறையில் மேசை மேல் குப்புறக் கிடந்த வண்ணம் செக்றோலைக்கூட்டிக் கொண்டிருந்த கண்டக்டர் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி விட்டு திடுக்கிட்டு எழுந்தார். இந்த நேரத்தில் அந்த இடத்தில் என்றுமே துரை நின்றதில்லை. என்ன கரைச் சலோ, என்ன இழவோ என்று எண்ணியபடி "எஸ் சார் " என்று ஓடி வந்தார்.

"ஐ லைக் டு ஸீ த செக்றோல்" என்ற துரை, செக்றோலை கையில் வாங்கிப் புரட்டினார். கண்டக்டரய்யா கவனித்துக் கொண்டு நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக் டக்கென்று செக்றோலின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டே போன துரை, கடைக்காரக் கணபதியின் பெறட்டு உள்ள பக்கத்தில் ஒரு நிமிடம் நின்று மீண்டும் தட தட வென்று பக்கங்களைத் திருப்பி, 'டப்' பென்று செக்றோலை மூடி கண்டக்டரய்யாவிடம் நீட்டிவிட்டு நடந்தார்.

"ஹ்ம் செக் பண்ணுறீங்களோ" என்று எண்ணிய கண்டக்டரய்யா கோபமாக முகத்தை வைத்துக் கொண்டார்.

"இது கிளாக்கரின் வேலை" என்பது அவருக்கு நன்றாக விளங் கியது. கணபதி இன்று வேலைக்கு வரவில்லை என்பதும் கிளாக்கரய்யா சுருட்டு வாங்க ஆள் அனுப்பியதும், கண்டக்டரய்யாவுக்கு தெரிந்த விஷயங்களே.

"தே மஸ்ட் ஹாவ் ஸ்மெல்ட் இட்" என்று கூறினார் கிளாக்கரய்யா.

"எஸ் எஸ்" என்று ஆமோதித்தார் துரை.

★

கணபதியின் லயத்துக்கு றோட்டிலிருந்து பத்துப் படிகள் ஏறவேண்டும். பத்துப் படி என்றாலும் நெஞ்சு முட்டும் செங்குத்துப் படிகள். பத்தாவது படியின் வாயிலேயே கடையின் வாசல் இருக்கிறது. கால் விரலைப் பார்ப்பது போல் கடை வாசலில் நின்று குனிந்து பார்த்தால் கீழே தார் றோட்டுத் தெரியும்.

பெறட்டுக்களம், கண்டக்டரய்யா பங்களா, பள்ளிக்கூடம் எல்லா வற்றையும் தாண்டி ஓடிவரும் அந்த மெலிந்ததாரப் பாதை கணபதி லயத்தைக் தாண்டி கிளாக்கரய்யா பங்களாவுக்குப் போகிறது.

குப்புறத் தள்ளுவதுபோல் குடுகுடென்று ஓடிவரும் தார் றோட்டு கிளாக்கரய்யா பங்களாவுடன் முடிந்து போவதால் "அய்யா வீட்டுக்காகத் தான் றோட்டோ" என்று எண்ணச் செய்கிறது.

தோட்டத்து லொறி எந்த அகலமோ அதே அகலம் தான் அந்தப் பாதை. பாதையில் லொறி வருகிறது என்றால் ஒரு ஆள்கூட றோட்டில் நிற்கமுடியாது. தேயிலைக்குள் இறங்கிக் கொள்ளவேண்டும். இல்லா விட்டால் லொறி மோதிவிடும். அப்பேர்ப்பட்ட மெலிந்த பாதை கணபதியின் லயத்துக்கு ஏறும் படிக்கட்டிடம் இரண்டு மடங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலமாக இருக்கிறது. மேலே ஆபீசில் இருந்து பார்க்கும்போது சைக்கிள் டியூபில் கொப்புளம் வந்தது போல் தெரியும் அந்த இடம்.

ஒரு ஏழெட்டுப் பத்து தேயிலைகளைப் பிடுங்கி வாங்கியைக் குடைந்து அந்த இடத்தில் பாதையை அகலமாக்கி இருக்கின்றார்கள். ஒரு ஆளுக்குக் கூட விலக இடமில்லாத அந்த றோட்டில் ஒரு நேரத்தைப் போல துரையின் கார் வர நேர்ந்தால் லொறியை ஒதுக்கிக் கொண்டு காரை போக விடுவதற்கும், லொறியைத் திருப்ப வேண்டியிருந்தால் திருப்பிக் கொள்ளுவதற்குமாக வேண்டி பாதையில் இடையிடையே இப்படி இடம் ஏற்படுத்திக் கொள்வதுண்டு.

அப்படி அகலமாக்கப்பட்டது தான் கணபதி லயத்துக் கேறும் படிக்கட்டிடம் இருப்பதும். அந்த இடத்திலும் குருதிப் பூ பூக்கும் பெயர் தெரியாத ஒரு பெரிய மரம் நிற்பதால் வெயில் நேரங்களில் அந்த இடத்தில் நல்ல நிழல் இருக்கும். பாதையின் அகலம் மரத்தின் நிழல் அத்தனையும் கணபதிக்குத் தோதாக அமைந்து விட்டன.

கிளாக்கரய்யாவின் வீட்டிலிருந்து ஆபீசுக்கு ஐந்து நிமிட நடை. வீடு பள்ளத்திலும், ஆபீஸ் மேட்டிலும் இருப்பதால் பத்து நிமிட நடை என்று வைத்துக் கொள்ளலாம். கிளாக்கரய்யாவின் உடலுக்கும் ஊளைச் சதைக்கும் நாலு படி ஏறினதும் நாய்போல் மூச்சு வாங்கும். அத்தனை படிகளையும் ஏறி ஆபீசுக்கு வந்ததும் பிணமாய் பொத்தென்று விழுந் தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அந்த யானைச் சதைக்குள் இருப் பது அத்தனை துருப்படித்த யந்திரம். ஆகவே, அவர் காலையில் ஆபீஸ் போவது தன்னுடைய ஆஸ்டின் காரில். காலையில் அவரைக் கொண்டு போய் ஆபீசடியில் இறக்கி விட்டு விட்டு கார் திரும்பிவிடும். பகல் அவர் வீட்டுக்குப் போவதில்லை. வீட்டிலிருந்து சாப்பாடு போகும். அந்தி, ஐந்து ஐந்தரைக்கு ஆபீசை விட்டுக் கிளம்பினால் மெது மெதுவாக நடந்து ஆறு ஆறரைக்கு வீட்டை அடைந்து விடுவார்.

கிளாக்கரய்யாவின் கார் காலையில் பெரட்டுக் களத்தைத் தாண்டி ஆபீசை நோக்கி ஏறும்போது "பெலாக் காய்க்கும் பெலாக் காய்க்கும் நல்லா ஒத்துப் போவுது" என்று பேசிக்கொள்வார்கள் பெரட்டுக்களத்தில் குழுமி நிற்கும் ஆட்கள்.

வெள்ளைக்காரர்கள் துரையாக இருக்கையில் கிளாக்கரய்யா ஆபீசுக்குக் காரில் போவது பற்றி எண்ணியும் இருக்கமாட்டார். அத்தனை பயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிக்குக் கண்டக்டரய்யா 'பேர்' போட்டிருக்கின்றாரா என்று துரையும் கிளாக்கரய்யாவும் செக்பண்ணி ஏமாந்த தினத்தின் மறுதினம் காலை, கிளாக்கரய்யா ஆபீசுக்குக் காரில் போய்க்கொண்டிருக்கும்போது கணபதிலயத்து வளையில் சிவப்பு பூ மரத்தடியில் ஒரு கறுப்பு நிற போர்ட் அங்கலியா; நின்றது.

"கடைக்கு சாமான் கொண்டு வந்த கார் இரவு வெகு நேரம் ஆகி விட்டபடியால் போகவில்லை போலிருக்கிறது" என்று எண்ணிக் கொண்டார் கிளாக்கரய்யா.

"எவ்வளவு திமிர் இருந்தால் காரையும் கொண்டு வந்து இரவு முழுக்க தோட்டத்துக்குள் நிற்பாட்டிக் கொள்வான். அவுகப்பன் வீட்டுத் தோட்டம்போல" என்று பொருமிக் கொண்டவர், இது எங்கப்பன் வீட்டுத்தோட்டமில்லையே. இருந்தும் என்னுடைய கார் இரவு இரவாக நிற்கிறதே தோட்டத்துக்குள் என்பதை ஏனோ நினைக்க மறந்துவிட்டார்.

பெரட்டுக்களத்து வரிசையில் கணபதியும் நின்று கொண்டிருந்ததை அவருடைய கழுகுக் கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

"பிளடி ராஸ்கல்" என்று முனகிக் கொண்டார்.

ஒன்பது ஒன்பதரை மணி ஆகியும் கறுப்புக் கார் மேலே போகவில்லை என்பதை ஆபீசில் இருந்தபடியே அய்யா கவனித்துக் கொண்டார்.

பத்து மணிக்குத் தபால் பையன் வந்து சேர்ந்தான். தபால்களைக் கூடப் பார்க்கவில்லை. "அது யாரூட்டுக் கார் பொடியேன்" என்று கேட்டார்.

"கணபதி வாங்கியாந்திருக்குங்கய்யா" என்று பையன் கூறியதும் கூரையில் மோதி கீழே வந்தார் அய்யா, அவரால் நம்ப முடியவில்லை.

"நெசமாவா......?" ஆச்சர்யத்துடன் கேட்டார்.

"ஆமாங்கய்யா, கார்த்தான் கீழே நிக்கிதே...." பையன் தான் கூறியதை உறுதிப்படுத்தினான்.

அய்யாவின் சதை அத்தனையும் எரிந்தது. கணபதி கார் வாங்கி விட்டானா? அவரால் நம்பவே முடியவில்லை. துரையிடம் ஒரு கார். தன்னிடம் ஒரு கார். அதேபோல் கணபதியிடமும் ஒரு காரா? வாழ்வில் ஏதோ ஒரு இழப்பு நேர்ந்து விட்டதைப்போல் உணர்ந்தார். "இவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே விடக்கூடாது. முன்பு ஒரு கடை. இப்போது ஒரு கார். நாளைக்கு இன்னும் என்னென்னமோ?"

சிண்டைப் பிய்த்துக்கொண்டார் அய்யா. இதை எப்படித் துரையிடம் சொல்ல வேண்டும், என்ன நடவடிக்கை எடுக்கத் தூண்ட வேண்டும் என்பது போன்றவைகளை ஆராயத் தொடங்கினார்.

காலைச் சாப்பாடும், சாராய அரைப் போத்தலில் ஆறிப் போன தேநீரும் மேசையின் ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருந்தது. சாப்பிடக்கூட மனம் வரவில்லை அய்யாவுக்கு. அப்படி ஒரு சோகம், ஒரு ஏமாற்றம்!

பேர் போடப் பெறட்டுக்களத்துக்கு வந்த கணபதியிடம் கண்டக்டரய்யா கூறினார். "உன்னை துரை உடனே ஆபீசுக்கு வரச் சொன்னார்" என்று.

அவன் எதிர்பார்த்தது தான்.

தான் ஒரு காரை வாங்கிக் கொண்டு வந்து நிறுத்தினால் துரை சும்மா இருக்கமாட்டார்! அப்படியே துரை சும்மா யிருந்தாலும் கிளாக்கரய்யா இருக்கமாட்டார்! தன்னை ஆபீசுக்கிழுத்து துரை முன்போட்டு கேள்விக் கணை தொடுப்பார் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். இதெல்லா வற்றிற்கும் துணிந்துதான் இதில் இறங்கினான்.

"நீ கார் கொண்டாந்திருக்கா....?" இது துரை.

"ஆமாங்க.....!" இது கணபதி.

"பெரிய தொரை கிட்ட கேக்காமெ கார் உள்ளுக்கு வரவே கூடாதே. நீ எப்படி கார் வாங்கி யாறுவே.... பெரிய தொரை கேள்வி கேட்டால் நான் என்ன பதில் சொல்லுறது...."

துரையின் இந்தப் பணிவான, வழவழாத்தோறணைப் பேச்சு அய்யாவுக்கு அடியோடு படிக்கவில்லை. "போடுற போடுல அவன் நடுங்க வேணாமா" என்று எண்ணியவர் கோபமாக எழுந்து துரையின் தோளுக்கு மேலாக அவனிடம் கூறினார். "பெரியதுரை கிட்டேருந்து துண்டு கொண்டாந்து நம்ம தொரை கிட்ட குடுத்துட்டு காரை இங்கே நிப்பாட்டு. இல்லேன்னா எக்கச்சக்கமா ஏதாச்சும் நடந்துறும்...."

பெரிய துரையிடம் யாரும் போகமாட்டார்கள் என்பது யாவரும் அறிந்த ஒன்று. ஆகவே, பெரிய துரையைக் காட்டி அவனைப் பயமுறுத்தி காரை வெளியேற்றும் முயற்சி இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிளாக்கரய்யாவும் பெரிய துரை கிட்டே துண்டு வாங்கி யாந்து துரைகிட்ட குடுத்திருக்காருங்களோ?" நிதானமாகக் கேட்டான் கணபதி.

துரை, அய்யாவின் முகத்தைப் பார்த்தார். அய்யா, துரையின் முகத்தைப் பார்த்தார்.

இருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

## 3

கணபதியின் 'அங்கிலியா' வும், கிளாக்கரய்யாவின் 'ஆஸ்டீனுடன்' தோட்டத்து றோட்டில் ஓடத்தொடங்கி விட்டது.

தோட்டத்துச் சனங்களுக்கு அரசியலுமில்லை, அரசியல் உரிமைகளும் இல்லை. தங்களுக்காகப் பேச, வாதாட, பெறமுடியாத உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க என்று பிரதிநிதிகள் எவரையும் இவர்கள் பார்லிமெண்டுக்கு அனுப்புவதில்லை. 'இந்த மக்களின் பிரதிநிதியாக' என்று எவராவது அரசாங்கத்துக்குள் இருந்தால் அவர் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் விருந்தாளியே தவிர, இவர்கள் தெரிந்தெடுத்து அனுப்பிய பிரதிநிதி அல்ல. ஆகவே, இவர்களின் அதிருப்திக்கு அவர் அஞ்ச வேண்டியதுமில்லை. அவர் என்னத்தைச் செய்துவிட்டார் என்று இவர்கள் அங்கலாய்க்க வேண்டியதுமில்லை.

இந்தத் தோட்டத்து மக்களும் அதே ஓடத்தில் தான். ஆகவே, அரசாங்கப் போக்குவரத்துக்கு இவர்கள் லாயக்கற்றவர்களாகி விட்டார்கள்.

பஸ் இல்லையே என்பதற்காக தோட்டத்துக்குள்ளேயா கிடந்து விடுவார்கள்? டவுனுக்குப் போக வேண்டும். படம் பார்க்க வேண்டும். சாமான் சட்டுக்கள் வாங்க வேண்டும். இதற்கெல்லாம் வழி?

கிளாக்கரய்யாவின் கார்தான்! இத்தனை நாளாய் நல்ல அடி அவருக்கு.

அவருடைய கீரைக் கடைக்கும் இப்போது ஒரு எதிர்க் கடை வந்துவிட்டது.

அவர்களை இழிவாகப் பேசிக்கொண்டே அவர்களுக்கு அயர் ஓட்டினார் அய்யா. இப்போது யாராவது அவர்காரில் ஏறுவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிதான் போய்யா! ஒனக்குக் குடுக்கிற காசை அவன் கிட்ட குடுத்து ட்டுப் போறேன்" என்று கணபதியின் காரில் ஏறுவார்கள். அவன், அவர்களில் ஒருவன் ஆயிற்றே!

அய்யாவின் கோபத்துக்குக் கேட்க வேண்டுமா?

"குறுகிய அந்தத் தோட்டத்துப் பாதையில் எதேச்சையாக நடந்து விட்டது போல் தனது காரை, அவனுடைய காருடன் மோதவிட்டால்.....!"

"என்னுடைய காரும் சேதமாகுமல்லவா?" என்ற நினைப்பால், "அப்படிச் செய்ய முடியாதே" என்று அந்த எண்ணத்தை கைவிட்டார்.

"பெரிய தொரைகிட்டே நான் பெர்மிஷன் வாங்கியிருக்கேனான்னு கேட்டுட்டான்...... படவாப் பய! என்ன திமிர் இருக்கணும்!" கணபதியின் நினைவு வரும்போதெல்லாம் இந்த நினைவே கசப்பாக மேலெழும் அவருக்கு. கொய்னா மருந்து குடித்தவனுக்கு ஏப்பம் வருவது போல.

வழிந்திறங்கும் வானத்துக்குள் 'சூரியன்' விழுந்து கொண்டிருந்தது. மேற்கு மலைத்தொடர்கள் அனற்பிழம்பாய் மாறிக் கொண்டிருந்தான். மறையும் கதிரவனின் மஞ்சள் நிற ஒளியே ஒரு தெய்வீகமானது, பச்சைக் குழந்தையின் பார்வை போல்.

ஆபீசை இழுத்துப் பூட்டிவிட்டு சாவியை குசினிப் பக்கமாக அப்பய்யாவிடம் நீட்டினார் அய்யா.

பலாப் பிஞ்சுகள் டொக் டொக்கென்று ஆபீஸ் தகரத்தில் விழுந்தன.

கீ,கீ என்று ஒலி வருகைக்கேற்ப, விண்விண் என்று வாலை வெட்டி இழுத்துக் கொண்டு விருட், விருட் என்று பறந்து கொண்டிருந்தன வாலாட்டிக் குருவிகள்.

பங்களா முகப்புப் பாத்திகளில் 'பாபடன்ஸ்' அழகாக தலை குலுக்கி அசைந்தாடிக் கொண்டிருந்தன.

இயற்கை அள்ளி வீசும் இந்த இன்பங்கள் எதுவும் அய்யாவின் மனதை நெருடக்கூட இல்லை.

உருண்டையாகிவிட்ட முழுக் கால்சட்டை இரண்டு சவுக்கு மரம் நடப்பது போல் தெரிகின்றது. மேஸ் போடாத 'பம்ப்ஸ்' படக்படக்கென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதித்துக் கும்மாளமிட, கைகளை முதுகில் கட்டியபடி அய்யா வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தார்.

கடையிலிருந்து கண்டக்டரய்யா வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்த கணபதி, மேலே கிளாக்கரய்யா வருவதைக் கவனித்துவிட்டான்.

அவரைத் தனியாக பாதையில் நேருக்கு நேராகச் சந்திக்க அவன் விரும்பவில்லையாகினும், அதற்காக ஒளிந்து கொள்ளவும் விரும்பவில்லை.

தான் அவரைக் கவனிக்கவில்லை என்பது போல் பாவனை பண்ணிக்கொண்டு நடந்து கொண்டிருந்தான். வளைவு திரும்பியதும் அய்யா முன்னே நிற்பார் என்பது தெரிந்திருந்தாலும், தெரியாதது போல் நடந்தவன், டக்கென்று பாதையின் ஓரத்துக்கு ஒதுங்கி நின்று கொண்டான்.

அவர் அவனைத் தாண்டுகையில், "செலாங்கையா" என்றான்.

"செலாங்க மொதலாளி எப்படி பிஸ்னஸ் எல்லாம்?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க" என்ற கணபதி "சும்மா பேருக்குத் தாங்க" என்றான்.

"கடை இருக்கு! கார் இருக்கு! அப்பறம் மொதலாளி இல்லாம என்ன? கவனமா செஞ்சா நல்லது" என்றபடி நடந்துவிட்டார்.

"இரு படவா! ஒன் கடையையும், காரையும் கவனிச்சிக்கிறேன்" என்று அவருடைய மனம் நினைத்துக் கொண்டது.

உள்ளத்துக்கும், உதட்டுக்கும் எத்தனை தூரம்? ஓராயிரம் மைல்கள்!

அருகே காலடியில் பச்சைப் பசேலென்று நின்ற தேயிலைகள் தூரத்தே செங்குத்தான மலை வரிகளிடையே நீலமாக நின்றன.

வீடு நோக்கி மெதுவாக நடந்துகொண்டிருந்த அய்யாவின் கால்கள் கணபதியின் அங்கிலியாபோர்ட்டிடம் நின்றன.

"இ.என். நம்பரென்றாலும் மோசமில்லை. வெரிவெல் மெயிண்டேயின்ட். ஏன் வித்தான் இவனுக்கு" என்று எண்ணிக்கொண்டவர், வெறும் மரத்து நிழலில் நிற்கும் அந்தக் காரை அக்கறையுடன் அவதானித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுகுடுப் பள்ளமான அந்தப் பாதையின் ஓரத்தில் தலை கீழாக நின்றுகொண்டிருந்தது கார். பின் சக்கரங்களில் வைக்கபட்டிருக்கும் இரண்டு பெரிய கற்களையும் அவருடைய கண்கள் நோட்டம் விட்டன.

காரை கொஞ்சம் முன்னுக்குத்தள்ளி இந்தக் கற்களை அகற்றி விட்டால், கார் பின்னுக் கோடி தடதட வென்று உருண்டு, முப்பது நாற்பது அடிப் பள்ளத்தில் விழுந்து நொருங்கிவிடும்.

இன்பமான கற்பனை! அய்யாவின் மனம் பொங்கி வழிந்தது. வெறும் நினைப்புத்தானே என்ற எண்ண உறுத்தலுடன் நடக்கத் தொடங்கினார்.

கீழே ஆற்றில் குளித்துவிட்டு, குறுக்குப் பாதையில் ஏறிக்கொண்டிருந்தது பெண்கள் கூட்டம்.

ஈரம் உலர்ந்த கரிய செதுக்கிய கல்போன்ற உடல்களில் ஈரம் உலராத சீலைகளை அரைகுறையாகச் சுற்றிக் கொண்டு; கூச்சமும், அழகும், ஒயிலும் மிளிர சின்னச் சின்ன அடிவைத்து அவர்கள் நடந்து வந்தனர்.

துவண்டு தொங்கும் ஈரக் கூந்தலைக் கோதியபடி ஏறிக் கொண்டிருந்த சிந்தாமணியைக் கவனிக்கவும், அவருடைய கழுகுக் கண்கள் தவறவில்லை.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத அளவுக்கு அவரைத் தடுமாறச் செய்தது அவளுடைய கோலம்.

"எப்படி முதலாளியம்மா, இன்னும் ஒன்னும் சரிப்படலை போலிருக்கே" என்று மெதுவாக அவளுக்கு மட்டும் கேட்கும்படி முனகியவர், ஈரச் சேலைக்குள்ளாகத் தெரியத் துடிக்கும் அவளுடைய வயிற்றைக் குடைந்து விடுவது போல் பார்த்தார்.

குன்னிப்போன சிந்தாமணி, "இந்த அய்யாவுக்கு வேறே வேலை கெடையாதுடி" என்று கூறியபடி குதித்தோடிவிட்டாள்.

★

கணபதி வீட்டில் உஸ்ஸென்று இரைந்தவாறு தொங்கிக் கொண்டிருந்த 'பெட்றோல் மாக்ஸ்' அந்த லயத்தையே வெளிச்சமாக்கிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அடியில் கறுப்புக்கறுப்பாக நிழல்கள் நீண்டும் மடிந்தும், குறுகியும், நெளிந்தும் கொண்டிருந்தன.

கணபதி மிகவும் பதனமாக லைட்டைக் கழட்டி ஒரு சின்ன மேசைமேல் வைத்தான். மங்கிக்கொண்டே வந்த ஒளியை மறுபடியும் உச்சத்துக்குக் கொண்டு போக காற்றடிக்கும் பம்மை 'கீச் கீச்' என்று சத்தமிட இழுத்திழுத்து அமுக்கினான். 'டப் டப்' என்று ஏதோ ஜால வித்தைகள் செய்துவிட்டு, பளீரென்று முன்பு போலவே எரிந்தது லைட்.

லைட்டைத் தூக்கி நிதானமாகக் கம்பியில் மாட்டி விட்டுத் திரும்பிய கணபதி, வெளியே கடைவாசலுக்கு வந்து உற்றுப் பார்த்தான். றோட்டுக்கடிக்கும் லைட் வெளிச்சத்தில் காரின் கூரை மினுங்கியது. காரின் மறுபக்கத்து இருளில் இரண்டொரு உருவங்கள் டக்கென்று குனிந்து மறைந்து கொண்டது போல் ஒரு பிரமை தட்டியது. வெளியே வந்து நின்று நிதானித்துப் பார்த்தான்.

ஓரிரு நிழல்கள் ஆடுவது போல் தெரிந்தது. பார்வையை மேலும் கூர்மையாக்கினான். கார் லேசாக அசைவது போல் இருந்தது.

விருட்டென்று உள்ளே ஓடியவன் டோர்ச்சை எடுத்துக் கொண்டு, "கண்ணுச்சாமி, வேலாயுதம் ஓடிவாங்கடா சுருக்கா" என்றவாறு கீழே இறங்கி ஓடினான்.

நாலைந்து பேர் தடதடவென்று படியிறங்கி கணபதியின் பின்னால் காரை நோக்கி ஓடினார்கள்.

கணபதியைத் தொடர்ந்து ஓடி வந்தவர்களுக்கு இருட்டில் படிக்கட்டுத் தெரியவில்லை.

பெற்றோல் மாக்ஸை மறைத்துக்கொண்டு இவர்கள் இறங்கியதால் நீண்டு முன்விழும் அவர்களுடைய நிழல்களே படிக்கட்டுகளை மறைத்தன. கணபதிக்குக் கையில் லைட் இருந்தது. அவனால் திடுதிடென்று ஓட முடிந்தது. மற்றவர்களால் அப்படி ஓடமுடியவில்லை. சின்னச் சின்ன படிகளில் நிதானமாகக் காலூன்றி தட்டுத் தடுமாறி இறங்கிக் கொண்டிருந்தனர்.

லயத்தில் இருந்து ஓடி வந்த கணபதியின் 'கறுப்பன்' படிக்கட்டின் தலைவாசலில் நின்று நிமிர்ந்து பார்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைட்டின் வெளிச்சமும், ஆட்கள் இறங்கும் அவசரமும் அதற்கு சந்தேகத்தைக் கிளப்பவிடவே, ஏதோ அசம்பாவிதம் நடக்கிற தென்பதை உணர்ந்து உரத்துக் குரலெடுத்துக் குரைத்தது.

"கோழைகளே ஓடிப்போங்கள்" என்பது போல, வீராவேசமாகக் குரைத்துவிட்டு, விர்ரென்று வில்லில் இருந்து விடுபட்ட அம்புபோல படிக்கட்டில் பாய்ந்து இறங்கியது கறுப்பன்.

இருட்டில் இறங்கிக்கொண்டிருந்தவர்கள் எதிர்பாராத விதத்தில், அவர்களுடைய கால்களுக்குள் புகுந்து விரைந்தது. ஏற்கனவே தட்டுத் தடுமாறி இறங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு இது திடீர்த் தாக்குதலாக இருந்தது. கால் இடறி ஒருவன் விழுந்து உருள, அவனுடைய மோதலால் மற்றவனும் புரண்டு விழ, "கணபதியண்ணேன்" என்ற கத்தல் முன்னால் ஓடிக்கொண்டிருந்த கணபதியின் பிடரியில் அடித்தது.

"சீச் சனியனே!" என்று தன்னுடன் மோதிய நாயை உதைத்து ஒதுக்கிவிட்டுத் திரும்ப லைட்டை மேலே அடித்துப் பார்த்தான் கணபதி.

உருண்டு வந்துகொண்டிருந்த ஒருவன் படிக்கட்டை விட்டு விலகி, தேயிலைக்குள் விழுந்தான். இன்னொருவன் இருட்டுக்குள் எங்கிருந்தோ முனகிக்கொண்டிருந்தான்.

கணபதி மேலே ஏறி ஓட, கறுப்பன் கீழே ஓடிக் கொண்டிருந்தது.

றோட்டுக்கிறங்கிய கறுப்பன் காரைச் சுற்றி இரண்டு மூன்று தடவை ஓடி ஓடிக் குரைத்துவிட்டு, பாதை நெடுக குரைத்துக்கொண்டே ஓடியது.

கிளாக்கரய்யா வீடு வரை குரைத்துக்கொண்டே ஓடிய நாய், அய்யா வீட்டுக்குப் பிரியும் பாதையிடம் சற்று நின்று உரக்கக் குரலெடுத்து ஊளையிடுவது போல் குரைத்தது. இருட்டுக்குள்ளிருந்து வந்த கல் ஒன்று அதன் முகத்தில் மோதியது. "வாள், வாள்" என்று கத்திய கறுப்பன் முன்காலை நொண்டியபடி திரும்ப ஓடியது.

"யாரோ கார்கிட்டே வந்துதான் இருக்கான்ங்கிறேன். நீ என்ன சொல்ரே" முழங்காலில் ஏற்பட்ட சிறாய்வை தடவிக் கொடுத்தபடி உட்கார்ந்திருந்த மற்றவனிடம் கேட்டான் கணபதி.

"வந்து தான் இருக்கணும். ஆனா, யார் வந்தா? ஏன் வந்தான்னு தெரியல்லியே..... இந்த நாசமாப் போற நாய் பண்ணுன வேலை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாய் என்னா செய்யும்? வாயில்லாப் பிராணி. கீழேதானே கொலைச் சிக்கிட்டு ஓடிச்சு. "அப்போ யாரோ ஓடியிருக்காங்கன்னு தானே தெரியுது."

இவர்கள் காரைச்சுற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது நாய் நொண்டிக் கொண்டு வந்தது.

"பாத்தியா? பாத்தியா, யாரோ அடிச்சிருக்கானுக" என்றபடி அவசரமாக எழுந்தவர்கள் எட்டிய மட்டும் லைட்டை அடித்துப் பார்த்தார்கள்.

கும்மிருட்டை லைட் இரண்டாகக் கிழித்ததே தவிர, ஒன்றையும் காட்டவில்லை.

"இந்தா லைட்டைப் புடி" என்று லைட்டை மற்றவனிடம் கொடுத்து விட்டு நாயைத் தடவிக்கொடுத்தான் கணபதி. காலைப் பரப்பிக் கொண்டு படுத்துக் கொண்ட நாய் மகிழ்ச்சியுடன் முனகிக்கொண்டது.

"பின் றோதைக்கு கல்லை வைக்கல்லையாண்ணே நேத்து" என்றபடி லைட்டை அங்கே திருப்பினான் ஒருவன்.

"வச்சனே...... நாந்தான் ரெண்டு றோதைக்கும் கல்லை வச்சேன்" என்று கூறியபடி அருகே வந்த கணபதி, "இந்தா பாரு! யாரோ கல்லைத் தள்ளியிருக்கானுக.....ரைட் ரைட் கல்லைத் தள்ளிட்டு, காரைக் கௌப்பப் பாத்திருக்கானுக.... காரையே கௌப்புற அளவு துணிச்சல்..... குரோதம் யாருக்கு வரும்....ம் ம்.... அய்யா ஒருத்தருக்குத்ததான் வரும்... சரி சரி...."

மற்றவனுக்குப் பதில் சொல்லத் தொடங்கிய கணபதி தனக்குள்ளா கவே யோசித்து சற்றுப் பலமாக முனகுவதன் மூலம் மற்றவர்களையும் அவன் நினைப்பதை உணரச் செய்தான்.

"அப்போ கிளாக்கரய்யாவூட்டு ஆளுக வேலைதான் இதுன்னு நெனைக்கிறியா?" சந்தேகத்துடன் கேட்டான் லைட்டைப் பிடித்துக் கொண்டிருந்தவன்.

"ம்" என்ற உறுதியான பதிலுடன் ஆக்ரோஷத்தை விழுங்கிக் கொண்டான் கணபதி.

"அவரூட்டுப் பக்கந்தான் கறுப்பன் கொலைச்சிக் கிட்டு ஓடி, அடிவாங்கியாந்திருக்கு! அய்யாதான் அந்தி நேரம் காருக்கிட்ட நிண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்காரு கொஞ்ச நேரம்....! இதெல்லாம் கூட்டிப் பெருக்கிப் பாத்தா.....?"

மறுபடியும் தனக்குள்ளாகவே முனகிக்கொண்டான் கணபதி.

"இதை இப்படியே விடக்கூடாது தலவருகிட்ட சொல்லணும்." "அவரு என்ன செய்வாரு? பாவம் புள்ளகுட்டிக்காரரு..... நாமலே இதுக்கு ஒரு முடிவு எடுக்கணும்.... கண்ணுச்சாமி காலம்பரவே ஆறுமுவத்தை கூட்டியாறணும். அவனை கலந்துக்குறாமே எதையாவது செஞ்சிட்டா கோவிச்சிக்கிருவான்...... இன்னையிலிருந்து ஒரு ஆள் கார் கிட்டேயே இருக்கணும்." மூவரும் படியேறி நடந்தனர். முன்னால் போய்க் கொண்டிருந்தது கறுப்பன்.

★

கிளாக்கரய்யாவின் வீட்டுக்குப் பின்னால், அவருடைய காய்கறித் தோட்டத்தை ஒட்டி, வேலியுடன் நிற்கும் பெரிய சீத்தா மரத்துக்கு கொஞ்சம் வெளியே இருக்கிறது ஒரு ஆறு காம்பரா லயம்.

அதிலுள்ள முதற் காம்பரா ஆண்டியப்பனுடையது. ஆண்டியப்பனுக்கும் அய்யாவுக்கும் நல்ல பிணைப்பு. ஓட்டப் பந்தயத்தில் காலையும், காலையும் பிணைத்துக் கொண்டிருப்பார்களே பந்தயம் முடிகிற வரைக்கும், அப்படி ஒரு பிணைப்பு!

தோட்டத்தில் இருப்பவர்கள் அவனை, 'ஆண்டியப்பன்' என்றே கூப்பட்டாலும் அய்யா அவனை ஆண்டி என்றே ஆசைபொங்க அழைப்பார். பெயருக்கு முன்னால் பெரும்பாலும் அடைமொழி போட்டே அழைப்பார். அதற்கெல்லாம் அவன் கோபித்துக் கொள்ளமாட்டான். தலையை சாய்த்துக் கொண்டு நடந்துவிடுவான். அலமேலுவிடம் சொல்லி அவனைக் கூப்பிட வேண்டிய சந்தர்ப்பங்களில் கூட "உன் புருஷனை வரச்சொல்" என்றோ, "ஆண்டியப்பனைக் கூப்பிடு" என்றோ அய்யா சொல்லமாட்டார். பெயருக்கு முன்னால் வைக்கும் அடையை வைத்தே "வரச்சொல்லு" என்று கூறுவார். அவளும் கோபித்துக் கொள்ளவோ, அவரைத் தவறாகப் புரிந்து கொள்ளவோ மாட்டாள். நமுட்டுச் சிரிப்புடன் நகர்ந்து விடுவாள். ஆண்டியப்பன் குடும்பத்துக்கும், அய்யாவுக்கும் அத்தனை நெருக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலமேலு நல்ல அழகானவள். இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகி விட்ட இப்போதே இப்படி இருக்கின்றாளே அந்த நாட்களில் எப்படி இருந்திருப்பாள்?

பத்துப் பதினொறு வயதிலேயே நல்ல துடியாக இருந்தாள். தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் கைதேர்ந்தவள். அவளொத்த மற்றதுகள் சிக்குப் பிடித்த தலையும், சிரங்கு பிடித்த கை, கால்களும், அழுக்கேறிப் போன உடைகளும், கழுவாத முகமுமாக அருவருப்பூட்டும் விதத்தில் தோட்டத்துப் பாதைகளில் உலவும் போது அலமேலு மட்டும் தலை வாரிப் பின்னி, பூச்சூடி பொட்டு சகிதம் சுத்தமான உடைகளுடன் பளிச் சென்று இருப்பாள்.

மலைக்கு சோறு கொண்டு போகும் போது, அரிசிக்குப் போகும் போது, பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது, என்று அவளைப் பாதையில் இரண்டொரு தடவை பார்த்த ஐயாவின் அம்மாவுக்கு அவள் மேல் ஒரு பிரியம் ஏற்பட்டது. அந்தப் பிரியமே நாளடைவில் அவளை அய்யா வீட்டுக்குள் நுழைய விட்டது. பெயர் பதியும் வரை "ஆறாங்காம்பரா அலமேலு" அய்யா வீட்டு எடுபடி வேலைக்காரியாகிவிட்டாள்.

சட்டி - பானைகளைக் கழுவிக் கொடுக்க, வீடு கூட்ட, அய்யா வீட்டு பைப் 'மக்கார்' செய்யும் நாட்களில் காட்டுப் பீலியில் இருந்து தண்ணீர் கொண்டுவர, என்று ஆரம்பித்தது. "அங்கேயே சாப்பிட்டு, அங்கேயே படுத்துக் கொள்ள" என்னும் அளவுக்கு வந்துவிட்டது.

அவளுடைய பெற்றோர்களுக்கும் இது வசதியாகப் போய்விட்டது. அவசரமென்றால் கூப்பட்டுக் கொள்ளலாம். அய்யாவிடம் சலுகைகள் பெறலாம். எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு ஆள் செலவு குடும்பத்தில் குறைகிறது. படுக்க இடம் என்பதிலிருந்து, உடுக்க உடை, சாப்பாடு என்பது வரை.

அவளும் பெரியவளாகி பெயர் பதிந்த பிறகும் இந்தப் பிணைப்பு விட்டுப் போகவில்லை. அந்தி நேரங்களில் வந்து அம்மாவுக்கு ஒத்தாசை செய்வதும், அம்மாவுக்கு ஏதாவது சுகயீனமென்றால் முழுக்க முழுக்க ஐயா வீட்டிலேயே இருந்துவிட்டு, அய்யா மூலமாக கண்டக்டரய்யா விடம் சொல்லி 'பேர்' போட்டுக்கொள்வதுமாக!

ஆகவே, கிளாக்கரய்யா என்றால் மற்றவர்களுக்கிருக்கும் பயம் அலமேலுவுக்குக் கிடையாது. படிப்படியாக அதை மாற்றியதே அய்யா தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென்று ஒரு கதை தோட்டம் முழுக்கப் பரவியது எண்ணெய்க் குதத்தில் பற்றிய தீ போல. அலமேலு ஒரு மாதிரியாக இருக்கின்றாள். இது போதாதா? வெறும்வாயையே மெல்லும் தோட்டத்துச் சனங்களுக்கு இது ஊறின அரிசி கிடைத்த மாதிரி. அய்யாவின் பெயரும் சாடை மாடையாக அடிபடவே ஊறின அரிசியுடன் வெல்லமும் கிடைத்தது போல அத்தனை வாய்களும் சுவையாக மென்றன.

உண்மையும் அது தான் என்றாலும் அது போன்ற பேச்சுக்களை நீடிக்கவிடலாமா?

தோட்டத்து தலைவர் பெரிய கங்காணி என்று பெரிய தலைகள் அத்தனையும் இதற்குள் நுழைந்து தீர்வு காணப் புறப்பட்டன.

முடிவு! அலமேலுவின் அத்தை மகன் ஆண்டியப்பன் மாட்டிக் கொண்டான்.

அலமேலுவுடன் இரண்டொரு தடவை அவன் பேசிக்கொண்டி ருந்ததை தலைவரே பார்த்திருக்கின்றாராம். பிஸ்கட் பக்கட் ஒன்றை வாங்கி அவள் கொழுந்தெடுக்கும் நிரையில் வைத்து தன்னிடம் செம்மையாக மாட்டிக்கொண்ட கதையைக் கூறினார் பெரிய கங்காணி.

இரண்டொரு தடவை பேசிக் கொண்டிருந்ததாலும் ஒரு பிஸ்கட் பக்கெட் வாங்கிக் கொடுத்ததாலும் அவள் ஒரு மாதிரி ஆகிவிடுவாளா! - யார் கண்டார்கள்?

ஆண்டியப்பனுக்கும் அவள் மேல் ஆசைதான்! ஆசை என்றால் கொள்ளை ஆசை! ஆகவே சம்மதம் என்று தலை யாட்டினான்.

அடிப்பட்டது மேளம்! அலறியது லவுட்ஸ் பீக்கர். அய்யா வீட்டுடன், ஆண்டியப்பனும் ஒட்டிக்கொண்டான்.

ஆண்டியப்பனாக இருந்தவன் வெறும் அப்பனாகி அய்யாவின் அன்புக்குப் பாத்திரமானவனாகிவிட்டான்.

இரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டு கேட்டது நாய் குரைக்கும் சத்தம்.

"என்ன சனியனுக இப்படிக் கொலைக்கிறது இன்னும் அவரைக் காணலியே" என்று எண்ணியபடி கதவைத் திறந்து கொண்டு இஸ்தோப் புக்கு வந்த அலமேலுவைத் தள்ளிக் கொண்டு உள்ளே பாய்ந்து கதவை இழுத்து மூடிக் கொண்டான் ஆண்டியப்பன்.

அவனுக்கு மூச்சு வாங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★

கணபதியின் வீட்டில் இருந்து கிளம்பிய ஆறுமுகம் ஆபீசை நோக்கி படிக்கட்டில் ஏறிக்கொண்டிருந்தான். அவனுக்கு ஏழெட்டுப் படிகள் முன்னால் ஏறிக்கொண்டிருந்தான் ஆண்டியப்பன்.

காரை பள்ளத்தில் தள்ளிவிடும் சதியில் ஆண்டியப்பனுக்கும் அரைவாசிக்கு மேலான பங்கு இருக்க வேண்டு மென்பது அவனுடைய ஊகம். கணபதியிடமும், கண்ணுச்சாமியிடமும் அதுபற்றி விளக்கமாகக் கூறியவன், கண்ணுச்சாமியைத் தனியாக அழைத்து, "அந்திக்கு ஆண்டியப் பனை எப்படியாவது மடக்கி, வீண் வம்புக்கிழுத்தாவது விஷயத்தைக் கிரகிக்க வேண்டும்..... ஏதாவது எடக்குப் பண்ணினான் என்றால் செம்மையாக உதைத்தாவது சங்கதிகளை கக்க வைக்கவேண்டும். இப்படியே விட்டுக் கொண்டிருந்தால் நாமெல்லாம் மானத்துடன் வாழ முடியாது" என்று கூறி வைத்தான்.

"கணபதி இதற்கெல்லாம் சம்மதிக்கமாட்டான் என்பது ஆறுமுகத்துக் குத் தெரியும். அவன் ஒரு அடக்கமான பேர்வழி. யாருடனும் எதற்காகவும் சண்டைக்குப் போகமாட்டான். ஒதுங்கியே இருப்பான். ஆகவே தான் அவனுக்குத் தெரியாமல் ஆறுமுகமும்,கண்ணுச்சாமியும் இப்படி ஒரு திட்டம் தீட்டினர்.

அந்திக்குக் காணவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த ஆண்டி யப்பனை அப்போதே காணநேருமென்று ஆறுமுகம் எண்ண வில்லை.

ஆறுமுகம் பாதிப்படிக்கட்டு ஏறிக்கொண்டிருக்கையில் அவன் றோட்டுக்கேறிவிட்டான். இவனும் வந்து பாதைக்கு ஏறுகையில் அவன் பங்களாவைத் தாண்டிக் கொண்டிருந்தான். அவன் ஆபீசுக்குத்தான் போகிறான் என்ற ஆறுமுகத்தின் ஊகம் பிழைத்தது. ஆபீஸைத் தாண்டி கறுப்பந்தைல மரங்களினூடாக அவன் நடந்து கொண்டிந்தான். கால் களை எட்டிப்போட்ட ஆறுமுகம் ஆண்டியப்பனை நெருங்கி விட்டான்.

காற்று நிறைந்த பொலித்தீன் குழாய் போல் வழுவழுப்பாய் உயர்ந்து நின்ற மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசி 'ஊய், ஊய்' என்று ஓலம் போட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்து நின்ற மரங்களிடையே ஓடி நெளிந்த ஓடை தேயிலைக்குள் மறைந்து கொண்டது.

"பந்தம் கொழுந்துவிட்டு எரியுறாப்புல இருக்கே!" ஆண்டியப்பனைத் தாண்டும் போது ஆறுமுகம் இப்படிக் கூறினான்.

புதராய் மண்டிக் கிடந்த தலையை முண்டாசால் மூடிக் கட்டியிருந்த ஆண்டியப்பன், கூர்மையான தனது கண்களால் அவனை உறுத்துப் பார்த்தான்.

"என்னடி மொறைக்கிறே....... அய்யாமாருக எல்லா நேரமும் கூடவரமாட்டாக நெனைச்சிக்கோ.... நாளைக்கி ஒனக்கு ஒண்ணுன்னா நாங்கதான் ஓடியாறனும்..... அய்யா சொன்னாருங்கிறதுக்காக கண்ணை மூடிக்கிட்டு ஏதாவது செஞ்சி எக்குத்தப்பா மாட்டிக்கிறாதே.... ஒதை பிச்சிப் பிடுவோம்..... ஆமா!" என்றான் ஆறுமுகம்.

ஆண்டியப்பனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. கீழு தட்டை மென்று கொண்டான்.

"ஒங்கிட்டே நான் என்னமாச்சும் பேச்சுக்கு வந்தேனா? ஏன் வீண் வம்புக்கு வர்றே.... வாங்கிக் கட்டிக்கவா?" ஆறுமுகத்தின் முகத்தில் இரத்தம் குபீரென்று ஏறியது. புறங்கையால் ஒரு அறை விட்டான் ஆண்டியப்பனின் தாவாயில்.

எதிர்பாராத விதத்தில் விழுந்த அடியால் மென்று கொண்டிருந்த உதடு கிழிந்து இரத்தம் கசிந்தது. 'பிர் பிர்' என வீங்கும் உதட்டை எச்சிலில் ஊறவைத்துக் கொண்டான் ஆண்டியப்பன்.

"இப்ப தெரியுதா யார் வாங்கிக் கட்டுனதுன்னு! படவா.... செய்யுறதையும் செஞ்சுட்டு ரெக்குளாஸ் கதைவேற கதைக்கிறியோ?"

மறுபடியும் ஓங்கிய அவனது கரத்தைக் தட்டிவிட்டான் ஆண்டியப்பன். ஆறுமுகத்தின் சட்டைக் கலரின் மடிப்புக்களை சடக்கெனப் பிடித்து உலுப்பினான்.

ஆறுமுகத்தின் சட்டை முதுகுப் பக்கமாக நைந்து கிழிந்தது. ஆண்டியப்பனின் பிடிக்குள் ஒரு கணம் சிக்கித் திணறியவன் தன்னைச் சமாளித்துக்கொண்டு, அவனுடைய கரங்களுக்கிடையில், முஷ்டி மடக்கிய தனது இரு கரங்களையும் உயர்த்தி ஓங்கி, அவனுடைய முகத்தில் இறக்கினான், முகத்தில் விழுந்த அடியைத் தொடர்ந்து விலாவில் விழுந்தது ஒரு குத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறி கலங்கிப் போன ஆண்டியப்பன் தடுமாறி விழுந்தான். அவனைத் தூக்கி நிறுத்தினான் ஆறுமுகம்.

"இது ஒவ்வொன்றும் ஓங்க அய்யாவுக்கு விழவேண்டிய ஓதை ...... இப்பவே ஓடிப்போய் சொல்லு, ஆறுமுகம் இப்படி சொன்னான்னு......... நான் பயமில்லே! ஆனாலும், நேத்து ராத்திரி என்ன நடந்தது..... அய்யா என்ன செய்யச் சொன்னாரு? நீ என்ன செஞ்சே அப்படீங்கிற வெவரம் எனக்குத் தெரிஞ்சாகணும்....?"

"நேத்து நான் கௌாக்கரய்யா வீட்டுப்பக்கமே போவலீயே... ஒரு மாதிரியா இருந்திச்சின்னு வெள்ளனவே படுத்துட்டேன்....." வேதனை கலந்த கீச்சுக் குரலில் குளறினான் ஆண்டியப்பன்.

"டேய்! பொய் பேசாதே!" என்றபடி வலது காலை மடித்து அவனு டைய கழுத்துக்குக் குறி வைத்து ஓங்கினான் ஆறுமுகம்.

கறுத்துத் திரண்ட அவனுடைய கெண்டைச் சதையில் ஸ்பரிங் ஸ்பரிங்காய் உரோமம் சுருண்டு கிடந்தது.

"ஓங்கிய அந்தக் கால் தனது கழுத்தில் உதைத்த தென் றால்" அதை நினைக்கவே அவனுக்குத் திகிலாய் இருந்தது. ஆள் நட மாட்டம் அதிகம் இல்லாத இந்தக் கறுப்பன் தைலக் காட்டில் இவனிடம் வம்பு பண் ணினால் உதை தான் மிஞ்சும் என்பதை உணர்ந்து கொண்டவன், கெஞ்சும் பாவனையில் அவனை நோக்கினான்.

"உன்னை அடிச்சு நொறுக்கணும்கிற ஆசையோ உன்மேல் கோபமோ கிடையாது.... எனக்குத் தெரிய வேண்டியதெல்லாம் நேத்து என்ன நடந்ததுன்னு தான்....... கறுப்பன் வெறட்ட நீ ஓடிப் பூந்துக்கிட்ட தெல்லாம் எனக்குத் தெரியும்......"

தான் எதைப்பற்றிக் கேட்கிறேன் என்பதை அடியெடுத்துக் காட்டினான் ஆறுமுகம்.

நடந்ததை விபரமாகக் கூறினான் ஆண்டியப்பன்.

"பின் டயரில் வைக்கப்பட்டுள்ள கல்லை அகற்றி விட்டு என்ஜின் பக்கமிருந்த காரை இரண்டொரு ஆட்டு ஆட்டித் தள்ளிவிட்டு, ஓடிவிடச் சொன்னாராம் அய்யா, அய்யா வீட்டுக்கு வந்திருந்த யாரோ இருவருடன் ஆண்டியப்பனும் சேர்ந்தே வந்திருக்கிறான். ஆனால், அதற்குள்ளாக விஷயம் தலைகீழாய் மாறிவிட்டது. கணபதி கண்டுவிட கறுப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரைத்து விரட்ட, அவன் பேசியவைகளைக் கேட்க கேட்க ஆறுமுகத் துக்கு இரத்தம் கொதித்தது. இவ்வளவு கீழ்த்தரமான எண்ணங்களும் குரோதமும் குடிகொண்டுள்ள ஒரு மனிதன் தங்களுடைய அதிகாரியாக இருப்பது எத்தனை கேவலமானது என்று எண்ணினான்.

"இதோ பார் ஆண்டியப்பா. கார் கவிழ்க்கப்படாததினால் இத்தோடு விஷயம் முடிந்தது. எப்படியோ விஷயம் வெளியாகி நீங்களெல்லாம் ஓடிப்போக நேர்ந்தது. ஓவூட்டும், ஒங்க அய்யாவூட்டும் நல்ல நேரம்; நேத்து ராத்திரி கார் மட்டும் பெறண்டிருந்தா இந்நேரம் என்னென்ன நடந்திருக்குமோ அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்! ரெண்டு கொலை விழுந்திருக்கும். ஒண்ணு நீ..... மற்றது அய்யா........"

ஆறுமுகத்தின் கண்கள் கொவ்வைப்பழம்போல் சிவந்து, துருத்திக் கொண்டிருந்தன.

ஆண்டியப்பனுக்கு உடல் நடுங்கியது. இப்போதே இப்படி அடித் தவன், காருக்கு ஏதாவது ஆகியிருந்தால் சத்தியமாகத் தன்னைக் கொலை செய்திருப்பான் என்று எண்ணிக் கொண்டான்.

வீங்கிப்போயிருந்த கீழுதட்டை வாய்க்குள் திணித்து சப்பிக் கொண்டிருந்தான்.

ஆறுமுகம் தொடர்ந்து பேசினான்.

"இதெல்லாம் நான் உனக்கு சொல்லலை. நீ போயி உன் அய்யா வுக்குச் சொல்லனும் என்பதற்காகச் சொல்கிறேன். கணபதியூட்டு காருக்கு என்னைக்காச்சும், ஏதாச்சும் நடந்தா, அது ஒங்கவேலைதாங்கிறது எங்களுக்கு நல்லாத் தெரியும். சும்மா விட்டுறமாட்டோம். நான் கிளாக்கர் அப்படீங்கிற திமிர்லே ஏதாவது ராங்கித்தனமா, "ஓ..... என்ன செய்வா னுகளாம்?" ன்னு கேட்டாருன்னா சொல்லு, டவுன்ல வச்சி அய்யா வூட்டுக் காரைக் கொளுத்திடுவோம்னு."

ஆண்டியப்பனைப் பார்க்கப்பார்க்க அவனுக்குப் பாவமாக இருந் தது. "இவனைப் போய் அடித்தேனே! இவன் என்ன செய்வான்? தூண்டி விட்டவன் ஒருவன், வாங்கிக் கட்டிக் கொண்டவன் இவன். பரிதாபம்" என்று எண்ணிக் கொண்டவன், "நீ போ ஆண்டியப்பா" அவனைத் தோளில் தட்டி அனுப்பிவிட்டு, மறுபடியும் கணபதி லயத்தை நோக்கி விரைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சொல் விடாமல் வரிக்குவரி அப்படியே அய்யாவிடம் போகு மென்பது ஆறுமுகத்திற்கு நன்றாகத் தெரியும். போக வேண்டுமென்பது தான் அவனுடைய குறிக்கோள்.

"இனி தகராறை ஆரம்பித்துவிடவேண்டியது தான்" என்று கண்ணுச் சாமியிடம் கூறிக்கொண்டிருந்தான் ஆறுமுகம். தன்னுடைய ஊகம் நூற்றுக்கு நூறு சரியென்பதை அவர்களிடம் கூறியவன் தான் ஆண்டி யப்பன் மூலம் அய்யாவுக்கு செய்தியனுப்பயுள்ளதையும் கூறினான். கணபதிக்கு பயமாக இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. கண்ணுச்சாமிக்கு உற்சாகமாக இருந்தது. "யூ. என். பி. வந்தாலும் ஸ்ரீ லங்கா வந்தாலும் ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே.... இந்த ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே..." என்று பெருங்குரலில் பாடிக் கொண்டு படி இறங்கியவன் திடுதிடென்று ஏறி மேலே ஓடி வந்தான்.

"அண்ணே! ஆறுமகண்ணே அய்யாவூட்டுக் கார் பெரிய றோட் டிலே வருது" என்று உற்சாகமாகக் கூறினான். ஆளுக்கொரு சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டு படி இறங்கி விரைந்த இருவரும் பள்ளிக் கூடத்தருகே தேயிலைக்குள் மறைந்து கொண்டனர்.

பள்ளிக்கூட வளைவை கார் தாண்டும் போது 'டமால்' என்று ஒரு கல் றோட்டுக்கு மேற்புமிருந்து வந்து காரைத் தாக்கியது.

திடீரென்று காரை நிறுத்திவிட்டு இறங்கிய டிரைவர் சிங்களத்தில் கூச்சல் போட்டான். றோட்டுக்குக் கீழே இருந்து ஏறிவந்த ஆறுமுகம் "என்ன டைவரண்ணே சத்தம்" என்று கேட்டான்.

"கல்லா? எங்கிருந்து? கண்ணாடி தவாளிச்சிக் கிறிச்சே" என்று டிரைவர் காட்டிய திசை நோக்கிக் கத்தினான். "டேய்! யாரது.... கல்ல டிச்சது? எறங்கி வாறியா, இல்லே நான் வரவா?" என்றபடி தேயிலையை முறித்துக் கொண்டு மேலே ஏறிப்பார்த்துவிட்டு இறங்கி வந்தான். "யாரையும் காணவில்லையே" என்றபடி.

ஆபாசமான வார்த்தைகளால் கூச்சல் போட்டுவிட்டுக் காரைக் கிளப்பினான் டிரைவர்.

ஆபீசுக்கேறும் படிக்கட்டைத் தாண்டுகையில் மீண்டும் ஒரு கல். கண்ணாடி ஒரு இம்மியில் தப்பியது.

கல் பட்ட இடத்தில் பெயிண்ட் விட்டுப்போய் பொட்டுப் பொட்டாய் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்கென்று காரைவிட்டு இறங்கியவன் படிக்கட்டை நோக்கிப் பாய்ந்தான்.

"என்ன டிரைவரய்யா மறுபடியும் கல்லா?" என்றபடி காரிடம் வந்த ஆறுமுகம், "இனி ஒரே கல்லுத்தான்" என்று முனகியபடி, "ஆமாம் நீங்க பாட்டுக்குமேலே ஏறி ஓடுறீங்க. காரை இப்படித் தலைகீழா நிறுத்திட்டு ஒரு நேரத்தைப் போல கார் அசஞ்சா ஆத்துல போயில்ல விழும்" என்றான்.

கார் நிற்கும் இடத்தையும் விதத்தையும் பார்த்தால் அப்படித் தான் தெரிந்தது. பயந்து போனவன் தடதட வென்று இறங்கி ஓடிவந்து காரில் ஏறிக்கொண்டான்.

காரைக் கொண்டுபோய் வீட்டில் போட்டுவிட்டு, அம்மாவிடம், விஷயத்தைக் கூறியவன் அய்யாவிடமும் கூறிவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு ஆபீசை நோக்கி விரைந்தான்.

அவன் ஆபீசை அடைந்த போது, வீங்கிய உதடும், வெளிறிப்போன முகமும், இரத்தங் கசியும் முழங்காலுமாக ஆண்டிப்பன் அய்யாவிடம் மிகத் தீவிரமாகப் பேசிக்கொண்டிருந்தான்.

கிளாக்கரய்யாவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. இப்படியும் நடந்திருக்க முடியமா? ஆறுமுகத்துக்கு, ஒரு சாதாரணக் கூலிக்காரனுக்கு, "இது உனக்கு விழுகிற உதையில்லே...... உன் அய்யாவுக்கு விழுகிற உதைன்னு சொல்ற அளவு தைரியம் இருக்குமா? "அவரூட்டு காரை டவுனில் வச்சி கொளுத்துவோம்னு கூறுற அளவு துணிச்சல் இருக்குமா?" என்றெல்லாம் எண்ணி மனதைப் பிசைந்து கொண்டவர், "உனக்கென்னா அவன் கிட்ட பேச்சு. நீ பாட்டுக்குப் போயிருந்தா இந்த வம்பெல்லாம் கெடையாதில்லையா" என்று ஆண்டி யப்பனை அதட்டிக் கொண்டிருந்தார்.

அதே நேரத்தில் தான் அவருடைய டிரைவர் தம்பியும், "காருக்கு ரெண்டு மூன்று தடவை யாரோ கல்லடிச் சாணுக" என்று கூறிக்கொண்டு ஆபீஸ் ஜன்னலண்டை நின்றான்.

இஸ்டோர் அடுப்பாய் கனன்றது அய்யாவின் உள்ளம்.

"உம்ப எய்தெங் ஆவே வத்தட்ட" என்று அவனிடம் சீறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர் இருந்தது; அவன் வந்தான். நீ ஏன் வந்தாயென்றால் அவன் என்னபதில் சொல்ல முடியும்? அய்யாவின் குணம் அவனுக்குத் தெரியும். இப்படித்தான் சம்மந்தாசம்மந்தமில்லாமல் கோபித்துக் கொள்வார்.

"என்ன விஷயம்?" என்பது போல் ஆண்டியப்பனுடன் கண்ணால் ஜாடைகாட்டிக்கொண்டிருந்தான்.

"நீ போ" என்று ஆண்டியப்பனை அனுப்பிவிட்டு, "எந்த இடத்தில் இருந்து கல் வந்தது? யார் அடித்தது?" என்று கேட்டார்.

இரண்டு தடவை கல் விழுந்தபோதும் ஆறுமுகமே முன்தோன்றி யிருக்கிறான். ஆகவே இந்தக் கல்வீச்சில் அவனுக்குச் சம்மந்தம் இருக்கிறது. ஆண்டியப்பனை காலையில் அடித்திருக்கிறான் என்பதிலி ருந்தும், அவன் ஆண்டியப்பனிடம் கூறியவற்றிலிருதும் இது ஊர்ஜித மாகின்றது.

"சரி சரி! நீ போ! இப்பவே திரும்பப் போகாமல் கொஞ்சங் கழிச்சே போ, கவனம்" என்று அவனையும் அனுப்பிவிட்டு ஆபீசுக்குள் நுழைந்தார்.

காலைச் சாப்பாடு மூலையில் கிடந்தது, தேநீர் அருந்த வேண்டும் என்று எண்ணிக்கொண்டாலும் எப்படி என்பது அவருக்குப் புலப் படவில்லை. எது எப்படி இருந்தாலும் இப்போதைக்கு அவனைப் பகைத்துக் கொள்வதில்லை என்ற முடிவுக்குத்தான் அவரால் வர முடிந்தது.

தான் நல்ல பாம்பாக இருந்தாலும் ஏழெட்டுப்பேர் சேர்ந்து கொண்டு கட்டெறும்பாய் கடித்தால் நல்லபாம்பால் ஒன்றும் செய்யமுடியாது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே ஆறுமுகத்தை அழைத்து சமாதானம் செய்துகொள்ளவேண்டுமென்று எண்ணிக் கொண்டார்.

இது ஆறுமுகத்தின் வெற்றி! கணபதியின் காருக்கு வெற்றி! அத்தனை தொழிலாளர்களினதும் வெற்றி!

இப்போதெல்லாம் கணபதியின் காருக்கு கிளாக்கரய்யாவால் எதுவித இடைஞ்சலும் இருப்பதில்லை. இரண்டு கார்களும் மாறி மாறி ஓடுகின்றன. எப்போதாவது கிளாக்கரய்யாவின் கார் படுத்துவிட்டால் கணபதியின் காரை அய்யாவே பாவித்துக்கொள்ளும் அளவுக்குப் பகை குறைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

சம்பளத்து வாசலில் தகராறு பண்ணிவிட்டு வந்த ஆறுமுகம் லயத்துத் தொங்கலில் கால்வைக்கையில், கண்ணுச்சாமி ஓடிவந்து கொண்டிருந்தது கண்டு நடை மெலிந்தான்.

“என்ன ஆறுமுகண்ணே ஆத்தாளைப் பாக்கப் போறீங்களா” என்று கேட்படி அவனுடன் நடந்தான் கண்ணுச்சாமி.

“ஆமா கண்ணா, இத்தருதி என்ன ஆச்சுன்னு தெரியல்லே ஆசுபத்திரிலேருந்து நான் வரயில மயக்கம் தெளிஞ்சு லேசா கண்ணைத் தொறந்துப் பாத்திச்சி மத்தவுகல்லாம் ஆசுபத்திரிலே தான் நிக்கிறாங்க. சம்பளத்தை வாங்கிக்கிட்டுப் போயிறலாம்ணுதான் ஓடியாந்தேன், இங்கே தான் தகாறாப் போச்சே.”

பேசிக்கொண்டே வந்த ஆறுமுகம் இஸ்தோப்புக்குள் நுழைந்தான்.

இஸ்தோப்பின் ஒரு மூலையில், அரைச் சுவரை ஒட்டி ஒரு பலகை நாற்காலி நின்றது.

“உக்காரு கண்ணா” என்றபடி உள்ளே போனான் ஆறுமுகம்,

கூரையின் இரும்புக் கம்பயில் தொங்கிய கொழுந்துக்கூடை உட்கார்ந்து சாய்ந்த கண்ணுச்சாமியின் தலையில் இடித்தது. நாற்காலியை சற்று முன்னுக்கிழுத்துப் போட்டுக் கொண்டான்.

ஒரு கிளாஸ் தேநீரையும், ஹோர்லிக்ஸ் போத்தலையும் கொண்டு வந்து அரைச் சுவற்றின்மேல் வைத்து விட்டு, “குடி” என்று கூறியபடி உள்ளே சென்றவன் தன்னுடைய தேநீர் கிளாஸை எடுத்துக்கொண்டு வந்து, திருகைக் கல்லின் மேல் கால் வைத்து ஏறி அரைச் சுவரில் அமர்ந்துகொண்டான்.

ஹோர்லிக்ஸ் போத்தலுக்குள் கிடந்த தேக்கரண்டியில் ஒரு கரண்டி சீனியை அள்ளி உள்ளங்கையில் கொட்டி வாய்க்குள் வீசி நறநறவென்று மென்று, உதட்டுக்கடியில் ஒளித்துக்கொண்டு தேநீரை வாய்க்குள் ஊற்றினான்.

உதட்டுக்கடியில் ஒளிந்திருக்கும் சீனி இலேசாகக் கரைந்து ஊற்றும் தேநீருக்கு இனிப்பேற்றிக் கொண்டிருப்பது இன்றெல்லாம் புரியாத ஒரு வித்தை. வாய்க்குள் இருந்த சீனி கரைந்து முடிந்ததும் உள்ளங்கையை நக்கிக்கொண்டான் ஆறுமுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தச் சீனிக்கு வந்தகெதியைப் பாத்தியா?" என்றபடி இன்னும் ஒரு கரண்டி சீனியை அள்ளி வாய்க்குள் கொட்டிக் கொள்ள மனமில்லாத வனாய் மடக்மடக்கென்று தேநீரைக் குடித்தான்.

வாயில் ஊற்றிய தேநீரை அவசரமாக விழுங்கிய கண்ணுச்சாமி ஆறுமுகத்தின் கேள்விக்குப் பதில் கூற எண்ணாதவனாக, "நானும் இப்ப உன்கூட ஆசுபத்திரிக்குவர்றேன்.... ஆத்தாளையும் எட்டிப்பாத் திட்டு, ஆறு மணிக்கு படம்பாத்துட்டு வந்துறணும். அதுசரி உங்கிட்ட செலவுக்குப் பணம் இருக்கா" என்று கேட்டான்.

"உதட்டைப் பிதுக்கிய ஆறுமுகம் அதான் தகராறுல போயிருச்சே! இனி நாளைக்குத்தான் காருக்குக்கொட காசு குடுக்கலே" என்று முனகிக் கொண்டான்.

"இந்தாங்கண்ணை இதை வச்சிக்கிருங்க" என்று பதினைந்து ரூபாயை அவனிடம் நீட்டிக் கொண்டே பேசினான் கண்ணுச்சாமி.

"என்னையும் தட்டிவிடத்தான் பாத்தானுக, நான் விடலே அது சரியண்ணே சல்லி எல்லாம் தொரைகிட்ட இருக்கு. செக்றோலும், கணக்கும் கிளாக்கர் கிட்ட இருக்கு. அய்யா கொறைச்சி வாசிக்கிறாரு. அய்யா கொறைச்சி வாசிக்கிறாருன்னா எப்படி முடியும்? கொறைச்சி வாசிச்சாலும் மீர்ற சல்லி தொரக்கிட்டத் தானே இருக்கும். எனக்கென் னமோ இது பிடிபடலே...... அப்படி நடக்கலாம்னு நான் நெனைக்கலே எனக்கு வாசிச்சது சரியாத்தானே இருந்தது."

அவன் நீட்டிய ரூபாவை வாங்கி சட்டைப் பைக்குள் சொருகியபடி, "நாளைக்குத் தர்றேன்" என்று நன்றியுடன் கூறிய ஆறுமுகம், "டேய் கண்ணா! மடத்தனமா பேசாதே! காசு தொரக்கிட்டத் தான் இருக்கு. கணக்கு மட்டுத்தான் அய்யா கிட்ட இருக்கு. போகவேண்டியவங் களுக்குப் போகாமல் மீதிப்பட்டுப் போயிருக்கிற காசை தொரைக் கிட்டேருந்து எடுத்துக்கிறதா பெரியவேலை..... அதோட எனக்கு வாசிச் சது சரியாத்தானே இருந்திச்சுன்னு சொல்றியே! நீந்தான் வெவரம் வேணும், வெவரம்வேணும்னு கேட்டுக்கிட்டே இருந்தியே அதிலியே அவரு உஷாராயிற மாட்டாரா, உனக்குப் போய் குறைச்சி வாசிப் பாரா....?"

"அப்படீன்னா தொரையும் கிளாக்கரும் மீதி இருக்கிற கூடுதல் பணத்தை பிரிச்சு எடுத்துக்கிறாங்களா.....?" என்று கேட்டான் கண்ணுச் சாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீச்சி! இந்த மாதிரி சில்லரை வேலைக்கெல்லாம் துரை மாருக தலைபோடமாட்டானுக..... ஆனாலும் தொரை கிட்ட இருக்கிற காசு கிளாக்கரய்யாவுக்கு எப்படி வருதுங்கிறது? உனக்குத் தெரியலே அப்படித் தானே....! நான் வெவரமாக சொல்லித்தாறேன். இப்பக் கௌம்பு அதோ கணபதியூட்டுக்கார் கீழே வந்திருச்சி" என்று கூறியபடி எழுந்தான்.

இருவரும் படியிறங்கியதும் ஆறுமுகம் உள்ளே திரும்ப, "மங்கா, மங்கா" என்று கூப்பிட்டான். அவனுடைய தங்கை மங்களம் எட்டிப் பார்த்தாள்.

"அப்பா நான் எல்லாம் வர நேரமானாலும் ஆகும். கண்ணம்மாவைக் கூட்டியாந்து வச்சிக்கோ" என்று தங்கையிடம் கூறிவிட்டு நடந்தான்.

இருவரும் றோட்டுக்கேறவும், கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

"எப்படியாவது நொளைஞ்சிக்கிறுங்க" என்றான் கணபதி.

பின் சீட்டில் நுழைந்துகொண்ட ஆறுமுகம், முன் சீட்டில் இருந்த ஆண்டியப்பனின் முதுகில் தட்டினான்.

"என்ன ஆண்டியப்பா...... அய்யாவுக்குப் போத்தல் கொண்டார வா?"

"சீச்சீ! அதெல்லாம் கெடையாது. சும்மா ஒரு படம் பாத்துட்டு வரலாம்ணு" என்று இழுத்தான்.

"சம்பளம் வாங்கியாச்சுல்ல, போக வேண்டியது தான்" என்று கூறிய ஆறுமுகம் கண்ணுச்சாமியின் காதுக்குள், "காலம்பறைக்கு கட்டாயம் ஆபீசுக்கு வா. ஏன்னு பெறகு சொல்றேன்" என்று கூறினான்.

பெரட்டுக் கலைந்த கையோடு ஆபீஸை நோக்கி நடந்தான் ஆறுமுகம்.

நேற்று சாயந்தரம் சம்பளத்து வாசலில் தகராறு நடந்தது பற்றிக் கேள்விப்பட்டிருந்த கண்டக்டரய்யா அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை. சம்பளத்துக்குத் தாமதித்தவர்கள் கடைசிவரை நிற்காவிட்டால் மறுநாள் காலையில் போய் வாங்கிக் கொள்ளலாமென்பது வழக்கமாகிவிட்டது. ஆறுமுகத்தின் தாய் மலையில் விழுந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டி ருப்பதையும், அதனால் அவன் சம்பளத்துக்கு நேரத்துடன் வரமுடியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதையும் அதைப்போய் பெரிதுபண்ணி கிளாக்கரய்யா சம்பளம் கொடுக்க மறுத்ததையும் அவர் அறிந்தே இருந்தார்.

ஆகவே அவனிடம் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் அவனுடைய வாலைப் பிடித்துக்கொண்டு கண்ணுச்சாமியும் படியேறவே, அவனை இழுத்துப் பிடித்தார்.

"இந்தா கண்ணுச்சாமி, நீ எங்கே போறே? பெரட்டுக் கலைஞ்சதும் நேரா மலைக்குத்தான் போகணும்ங்கிறது மறந்து போச்சா?"

கண்ணுச்சாமி தலையைச் சொறிந்தபடி நின்றான். பிறகு மெதுவாக இறங்கி அய்யாவிடம் வந்தான்.

"நானும் சம்பளம் வாங்கலைங்க."

"என்னது வெளையாடுறியா? நான் சம்பளத்து வாசல்ல இல்லாட்டியும் அங்கே என்னென்ன நடக்குது, நடந்ததுங்கிறது எல்லாம் எனக்குத் தெரியும். கொந்தரப்பு சம்பளத்துல "டிஸ்பி யூட் பண்ணுனியாமில்ல?" அவரைத் தொடர்ந்து பேசவிடாது குறுக்கிட்டான் கண்ணுச்சாமி.

"கோவிச்சிக்காதங்கையா..... பொய்தான் சொன்னேன். மன்னிச்சிக் கிறுங்க. நான் சம்பளம் வாங்கிட்டேன் ஆனா..."

"என்ன ஆனா ஆவன்னான்னுக்கிட்டு?" என்று அவனை அதட்டினார் ஐயா.

"நேத்தே ஆபீசுல தகராறு பண்ணி, பெரியாணியை வேட்டி புடிச்சு இழுத்து கலாட்டா பண்ணிறிச்சி ஆறுமுகண்ணே. இப்பவும் அது மாதிரி ஏதாவது நடந்துறாம பாத்துக்கிறலாம்னு தான்..."

"அப்பா இவரு மகா யோக்கியரு. நீயும் கலாட்டா பண்ணிட்டுத் தானே கையை நீட்டினே சரி சரி போ. போய் அவன் கலாட்டா ஏதும் பண்ணாம பாத்துக்க. அவன் "அடி"க்கங் காட்டியும் நீ தடியை எடுத்து நீட்டுறவனல்லே" என்றபடி வீட்டுக்குள் நுழைந்து கொண்டார்.

ஆறுமுகமும் கண்ணுச்சாமியும் கள்ளி மரத்தடியில் நின்றனர். நேற்றுச் சம்பளம் வாங்காத - இன்று சாயந்தரம் வரை பொறுத்துக் கொள்ள முடியாத - இன்னுஞ் சிலர் மாமரத்தடியில் நின்று கொண்டிருந் தனர்.

நேற்று இரவு பெய்த பனியால் பதத்துப்போய்க் கிடந்த மாஞ் சருகுகள் அவர்களுடைய காலடியில் சரசரக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தினூடாக விழும் வெய்யில் கற்றையில், துரைக்கு மறைந்து சுகம் அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள் ஜன்னல் திறக்கப்படும் சத்தம் கேட்டதும் மெதுவாக ஆபீஸை நோக்கி ஏறினார்கள். கண்ணுச்சாமி கள்ளி மரத்துடன் ஒட்டி ஒளிந்து நின்றான். அவனைக் கண்டுவிட்டால் போதும் கிளாக்கரய்யாவுக்கு. சீறி விழுவார். நேற்று சட்டம் பேசி, விவரம் கேட்டறிந்த பிறகு சம்பளம் வாங்கியவனாயிற்றே!

சம்பளம் போட்டபிறகு மீதியுள்ள பணத்தை எண்ணி வைத்துக் கொள்வார் துரை. மீதம் எவ்வளவு இருக்க வேண்டு மென்பதை லிஸ்டின் படி கூறுவார் கிளாக்கரய்யா. வித்தியாசம் இருந்தால் இருவரும் மறு படியும் சரிபார்த்துக் கொள்ளுவார்கள்.

நேற்றும் அப்படி எடுத்த அந்த லிஸ்டை எடுத்து மேசை மேல் வைத்துக் கொண்டுதான் ஜன்னலைத் திறந்தார் கிளாக்கரய்யா. லிஸ்டில் உள்ள அத்தனை பேரும் வந்திருக்க மாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஒரு சிலர் அந்திக்கு வருவார்கள். ஆகவே லிஸ்டை வைத்துக் கொண்டு பெயரை வாசித்தார்.

ஐந்தாறு பேர் சம்பளம் வாங்கிக்கொண்டு போன பிறகு ஆறுமுகம் கூப்பிடப்பட்டான். ஆறுமுகம் ஜன்னல் அருகில் நிற்கும் போது, கண்ணுச் சாமி மாமரத்தடியில் நின்றான். சம்பளத்தை வாங்கிக்கொண்டு திரும்பி யவன் கண்ணுச்சாமி கீழே நிற்பதைக் கண்டு மேலே வரும்படி "சைகை" செய்தான்.

"என்ன போகக் கெளம்பிட்டே? அதுக்கா ஒன்னைய காலம்பரைக்கு ஆபீஸுக்கு வான்னேன்" என்றவன் குறுக்குப் பாதையைக் காட்டினான்.

ஆண்டியப்பன் ஏறிவந்து கொண்டிருந்தான். முண்டாசு முன்தலை யிலிருந்தது. கள்ளிமரத்தைக் கடக்கையில் முண்டாசை அவிழ்த்து கம்கட்டில் இடுக்கிக் கொண்டு ஜன்னல்முன் போய் நின்றான்.

அவனுடைய பணிவும், மரியாதையும், கூனிக்குறுகி நின்ற விதமும் "ஐயோ பாவம். அப்புறாணி" என்று துரையை எண்ண வைத்தன.

"ஒனக்கு என்னா?" என்று அதட்டினார் கிளாக்கரய்யா.

"சம்பளங்க!" என்று கெஞ்சினான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சம்பளம்! ஒனக்கு ஏன் நேத்தே வரமுடியாது? என்னைக் காச்சும் வந்து ஒழுங்கா சம்பளத்தன்னைக்கு வாங்கியிருக்கியா? எந்த மாசம் பாத்தாலும் இதே எளவுதான் உன்னோட, கடன்காரனுகளுக்குப் பயந்து கிட்டு ஒளிஞ்சிர்றது. அப்புறம் நைசா காலையில் வர்றது” என்று பொரிந்து தள்ளியவர், “கெடையாது போ. ஒனக்கு ஒரு தடவையாவது இழுத்த டிச்சாதான் புத்தி வரும்” என்றபடி ஜன்னலை மூடப்போனார்.

“புவர் பெலோ வில் பே ஹிம்” என்று துரை கூறவே “வா, வா. துரைமாருகதான் உன்னைய கெடுக்கிறது” என்று முனகிய படி அவனு டைய பெயரையும் தொகையையும் வாசித்தார்.

அவர் வாசித்த தொகையை ஆறுமுகம் தன்னுடைய பொக்கட் டயரியில் குறித்துக் கொண்டான்.

“வா கண்ணா போவோம்” என்று அவனையும் இழுத்துக் கொண்டு இறங்கி நடந்தான். ஒரு சில இடங்களில் மாஞ்சருகு சரசரத்தது.

“ஆண்டியப்பனூட்டு சம்பளத்தை ஏன் எழுதிக்கிட்டே?” நடந்து கொண்டிருந்த கண்ணுச்சாமி ஆறுமுகத்திடம் கேட்டான்.

“அவனுடைய பெயர் கணக்கை எப்படியாச்சும் கண்டக்டரய்யா கிட்ட கேட்டு வாங்கி அவனுடைய சம்பளத்தை நான் செய்துபார்க்கப் போறேன்”

“ஏன்?”

“ஏனா? அவனுக்கு என்ன சம்பளம்னு பார்த்து இப்ப அய்யா வாசிச்ச தொகை சரியான்னு செக் பண்ணப் போகிறேன். நீ நேத்துக் கேட்டீல்ல, காசு இருக்குது தொரை கிட்டே அது எப்படி அய்யா கிட்ட வரும்னு? அது இப்படித்தான் வருதுன்னு உனக்கு மட்டுமில்லே இந்தத் தோட்டத்துக்கே காட்டித்தரப் போறேன்”

“நேத்து கார்ல இருந்தானே ஆண்டியப்பன். அப்ப நான் அவன் கிட்டே என்ன சொன்னேன்னு ஞாபகப்படுத்திப்பாரு. “சம்பளம் வாங்கி யாச்சில்ல. படம் பார்க்கப் போக வேண்டியதுதான்”னு சொன்னனே இல்லியா? “நான் இன்னும் சம்பளம் வாங்கலைடாப்பானு” அவன் சொன்னானா? இல்லைதானே. அப்படீன்னா நேத்தே கூட்டத்தோட கூட்டமா சம்பளம் வாங்கிருக்கான்........”

“அப்போ இப்போது வாங்குனது?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது தான் அய்யா மீதம் பிடிக்கிற காசு" என்று கூறிய ஆறுமுகத்தைத் திகைப்புடனும் ஆச்சரியத்துடனும் பார்த்துக் கொண்டு நின்றான் கண்ணுச்சாமி.

கேவலம், நாயினும் கீழ்த்தனமான வாழ்வுடன் போராடிக் கொண்டிருக்கும் இந்த ஏழை, ஏமாளிகளின் கால்வயிற்றுக்குப் பத்தாத ஊதியத்திலும் ஊசிமுனை, ஊசிமுனையத்தனையாகக் கிள்ளி ஒளித்துக் கொள்ளும் இந்தக் கூட்டத்தை எது செய்தாலும் தகும் என்ற ஆக்ரோஷம் அவர்கள் இருவரையும் ஊமையாக்கி விட்டிருந்தது.

"கீழ்ச்சாதி ராஸ்கல்! இந்த நாய்ப்பயலுக்கு காற் சட்டை, சப்பாத்து, போதாதுக்கு கார் வேறு" செங்கல்லாய் இறுகிக் கிடந்த முகத்துடன் முனகிக்கொண்டான் ஆறுமுகம்.

"அண்ணே ஆண்டியப்பன் எங்கே போனான்னு தெரியலியே? நாம அவனைப் பன்தொடர்ந்து போயிருந்திருக்கணும்."

"ஆமா கண்ணா நாம தப்புப் பண்ணீட்டோம். இப்பவும் ஒண்ணும் குடிமுழுகிப் போயிறல்லே, வாபோவோம்" என்றபடி ஆபீலை நோக்கித் திரும்பிய ஆறுமுகத்தை மறித்து நிறுத்தினான் கண்ணுச்சாமி.

"கீழே பாருங்க யாரு வாறதுன்னு!"

அவன் காட்டிய திக்கில் பார்த்தான் ஆறுமுகம். அலமேலு படியேறிக்கொண்டிருந்தாள். அவளுடைய இடுப்பில் படங்கில்லை, தலையில் கூடையில்லை. தலைத் துணி மட்டும் அழகாகத் தலையை முட்காட்டிருந்தது.

"ஆபீஸுக்குத்தான் போவுதுபோல இருக்குது. ஏன்னு கேளுங்க பார்ப்போம்." ஆறுமுகத்தின் காதுக்குள் கிசுகிசுத்தான் கண்ணுச்சாமி.

"கேக்குறது என்னத்தை? கூடையும் இல்லாமே ஒன்றும் இல்லமே போகையிலேயே தெரியலியா ஆபீஸுக்குத்தான்னு" என்று தொடங்கியவன் பேச்சை முடிக்குமுன்பாக அவர்களை நெருங்கி விட்டாள் அலமேலு. எதிரே இரண்டு ஆண்பிள்ளைகள் இறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டவள் சேறில்லா ஒரு இடத்தில் ஒதுங்கி நின்று கொண்டாள்.

அவளைத் தாண்டும்போது ஆறுமுகம். "எங்கே அலமேலு போறே காலையிலேயே?" என்று கேட்டான்.

"சம்பளம் வாங்கத்தாண்ணே" என்றபடி அவள் நடந்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இதுவும் இரண்டாவது வாட்டியா?” என்று கேட்ட கண்ணுச் சாமிக்கு, “நிச்சயமாக” என்று பதில் கூறினான் ஆறுமுகம்.

ஆபீஸிலிருந்து நேராக ஒரு குறுக்குப் பாதை இறங்குகிறது கிளாக் கரய்யா பங்களாவுக்கு. தேயிலைக்குள்ளாக ஆட்கள் இறங்கி இறங்கி ஏற்படுத்திக்கொண்ட பாதை அது. இதுதான் குறுக்குப் பாதையென்பது தெரிந்தவர்களுக்கு மட்டுமே தெரியும். மற்றவர்களுக்குப் பச்சையுடன் பச்சையாகத் தேயிலைதான் தெரியுமேயொழிய பாதை தெரியாது. இங்கே ஒரு குறுக்குப்பாதை உண்டே என்று யாராவது நினைவு படுத்தித் தேடினாலும் நெஞ்சு முட்டும் அந்த ஏற்றத்தைக் கண்டதும், “கெடக்குது சனியன்” என்று பாதை நெடுகப் போய் படியேறி ஆபீஸுக்குப் போவார்கள்.

ஆண்டியப்பன் இன்று ஆபீஸுக்கு ஏறிவந்ததும் அதே குறுக்கில் தான். அதிலேயேதான் இறங்கியும் போயிருப்பான்.

மலை மக்களுக்குப் போர்த்தப்பட்ட பனிப் போர்வையை இயற்கை யன்னை இன்னும் எடுக்கவில்லை. தேயிலைகள் குளித்து நின்றன. சிரித்துக்கொண்டு, சிலிர்த்துக்கொண்டு நிற்கும் தேயிலைக்குள் சீலையை நனைத்துக் கொண்டு ஏற இஷ்டப்படாததாலேயே அலமேலு றோட்டுச் சுற்றிப் படியேறிப் போகின்றாள்.

ஆண்டியப்பன் குறுக்குப் பாதை வழியாக இறங்கியிருந்தாலும் அவனைப் பிடித்துவிடும் நோக்கத்துடன் கால்களை எட்டிப் போட்டனர் ஆறுமுகமும் கண்ணுச்சாமியும்.

அலமேலு, ஆபீஸை அடைவதற்கும் ஸேஃபைப் பூட்டி விட்டு துரைமேசையிடம் நிற்பதற்கும் சரியாக இருந்தது.

“என்ன இன்னும் காணலியே” என்று காத்துக் கொண்டிருந்த வரைப்போல், “அப்பா வந்துட்டியா?” என்று முனகிக் கொண்ட கிளாக் கரய்யா, “வில் பே திஸ் வுமன் ஆல்சோ சர், ஹர் சைல்ட் இஸ் சீரியஸ் ஐ அன்டர் ஸ்டாண்ட்” என்று குழைந்தார்.

“ஓகே ஓகே” என்று முனகியபடி ‘ஸேஃபை’த் திறந்த துரை, அய்யாவுக்காகக் காத்திருந்தார்.

கிளாக்கரய்யா கூறிய தொகையை எண்ணி எடுத்து தன்னுடைய ஜன்னலைத் திறக்காமலே கிளாக்கரய்யாவின் ஜன்னல் வழியாக அவளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் நீட்டிவிட்டு, பெட்டியைப் பூட்டிச் சாவியை எடுத்துக்கொண்டு 'டக் டக்' என்று நடந்துவிட்டார்.

தலைத்துணியை எடுத்து வாயில் போட்டு மூடிக்கொண்டு, "நான் போறேங்கய்யா செலாங்க" என்ற படி எதிரே நின்ற அலமேலுவை ஒரு மாதிரியாகப் பார்த்தார் அய்யா.

"ஏம் போறது? இப்படி வா உள்ளுக்கு தொரையும் போயாச்சு. நான் மட்டுந்தான் இருக்கி" என்றார் கேலியாக.

"அய்யாவுக்கும் ஆசைதான்" என்ற அலமேலு அவர் அவளைப் பார்த்தது போன்றதொரு பார்வையை அவர் மேல் வீசி சுவருக்கப்பால் மறைந்துகொண்டாள்.

"ஹிக்கும், எனக்கு மட்டுத்தான் ஆசை ஒனக்குக் கிடையாது" என்று இழுத்தவர், "நீ இன்னைக்கி வேலைக்குப் போவுதா?" என்றார்.

"இல்லீங்க, அது போவ வாண்டாமுன்னுறிச்சி"

"ஓஹோ மெட்னியா" என்று சிரித்தவர், "சரி சரி அம்மா டவுனுக்குப் போறது. சாமானெல்லாம் கொண்டாறதுக்கு. அப்பனையும் கூட்டிப் போறது நீ சாவியை வாங்கி வெச்சிக்கோ." என்று முடித்தார்.

அவள் படியேறத் தொடங்கையில், வெளியே வந்து நின்று கொண்டார்.

மெலிந்த அந்த உடலில் அவள் சீலையைச் சுற்றியுள்ள விதம் அவருக்குப் பிடித்திருந்தது. அழகாகத்தான் இருந்தாள்.

ஆண்டியப்பனுக்கு அம்மா தேத்தண்ணீர் ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். வீட்டில் ஒருவருமில்லை. அந்த வீட்டில் ஆண்டியப்பன் நுழையாத இடம் கிடையாது. சமையலறைமுதல் படுக்கையறைவரை எல்லா இடங்களிலும் பரிபூர்ண சுதந்திரத்துடன் சுற்றி வருவான்.

"இந்தா ஆண்டியப்பா தேத்தண்ணி" என்று அவனிடம் கிளாஸை நீட்டிய அம்மா அடுத்த அறைக்குள் நுழைந்து கொண்டாார்கள்.

தேநீரைக் குடித்துமுடித்த ஆண்டியப்பன், அம்மாவின் வாலைப் பிடித்துக்கொண்டே அந்த அறைக்குள் நுழைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்த அலுமாரிக்கு முன் பாவாடையும் பிரஸியருமாக நின்று கொண்டிருந்த அம்மா தன்னுடைய நீட்ட அங்கியை இழுத்து மாட்டிக் கொண்டிருந்தார்கள்.

அவனுடையதும் ஆண் மனம் தானே! பால் போன்ற அந்த மேனியைப் பார்த்து வியந்து நின்றான்.

"இந்தாங்கம்மா" என்று சட்டைப் பையில் இருந்த பணத்தை எடுத்து நீட்டினான்.

அம்மாவும் அலட்டிக்கொள்ளவில்லை. மாட்டிக் கொண்ட அங்கியின் பொத்தான்களைக்கூட மூடாமல் அவனிடம் வந்து அவன் நீட்டிய பணத்தை வாங்கி எண்ணி அலுமாரிக்குள் வைத்தார்கள்.

அவனை வைத்து எவ்வளவோ ரகசியமான வேலைகளை யெல்லாம் செய்யும்போது, இதில் என்ன ரகசியமும் ஒளிவு மறைவும்.....!

"நாலு கட்டை கெடக்கு, கொத்திப்போட்டுட்டுப் போ" என்று - கோடரியை அவனிடம் கொடுத்தார்கள். கோடரிக் காம்பு அவ்வளவு நீளமானதாக இருந்தும் அவன் ஏனோ அம்மா பிடித்திருந்த இடத்திலேயே பிடித்து வாங்கினான்.

அம்மாவுக்குச் சிரிப்பு வந்தது. அவனுடைய கண்ணுக்குள் ஊடுருவிப் பார்த்தார்கள். அவன் சித்தம் கலங்கிப் போனான்.

எஜமான் விசுவாசம் குன்றாமல் இந்த நாயைத் தங்கள் காலடியில் போட்டு வைத்திருக்கவே, இந்த மாமிச ருசி!

முண்டும் முடிச்சுமாகக் கிடந்த சவுக்குக் கட்டைகள் அவனுடைய வெறியில் தூள் பறந்தன.

குசினிக்குள் வேலை செய்து கொண்டிருந்த அம்மாவும் அடிக்கொரு தடவை அவன் முன் வந்து நின்று படம் காட்டி அவனுடைய வலிமையைப் பெருக்கிக்கொண்டிருந்தார்கள்.

வெட்டிய விறகை அடுக்கி அள்ளிக் கொண்டுவந்து சமையலறைக்குள் போட்டு முடித்த பின்பும் அவனால் போக முடியவில்லை. ஏதோ ஒரு சக்தி அவனை நிறுத்தி வைத்தது.

ரேடியோவில் சிங்களப் பாட்டுப் போய்க்கொண்டிருந்தது. அம்மாவும் ரேடியோவுடன் பாடிக்கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ் போட்டுக் கேக்கங்களாம்மா?" என்று கெஞ்சுவது போல் கேட்டான் ஆண்டியப்பன்.

"போடேன். நானா புடிச்சுக்கிட்டேன்" என்று கூறிய படி சமையலைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள் அம்மா.

அய்யாவுக்குப் பகல் சாப்பாடு கட்டியனுப்ப வேண்டும். தபால் பையன் வந்து காத்துக்கொண்டிருப்பான்.

வைத்தாயிற்று. பையன் வந்து எடுத்துக்கொண்டு போய் விடுவான். யாரும் இருந்து எடுத்துக் கொடுக்கத் தேவையில்லை.

ஆண்டியப்பன் பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"நீ இரு, நான் குளிச்சுட்டு வந்துட்றேன்...... யாருமில் லைத்தானே" என்றபடி அம்மா பாத்ரூமிற்குள் நுழைந்து கொண்டார்கள்.

ஆண்டியப்பனுக்கு இருப்பு கொள்ளவில்லை. சொர் சொர் என்று தண்ணீர் விழும் ஓசை அவனை எங்கெங்கோ விரட்டியது.

குசினிக்குள் போவது போல் பாத்ரூமைப் பார்த்தான். கதவு பூட்டப் படாமல் சாத்தியிருந்தது.

கதவுக்கடியால் தெறிக்கும் தண்ணீர் அவனை என்னவோ செய்தது.

நடுங்கும் கைகளால் கதவைத் தள்ளப் போனான்.

"அம்மா.... அம்மோவ்..." என்று கூறியபடி அலமேலு உள்ளே வந்தாள்.

ஆண்டியப்பனைப் பிடித்துவிடும் நோக்கத்துடன் தட தட வென்று படியிறங்கிய ஆறுமுகத்துக்கும் கண்ணுச்சாமிக்கும், கண்டக்டரய்யா பாதையில் நின்று கொண்ருந்தது பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது.

இவரைத் தாண்டி எப்படி ஓடுவது? அவனை எப்படிப் பிடிப்பது!

"சம்பளத்தை வாங்கிக்கொண்டு நேராக எங்கே போகின்றான் என்பதைக் கண்டு பிடித்தால் தானே மீதியை ஊர்ஜிதப்படுத்தலாம். இவர் ஒருபக்கம் நந்தி மாதிரி முன்னால் நின்று கொண்டு...."

"ஏண்டாப்பா, சம்பளத்தைத் தான் வாங்கியாச்சே அப்படியே மலைக்குப் போகாமல் இங்கே ஏன் எறங்கி வர்ரீக?" மேலும் அவர்களை யோசிக்கவிடாது பேசினார் கண்டக்டரய்யா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சம்பளத்தோட மலைக்குப் போனா, எங்குட்டாச்சும் விழுந்து கிழுந்து போயிட்டா என்னங்க பண்ணுறது. இனி அடுத்த பத்தருதி ஓட்டணுமே? ஒரு எட்டு ஓடி வீட்டுல வச்சிட்டு வந்துடுறேங்க” ஆறுமுகம் தலையைச் சொறிந்து கொண்டு நின்றான்.

“அப்ப நீ மலைக்குப் போ.....” என்று கண்ணுச்சாமியை பார்த்துக் கூறியவர், அவனை மலையை நோக்கி ஏறச்செய்து விட்டு, ஆறுமுகத்திடம் கூறினார்: “அப்படியே கணபதிகிட்டச் சொல்லு எனக்கு அந்திக்கு கார் வேணுமின்னு. ஒரு ஆறு மணிக்கு வந்தா போதும்” என்றவர் ஆபீஸை நோக்கி நடையைக் கட்டினார்.

இப்போது துரை ஆபீஸில் இருக்கமாட்டாரென்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான் பனிகாயும் வரை கிளாக்கரய்யாவுடன் அரட்டை அடித்துக் கொண்டு இருக்கலாமென்று ஆபீஸுக்கு கிளம்புகிறார். அவருடன் பேசிக்கொண்டிருக்கவும் கண்டக்டரய்யாவுக்குப் பிடிப்பதில்லை.

அவர் பேச்சோடு பேச்சாக இவரிடமிருந்து சில விஷயங்களைக் கிரகித்து துரையிடம் கூறி, தான் நல்ல பிள்ளையாகிக் கொள்வதுடன் இவரைப் பொல்லாதவராக்கி விடுவது வழக்கமாகிவிட்டது.

ஆபீஸுக்குப் போய் அவருடன் வெட்டிக்கதை பேசாமல் வீட்டிலேயே இருந்துவிடலாமென்றால் துரையிடம் தப்பிக்க முடியாது. நேரம் கெட்ட நேரத்திலே வந்து செக்ரோலைக் கேட்டுப் பார்ப்பவர், காலை நேரத்திலா வரமாட்டார். இன்னும் வீட்டுக்குள்ளேயே தானா என்பார். இந்தக் குத்தல் பேச்சுக்கள் அய்யாவுக்குப் பிடிப்பதில்லை. வீட்டுக் குள்ளே இருந்து கொண்டு, ‘இல்லை’ என்று சொல்லிவிடவும் பயம். அவர் பாட்டுக்குத் துப்பறியும் நாய்போல் மூக்கை விரித்துக்கொண்டு உள்ளே நுழையமாட்டார் என்பதற்கு வேறு ஏது அத்தாட்சி?

அதற்கு அந்த வெள்ளைக்காரன்தான் லாயக்கு. கண்டக்டரய்யாவுடன் பேசவேண்டுமென்றால், ‘இத்தனை மணிக்கு ஆபீஸுக்கு வரச் சொல்’ என்று செய்தி அனுப்புவான். இவர்கள் என்னடா என்றால் சாப்பாட்டைப் பிசைந்து கொண்டிருக்கையில் வந்து நிற்பார்கள். படுத்து கண்ணயர்கையில் வந்து நிற்பார்கள். மனைவியுடன் பேசிக் கொண்டிருக்கையில் வந்து நிற்பார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியேறி முடித்த கண்டக்டரய்யா நின்று மூச்சுவிட்டுக் கொண்டார். நெஞ்சு ஏறி இறங்கியது. தொப்பியைக் கழட்டி தலை வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

உடல் தான் வியர்த்துக் கொட்டுகிறதேயொழிய பனி மறைய வில்லை. நிரைக்குள் இறங்கினாரென்றால் கால் சட்டை தொப்பை தான்.

"கம் கம் குட்மோர்னிங்! ஐ வாஸ் வெயிட்டிங் பார் யூ ஒன்லி" என்று அவரை வரவேற்ற கிளாக்கரய்யா, சுருட்டின் அடியில் காகிதத்தை 'ஃபில்டர்' போல் சுற்றிப் பல்லிடுக்கில் கடித்துக்கொண்டார்.

"தெந்த தெ பீ வே" என்று ஆரம்பித்த கண்டக்டரய்யா, குரலை சற்றுத் தாழ்த்திக் கேட்டார்: "கோமினியா...... கியாதெ?"

அவர் துரையைத்தான் கேட்கின்றார் என்பது அய்யாவுக்குத் தெரியும். "அன்னகியா புட்டு புட்டு காகென" என்று கூறியபடி ஒரு பக்கம் உதட்டை நீட்டி புகை போக்கினார்.

"இப்பதான் ஆபீஸிலேருந்து போனது அதுக்குள்ளால மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது".

"சாப்பிட்டதா என்னவோ தெரியாது".

"ஆபீஸுக்கு வர முந்தியே சாப்பிட்டிருப்பார். எப்படி அவ்வளவு வெள்ளனத்துல சாப்பிட முடியும்!".

"ஆபீஸுக்கு வர முந்தியா...... அது பொய். நான் வர்றதே ஆறரைக்கு, நமக்கு முந்தி வந்து குந்திக்கிட்டு இருப்பான் தானே. மூஞ்சை உம் முண்ணு வச்சிக்கிட்டு காலையில் தான் இப்படி குளுர்றதே. கட்டிப் புடிச்சுக்கிட்டு கொஞ்சம் படுத்துக் கெடந்தா என்னவாம். யார் கேட்கப் போறா, மனுஷியையும் பொம்மை கணக்கா வச்சிக்கிட்டு"

இருவரும் துரையைப்பற்றிய விமர்ச்சனத்தில் ஈடுபட்டால் எப்போ துமே துரைசாணியம்மாவிடம் தான் போய் நிற்பாட்டுவார்கள்.

துரைசாணியம்மா நல்ல அழகும் உடலமைப்பும் கொண்டவர் என்பதால் அந்தம்மாவை பல்லுக்குள் போட்டு மெல்லுவதில் இவர்களுக்கு ஒரு இன்பம், ஒரு கிளுகிளுப்பு.

"எனக்காய் பாத்துக்கிட்டுருந்ததாக சொன்னீங்களே, ஏன்?" கண்டக் டரய்யா, கிளாக்கரய்யாவிடம் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விஷயமாத்தான்.... நம்ம பயலுக ஒரு ரெண்டு பேரு ரொம்ப துள்றது. நம்ம 'மினியா' சரியில்லையே.... இவருகிட்டே யாரும் பயப் புடாட்டி நமக்கா; பயப்படும்.."

"என்ன, அப்படி என்ன புதுசா நடந்தது.....? நேத்து சம்பளத்துல எதும் கரைச்சலா?"

"கரைச்சல் ஒன்னுமில்லே. இவங்க வாய்தான் நமக்கு காட்ட ஏலாது. ஆறுமுகம் ஒருத்தன். கண்ணுச்சாமி ஒருத்தன், கணபதி ஒருத்தன். இன்னும் கொஞ்சம் பயலுக இருக்கிறது. நல்ல ஒரு பாடம் இவனு களுக்குப் படிப்பிக்கணும். யூ மஸ்ட் பீ ஸ்ட்றிக் ஆன் தெம்"

"நான் என்ன செய்ய முடியும். கொஞ்சம் கசக்கிப் பிழியலாம். அவ்வளவுதானே.... மிஞ்சிப்போனா 'புதுக் காட்டுல கண்டாக்குக்குப் போட்ட வெட்டுங்க'ன்னு பாட்டுப் படிப் பானுக"

"சரி சரி தோட்டத்துக்குள்ளாற ஒன்னும் செய்யேலாட்டியும் டவுன்ல பாத்துக்குறேன். கண்ணைக் காட்டி விட்டுட்டேன்னா எலும்பை எண்ணிவிட்டுட மாட்டானுகளா?"

"வொய் ஆர் யு சோ அங்ரி?"

"நான் செக்ரோல்ல காசை ஒளிக்கிறேன்னு சொல்லி விட்டானே..... அந்தப் பய...... காசு எங்கிட்டயா இருக்கு எனக்கு வேணுங்கிறயில அள்ளிக்கிறதுக்கு. அவங்கப்பன் தொரை கிட்டல்ல இருக்கி.

தொரையும் இருந்ததா அவன் கேக்கயில?

"இல்லாமெ! இவருதான் மனுஷியை இழுத்து ஒருத்தன் பேசுனா கூட ஈன்னு இளிச்சிக்கிட்டு நிற்பதே".

"யாரு அப்படிச் சொன்னது?"

"அவன் ரெண்டு பேரும் தான். ஒருத்தர் நேத்து முட்டிப் பாத்துட்டுப் போயிட்டாரு நான் விட்டுக்கொடுக்கலே...... இப்ப ஓடிக்கிணு வந்து சம்பளம் வாங்குணது. கண்ணுச்சாமி பயலும் இவன் கூடவே ஏன் வரணும்? அவன் நேத்தே சம்பளம் வாங்கிட்டதுதானே! தே ஆர் அப்டு சம்திங்".

பேசிக்கொண்ருந்த கிளாக்கரய்யா வாயில் இருந்த சுருட்டைக் கையில் எடுத்துக்கொண்டு எச்சில் துப்புவதற்காக வெளியே வந்தபோது திடுக்கிட்டு நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே றோட்டில் ஆறுமுகமும் ஆண்டியப்பன் மனைவி அலமே லுவும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

முன்னாலோடும் நிழலைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தான் ஆறுமுகம்.

"கண்டக்டரய்யா குறுக்கே வந்து கொழப்பயில்லாட்டி அவனைப் புடிச்சிருப்பேன். சரி...சரி ஆப்புடாமயாப் போயிடுறுவான். காரைப் பெரட்டிவிடப் போனாப்போ ஆப்புட்டுகிறலியா? என்று தனக்குள் தானே பொருமித் தானே சமாதானமடைந்து கொண்டான்.

கண்டக்டரய்யா கார் கேட்ட செய்தியைக் கணபதியிடம் கூறிவிட்டு ரெட்டைவாங்கி மொடக்குவரை நடந்து பார்த்தான். ஆண்டியப்பன் எப்படி மறைந்தான் என்பதற்கான சுவடுகூடத் தென்படவில்லை.

பாதையில் கிடந்த கல்லை எடுத்து ஆற்றில் வீசினான்.

'டொமுக்' என்று தண்ணீருக்குள் கல் விழுந்தது. வட்ட வட்டமாக அலைகள் நெளிந்தன.

லயத்துச் சரிவில் ஆற்றின் அண்மையில் இருந்த காய் கறித் தோட் டத்தின் வேலிக்குள் நின்றிருந்த கண்ணம்மா நிமிர்ந்து றோட்டைப் பார்த்தாள்.

'யார் கல் அடிப்பது' என்ற கேள்வி அவளுடைய வட்டக் கறுவிழி களில் தெறித்து நின்றது.

மார்புச் சேலையை விண்ணென்று இழுத்து இடுப்பைச் சுற்றிச் செருகியிருந்தாள். ஒடித்த கோசா மட்டைகள் இடது கையில் இருந்தன. மட்டம் வெட்டும் சின்னக் கத்தி வலது கையில் இருந்தது.

எந்தப் பக்கமிருந்து கல் வந்தது என்பதை அறிவதற்காக அடி பெயர்க்காமல் உடலைத் திருகி சுற்றும் முற்றும் பார்த்தாள். உடல் திருகியதால் உடுத்திருந்த சேலை உடலுடன் மேலும் நன்றாக இறுக்கிக் கொண்டது.

அந்த ஒயிலை, விண்ணென்று தெறிக்கும் அந்த அழகை ஒரு விணாடி ரசித்த ஆறுமுகம், இரு கைகளாலும் தேயிலையைப் பிடித்துக் கொண்டு நிரைக்குள் நுழைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“முப்பது நாளும் கோசாக் கீரைதானா?” என்றவாறு வேலியிடம் நின்றவன், அவளைக் கண்களுக்குள் புதைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டான்.

“ஆ.... ஆ...... கண்ணு சுளுக்கிடப் போவுது. அப்படிப் பார்க்காதீங்க” என்றவள், அவளுடைய பார்வையைச் சந்தித்து விம்மித் தணியும் தன் மார்புகளை அடிக்கண்களால் அவனுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டாள். தன் உடலைப் பார்த்துத்தானே பெருமைப்பட்டுக் கொண்டாலும், செருகியிருந்த சேலையின் முனையை உருவிவிட்டு உடையைத் தளர்த்திக் கொண்டபடி, “பொம்பளையைப் பார்த்ததே இல்லாத மாதிரி! கொஞ்சம் கொட வெட்கம் இல்லாமே!” என்று முனகியபடி வெட்கத்தால் சிவந்து குனிந்து கொண்டாள்.

“கண்ணா; இங்கே கொஞ்சம் பாருடா” என்று அவளை வேலிப் பக்கம் திரும்பச் செய்தவன், அவளுடைய முகத்தில் அனல் மூச்சு விட்டான்.

அவனுடைய கண்ணுக்குள் தன்னைப் பார்த்துக் கொண்ட கண்ணம்மா, வேலியின் கண்டி முருங்கைக் கம்புகளை விலக்கிக்கொண்டு வெளியே வந்தாள். கையில் இருந்த கீரையை ஆற்றுத் தண்ணீரில் அலசி உதறி மடியில் போட்டுச் செருகிக்கொண்டு நடந்தாள். ஆறுமுகமும் உடன் நடந்தான்.

“கொழுந்துக்குப் போவலியோ?” ஆறுமுகம் கேட்டான்.

“நேத்துத்தானே சம்பளம். இன்னைக்கு என்னத்துக்கு வேலை அப்படீன்னு உங்கமாதிரி பொறுப்பில்லாததாலே போகாமல் நிக்கலே. கொந்தரப்புல புல்லு கூடவாம், வெட்டிட்டு வந்தாத்தான் கொழுந்துக் குத் துண்டு தருவாகளாம்.”

“ஒகோ, அது தான் கோசாவுக்குள்ளாற புல்லு வெட்டுறீகளோ?”

“கோசாவுக்குள்றயும் வெட்டல, கொசுவத்துக்குள்றயும் வெட்டல, சோத்தை ஆக்கி வச்சிட்டு மலைக்குப் போனா ஒரே திரியா ரெண்டரை மூணருதி வெட்டலா மில்லியா!”

கண்ணம்மா பேசிக்கொண்டே பாதையை நோக்கி ஏறிக் கொண்டி ருந்தாள். உடன் நடந்து கொண்டிருந்த ஆறுமுகம் அவளை ஒதுக்கித் தள்ளிவிட்டு விரைவாக நடந்து றோட்டை அடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடன் வந்து கொண்டிருந்தவர் எதற்காக இப்படித் திடீரென்று விழுந்தடித்துக்கொண்டு ஓடுகின்றார் என விளங்காமல் விழித்த கண்ணம்மா, பாதையில் அலமேலு வந்து கொண்டிருப்பதையும், ஆறுமுகம் ஓடிப்போய் அவளுக்காகக் காத்து நிற்பதையும் கண்டாள். அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது.

அலமேலுவின் ஆட்டம் அவளுக்கு மட்டுமின்றி அத்தனை பேருக்கும் தெரியும். 'அழகானவள் தான். அதற்காக! சே இந்த ஆண்களே இப்படித்தான்' என்று பொங்கினாள்.

நடந்து கொண்டிருந்த அலமேலு ஆறுமுகத்திடம் நின்றாள். அவன் நின்ற தோரணைகூட சுண்ணாம்மாவுக்குப் பிடிக்கவில்லை. 'இவருக் கென்ன இவளுடன் பேச்சு' என்று பொருமிக்கொண்டவள் மேலே நடக்க மனமில்லாமல் நின்று விட்டாள்.

"அவரைத் தாண்டி அவள் போகட்டும். அப்புறம் போவோம்!" என்று தேயிலைக்குள் நின்றவள் அடிக்கொரு தடவை நிமிர்ந்து பார்த்துக் கொண்டாள், 'அவள் போய் விட்டாளா' என்பதை அறிய.

அலமேலும் கீழே நடந்ததும் கண்ணம்மா மேலே நடந்தாள். அய்யா ஆபீஸுக்குள் நடந்தார். பாதைக்கேறிய கண்ணம்மாவைப் பார்த்துச் சிரித்தான் ஆறுமுகம்.

முகத்தை உம்மென்று வைத்திருந்த கண்ணம்மா கோபத்துடன் மறுபக்கம் திரும்பி நடந்தாள்.

"அன்னம்போல நடைநடந்து சென்றிடும் மயிலே" என்று சினிமாப் பாட்டைப் பாடியவண்ணம் அவளைப் பின் தொடர்ந்தான் ஆறுமுகம்.

## 5

அன்று மாலை மீண்டும் ஆபீஸடியில் ஆட்கள் குழுமினர்.

வெள்ளியாய் மின்னிக் கொண்டிருந்த வானம் சாம்பலாய் மங்கிச் கிடந்தது. அந்தியாகும் அறிகுறிகள் மேலே நிழலாடத் தொடங்கின.

கீழே பெரட்டுக்களத்தில் பூக்கூடை சிதறியது போன்ற தொரு காட்சி. தூரத்துக்கு ஏதுவுமே இப்படித் தான் ஒரு காட்சியைக் காட்டும்.

ஒட்டிய வயிறும், எக்கிய மார்பும், கிழிந்த சட்டைகளும் அழுக் கேறிய உடலும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே இருந்து பார்ப்பதற்கு அழகாகத்தான் தெரிகிறது. அவலம் தெரிய நெருங்கிப் பார்க்க வேண்டும்!

ஆபீஸுக்கு முன்னாலுள்ள அந்த வெற்றிடத்தில் வாசலை ஒட்டி சட்டிகளில் வைக்கப்பட்டுள்ள 'கழுதைக் காது' செடிகளுக்கு அப்பால் காய்கறி போடுவதற்காக பாத்தி பிடிக்கப்பட்டு ஒவ்வொரு பாத்தியின் கால்மாட்டிலும் இரண்டு சாக்கு உரம் கொட்டப்பட்டுக் கும்பலாய் கிடக்கிறது. எப்போது கொட்டிய உரமோ! தோட்டக்காரனுக்கு 'டைம்' கிடைக்காததால் சின்ன சின்னதாகப் புல் முளைத்துக் கிடக்கின்றது.

சம்பளம் வாங்க வந்திருந்த பாப்பாத்திக் கிழவி உரக் கும்பலின் ஓரத்தில் உட்கார்ந்து புல்லுகளுக்கிடையில் முளைத் திருக்கும் 'பொன் னாங்கண்ணி', 'சிறுகீரை' முதலியவற்றை விரல் நுனியால் கிள்ளி யெடுத்து மடியில் பதுக்கிக் கொண்டிருந்தாள். போட்டிக்கு யாரும் வந்துவிடுவார்களோ என்ற பயத்தில் கீரை ஆய்வது தெரியாமல் ஆய்ந்து கொண்டிருந்தாள்.

மாமரத்தடியில் உட்கார்ந்திருந்தவர்கள் அண்ணாந்து மரத்தை ஆராய்ந்துகொண்டிருந்தனர் எங்கேயாவது ஒரு காய் இருக்கிறதா என்று.

கள்ளிமரத்தடியில் கொஞ்சம்பேர்; கானடியில் கொஞ்சம் பேர்; என்று எறும்புக் கூட்டம் போல் ஆட்கள் குழுமி நின்றனர்.

மெலிந்து உயர்ந்திருந்த பப்பாளி மரத்தில் எவராலும் ஏறிப் பறிக்க முடியாத உயரத்தில் பழுத்திருந்த ஒரு பழத்தை வெகு ஸ்வராஸ்யமாக கொத்திக்கொண்டிருக்கிறது ஒரு காக்கை.

நேற்று மாலையிலும், இன்று காலையிலும் வந்து சம்பளம் வாங்காத வர்கள் ஏறத்தாழ ஒரு நூறு, நூற்றைம்பதுபேர் ஆபீஸைச் சுற்றிக் கூடி நின்றனர்.

கிளாக்கரய்யா நான் ஏற்கனவே எடுத்திருந்த 'சம்பளம் வாங்காதார் லிஸ்டை' எடுத்து மேசை மேல் வைத்துக் கொண்டார். இன்னும் துரை யைக் காணவில்லை. மூன்று மூன்றரை போல் காரை எடுத்துக்கொண்டு எங்கோ போனார்.

இன்னும் காணவில்லை. கொஞ்ச நேரத்துக்கு முன் பெரிய ஆபீஸி லிருந்து ஏதோ கேட்டார். அய்யாவுக்கே அப்போது தான் தெரியும் துரை பெரியாபீஸில் இருப்பது. 'இந்த மனுஷன் போற இடத்தைக்கூடச் சொல்லிவிட்டுப் போவது கிடையாது' என்று சலித்துக் கொண்டபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசையிடம் 'உம்' என்று உட்கார்ந்திருந்தார். ஜன்னலைத் திறக்கவே யில்லை! ஜன்னலைத் திறந்தால் ஒவ்வொருவராக வந்து தொந்தரவு செய்வார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

"எனக்கு எத்தினி நாளுங்க பேரு விழுந்திருக்கு..... ஐயா ஒழுங்காப் பேரைப் போடுறாரோ என்னவோ....?" என்று கண்டக்டரய்யாவைக் குறைகூறுவதின் மூலம் இவரைக் 'கூல்' பண்ணுவான் ஒருவன்.

"எங்க கெழவிக்கு எவ்வளவுங்க இருந்துச்சி?" தாய்க்காரி எடுத்த சம்பளத்தை அப்படியே தன்னிடம் கொடுத்தாளா அல்லது சோறு போடும் தன்னை ஏமாற்றிவிட்டு அஞ்சைப் பத்தை அமுக்கிக்கொண் டாளா என்பதை அறிந்துகொள்ளப் பார்ப்பான் ஒருவன்.

"எனக்கு எத்தனை ஏக்கருங்க போட்டிருக்கு" என்று வருவான் ஒருவன்.

"எனக்கு பாபர் காசு படிச்சிருக்கா பாருங்க. அவன் கிட்ட மனுஷன் வெட்டுவானா? நானு டவுன்லதான் வெட்டுறது" என்பான் சைட் பண்ட்ஸ் மைனர்.

இவர்களுடைய தொணதொணப்பிலே இருந்து தன்னைக் காப்பாற் றிக் கொள்ளவே ஜன்னலை இறுக்கி மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தார் அய்யா.

ஓரிருவர் துணிந்து வந்து கண்ணாடி ஜன்னல் முன் நின்று பார்த் தார்கள். அய்யா அவர்களைக் காணாதவர் போல் குனிந்த தலை நிமிராது செக்ரோலைக் கூட்டிக் கொண்டிருந்தார்.

தபால் பையன் வந்து ஜன்னல் முன் நின்றான்.

'சுற்றி வா' என்பதுபோல் கையை ஆட்டிக் காட்டி விட்டு எழுந்து வந்தார்.

சாராய அரைப் போத்தலில் கண்ணாடிக் கிளாஸ் மாட்டியிருந்தது. 'டிங்டிங்' என்று தரங்கமெழ பையில் இருந்து போத்தலை எடுத்தவர் தேநீரைக் கிளாஸில் ஊற்றி மடக் மடக்கென்று குடித்து முடித்தார்.

தேநீரைக் குடிக்கையில் வீட்டு நினைவு எழுந்தது. அம்மா டவுனுக் குப் போவதாகக் கூறியது நினைவுக்கு எழுந்தது. அலமேலுவை வீட்டைப் பார்த்துக்கொள்ளக் கூறியது நினைவுக்கு வந்தது.

"அம்மா போயாச்சா!" என்று பையனிடம் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னு போவலீங்கய்யா, ரெடியா இருக்காங்க, காரு வரலீங் களாமே" என்று கூறிவிட்டு அவன் போய் விட்டான்.

உள்ளே போய் உட்கார்ந்தவரின் உதடு புகைச் சுகம் கேட்டது. மேசைக் கடியில் காலை நீட்டி காற்சட்டைப் பைக்குள் இருந்து சுருட் டொன்றை எடுத்து, 'டிப்' போட்டுக் கொண்டவர் முகத்தைத் திருப்பக் கடிகாரத்தைப் பார்த்தார்.

சுவரில் மாட்டியிருந்த அந்தக் கடிகாரமும் அய்யாவைப் போலவே தான் ஓடாது, நடக்காது, ஒன்றும் செய்யாது.

கைக்கடிகாரத்தைப் பார்த்தார். நாலரை பிந்திவிட்டிருந்தது. இன் னும் துரையைக் காணவில்லை. அவர் எப்போது வருவது; எப்போது சம்பளம் போட்டு முடிப்பது; எப்போது வீட்டுக்குப் போவது?

எப்போது வீட்டுக்குப் போவது என்ற நினைவு எழுந்ததும் உடல் பரபரத்தது.

அலமேலுவைத் தனியாக வீட்டில் இருக்கப் பண்ணியுள்ளாரே! அய்யாவின் சுவை அம்மாவுக்கு அத்துபடி.

அதற்கேற்றாற் போலவே காரியங்களை, காரணங்களுடன் செய்து கொண்டு அலமேலு கையில் சாவியைக் கொடுத்து, "அய்யா வந்ததும் குடுத்துறு" என்று கூறிவிட்டுப் போய் விடுவார்கள்.

நளாயினி பரம்பரை!

அய்யா வந்து பின்பக்கம் தோட்டத்தில் நின்று, "யேய்" என்று கத்தி யதும் அலமேலு சாவியுடன் மேலே ஓடிவருவாள்.

அம்மா சொன்னது போல் சாவியைக் கொடுத்துவிட்டுப் போய்விட மாட்டாள்.

அவளிடம் இருந்து சாவியை வாங்கி கதவில் நுழைத்தபடி, "நில்லு" என்பார்.

கதவை திறந்ததும். "அம்மா தேத்தண்ணி ஏதும் ஊத்தி வச்சிருக்கா பார்" என்பார்.

அதன் பிறகு அவள் வீடுதிரும்ப இரவு வெகுநேரம் ஆகிவிடும்.

'கிர்ர்' என்று நடுங்கிவிட்டு சுவரிலிருந்த கடிகாரம் பன்னிரெண்டு முறை அடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சனியன்" என்று முனகிக் கொண்டவர், அடித்து ஓயும் வரை அதை ஒன்றும் செய்ய முடியாத ஏமாற்றத்துடன் கடிகாரத்தையே முறைத்துக் கொண்டிருந்துவிட்டு மணிக் கட்டைப் பார்த்தார்.

நாலே முக்கால்!

"சம்பளம் வாங்க யாரும் வந்திருந்தால், இருக்கச் சொல், வந்து விடுவேன்" என்று துரை கூறியிராவிட்டால் இந்நேரம் எல்லாரையும் போகச் சொல்லியிருப்பார். "துரை காலையில வரச்சொன்னது" என்று. ஆனால் அவர் தான் டெலிபோனில் கூறிவிட்டாரே "இருக்கச் சொல்" என்று.

"இன்னும் பத்து நிமிஷம் இருக்கு. எந்த நேரம் வீட்டுக்குப் போறது" என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

அவர் அவசரப்படுவதற்கு முக்கியமான காரணம், அலமேலுவிடம் போய், "ஆறுமுகத்துடன் காலையில் என்ன பேசிக் கொண்டிருந்தாய்? நீயாகப் பேசினாயா? அல்லது அவனாக வலியப் பேச வந்தானா? அவனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்பவற்றைக் கூறி வைக்கத்தான்.

"நேற்று சாயந்தரம் அலமேலு சம்பளம் வாங்கிக் கொண்டு போனது இவனுக்குத் தெரிந்திருக்குமோ? இன்று காலையிலும் ஏன் ஆபீஸுக்குப் போனாய்? என்று கேட்டிருப்பானோ? அவளும் தெம்மாடித்தனமாகச் சம்பளம் வாங்கப் போனேன்; என்று கூறியிருப்பாளோ....!"

எதையெதையோ எண்ணி மனங் குழம்பிக்கொண்டிருந்தார்.

துரை வருகின்றாரா என்பதை அறியப் பாதையையே பார்த்துக் கொண்டிருந்தார். பெரிய றோட்டில் இருந்து பாதை பரியும் வளைவில் ஏதோ மின்னி மறைந்தது, துரையின் காரா என்பதை நிர்ணயிக்க முடியவில்லை, பிறகு தான் தெரிந்தது அது ஐயாவின் கார் என்பது.

கார் கீழே போய் சிறிது நேரத்தில் மீண்டும் மேலே போய்விட்டது. அம்மா போகின்றார்கள்!

சரியாக ஐந்து மணிக்கு துரையின் கார் ஆபீஸுக்கு மேல் நின்றது. அவசர அவசரமாக இறங்கிய துரை, "இஸ்ட் டைம் நோ. ஐ ஆம் சொரி" என்றவாறு இறங்கி ஓடி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தனது மேசையிடம் அமர்ந்ததும் கிளாக்கரய்யா தனது அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக முகத்தை 'உம்' மென்று தூக்கிக் கொண்டு தன்னுடைய ஜன்னலைத் திறந்து, "யார் யார் வந்திருக்கே, இங்கிட்டு வா பார்ப்போம்" என்று கூவினார்.

ஜன்னலின் முன்னால் நின்ற ஆறுமுகத்தைக் கண்டதும், கிளாக் கரய்யாவுக்குப் பற்றிக்கொண்டுவந்தது. "காலையில் அலமேலுவுடன் என்ன பேசிக்கொண்டிருந்திருப்பான்." என்ற எண்ணமெழவும் சற்றுப் பதட்டமாகவும் இருந்தது.

"என்னதி ஒனக்கு இந்த நேரத்துல... நீதான் சம்பளம் வாங்கியாச்சே காலையிலேயே....! ஒரு நேரம் கிடையாது, காலம் கிடையாது. அலுவ லெல்லாம் அஞ்சு மணிக்கு மேலே தான்....."

துரைமேல் உள்ள கோபத்தையும் சேர்த்து அவன் மேல் காட்டினார் அய்யா.

"நான் ஒன்னும் இரண்டாவது வாட்டி சம்பளம் வாங்க வல்லே. கண்டக்கய்யா இந்தச் செக்றோலைக் குடுத்திட்டுவரச் சொன்னாரு. அதுதான் வந்தேன்" என்றவாறு செக்றோலை நீட்டிவிட்டு நடந்துவிட் டான் ஆறுமுகம்.

"இவன் ஆபீஸ் பக்கம் வர்றதையே நான் விரும்புறதில்லை. அந்த மனுஷனுக்கு இவன்தான் கெடைச்சிருக்கான் செக்றோல் அனுப்ப" என்று முனகிக் கொண்டவர், அவனிடமிருந்து வாங்கிய செக்றோலை தனது மேசையின் ஒரு மூலையில் வீசியெறிந்தார்.

"சம்பளம் வாங்கவந்த ஆளுகள் தொரை ஜன்னல் பக்கம் வா ஒன்னொன்னா" என்று கூறியபடி துரையின் முன்னுள்ள ஜன்னலை எட்டித் திறந்தார்.

கீரை பறித்துக்கொண்டிருந்த கிழவி, மாமரத்தடியில் நின்றவர்கள், கானடியில் உட்கார்ந்திருந்தவர்கள் என்று அத்தனை பேரும் ஆபீஸ் விறாந்தைக்கு ஏறினர்.

தன்னுடைய லிஸ்டிலிருந்து கிளாக்கரய்யா பெயரையும் தொகை யையும் வாசிக்கின்றார். ஆட்கள் ஒவ்வொருவராக ஜன்னல் முன் வருகின் றனர். துரை பணத்தை எண்ணி எடுத்துக் கொடுக்கின்றார்.

இலேசாக இறங்கிவரும் இருளின் அமைதியில் பங்களா டெலி போன் அடிக்கும் சப்தம் கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மூன்று தடவை அடித்த பிறகு பங்களா டெலி போன் ஓய்ந்து ஆபீஸ் டெலிபோன் அலறியது.

கிளாக்கரய்யா டெலிபோனை எடுத்து "எலோ" என்றார்.

"என்னய்சே இன்னும் போவலியா" என்று கேட்டார் ஹெட் ஆபீஸி லிருந்து பேசிய ஒரு கிளார்க்.

"எங்கே போறது.....! நம்ம ஆபீசெல்லாம் சாமக் கோழி தான்! ஏன் ரிங் பண்ணுனீங்க."

"டெலிக்கிறாம் எடுங்க."

"எங்கேருந்து ?"

"பதுளை ஜெனரல் ஹொஸ்பிடல்" என்று கூறியவர் ஏதோ சொல்ல கிளாக்கரய்யா எழுதிக் கொண்டார்.

"அனதர் நியூசென்ஸ்" என்றவர் வெளியே போய் பங்களா தோட்டக் காரனுக்கு சத்தம் போட்டுப் பார்த்தார். அவனைக் காணவில்லை. ஆறு மணி வரைக்குமா அவன் இருக்கப் போகின்றான். யாராவது ஒரு ஆள் தேடி தந்தியை அனுப்பி வைக்க வேண்டும். ஆள் கிடைக்காவிட்டால் வீட்டுக்குப் போகும்போது அவர் கண்டக்டர் அய்யாவிடம் கொடுத்து விட்டுப் போய்விடுவார். பொறுப்பு கைமாறிவிடும். கண்டக்டரய்யா ஒரு ஆள் தேடி அனுப்பி வைப்பார்.

"நாமலே கொண்டுபோவோம்" என்று எண்ணிக் கொண்டவராக டெலிபோன் செய்தியை எழுதிய துண்டை மடித்து சட்டைப் பையில் போட்டுக்கொண்டார்.

துரை கிளாக்கரய்யாவைப் பார்த்தார். கிளாக்கரய்யா லிஸ்டைப் பார்த்தார்.

லிஸ்டில் கண்ணம்மாவின் பெயர் இல்லை.

"ஒனக்கு என்னா?" இது கிளாக்கரய்யா.

"ஏன்..... ? சம்பளந்தான்!" இது கண்ணம்மா.

"நீ நேத்தே சம்பளம் வாங்கிட்டதானே. எனக்கு நல்லா நினைவு இருக்குது... எதுக்காக இன்னைக்கி, அதும் இந்த நேரத்துலவந்து நிக்கிறே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நானு சம்பளம் வாங்கலீங்களே.... இது என்ன அநியாயமா இருக்கு! ஏவூட்டு சம்பளத்தை வேறு யாருக்காவது குடுத்திட்டீங்களா......?”

அவள் பேசிக்கொண்டிருக்கும் போது அய்யா மட மட வென்று செக்றோலைப் புரட்டிப்பார்த்தார். கண்ணம்மாவின் பெயருக்கு நேராகத் தடித்த சிவப்புப் பென்ஸிலால் சரி போடப்பட்டிருந்தது. சம்பளம் கொடுத்தாச்சு என்பதற்கு அது தான் அடையாளம்.

“ஷி ஹாஸ் டேக்கன் இட் எஸ்டர்டே இட் செல்வ்ஸர் ” என்கிறார் கிளாக்கரய்யா.

“டெல் ஹர் இட்ஸ் வெரி சீரியஸ் அன் வார்ன் ஹர்” என்ற துரை, “இது பெரிய குத்தம். நீ பொய் சொல்லுது......” என்றார்.

“இதோ பார் கண்ணம்மா, இது வெளையாட்டு இல்லே. நீ செய்யுற குத்தம் எத்தனை பெரிசுன்னு ஒனக்குத் தெரியாது. வாங்குன சம்பளத்தை இல்லேன்னு சொல்லி மறுவகேட்டா பச்சீட்டுல வந்த நிற்கும். பேசாமே போயிறு....” என்று பொரிந்து தள்ளினார் கிளாக்கரய்யா.

“என்ன பத்துச்சீட்டு, பதினொரு சீட்டுன்னுகிட்டு இருக்கீங்க... சம்பளம் கேட்டாக்க பத்துச் சீட்டுக் குடுத்துடுறதா. அப்ப பத்தாந்தேதி பத்தாந் தேதி அல்லாத்துக்கும் பத்துச்சீட்டையே குடுத்துட்றது தானே?” என்றபடி கண்ணம்மாவுக்குப் பின்னால் ஆறுமுகம் நின்றான். இதை கிளாக்கரய்யா சற்றும் எதிர்பார்க்கவில்லை. கண்ணம்மாவின் பெயருக்கு நேராக ‘டிக்’ விழுந்திருப்பது தவறுதலாக இருக்குமோ? இவள் உண்மை யிலேயே சம்பளம் வாங்கவில்லையோ என்று தடுமாறிக்கொண்டிருந் தவர் அவள் நேற்றே சம்பளம் வாங்கி விட்டாள். இது இந்தப் பயலுடைய செட்டப் என்ற முடிவுக்கு உடனே வந்து விட்டார்.

“ஒனக்கென்னா இதுல பேச்சு..... நீ வாயை மூடிக்கிட்டுப் போ.... இங்கே என்ன உன்கு வேலை.....?” கோபத்தில் கொதித்தார் கிளாக் கரய்யா.

“இது தோட்டத்து ஆபீஸ், இந்தத் தோட்டத்துத் தொழிலாளியான என்னை, “ஒனக்கு இங்கே வேலையில்லேன்னு” நீங்க சொன்னா அது சிரிப்புக்கிடமானது.”

“தனியாவந்து சம்பளம் கேட்ட பொம்பளைப் புள்ளை கிட்ட சம்பளம் கேட்டா பத்துச்சீட்டுக் குடுத்துறுவோம்ணு நீங்க பயமுறுத்துனா நானா இல்லாம வேறயாராயிருந்தாலும் பேசத்தான் செய்வான்.....”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்பளங்கேட்டா ஒருத்தரும் பச்சீட்டுக் குடுக்கிறதா சொல்ல மாட்டாங்க நேத்தே சம்பளம் வாங்கிட்டு இன்னைக்கு வந்து வாங்க லைன்னா....? அது லேசு பட்ட குத்தமா....?."

துரையின் முன் ஏதோ தகராறு நடப்பது தெரியவே சம்பளம் வாங்கிக் கொண்டு நடந்த நாலைந்து பேர் திரும்பவந்து நின்று கொண் டனர்.

"இந்தப் புள்ளை நேத்தே சம்பளத்தை வாங்கிக்கிட்டு இன்னைக்கு மறுபடியும் வந்து கேட்டா அது குத்தம் தான். பெரிய துரைக்கு ரிப்போட்" பண்ணி தோட்டத்தை விட்டே அனுப்புற மாதிரி பெரிய குத்தம் தான்.... ஆனா ஆண்டியப்பனும், அவம் பெஞ்சாதி அலமேலும் நேத்தும் வாங் கிட்டு இன்னைக்கும் வாங்குனா அது குத்தமில்லே....சுத்தம்......"

யார் பேசுவது என்று எட்டிப் பார்த்தார் கிளாக்கரய்யா. ஜன்னல் ஓரத்தில் சுவர் மறைவில் நின்று கொண்டிருந்தான் கண்ணுச்சாமி.

ஏதோ அசம்பாவிதம் நடக்கிறது என்பதைக் கிளாக்கரய்யா யூகித்துக் கொண்டார். நிலைமையை மோசமாக்கி விடாமல் சமாளித்தாக வேண்டும்.

"இது சம்பளம் வாங்கிறிச்சுங்கிறதுக்கு என்ன சாட்சி.....?"

ஆறுமுகம் கேட்டான்.

"செக்றோல் மார்க் பண்ணி இருக்கு" என்றார் கிளாக்கரய்யா.

"பென்சலும் உங்க கையில் இருக்கு, செக்றோலும் உங்க கையில் இருக்கு, நீங்களே வேணுமின்னு போட்டுக்கிட்டாக்க வேண்டாங் குதா?"

"சம்பளம் வாங்காத ஆளுக்கு வாங்கிட்டதா 'மார்க்' செய்ய எனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு! வாங்காத ஆளுகளுக் கெல்லாம் இப்ப குடுக்கலியா..... உனக்குக்கூட காலையில் குடுக்கலியா" ஆறுமுகத்தை மடக்கினார் அய்யா.

"நேத்தே சம்பளத்தை வாங்கிட்டு நான் வாங்கலையேன்னு மறு படியும் வந்து கேட்க, இந்த ஆளுக்கு மட்டும் என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? இதோ இவன் - கண்ணுச்சாமி - நேத்தே வாங்கிட்டான். இன்னைக்குமா வந்து கேக்குறான்....."

கிளாக்கரய்யாவுக்கு எதிர் மடக்கு போட்டான் ஆறுமுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரியாணியைக் கூப்பிட்டுக் கேப்போமோ....!" கிளாக்கரய்யா சமாளிக்க வழி தேடினார்.

"நாநூறு ஐநூறு ஆளுகள்ல யார் வந்தா யார் வரலைங்கிறத பெரி யாணிக்கு அத்தனை மனப்பாடமா தெரியுமோ....? இதோ சம்பளத்தை எண்ணிக் குடுக்கிற துரையே இருக்காரு, அவரையே கேளுங்களேன் இந்தப்புள்ளை நேத்து சம்பளம் வாங்குச்சான்னு..."

"ஐ காண்ட் ரிமம்பர்." என்கின்றார் துரை.

"சம்பளம் போடுற தொரையே காண்ட் ரிமம்பர்ன்னா பாத்துக்கிட்டு நிக்கிற பெரியாணிக்கு எப்படித் தெரிய முடியும்......?"

விஷயம் முடிவுறாமல் இழுத்துக் கொண்டே போவது துரைக்கு மிகவும் அசௌகரியமாக இருக்கிறது. கிளாக்கரய்யாவுக்கு வெடவெட வென்று வருகின்றது.. "ராஸ்கல் உன்னைச் சும்மா விடமாட்டேன்" என்று கருவிக் கொள்ளுகின்றார்.

டெலிபோன் மீண்டும் அடிக்கின்றது. "திஸ் இஸ் எ நியூசன்ஸ்" என்று முனகியவாறு டெலிபோனைக் கையில் எடுத்தவருக்கு முன்பு தந்தி வந்தது நினைவு வருகிறது.

"மறந்தே போச்சே" என்று எண்ணிக்கொண்டார். யாருடனோ சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு ரிஸீவரை வைத்தார்.

"சல்லியைக் கணக்குப் பார்த்து மீதிகூட இருந்தா ஒனக்குக் கூப்பிட்டு சம்பளம் குடுக்கிறது நீ போ..... காலையில் வா" என்று அவர்களைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார் துரை.

"இந்தா ஆறுமுகம் இப்ப நான் டெலிபோன் பேசினது தானே.... உனக்குத்தான் தந்தி. பெரியாஸ்பத்திரியிலே ஒங்கம்மா செத்துப் போச் சாம்" சாவதானமாகக் கூறினார் அய்யா.

"ஐயோ ஆயா!" என்று கதறியபடி ஆபீஸைவிட்டு இறங்கி ஓடிக் கொண்டிருந்தான் ஆறுமுகம்.

## 6

ஆறுமுகத்தின் காம்பராமுன், பந்தல் எழுந்திருந்தது. அந்த லயத்தின் குளுவான் குஞ்சுகளும் மற்ற கீழ் லயத்து, மேல் லயத்துக் குட்டிப் படைகளும் பந்தலுக்குள்ளும் இஸ்தோப்புக் குள்ளும், அவசர அவசர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக ஓடி ஆடிக்கொண்டும் இருப்போரின் கால்களுக்குள் நுழைவதும் வருவதுமாக இருந்தன.

வயித்துவலி ராமனும், கிழட்டுக் குப்பானும், தபால்கார நாராயண னும் காலை மடித்து மடித்து, மடியும் கால்களுக்கேற்ப 'தப்பை' விளாசிக் கொண்டிருந்தனர்.

கிழட்டுக் குப்பான் காதடியில் கையை வைத்துத் தப்பை பிடித்துள்ள இடது கையை மேலே உயர்த்தி ஏதோ பாடுகின்றான்.

அவன் ஒரு வரி பாடி முடித்ததும், மற்ற இருவரும் 'செஞ்சனெக்கு செனக்கு' என்று தப்பில் ஒலிபெருக்குகின்றனர்.

பந்தலைத் தாண்டி சீத்தா மரத்தடியில் புகைந்து கொண்டிருக்கும் நெருப்புக் கும்பலை நாலைந்து சிறுவர்கள் கிண்டுகின்றனர்.

அதைக் கண்டுவிட்ட வயித்துவலிராமன் "யாண்டா அறுதலை எளவுகளே, நெருப்பு அவிஞ்சுபோனா என்னா செய்யுறது? போய்த் தொலைங்களேன் யெட்டுக்கு" என்றவாறு தப்படிக்கும் கம்பை ஓங்கிக் கொண்டு ஓடுகின்றான்.

ஒரு தப்பு ஓடிவிடவும் மற்ற இரண்டுக்கும் சுதி குறைந்து விட்டது. அவைகளும் 'கூதல்' காயப் போய் விட்டன. பலா மரத்தினடியில் கூட்டிக் குவித்திருந்த சருகுகளை அள்ளி நெருப்பில் போட்டு ஊதிப் பற்றவைத்து தப்பை காய்ச்சத் தொடங்கினர் மூவரும். தப்புச் சத்தம் அடங்கவும் "என்னைப் பெத்த எங்காதோ....! எனக்கினி ஆரிருக்கா" என்னும் பெண் களின் ஓலம் பெரிதாகக் கேட்டது.

"அதுங்காட்டியும் போயிட்டிங்களாடாப்பா! இப்பத்தானே காச்சு னீங்க. காச்சுகறிலேயே பொழுதைப் போக்கிடுங்க. கூலிக்கு மாரடிக்குற வனுகளாட்டம்......" என்று சத்தம் போட்டுக்கொண்டு பந்தலுக்குள் நுழைந்தான் ஒரு மைனர். சாவு வீட்டில் தனக்கு அத்தனை உரிமை இருக்கிறது என்பதையே அவனுடைய குரல் காட்டியது.

"சூர் எறங்கிறிச்சுங்க, ஆட முடியலை" என்றான் வயித்து வலி.

"எனக்குத்தான் தெரியுமே, நீம்பண்ணுற வேலைதான்னு. ஒனக்கு எப்ப சூர் வர்றது குறையுதோ அப்ப தான் உன் வயித்துவலியும் நிக்கும். சரி சரி வந்து தொலை, ஆறு ஏழு முடிச்சிருக்கீங்க மூணு பயலுமா" என்றவாறு கோடிப் பக்கம் நடந்தான். அவன் முகத்தில் எண்ணெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிந்தது. செவ்வரலிப் பூ மாலையும், தலைமாட்டில் குத்து விளக்கும், வாழைப் பழமும் ஊதுபத்திப் புகையுமாக உள்ளே, பாதி இருட்டில் படுத்துக் கிடந்தாள் ஆறுமுகத்தின் ஆயா.

பிணம் கிடக்கும் மேசைக்கும், அடுப்படிக்கும் இடையில் ஒரு வெள்ளைச் சீலையைத் திரையாகக் கட்டி இருந்தனர். ஒப்பாரி வைத்து தொண்டை வரண்டவர்கள் துணியைத் தூக்கிக்கொண்டு உள்ளே போய் வருவார்கள். சிவப்புச் சீலையைச் சுற்றிக்கொண்டு அலங்கார உடம்புடன் பாடை ரெடியாகக் கிடந்தது பந்தலுக்குள், வானரங்களை; விரட்டி யடித்துக் கொண்டிருந்தார் ஒரு முதியவர்.

எண்ணெய் குளித்த சிலைபோல் நின்று கொண்டிருந்தான் ஆறு முகம். கணபதியின் கார் முழு நேரச் சேவைக்காக தயாராக நின்றது.

மீண்டும் தப்புச் சத்தம் ஓங்காரமாக எழவே ஒப்பாரி ஓலம் படிப் படியாக நின்று பெண்கள் வம்பளக்கத் தொடங்கி விட்டனர்.

"காலம்பரையேலிருந்து கஞ்சித் தண்ணி கொட தொண்டையில படலே. வயிறு கபா கபாங்குது... எப்ப காரியத்தை முடிக்கிறது, வயித்துப் பாட்டைப் பாக்கிறது...."

"என்ன செய்யிறது ராவுலேருந்து நாயா அலைஞ்சுமே சவத்தைக் கொண்டாறயிலே பத்துப் பதினொரு மணியாகிறிச்சு....."

"ஏங் கொண்டாரனும்?"

"என்ன செய்ய! ஆஸ்பத்திரிலேயே வுட்டிருந்தா பொது மயானத்துல பொதைச்சிடலாம், தோட்டத்துக்குக் கொண்டாந்தாத்தானே தேயிலைக்கு உரமாகி உதவும் - அதிர்ஷ்டம் இதுகளுக்கு மட்டுந்தானே எழுதிவைச் சிருக்கு. தொரைமாறுக செத்தா கொழும்புக்குக் கொண்டு போயிடுறாக. ஐயாமாருக செத்தா வதளைப் பக்கம் கொண்டு போயிடுறாக...."

சாவு வீட்டு மணம் லேசாக விலகி சம்பாஷணைகள் நடக்கின்றன.

"ம், ம், ஆகட்டும், நாளியாகுது" என்றபடி பெரிய கங்காணி பாடை யின் அருகே வருகின்றார். பிச்சைமுத்துப் பண்டிதர் 'தடாபுடா' வென்று ஓடி வருகின்றார்

"சொர்க்கம் சேர்.... கைலாசம் சேர்...." என்று தண்ணீரைத் தொட்டுத் தெளித்து பெட்டியை மூடுகின்றார். பந்தலில் இருந்த பாடைக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டி ஏறுகிறது. ஏழெட்டுப்பேர் பாடையைத் தூக்க தயாராக நிற்கின் றனர்.

"என்னைப் பெத்த எங்க ஆத்தா, எங்களைத் தனியா தவிக்க வுட் டுட்டுப் போறியே" என்ற ஓலம் உச்சஸ்தாகையில் உள்ளிருந்து கிளம்பிப் பந்தலில் கட்டியிருந்த வெள்ளை வேட்டிகளைப் படபடக்க வைக்கிறது.

"தப்பு தப்பு... நடப்பா.... " என்று கத்துகின்றார் பெரியவர்.

"சூடு காட்டிக் கொண்டிருந்த மூவரும் சுறுசுறுப்புடன் கிளம் பினார்கள்.

மடமடமடவென்று அடித்து, நிறுத்தி தாளத்தை மாற்றி குனிந்து நிமிர்ந்து அடித்து ஆடியபடி நடக்கத் தொடங்குகின்றனர்.

பிரேத ஊர்வலம் லயத்தில் இருந்து ஊர்ந்து பாதைக்கு ஏறியது.

நடை பாவாடை விரித்துக் கொண்டிருந்த வண்ணான் 'இனி போதும்' என்ற குரல் கேட்டு துணிகளைச் சுருட்டிக் கட்டி கம்கட்டில் அடக்கிக் கொண்டான்.

பாடை மாற்றும் இடத்தில் மூன்று தடவை சுற்றி பாடை மாற்றி ஊர்வலம் நடந்தது.

கணபதியின் கார் கடைசியாக ஊர்ந்து கொண்டு இருந்தது.

அரசமரத்தைத் தாண்டியதும், பாதை மிகவும் மெலிந்து கிடக்கும் அந்த இடத்தில் ஆட்கள் ஒருவருடன் ஒருவர் மோதியபடி நெருக்கிக் கொண்டு நடந்தனர்.

ஒரு சிலர் குறுக்கில் ஏறினர். "அது சுத்தி வரட்டும் நாம் இப்படியே போய் பொதை குழி கிட்ட நிப்போம்" என்றபடி.

"ஏம்பா ந்நாலு பேரா பரிஞ்சு போயிட்டா எப்படி, ஒன்னாப் போனத் தானே கூட்டமிருக்கும். குறுக்கு ஏறி சுருக்கனாப் போயி நீங்களா குழிக் குள்ற படுத்துக்கிறப் போறீங்க....." என்று சத்தம் போட்டார் ஒரு முதியவர்.

தனக்குப் படியேற முடியாத தள்ளாமையும் காரணமாக இருக் கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆஸ்பத்திரியில் செத்துத் தோட்டத்துக்குக் கொண்டாந்தாவே இந்த இழுபறிதான். மணி என்ன பாரு அஞ்சாகுது...."

"மண்ணைத் தள்ளிட்டுத் திரும்பையில ஏழாவது ஆகாதா! அப்புறம் குளிக்கனும், இந்தக் குளுர்ல எங்க குளிக்கிறது...."

"குளிக்காட்டி என்ன ஒட்டிக்கிறுதா... நாம மட்டுந்தான் எளவுவூட்டுக்குப் போயிட்டு வந்தா கட்டாயம் குளிக்கணும்ங்றோம். வெள்ளைக் காரன்லாம் குளிக்கிறானா......?"

தப்புச் சத்தம் எங்கேயோ கேட்கிறது. பின்னால் போகிறவர்கள் பீடி இழுத்தபடி பேசிக்கொண்டு நடக்கின்றனர்.

மனம் சோர்ந்தாலும் உடல் சோரரமல், நடை சோராமல் போய்க் கொண்டிருந்தான் ஆறுமுகம், அவனை ஒட்டி நடந்து கொண்டிருந்தான் கண்ணுச்சாமி.

திடீரென்று ஊர்வலம் நின்றது. நடந்து கொண்டிருந்தவர்கள் ஒவ்வொருவராக நின்று கடைசியில் பேசிக் கொண்டு வந்தவர்களும் நின்று கணபதியின் காரும் நின்று விட்டது.

"என்னவாம் நேரமாகுதில்லியா?."

காரிலிருந்து எட்டிக் கேட்டான் கணபதி. இன்னும் ஏதோ பாதை நெடுக சடங்கு சம்பரதாயங்கள் நடக்கின்றனவோ என்ற அதிருப்தி அவன் முகத்தில் தெரிந்தது.

"தெரியலையே என்னன்னு." என்றவாறு கூட்டத்துக்குள் நுழைந்து முன்னேறினான் ஒருவன்.

ரெட்டை வாங்கிக்கும் கீழே கிளாக்கரய்யாவின் கார் நின்று கொண்டிருந்தது. காரில் அய்யா மட்டுமே இருந்தார்.

அவசரமாக டவுனுக்குப் போக வந்தவர் இந்தக் கூட்டத்தைக் கண்டதும் காரை ஓரத்துக்கு எடுத்து நிறுத்திக் கொண்டார்.

றோட்டோரத்து வரகன் புல் வரிசையில் நிற்கிறது காரின் டயர். ஒரு இம்மி நகர்ந்தாலும் கார் புரண்டு விடும். கீழே கிடு கிடு பள்ளம் இல்லையென்றாலும் கார் பிரண்டால் தேயிலைகளை நசுக்கிக்கொண்டு கிடக்கும்.

அவ்வளவு ஓரத்துக்குக் காரை எடுத்த பிறகும் ஒரு ஆள் நடக்கும் இடமே இருக்கிறது. தப்பு காரைத் தாண்டிப் போய் விட்டது. பாடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்குபவர்கள் காரைத் தாண்டுவ தென்றால் ஒரு பக்கத்து ஆட்கள் தேயிலைக்குள் இறங்கி உரசிக்கொண்டு போக வேண்டும். கிளாக்கரய்யா காரை விட்டிறங்கி காருக்குப் பின்னால் போய் நின்று கொண்டார், ஊர்வலம் காருக்கு முன்னால் நின்று கொண்டது.

'றிவர்ஸ்.' செய்வதென்றால் தன் வீடுவரை 'றிவர்ஸ்' செய்ய வேண்டும். அது தனது அந்தஸ்துக்குக் குறைவானது. ஆகவே, பேசாமல் கையைக் கட்டிக்கொண்டு 'கப்சிப்' என்று நின்றார். அவர்கள் எப்படி யாவது இறங்கி ஏறிப் போய் விடுவார்கள் என்ற நினைவு அவருக்கு.

அய்யா காரைப் பின்னுக்கெடுப்பார் என்ற நினைவு இவர்களுக்கு. ஆகவே, இவர்களும் நின்றார்கள்.

ஒரு வினாடி, இரண்டு வினாடி ஒன்றும் நடக்கவில்லை. இவர் களும் போகவில்லை. அவரும் காரை நகர்த்தவில்லை.

"காரைப் பின்னுக்கெடுங்கோ" என்று அவரிடம் சொல்லப் பயந்த வர்கள் பெரிய கங்காணியைத் தேடினர்.

"முயலைக் கிளப்பிவிட்டு விட்டு ஏதோ எங்கேயோ போனது போல்"அவர் எப்போதோ போய்விட்டார்.

"ஐயா காரைக் கொஞ்சம் பின்னுக்கு எடுத்துக் கிட்டீங்கன்னா நாங்க போயிறுவோம்"

கிளாக்கரய்யா நிமிர்ந்தார். கண்ணுச்சாமி முன்னே நின்று கொண் டிருந்தான்.

அவருடைய ஏளனச் சிரிப்பு உதட்டை மீறி வெளியே தெரிந்தது.

"நான் காரைப் பின்னுக்கிழுக்கிறதுன்னா எதருதி இழுக்கணும் பாத்தியா. அதனால கொஞ்சம் சமாளிச்சுப் போயிறுங்களேன். நானா உங்களை நிக்கச் சொன்னேன்....."

"பாடையைத் தூக்கிக்கிட்டுப் போறவங்க எப்படிங்க தேயிலைக் குள்ளே எறங்க முடியும்?...."

"அப்ப அப்படியே நில்லுங்கள்....."

"ஓகோ! அவனுகளும் தேயிலைக்குள்ளே எறங்காமல், நீங்களும் இந்த எடத்தைவிட்டு அசையாமல் நான் எடுத்துக் காட்டுறேன் பாத்துக் கிடுங்க" என்றவாறு காரை நோக்கி நடந்தான் கண்ணுச்சாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய் கண்ணுச்சாமி நில்லு" என்றார் ஐயா. காரை எடுக்கத் தான் போகின்றாரோ என நின்றான் கண்ணுச்சாமி.

"நேத்து அந்திநேரம் ஆபீசுல ஆறுமுகம் ஒரு முடிச்சுப் போட்டான். அதை அவுங்க ஆயி செத்துக் கழட்டி இருக்கு. இப்ப நீ ஒன்னைப் போடு, அதை யாரு கழட்டப் போறதோ தெரியலை...."

"ஆறுமுகத்தோட ஆயா செத்துட்டதுனாலே அவன் போட்ட முடிச்சு கழண்டுறலே அவன் போட்ட முடிச்சையும், இப்ப நான் போடப் போறதாக நீங்க சொல்ற முடிச்சையும் நீங்கதான் கழட்டியாகணும்." என்றபடி காரிடம் வந்து நின்று, முன் மட்கார்டில் காலைத் தூக்கி வைத்து ஒரு ஆட்டு ஆட்டினான் கண்ணுச்சாமி.

கண்ணுச்சாமி காலைத்தூக்கி மட்கார்ட்மேல் வைத்ததும், நாலைந்து பேர் ஓடிவந்து அவனைப் பிடித்திழுத்தார்கள்.

"ஒஹோ! காரைத் தள்ளி விட்டுட்டுப்போகப் போறியோ.... அதையும் பார்ப்பமே ம்......ம் தள்ளு தள்ளி விட்டுறு....." என்றவாறு பலமாகக் குரலெடுத்துச் சிரித்தார் அய்யா.

"பாடையைத் தோளில் தாங்கிக்கொண்டிருந்தவர்கள் தூரத்திலேயே நின்று விட்டார்கள், ஊர்வலமும் ஸ்தம்பித்துப் போய் நின்றது.

"ஒங்களை மாதிரி பொம்பளைத்தனமா ஆளுகளை அனுப்பி ராவுல காரைத் தள்ள மாட்டேன் நான். செய்யிறதை நேருக்கு நேரா, மூஞ்சிக்கு நேரா செய்வேன்.... நீங்க பாத்துக் கிட்டே இருங்க. நான் பெரட்டிக் காட்டுறேன்" என்று கூறியபடி தன்னைப் பிடித்துக்கொண்டிருந்தவர் களை உதறினான் கண்ணுச்சாமி. அவர்களும் பிடியை விடுவதாக இல்லை.

கூட்டத்தை நீவி நெரித்துக்கொண்டு காரிடம் வந்தான் ஆறுமுகம். நாலைந்து நாள் ராத்தூக்கம் விழித்தவனைப்போல் அவன் களைத்திருந் தான். சட்டையின்றி இடுப்பு வேட்டியுடன் இருந்த அவனுடைய உடலில் எண்ணெய் மின்னிக் கொண்டிருந்தது.

கவலையால் சுருங்கிய தனது கண்களால் கண்ணுச்சாமியைப் பார்த்தான் ஆறுமுகம். கண்ணுச்சாமிக்கு அந்தக் கண்கள் ஏதோ கூறின. "அவனை விடுங்கள். நீங்களெல்லோரும் போய் ஊர்வலத்துடன் தொடர்ந்து வாருங்கள்" என்பதுபோல் கைகளை ஆட்டி சமிக்ஞை காட்டிவிட்டு அவன் கூட்டத்திற்குள் போய்விட்டான். கண்ணுச்சாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் பிடித்துக் கொண்டிருந்தவர்களும் அவனை விட்டுவிட்டு ஆறுமுகத்துடன் கூட்டத்துக்குள் கலந்தனர்.

காலைத்தூக்கிக் கார்மேல் வைத்தான் கண்ணுச்சாமி! மூச்சையடக்கித் 'தம்' கட்டி ஒரு உந்து உந்தினான். ரப்பர் பலூனாய் நெஞ்சு உப்பி இறங்கியது. கைகளை முஷ்டி மடக்கி 'விண்' ணென்று வைத்துக் கொண்டான். கார்மேல் இருந்த காலின் ஆடு தசைகள் திரட்சிபெற்று குலுங்கின.

ஒரு உந்து

கார் குலுங்கி நின்றது.

கிளாக்கரய்யா மெல்லவும் முடியாமல், முழுங்கவும் முடியாமல் நின்று கொண்டிருந்தார். விஷயத்தை இவ்வளவுக்கு முற்றவிட்டபிறகு 'சரி சரி ஒதுங்கிக்கொள் நான் காரைப் பின்னுக்கு எடுக்கிறேன்' என்று கூற முடியுமா? ஆகவே, பல்லைக் கடித்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார்.

சம பூமியில் நிற்கும் காரை தனியொருவனாக நின்று புரட்டிவிடத் துணிந்த இவனுடைய பைத்தியகாரத் தனத்தை எண்ணிச் சிரித்துக் கொண்டார்.

கண்ணுச்சாமியின் கால் இரண்டாவது தடவையாக இரும்பாகி விறைத்து நின்றது. நெஞ்சு விரிந்து மடிந்தது. கன்னங்கள் கல்லாக இறுகின.

கார் அசைந்து கொடுத்ததுடன் அசட்டையாக அவனைப் பார்த்துக் கொண்டு நின்றது. கண்ணுச்சாமி களைத்து கொண்டிருந்தான்.

கிளாக்கரய்யாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. சிரித்தபடி கூறினார். "ஒனக்கு ஏன் இந்த வீண் வேலை? கொஞ்சம் தேயிலைக் குள்ளாற எறங்கிப் போயிருந்தா இத்தினாளி போயிருக்கலாமில்லியா" என்று.

அந்தக் குரலில் தொனித்த ஏளனம் அவனைக் குத்திக்கிளறியது.

ஆக்ரோஷத்துடன் காலை வைத்து உந்தினான். கால் விறைத்து நீண்டது. முகம் செங்கல்லாய்ச் சிவந்து இறுகிறது! வயிறு எக்கி மார்பு உப்பியது. றோட்டில் பதித்திருந்த இரு சக்கரங்கள் இலேசாக உயர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த சக்கரங்களை மீண்டும் தரைக்கு இறங்க விடாமல் உந்தித் தள்ளினான். வெற்றி கிடைக்கிறது என்ற மகிழ்வில் பத்து ஆள்பலம் அவனுக்குள் பாய்ந்திறங்கியது. உயர்ந்த சக்கரங்கள் உயர்ந்து கொண்டே இருந்தன. தேயிலையை நசுக்கிக் கொண்டு கார் மறுபக்கம் பிரண்டு விழுந்தது. காருக் கடியில் தேயிலைகள் நெரிந்து கொண்டிருந்தன.

காலை உதறிக் கொண்டான் கண்ணுச்சாமி, பதறிப் போய் நின்றார் அய்யா.

அவனுடைய வீரத்தை மெச்சிக் கைதட்டி ஆரவாரம் செய்வது போல் 'டமடமடம' வென ஒலித்தது தப்பு.

ஊர்வலம் நகரத் தொடங்கியது!

பிரேத ஊர்வலமும், அய்யாவின் காரும் மோதிக் கொண்ட விஷயம் எப்படியோ கிளாக்கரய்யா பங்களாவுக்குப் போய் விட்டது.

அடித்துப் பிடித்துக்கொண்டு ஓடி வந்தான் அய்யாவின் டிரைவர் தம்பி.

அவன் வருவதற்குள் ஊர்வலம் காரைத் தாண்டி விட்டது. மலைத்துப் போய் நின்று கொண்டிருந்த தமையனிடம் அவன் ஒன்றும் கூறவில்லை. காரைத் தொட்டுப் பார்த்தான்.

தேயிலைச் செடிகளுக்கு மேல் கார் மிதந்துக்கொண்டு கிடந்தது. காரை மறுபடியும் நிமிர்த்தி றோட்டுக் கெடுப்பது, ஒன்றும் பிரமாதமான காரியம் இல்லை என்பதை அவன் அவதானித்துக் கொண்டான்.

'மொனா உனே?' என்று அய்யாவிடம் கேட்க நினைத்தான். ஆனால், கேட்கவில்லை.

அவருடைய முரட்டுச் சுபாவம் அவன் அறியாததா?

அய்யாவின் டிரைவரைக் கண்டதும் ஊர்வலத்துடன் போகாமல் ஒதுங்கி நின்று கொண்டான் கண்ணுச்சாமி. கணபதியும் காரை ஒதுக்கிக் கொண்டிருந்தான். கண்ணுச்சாமி காரிடம் வந்து நின்றதும் அய்யா கத்தினார். "ஏய் நீ மரியாதையா போயிறு....." என்று.

"மாத்தியா நிக்காங் இண்டகோ...." என்று அவரை அடக்கிக்கொண்டு கண்ணுச்சாமியுடன் மறுபக்கம் தேயிலைக்குள் இறங்கி காரை நோட்டம் பார்த்தான் டிரைவர், அதற்குள் இன்னும் ஒரு நாலைந்து இளவட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிடம் வந்தனர். தன்னுடைய காரை ஒதுக்கி நிறுத்திவிட்டு கணபதியும் வந்து சேர்ந்து கொண்டான்.

கண்ணுச்சாமியும், டிரைவரும் தேயிலை பக்கமிருந்து காரைத் தூக்க, மற்றவர்கள் இந்தப் பக்கம் காரை அமுக்கிப் பிடித்துக் கொண்டனர்.

கைத்தாங்கலாக மீண்டும் கார் பழைய நிலைக்கு வந்தது. கூட்டம் கலைந்து விட்டது.

டிரைவர் காருக்குள் ஏறி ஸ்டார்ட் செய்து பார்த்தான். கோபாவேசத்துடன் உறுமியது கார்.

'மாத்தியா நகின்ட' என்று பின்கதவைத் திறந்து விட்டான் டிரைவர் தம்பி. கல்லாய்ச் சமைந்த நின்றவர் காருக்குள் ஏறிக்கொண்டார்.

ரோட்டோரத்துத் தேயிலை சவுக்குமரம் விழுந்த இடம் போல் நசுங்கிக் கிந்தது.

பின் சீட்டில் ஏறி அமர்ந்தவர் டக்கென்று இறங்கினார்.

"உம்ப பளயங் கெட்ட... என்று டிரைவரை அனுப்பி விட்டு காரைக் கிளப்பக்கொண்டு போய்விட்டார்.

"என்னை அவமானப்படுத்திய இவன்களை சும்மா விடுவதில்லை.... ஒரு நல்ல பாடம் படிப்பித்தே தீருவேன்" என்று கருவிக் கொண்டார்.

அய்யா காரை 'ரிப்பேர்' செய்யும் காராஜில் இருப்பவர்கள் அவரூர் ஆட்கள். ஆறேழு பேர் இருக்கின்றார்கள் வீமன் காமன்போல். அத்தனை பேரும் அய்யாவுடன் மிக நெருக்கம். உயிரைக்கூடத் கொடுக்கத் தயாராய் உள்ளவர்கள். 'ஒன ஜாதிட அபி லேஸ்தி' என்பது தான் அவர்களுடைய மந்திரம்.

கராஜிடம் கார் நின்றபோது நேரம் ஏறக்குறைய ஆறு ஆறரை இருக்கும். கராஜைப் பூட்டிக்கொண்டிருந்தனர்.

உதட்டோரத்தில் பீடியும், உயர்த்திப்படித்த சாரமுமாக நின்று கொண்டிருந்த ஒருவன் அய்யாவின் காரைக் கண்டதும், காரிடம் வந்தான்.

"ஆங் மாத்தியா.... மே வெலாவ..."

அய்யா காரை விட்டிறங்காமலே அவனிடம் ஏதோ கூறினார். அவன் மற்றவர்களிடம் ஏதோ கூறினான். கராஜைப் பூட்டிக்கொண்டு நாலைந்துபேரும் காரில் ஏறிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடியும் கையுமாக இருந்தவன் முன் சீட்டில் ஏறிக் கொண்டான்.

“ஏக்க விசிக்கறப்பாம்பா.” என்றார் அய்யா.

“மேக்க.... ஜனதா” என்றவன் புகைந்து கொண்டிருந்த கால்வாசிப் பீடியை எடுத்துக் கையில் பிடித்துக் கொண்டான். நெஞ்சுக்குள் இருந்த புகை லேசாக மூக்கு வழியாக இழைந்தது.

“நெவிக்கட் தெக்காக் அரந்தெனவாத?” என்று கேட்டுக் கொண்ட படி பீடித்துண்டை வெளியே எறிந்தான்.

“தெக்காக் நெவே பெக்கட்தெக்காக் அரந்தென்னாங் என்றவாறு லிக்கர் பாரின்” முன் காரை நிறுத்தினார்.

நாலைந்துபேரும் உள்ளே நுழைந்தார்கள்.

கிளர்க்கரய்யாவின் கார் தோட்டத்தை நோக்கிக் கிளம்பும் போது நன்றாக இருட்டி விட்டது.

‘ஜிவ்’ வென்று சிவந்த கண்களுடன் அந்த ஐந்துபேரும் அய்யா வுடன் காரில் வந்து கொண்டிருந்தனர்.

காரை முன் தள்ளி அந்த மலைகள் வேகமாகப் பின்னோடிக் கொண்டிருந்தன. உயர்ந்து நின்ற சவுக்கும், ஒடிந்து நெளியும் அருவி களும், பாலங்களின் பைப் தூண்களும், பாதை ஓரத்து வெள்ளைக் கற்களும் ஓடிக்கொண்டிருந்தன.

றோட்டோரத்து லயன்கள் விருட் விருட்டென்று ஓடின.

பாதை பழகிப்போன நிதானத்துடன் உடனிருந்தவர்களுடன் சிரித்தும், பேசியும், கும்மாளமிட்டபடியும் காரைச் செலுத்திக்கொண்டி ருந்தார் கிளாக்கரய்யா.

ஒரு நாய் மிக ஆக்ரோஷமாகக் குரைத்தது. இறங்கி வரும் காரிருளில் மிகவும் பயங்கரமாகத் தொனித்தது அந்த ஓலம், இருட்டிவிட்ட தென்றால் நாய்கள் ஒரு அரசாங்கமே நடத்தத் தொடங்கி விடுகின்றன. பகலிலும் நாய்கள் இருக்கத்தானே செய்கின்றன! குரைக்கத்தான் செய்கின்றன! ஆனால் இருட்டில் கேட்கும் நாயின் குரைப்புக்கு ஒரு தனிக் கௌரவம்!

“தோட்டக்காட்டில் ஏராளமான நாய்கள் இருக்கின்றன இல்லையா?” என்று அய்யாவிடம் கேட்டான் முன் சீட் ஆசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கேட்ட தோரணையிலிருந்து 'நாய்' என்றால் அவன் நாலு காதம் ஓடுவான் என்பது புலனாகியது.

முழங்கால் இடுக்கில் பிடிபட்டிருந்த சாரத்தை விடுவித்து பெருந் துடைவரை உயர்த்தினான். பலகை போன்ற அகலமான அந்தத்துடையில் ஒரு பெரிய தழும்பு இருந்தது. அதை 'லாவண்யத்துடன்' தாய் தன் குழந்தையைத் தடவிக் கொடுப்பது போல் தடவிக் கொடுத்துக் கொண்டு கூறினான் "நாய் என்றால் நமக்கு சிம்ம சொப்பனம்"

"இங்கு இருப்பவையெல்லாமே நாய்கள் தான்!"

தோட்டக் காட்டில் நிறைய நாய்கள் இருக்கின்றன இல்லையா? என்ற கேள்விக்கு அய்யா இப்போதுதான் பதில் கொடுக்கின்றார்.

"பூந்து புடுங்கினாலும் அப்படித்தான் புடுங்கும், இல்லையா?"

பின் சீட்டில் இருந்த ஒருவன் சிரித்தபடி கூறினான். அவனுடைய சிரிப்பல் மற்றவர்களும் கலந்து கொண்டனர்.

"ஏவாட்ட இடதென்னே" என்றபடி சீட்டில் நிமிர்ந்து உட்கார்ந்து கண்ணாடி வழியே காருக்கு முன்னால் றோட்டை உற்றுப் பார்த்தார் அய்யா.

"மெத்தன ஹரியட வளவல்தியனவ" என்றபடி காரை ஒடித்து மடக்கித் திருப்பனார். அப்படியும் 'தடால், தடால்' என்று குழிகளில் விழுந்து குலுங்கி எழுந்தது கார்.

'பார, காளா!' என்று முனகிக்கொண்டார்.

"ஹப்போய் ஆண்டுவே பாரட்ட மே வத்த பாரே ஹொந்தாய் றத்தரங்" என்றான் பின்சீட் ஆசாமிகளில் ஒருவன்.

அரசாங்கப் பாதைகளில் காரோட்டிக் களைத்துப் போன அலுப்பு சலிப்புடன் வெளிவந்தது அவனுடைய குரல்.

"இது தான் சாவு லயம்..... மெத்தன தமாய் லொக்கா இன்னே..... இதுதான் கண்ணுச்சாமி இருக்கும் லயம், கெறுங் காரயா...... மேக்க இஸ்கோல......" அய்யா கூறிக்கொண்டே இருந்தார். மரஞ்செடிக் கொடிகள் ஓடிக்கொண்டே இருந்தன.

'இங்கேதான்!' என்றபடி காரை நிறுத்தினார். ஓடிக் கொண்டிருந் தவைகள் நின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசுங்கிக் கிடந்த தேயிலைகளை நால்வரும் நோக்கினர்.

"இந்த இடத்திலா காரைப் பிரட்டினான், அதுவும் தனியாக ஒருவன்! அடேயப்பா" என்று வியப்பு மேலீட்டால் மௌனமாகினர்.

வீமனைப்பற்றி இவர்கள் கேள்விப்பட்டதில்லை. ஆகவே இவன் நவயுக வீமனாக இருப்பானே என்று எண்ணவில்லை!

இவனுடன் மோதுவதானால் சற்று ஜாக்கிரதையாகவே மோத வேண்டும் என்று எண்ணிக்கொண்டனர். கார் ஓடியது. மரங்கள் ஓடின. அய்யாவின் வீடு அதோ தெரிகிறது.

"இது கண்டக்டரய்யா வீடு, இது கணக்கப்பள்ளை.... மென்ன..... கணபதியாகே வாகனய...."

"அடடே இவனூட்டுதா?"

"இவனும் கராஜுக்கு வாறதா றிப்பயர் செய்ய?" ஆர்வத்துடன் கேட்டார் அய்யா.

"ஆமாம்" என்று கூறியவனைத் திரும்பிப் பார்த்த படி கூறினார்.

ஏனாங் லேசி நே...! மூட்டத் வெடக் தெண்ட ஒனே. ஏக்க பஸ்ஸே... முதல்லே செய்ய வேண்டியது மத்தது என்றபடி காரை நிறுத்தினார்.

"டப்டப்; என்று கதவுகளை அறைந்து சாத்தி விட்டு உள்ளே சென்றவர்களை, 'எண்ட, எண்ட' என்று வரவேற்றாள் ஐயாவின் மனைவி.

கழுத்திலிருந்து கால்வரை பெரிய பெரிய பொத்தான் பிடித்த கிமோனா அம்மாவை நல்ல அழகி என்று கூறிக்கொண்டிருந்தது.

தலையைச் சீவிக் கச்சிதமாகக் கொண்டை போட்டிருந்தார் அம்மா, தோள்வரை கைகள் மொழு மொழு வென்றிருந்தன. உரித்த வாழைத் தண்டு போல் செருப்புக்குள் அடங்கியிருக்கும் கால்கள் அழகாக இருந்தன பிரேம் போட்ட படம் போல்.

முன் ஹாலில் தொங்கிய படங்களைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள் வந்தவர்கள்.

பெரிதாகத் தொங்கிய ஒரு வெளிநாட்டுக் கலண்டரைப் புரட்டி அதிலுள்ள அழகிகளை ரசித்துக் கொண்டிருந்தான் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தப் பெண்ணையும் படம் பிடித்துப் போட்டிருக்கலாம். நன்றா கவே இருக்கும்" என்று அம்மாவையும் கலண்டர் பெண்களுடன் ஒப் பிட்டுக் கொண்டான் அவன்.

"எய் வாடிவென்னத்த" என்றவாறு மூலைக் கொன்றாய்க் கிடந்த நாற்காலிகளை இழுத்துப் போட்டார் அம்மா.

நாற்காலிகளை இழுப்பதற்காக அம்மா குனிந்த போது, வயிற்றுக் குச் சற்றுமேலே கவுண் திறந்து மடிந்தது. அந்த ஒரு வினாடியில் அந்த உடலின் நிறத்தைப் பார்த்து மோகித்தான் கலண்டர் பார்த்துக் கொண்டிருந் தவன்.

எல்லாரும் அமர்ந்துவிட்ட பிறகு அய்யாவைப் பார்த்து அம்மா கேட்டாள். "அந்தி நேரம் என்ன நடந்தது?" என்று.

"பிரமாதமாக ஒன்றும் நடந்து விடவில்லை" என்று கூறியவர், "தம்பி சொல்லியிருப்பானே... தெரியாதா... இந்த றாங்கிபுடிச்சபயல் களை! அவன்களுக்கு ஒரு பாடம் படிச்சிக் குடுக்கத்தானே இதோ கூட்டியாந் திருக்கேன்...." என்றபடி, 'காரில் போத்தல் இருக்கு' என்று முடித்தார்.

"சரி சரி... போய் உடுப்பை மாத்துங்க.... பெறகு பார்ப்போம் மத்ததை" என்று அவர் இடுப்பில் போட்டு இழுத்துக்கொண்டு உள்ளே போனாள்.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டு நிற்கையில் அம்மாவின் கவுணைச் கவனமாய் பார்த்தான் கலண்டர் பேர் வழி.

கழுத்திலிருந்து கால்வரைக்கும் கவுணில் தைக்கப்பட்டிருந்த பெரிய பொத்தான்களில் சின்னச் சின்ன நிர்வாண அழகிகள் நின்று கொண்டிருந்தனர். எல்லாப் பொத்தான்களையும் பார்க்க நினைத்த வனுக்கு இரண்டொரு இடங்களில் பொத்தான் இல்லாதது தெரியவந்தது. அந்த இடங்களில் பொத்தான் போடப்படாமல் இருக்கவேண்டும். அல்லது அறுந்திருக்க வேண்டும். எதாக இருந்தாலும் குனியும் போது அந்த இடங்கள் நீளத் திறக்கத்தான் செய்யும். முதலில் பார்க்கத் தவறி விட்டோமே என்று அங்கலாய்த்துக் கொண்டவன் சந்தர்ப்பத்துக்காக காத்துக்கொண்டிருந்தான்.

காலையிருந்து ராத்திரிவரை ஓட்டை, உடைசல் கார்களுடன், இரும்புகளுடன், எண்ணெய்ப் பசுக்குகளுடன் மாரடித்து விட்டு இடியப் பமும், பிளேன்டீயும் குடித்து விட்டு தமிழ், சிங்கள, இந்தி, ஆங்கிலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களைப் பார்த்து, அந்தக் கற்பனைகளுடன் சாக்குக் கட்டிலில் முடங்கிக் கிடந்தே அனுபவப்பட்டுவிட்டவனை - உயிருடன் உலவும் பெண் அருகில் உட்கார வைத்தால் என்ன செய்வான்? மனம் பேதலிக் கத்தான் செய்தது.

போத்தலையும் கிளாஸ்களையும் கொண்டு வந்து மேசை மேல் வைத்த அம்மா, குசினிக்குள் போய் பொரித்த மாட்டிறைச்சியை ஒரு பிளேட்டில் போட்டுக்கொண்டு வந்தாள்.

சாரமும் தானுமாக வந்து அய்யாவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

போத்தல் உடைந்தது. கிளாஸ்கள் நிறைந்தன. இறைச்சிப் பிரட்டல் குறைந்தது.

"தோட்டத்துக்குள்ளே ஒன்றுஞ் செய்யப்புடாது! இன்னைக்கோ, நாளைக்கோ எங்கேயும் எதுவும் செய்யப் புடாது. நேற்றுத்தான் கிளாக் கரய்யாவூட்டு காரைப் பெரட்டுனான். இன்னிக்கு ஆளையே காணோம்னா சந்தேகம் நம்ம பக்கம் தான் விழும்...."

"இதோ இவன் நம்ம ஆள்.. ஆண்டியப்பா இங்கிட்டுவா... இவன் ஆளுகளை வசதியைப்போலக் காட்டிக் குடுப்பான்... மத்ததைச் சொல்லியா குடுக்கணும்... உயிர் இருக்கவே கொன்னுடனும்..."

இரண்டாவது தடவையாக கிளாஸ்கள் நிறைந்தன. இடுப்பில் கை களை ஊன்றியவாறு அம்மா கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கையில்லாத கவுணுக்குள்ளாக பிரேஸியரின் அழுக்கு ஓரம் உடலுக் குள் புதைந்து கொண்டிருந்தது.

எதேச்சையாக அவனைப் பார்த்த அம்மாவுக்கு அவன் பார்வை பயணம் செய்யும் திசை தெரிகிறது. கைகளைத் தொங்கிவிட்டுக் கொண்டாள். ஆனால் தான் நிற்கும் இடத்தையோ, நிலையையோ மாற்றிக்கொள்ளவில்லை.

ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள். இருந்தவர்களில் அவன் அழகாகவும், இளைஞனாகவும் இருந்தான். புத்தம் புது வாலிபனின் ஒன்றுந் தெரியாத ஏமாளித்தனம் அவன் முகத்தில் தெரிந்தது.

அம்மா அவனைப் பார்க்கவும் நாணத்துடன் பார்வையை மாற்றிக் கொண்டான். இருந்தாலும் அம்மா கையைத் தொங்கப் போட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட ஏக்கம் பார்வையில் தெரிந்தது. அம்மாவும் அதை உணரா மல்லிலை.

"அம்மா, தாயே" என்று ஏக்கத்துடன் கையேந்தும் குழந்தைக்கு, "இந்தா தொலைந்துபோ" என்று ஏதாவது போட்டு அனுப்புவதுபோல், "இந்தா பார்த்துத் தொலை" என்று மீண்டும் இடுப்பில் கையை ஊன்றிக் கொண்டாள்.

அவன் முகம் கவர்ச்சியாக மலர்ந்தது. இப்போது போதை தந்தது சாராயம் அல்ல.

அம்மா உள்ளே போனதும் ஆண்டியப்பன் கையில் நுரைத்து நிறைந்த கிளாஸைக் கொடுத்து உள்ளே அனுப்பினார் அய்யா.

அது அம்மாவுக்கு!

சாப்பாட்டு மேசை தயாராகியது.

அனைவரும் இடம் மாறி அமர்ந்தனர்.

அய்யாவுக்கு அருகில் நாற்காலியைக் காலியாகப் போட்டு அடுத்த தில் அமர்ந்து கொண்டான் 'கலண்டர்.'

எல்லா கோப்பைகளுக்கும் அம்மா பரிமாறிக் கொண்டிருந்தார். பரிமாறல் முடிந்ததும் தன்னுடைய இடத்தில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கிய பிறகே தனது வலது பக்கத்தில் அந்த இளைஞன் உட்கார்ந் திருப்பதை உணர்ந்தாள். எதேச்சையாக நடந்ததா அல்லது திட்டமிட்டு அவன் அங்கு உட்கார்ந்து கொண்டானா என்பதை அனுமானிக்க முடிய வில்லை.

அம்மாவின் பலாமூஸ் கறியைப்பற்றி இப்போது பேச்சு நடந்தது. நன்றாக முற்றிச் சுளை விழாத பலாக்காயைக் கறி சமைப்பதில் அந்த அம்மாவுக்கிணை அந்தம்மாதான். பெரிய பெரிய துண்டுகளாக வெட்டிப் போட்டு, நல்ல உறைப்பேற்றி இறைச்சிக் கறிபோல் சமைத்துவிடுவதில் கெட்டிக்காரி.

எல்லாரும் பலாக்கறியைப் புகழ்ந்து பேசவே அம்மா பெருமையால் சிவந்துபோனாள்.

பலாக்கறி இருந்த தட்டுக் காலியாகியது. அம்மா எழுந்து போய் மறுபடியும் பலாக்கறி கொண்டுவந்தார்கள். வாலிபனின் கோப்பையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்லாக்கறி இருக்கும் போதே ஒரு கரண்டியை அள்ளி அவனுடைய பிளேட்டில் போட்டுவிட்டு அமர்ந்து கொண்டாள்.

வாலிபன் ஏதேதோ கற்பனை செய்துகொண்டான்.

மற்றவர்கள் சாப்பாட்டிலும், கதையிலும் மும்முரமாக இருக் கையில், அவனுடைய இடதுகை அம்மாவின் காலில் விழுந்தது.

திடுக்கிட்ட அம்மாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அய்யாவுக் குத் தெரிந்தால் அவர்களின் திட்டம் சிதறிவிடக் கூடும். ஆகவே ஒரு வினாடி யோசித்தாள். அந்த ஒருவினாடி மௌனத்தைச் சம்மதமாக எண்ணிக்கொண்ட அவனுடைய கை மேலே மேலே நடக்க, அம்மா தன்னுடைய கோப்பையை எடுத்துக்கொண்டு எழுந்துவிட்டாள்.

சாப்பாடு முடிந்ததும் அய்யாவின் கார் அவர்களை ஏற்றிக் கொண்டு போய்விட்டது.

## 7

எலும்பின் குருத்துக்களை நெருடி இழுத்துக் கொண்டிருந்தது குளிர். உடலுக்கு ஸ்வெட்டரும், தலைக்கு மப்ளரும் இல்லாமல் எவரும் உலவுவதே கிடையாது.

நான்ஓயா, நுவரெலியா பகுதிகளுக்கே இந்தக் குளிர் உரித்தான தென்றாலும் ஒரு சில காலங்களில் பதுளைப் பகுதியையும் விட்டு வைப்பதில்லை.

புதைகுழியிலிருந்து திரும்பயவர்களில் ஒருசிலர் பல்லைக் கடித்துக் கொண்டு ஆற்றில் விழுந்து எழுந்து குளியலை சரிப்படுத்திக்கொண் டனர். குளிருக்குப் பயந்தவர்களும், குளிப்பதற்கு தண்ணீர் சுடவைக் குமளவுக்கு விறகு வைத்திருப்பவர்களும் தண்ணீர் காயவைத்துக் குளித்தனர். லயத்துக்கு முன்னால் வரிசையாக அடுப்புகளும், வாளிகளு மாக இருக்கின்றன. குளியல் முடிந்த அடுப்புகள் புகைக்கின்றன. பாதி நெருப்பும், பாதி கரியுமாக! மற்றவைகளில் சிலர் குளித்துக் கொண்டிருக் கின்றனர்.

ஆறுமுகத்தின் லயம் இன்னும் சோகம் விடவில்லை யென்றாலும், மௌனமான ஒரு கலகலப்பும் அங்கு இல்லாமலில்லை. அயல் தோட் டத்திலிருந்து வந்திருந்தவர்கள் காரியம் முடிந்துவிட்ட திருப்தியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கதைகளையும் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு சாப்பாடும் நடந்து கொண்டிருந்தது.

வீட்டிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தாள் கண்ணம்மா. கருங்கும் மென்று கிடந்த இருட்டில் லைசன் கல்லுக் கருகில் இருந்து கிளம்பி வானத்தை நோக்கி வளர்ந்த புகை மெல்லிசாகத் தெரிந்தது. பக்கத்துப் பக்கத்துக் காம்பராக்களின் பேச்சும் கலகலப்பும் இருட்டில் விழுந்து எழுந்து வந்து காதில் இழைந்தது. தலையை வெளியே நீட்டி எட்டிப் பார்த்தாள். எவரும் குளித்துக் கொண்டிருக்கவில்லை என்பதை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டு இருட்டில் இறங்கினாள்.

அது றோட்டோரத்து லயம். அதிலும் தொங்கல் காம்பரா கண்ணம்மா வினுடையது. வீட்டில் அவளையும், வயோதிபத் தந்தையையும் தவிர யாருமில்லை. அவளுக்கு இரண்டு அண்ணன்மார்கள் இருந்தனர். அது மூன்று வருடங்களுக்கு முன்பு. இப்போது அவர்கள் இல்லை. தோட் டத்துப் பள்ளிக் கூடத்தில் நாலாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த அவளுடைய கடைசித் தம்பியும், அண்ணமார்களும் பெற்றவளும், இந்தியாவுக்குப் போய்விட்டனர்.

அப்பனையும் மகளையும் விட்டுவிட்டு ஆயாளும் மகன் மார்களும் ஊருக்குப் போய்விட்டார்கள். ஏன் போனார்கள்? எப்படிப் போக மனம் வந்தது!

அந்தக் குடுப்பத்தில் அவள் ஒரே பெண். மற்றவர்கள் எல்லோரும் பையன்கள். ஒரே பெண் என்றால் செல்லமாகத்தானே வளர்ந்திருப்பாள். ஐந்தாவது பாஸ் செய்து முடித்தபிறகு கூட அவளை வீட்டில் உள்ள வர்கள் பெயர் பதிய அனுமதிக்க வில்லை. இரண்டு மூன்று வருடங்கள் வீட்டிலேயே வைத்திருந்தனர். இவர்கள் அவளை வெறுமனே உட் கார்த்தி வைத்திருந்தாலும், காலம் அப்படி இருந்துவிடவில்லை. காலே ஜுக்குப் போகும் பையன் தன்னைப் பரீட்சைக்குத் தயார் செய்வது போல் அவளையும் காலம் தயார் செய்து கொண்டேயிருந்தது.

மனிதர்களைப்போல் காலம் சோம்பல்படுவதில்லை. இன்றைக்குத் தான் இதைச் செய்தாக வேண்டும். பரவாயில்லை, நாளைக்குச் செய்து கொள்ளலாம். அதனால் நஷ்ட மேதுமில்லை என்று எதையும் தள்ளிப் போடுவதில்லை, தன்னை யாரும் கவனிக்கிறார்களா என்று கவலைப் படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ! பார்த்துக்கொண்டிருக்கிறார்களே" என்று அவசர அவசர மாக இரண்டுநாள் வேலையை ஒரே நாளில் செய்வதில்லை. ஒரே சீராக இயங்கிக் கொள்கிறது காலம். ஆகவே அதற்கு மூப்பு இல்லை! அது கிழடாவதில்லை! சாவதில்லை!

கண்ணம்மாவையும் காலம் ஒரு பரீட்சைக்குத் தயார் செய்கிறது. பாவாடைகள் கட்டையாகின. சட்டைகள் 'டைட்' ஆகின. நேராக பலகைபோல், ஒரு பையனுடையதைப்போல் இருநத நெஞ்சில் சதைகள் ஏறின. உள்ளேயும் வெளியேயும் மாற்றங்கள் ஏற்பட்டன. நேற்றுத் தெரியாத சில ரகசியங்கள் இன்று தெரிந்தன. காலம் அவைகளைக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தது.

தோட்டத்துப் பாடசாலையில் படிப்பை முடித்துக் கொண்டு மூன்று வருடம் வீட்டில் விளையாடிக்கொண்டிருந்தவள், இப்போது பெயர் பதிந்து மலையேறினாள், புல் வெட்டினாள், கல் தூக்கினாள், றோட்டுக் கூட்டினாள். பிறகு கொழுந்தெடுக்கப் போனாள்.

"கூடை மேல் கூடை வைத்துக்

கொழுந்தெடுக்கப் போற பொண்ணே,

நீ ஆடைமேல் சுற்றும் அந்த

அசிங்கமான படங்கெதுக்கோ"

என்று ஆறுமுகம் அவளைப் பார்த்துப் பாடினான்.

அது அவளுக்கு இனித்தது. அவனுக்குப் பதில்சொல்ல ஆர்வம் இருந்தாலும், உதடுகள் துடித்தாலும் ஏனோ பதில் சொல்ல முடிய வில்லை. வார்த்தைகள் நெஞ்சுவரை ஓடிவந்து தொண்டைக்குள் நின்று கொண்டன.

பிறகொருநாள் ஆறுமுகம் அவளைப் பார்த்து அதே வரிகளைப் பாடியபோது அவள் சும்மா இருந்துவிடவில்லை.

"ஒட்டிக் கிடக்கும் தேயிலையை

ஓரசிக்கிட்டு ஏறயிலே

சீலை பட்டுன்னு கிழிஞ்சிடாதோ!

பாத்துக்கிடும் படங்கிருந்தா!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியிருக்கும் சீலைக்குப் பாதுகாப்பு இந்தப் படங்கு கண்ணம்மாளுக்கு....! ஆறுமுகம்தானோ? அதனால் தான் அவளைப் பார்த்து அப்படி பாடினானோ?

அவளுக்கா பாதுகாப்பில்லை. இரண்டு அண்ணன், ஒரு தம்பி, பெற்றவர்கள்...

இப்படிச் செல்லமாக இவள் வளர்ந்துகொண்டிருக்கையில் தான் அவர்கள் ஊருக்குக் கிளம்பவிட்டார்கள். அவர்களா போனார்கள்? இல்லை போகச் சொன்னார்கள். போகச் சொல்வது என்றால் கட்டளை யிடுவதுதான். கட்டளையிட ஒருவனும், காரியமாற்ற ஒருவனுமாக மனிதர்கள் ஏன் பிரிந்தார்கள்? எப்படி இரு கூரானார்கள். கட்டளை இடுவ தென்றால் அதற்கு ஒரு நீதி வேண்டாமா? தங்கையை விட்டு விட்டு அண்ணனைப் போகச் சொன்னார்கள்! அக்காவை விட்டு விட்டு தம்பியைப் போகச் சொன்னார்கள். அப்பாவைத் தனியாகவிட்டுவிட்டு அம்மாவை அனுப்பி விட்டார்கள்.

எல்லாருமாக அங்கே போய்த்தான் என்ன செய்வது? இங்கே சம்பளம் எடுத்து பேங்கிலா போட்டு வைத்திருக்கின்றார்கள். இங்கேயே சேர்க்க முடியவில்லை. அங்கே போய் எப்படிச் சேர்ப்பது? வாங்கும் சம்பளம் வயிற்றுக்கே போதுவதில்லை. வங்கிக்கு எதைப் போடுவது? ஆகவே கலங்கக் கலங்க கண்ணம்மாவை விட்டுவிட்டு கப்பல் ஏறி விட்டார்கள். அப்போது அந்த அண்ணன்காரர்கள் சொன்னார்கள்: “அப்பா ஆறுமுகம் இதை நீதான் பாத்துக்கிறனும். அதற்குப் பாதுகாப்பே நீதான். அப்பனுக்கு ஒன்னும் தெரியாது. நாங்களும் அப்பப்ப வந்து பார்த்துக்கிடுவோம்....”

உணர்ச்சிப் பெருக்கால் அந்த அண்ணன்மார்களுடைய கைகளை ஆறுமுகம் இறுகப் பிடித்துக்கொண்டான். கண்ணம்மாவின் கையைப் பிடிப்பதற்கு இது ஒத்திகை!

அதன்பிறகு ஆறுமுகம் அந்த வீட்டின் ஒருவனாக பழகினான். இருவரும் நெருங்கிப் பழகுவதை யாரும் வித்தியாசமாக நினைக்க வில்லை. அவனுக்காகவே அவள் வளருகின்றாள் என்பது எப்படியோ உருவாகி ஊர்ஜிதமாகி விட்டது. ஆறுமுகத்தின் அம்மாவின் ‘சாவு’ கூட கண்ணம்மாவைப் பெரிதும் கலக்கியது. தன்னுடைய ஒருவர் தவறி விட்டது போன்ற உணர்வே அவளுக்கு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டில் நின்று கொண்டிருந்த கண்ணம்மா, இடுப்புச் சீலையை அவிழ்த்து அரைச் சுவற்றுக்கு மேல் உள்ள கம்பியில் போட்டாள். சேலைக்குள் இருந்ததைவிட இப்போது வெறும் பாவாடை சட்டைக்குள் அழகாகத் தோன்றினாள். அதுவும் இல்லாவிட்டால் இன்னும் அழகாக இருப்பாள். சிலவேளை அசிங்கமாகவும் இருக்கலாம்.

பாவாடையைத் தளர்த்தி உயர்த்திப் பிடித்துக் கொண்டவள், மிக லாவகமாக சட்டையையும் உரிந்து உயர இருந்த கம்பயில் வீசிவிட்டு, நெஞ்சுக்கு மேலாகப் பாவாடையைச் சுற்றிக்கொண்டாள். இருட்டுத் தான் என்றாலும் ஒருவரும் பார்த்துக்கொண்டிருக்கவில்லை என்றாலும், சட்டையைக் கழற்றி கயிற்றில் போட்டுவிட்டு பிறகு பாவாடையை உயர்த்திக் கட்டவில்லை அவள். சட்டை உரிந்ததும், பாவாடை உயர்ந் ததும் ஒரே நேரத்து நிகழ்ச்சிகள். இப்படி இப்படிச் செய்ய வேண்டு மென்று யாரும் சொல்லிக்கொடுத்து ஒத்திகை பார்த்துச் செய்யப்படு பவை அல்ல. ‘உடுக்கை இழந்தவன் கைபோல’ என்று ஒரு வரி இருக்கி றதே அதைப்போலச் செய்யப்படுபவை.

துணிகள் குறைந்ததும் குளிரத் தொடங்கியது. வெறும் மேலில் கூதல்காற்று ஊசியாய்த் தைத்தது. சுடச் சுட வெந்நீரை அள்ளிக் கொட்டிக் கொண்டால் தான் குளிரை விரட்ட முடியும். அடுப்புப் புகையும் ஆவியு மாகப் புகைந்து கொண்டிருந்த வாளியிடம் நின்று தொட்டுப் பார்த்தாள். உடல் தாங்கும் சூடுதான். குனிந்து குவளையை எடுத்து மடமடவென்று அள்ளி ஊற்றிக் கொண்டாள். ஊற்றுவதை நிறுத்தினால் குளிர்கிறது. நிறுத்தாமல் எப்படி இருப்பது? அழுக்குத் தேய்ப்பது. இல்லையா? சோப் போடுவது இல்லையா?

நெஞ்சுக்கும் முழங்காலுக்குமாக அவளை மூடிக் கொண்டிருந்த துண்டைத் தளர்த்திக் கொண்டாள். தன்னுடைய உடல் திரட்சியைத் தானே பார்த்துக்கொண்டாள். ஏனோ அவளுக்குச் சிரிப்பு வந்தது. “இதைப் பார்க்கத்தானா அவர் இப்படித் துடிக்கின்றார்” என்று எண்ணி யிருப்பாளோ!

அவள் எதையோ எண்ணி, எதிலோ லயித்து குளிர், மறந்து நின்ற அந்த வினாடிக்குள் இரவு, பகலாகி நின்றது. இப்படிப் பகலாக்கிய வித்தையைச் செய்தது பாதையில் நின்ற காரின் லைட்.

காரின் முன்சீட்டில் உட்கார்ந்திருந்தவனும் எதையோ எண்ணி, எதிலோ லயித்துக் கிடந்தவன்தான். கிமோனாவுக்கு மேலாகத் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டுப் பார்த்த அம்மாவின் காலை கிமோனா இல்லாமல் தொட்டால் எப்படி இருக்கும் என்ற போதையுடன் கிடந்தவனுக்கு, காருக்கு முன்னால் லைட்டுக்குள் அரையும் குறையுமாகத் தெரிந்த அழகிய உடலைக் கண்டதும் தலை சுற்றியது மனம் சுற்றியது.

“நிறுத்து மச்சான் காரை” என்று கத்தினான். என்னமோ ஏதோ என்று பயந்த டிரைவர் காரை நிறுத்தினான்.

மொக்கத......? மொக்கத உனே? என்று கத்தினான்.

இருட்டுத் தானே என்ற தைரியத்தில் சற்று அஜாக்கிரதையாக இருந்துவிட்டாள் கண்ணம்மா. பாவாடையைச் சரியாக்கிக் கொண் டாலும் கார் நின்று, அந்த இடம் வெளிச்சமாகி விட்டதால் முள்மேல் நின்றவள் போல் தடுமாறினாள்.

டிரைவர் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் முன் சீட்டுக்காரன் குளித்துக்கொண்டிருந்தவளை நோக்கி நடந்தான். பின் சீட்டில் கதவோரத் தில் உட்கார்ந்திருந்த ஆண்டியப்பனை, “ஏய் ஏய் இறங்கு சுருக்குனா” என்று அதட்டிய இன்னொ ருவன், ஆண்டியப்பன் இறங்கிய கையோடு தானும் இறங்கி, லயத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தவனை, “டேய் நில்லு “நில்லு” என்று விரட்டிக்கொண்டு ஓடினான்.

இருளை மேலும் இருளாக்கிக் கொண்டிருந்தது ஈரப்பலா மரத்தின் நிழல்.

வௌவால்கள் ஓலமெழுப்பிக் கொண்டிருந்தன.

மலையெங்கும் தேயிலைச் செடிகள் தான் என்றாலும், மனிதர்கள் வாசஞ் செய்யும் இடங்களில் பலா மரங்களும், வாழை மரங்களும் அடர்ந்து வளர்ந்து குளிர்ச்சி யூட்டிக் கொண்டிருக்கும்.

அதோ பலா மரங்கள் தெரிகின்றன. அங்கே லயம் இருக்குமென்று துணிந்து யூகிக்கும் அளவுக்கு இந்த மரங்களும் வசிக்குமிடங்களும் இணைந்து கொள்கின்றன.

மனிதர்களை நம்பி இந்த மரங்கள் வந்தவைகள் அல்ல. மனிதன் தான் தனக்காக இந்த மரங்களை உண்டாக்கிக் கொள்கின்றான். மொத்தத்தில் மனிதனை நம்ப எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை. மனிதன் தான் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்றையும் நம்பியிருக்கின் றான். இதற்குள் இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியான அந்தகாரம், அதைப் பயங்கரமாக்கும் மரங்களின் அடர்த்தி. வெளவால்களின் நடமாட்டம் தவளைகளின் வரட்டுக் கத்தல். இத்தனைக்கும் மத்தியில் நின்றுகொண்டிருக்கிறது கிளாக்கரய்யாவின் கார்.

காரிலிருந்து இறங்கியவன் காரில் ஏறியதிலிருந்து இப்போது வரை என்ன பேசிக்கொண்டு வந்தான்? மானசீகமாக எத்தனை பெண்களை அம்மணமாக்கிக் கொண்டிருந்தான் என்பதை கிளாக்கரய்யாவின் டிரைவர் தம்பி அறிவான். ஒரு வினாடி வீசி மறைந்த காரின் விளக்கு வெளிச்சத்தில் குளித்துக் கொண்டிருந்த பெண் கவர்ச்சியாகத் தோன்றி மறைந்ததை அவனும் பார்க்கத் தவறவில்லை.

இந்தப் பயலும் தடபுடா என்று இறங்கி திடுதிடு வென்று எங்கே ஓடுகிறான் என்பதையும் உணர்ந்து கொண்டான்.

அவளுடைய லயத்தில் யார் வீட்டுக்குப் போவதென்றாலும், அவளுடைய லயத்திலன்றி மற்ற லயங்களுக்குப் போவ தென்றாலும் அவளைத் தாண்டித்தான் போயாக வேண்டும். ஆகவே ஏன் வம்பு என்று கோடிப்பக்கத்துச் சுவர்மறைவை நோக்கி நடந்துவிட்டாள்.

சுவரையொட்டி வாழை மரங்கள் நிற்பதால் அவள் நன்றாக ஒதுங்கிக் கொண்டு நிற்க முடிந்தது. இருள் அவளை இறுக மூடிக்கொண்டிருந்தது. தான் நிற்பது வெளியே தெரியாது என்ற தைரியத்தில் சற்று சௌகரியமாக நின்று கொண்டிருந்தாள்.

காலடியோசை கேட்டாலும் அவள் அதைச் சட்டை செய்யவில்லை. போகிறவர்கள் போகட்டுமே என்ற நினைவுடன் பாதைக்குத் தன் முதுகைக் காட்டிக்கொண்டு நின்றாள்.

துடிக்கும் ஒரு மனிதமூச்சு தன் முதுகில் சுட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினாள். அவளுடைய முகத்துக்கு முன்னால் இருட்டுக்குள் தெரிந்த அந்த முரட்டு உருவம் அவளை இழுத்து அணைத்துக்கொள்ள முயற்சித்தது.

பயத்தினால் ஒரு வினாடி உறைந்துவிட்டவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, அவனை உதறித்தள்ளியபடி கூச்சலிட்டுக் கத்தினாள்.

அடி வயிற்றிலிருந்து ஆக்ரோஷமாகக் கிளம்பிய ஓலம் இருளுக்குள் பயங்கரமாக ஒலித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டுக்குள் வீறிட்டெழுந்த ஒரு பெண்ணின் கூச்சலும், கம்பும், தடியும், பந்தமும், லாந்தருமாக லயத்தின் இருண்ட பொந்துகளுக்குள் இருந்து ஓடிவந்த கும்பலும், காருக்குள் அமர்ந்திருந்த டிரைவரின் பொட்டில் வேகமாகத் தட்டியது.

இரவு நேரம் லயத்துப் பெண்ணைப் பலவந்தமாக தன் இச்சைக்கு இணங்கச் செய்ய முயற்சிக்கும் ஒரு அன்னியன், பாதையில் நிற்பது அய்யாவின் கார்......

கொதித்துக் கிளம்பும் கூட்டம் றோட்டுக்கிறங்கினால் கார் தூசியாகி விடும். கார் போனாலும் போகட்டும், அய்யாவின் கதி!

நேற்று சம்பளத்து வாசலில் நடந்த கலாட்டாவினாலும், இன்று சாயந்தரம் நடந்துவிட்ட அசம்பாவிதத்தினாலும் பழிவாங்க எண்ணி, காருடன் முரடர்களை அனுப்பி பெண்ணைக் கடத்த முயன்றார் என்று அய்யா மேல் வரப்போகும் பழியை எப்படி மாற்றுவது?

நடந்து கொண்டிருக்கும் பலாத்காரத்திற்கும் அய்யாவுக்கும் சம்பந்தம் கிடையாதுதான். அது தான் உண்மையும் கூட! ஆனால், அய்யாவின் கார் அந்த அகாலவேளையில் ஏன் அங்கு நின்றது என்னும் கேள்விக்கு யார் பதில் சொல்வது? என்ன வென்று சொல்வது?

காரை நிற்பாட்டி இருக்கவே கூடாது.

முள்ளுக்கு மேல் அமர்ந்திருப்பவன் போல் காருக்குள் அமுங்கிக் கிடந்தவனுடைய கருவிழிகள் இருளுக்குள் மின்னின.

இரத்தம் வேகமாக ஓடியது. இருதயம் பலமாக அடித்துக் கொண்டது. பிரச்சினையிலிருந்து விடுபட்டுக் கொள்ளவேண்டும்மென்ற உத்வேகத்தில் முழு உடலும் சுறுசுறுப்புடன் இயங்கியது. மனம் எண்ணியதை மண்டை கிரகிக்கு முன்பதாக உடல் இயங்கத் தட ாகி விட்டது.

திறந்திருந்த பின் கதவை எட்டியிழுத்து அறைந்து கொண்டு சுவிச்சாவியைத் திருகியபடி ஆக்ஸிலேட்டரை அழுத்தினான். இருளைப் பிளந்துகொண்டு விரைந்து மறைந்ததுகார்.

மரத்துடன் மரமாக ஒளிந்துநின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஆண்டியப்பன் கார் கிளம்பிய சத்தம் கேட்டுத் திடுகிட்டான். நிலைமையின் பயங்கரம் இப்போது தான் அவனுக்குப் புரிந்தது. அந்த இடத்தில் தன்னை யாராகிலும் கண்டுவிட்டால், கண்டம் துண்டமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிப் போட்டு விடுவார்கள் என்ற எண்ணம் எழவே, குளிரையும் மீறி உடல் வியர்த்துக் கொட்டியது.

இருளுடன் இருளாக ஒளிந்து, ஒளிந்து வெளியேறியவன் லயத்து வளைவைத் தாண்டியதும் மேடு, பள்ளம் பாராது தேயிலைக்குள் விழுந்தடித்துக்கொண்டு இறங்கி அய்யா வீட்டை நோக்கி ஓடினான்.

"அடடா! இவளைக் கத்தவிட்டுவிட்டோமோ" என்று தன்னை உஷார்படுத்திக்கொண்டவன், இடது கையை அவளுடைய பருத்த மார்புக்கடியில் கோர்த்து வளைத்துப் பிடித்தபடி வலது கையால் அவளுடைய வாயை அமுக்கிப் பொத்தினான்.

அவனுடைய கையை விலக்கிக்கொண்டு அவள் குளறிக் கூச்ச லிட்டாள். ஆட்கள் ஓடிவரத் தொடங்கவே அவளை உதறித் தள்ளி விட்டுத் திரும்பினான். வெளிச்சத்துடன் ஓடி வந்தவர்கள் கூட்டமாக நின்றனர். வெளிச்சத்தில் நிற்க அஞ்சிய கண்ணம்மா மற்றப்பக்கமாக ஓடிவிட்டாள். "தான் மட்டும் தனியாக நிற்கின்றோமா?" என்பதை இப்போது தான் நிதானிக்கத் தொடங்கினான் அவன். "போகாதே, போகாதே" என்று அவனைத் துரத்திக்கொண்டு வந்த மற்றவனும் அவனுக்குத் துணையாக நின்றுகொண்டிருந்தான்.

நடந்தது நடந்துவிட்டது. இனி சமாளித்துத்தான் ஆக வேண்டு மென்பதை உறுதிப்படுத்திக் கொண்டவன், கண் மூடித் திறப்பதற்குள் சாரத்துக்கடியில் கையை விட்டு ஒரு சாண் நீளக்கத்தியை உருவி எடுத்து நீட்டிக் கொண்டான்.

"ஒரு பய கிட்டவராதே....! கொன்னுப் போட்டுருவேன்" என்று கத்தியை ஆட்டிக் காண்பித்தவாறே பாதையை நோக்கி நகரத்தொடங் கினான்.

உரோமம் மண்டிக்கிடந்த அவனுடைய உடலும், கைகளும், கால்களும் அவன் ஒரு சண்டியன் என்பதைக் கூறிக் கொண்டிருந்தன. பருத்துச் சிவந்த அவனுடைய விழிகள் நெற்றியில் துருத்திக்கொண்டி ருந்தன.

அட்டகாசமாய் சிரித்தபடி அவன் நகர்ந்து கொண்டிருந்தான். அவனுடைய் சகாவின் கையில் ஒரு நீண்ட தடி இருந்தது. அவனும் கூட்டத்திற்கு பாய்ச்சல் காட்டிக் கொண்டிருந்தான். எப்படியாவது அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை விட்டு ஓடி விட வேண்டுமென்பதெ அவர்களுடைய குறிக் கோளாக இருந்தது.

அவனுடைய கையிலிருந்த கத்தி லாந்தர் வெளிசத்தில்கூட கூர்மை யாக மின்னியது.

யாராவது ஒருவனைக் குத்திவிடுவதின் மூலம் கலவரத்தை ஏற்படுத் திவிட்டு ஓடிவிடவும் அவன் தயங்க மாட்டான் போல் தெரிந்தது.

"யாரும் அவன் கிட்டே போகாதீங்க.... ரத்தவெறி புடிச்சு பயலாகத் தெரியுது.... அவனை ஒரு சைசா அமத்தணும்...."

கூட்டத்தை உஷார்படுத்தியவாறு முன்னுக்கு வந்தான் வீரமுத்து, அவன் கையில் கறுப்புக் கம்பு இருந்தது. இப்போது தான் சில நாட்களாக அவன் 'சிலம்பம்' பழகுகிறான். தனக்குத் தெரிந்த அளவிற்கு விரல் களில் சிலம்பக் கம்பை விளையாட விட்டபடி அவனை நோக்கி முன்னேறினான் வீரமுத்து.

"கண்ணுச்சாமி எங்கே? எங்கே கண்ணுச்சாமி" என்ற குரல்கள் இருட்டில் கண்ணுச்சாமியைத்தேடின.

கண்ணம்மாவின் கூச்சல் கேட்டதும், முதல் ஆளாக ஓடிவந்த ஆறுமுகத்தை இழுத்துக் கொண்டுபோய் வீட்டில் போட்டு பூட்டிவிட்டு, "நீ பேசாம இரு. நான் பார்த்துக்கிறேன்" என்று அவனுக்குச் சமாதானம் கூறிவிட்டு, கம்பும் கையுமாக வெளியே வந்தான் கண்ணுச்சாமி. இருளைக் கிழித்துக் கொண்டு ஓடிவந்தவன், கும்பலைக் கிழித்துக்கொண்டு முன்னால் குதித்தான்.

"வீரா நீ அவனைக்கவனி, இவனை எங்கிட்ட உடு..." என்று வீரமுத் துவை மற்றவனிடம் தள்ளினான். மற்றவனின் கம்பும், வீரமுத்துவின் கம்பும் மோதி அதிர்ந்தன.

"எங்களுக்குள்ளாறவெ வந்து எங்கப் பொண்ணையே கையைப் புடிச்சு இழுத்துப்புட்டு எங்களையே பயங்காட்டுறியோ? ஏண்டா டேய்! ஒதை வாங்காம இருக்கணு மின்னா மறுவாதியாக கத்தியை வீசிறு."

"கத்தியை வீசணுமா...... இந்தா பாத்துக்கோ" என்று கண்ணுச் சாமியின் கழுத்துக்குக் குறிப்பார்த்தான் அவன்.

கத்தியை எறிந்தான் என்றால் கண்ணுச்சாமி தீர்ந்தான். சுறுசுறுப் படைந்த கண்ணுச்சாமி கொடியில் தொங்கிக் கொண்டிருந்த ஈரவேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியை இழுத்து அவன் முகத்தில் வீசினான். நனைந்திருந்த துணி அவனுடைய முகத்தில் ஒட்டிக் கொண்டது. மின்னல் வெட்டுப்போல அவனுடைய வலது கையில் பாய்ந்தது கண்ணுச்சாமியின் சிலம்புக் கம்பு.

"தெய்யனே" என்ற கூப்பாடுடன் கண்ணுச்சாமியின் காலடியில் வந்து விழுந்தது கத்தி.

எகிறிவந்து விழுந்த கத்தியை காலால் மிதித்துக் கொண்டான் கண்ணுச்சாமி.

அடி விழுந்த கை விண்ணென்று கொதித்துக் கொண்டிருந்தாலும் ஆக்ரோஷத்துடன் பேய் போல் நின்றான் மற்றவன். அவனுடைய போதை ஒரே அடியில் ஓடி விட்டிருந்தது.

கறுத்துப் பருத்திருந்த அவனுடைய உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. கன்னத்துச் சதைகள் இறுகி நிமிர்ந்தன. பற்களைக் கடித்துக் கொண்டான்.

"தெமல வேசிக்கப்புத்தாட்ட தன்னனே மம கவுத கியலா" என்று கத்தியபடி மிகவும் முரட்டுத்தனமாக கண்ணுச்சாமியை நோக்கிப் பாய்ந்தான்.

கத்தியை நழுவவிட்ட ஆத்திரத்தில் அவன் தன் மேல் பாய்வான் என்பதை கண்ணுச்சாமி யூகித்துக் கொண்டான். யாரும் தன்னை நெருங்கிவிடாதிருக்க கம்பைப் பலமாகச் சுழற்றிக்கொண்டிருந்தான்.

'க்றும், க்றும்' என்று காற்றைக் கிழித்துக்கொண்டிருந்தது கம்பு. காற்று தாக்கப்படும் ஓசையைத் தவிர்த்து இடம் பயங்கர அமைதிக்குள் ஆழ்ந்திருந்தது.

சுழலும் கம்பைத் தவாளித்துக்கொண்டு அவன் மேல் பாய்ந்து அவனைத் தன் முரட்டுக்கரங்களால் கட்டி போடும் சாகசத்தில் லயித்திருந் தான் மற்றவன்! கண்ணுச்சாமியின் கம்பு அவனைக் கம்பிச் சன்னலுக்குள் வைத்துக்கொண்டிருந்தது. அத்தனை சுழற்சி!

இடம் கிடைக்காமல், ஏமாந்து கொண்டிருந்தவன் குருட்டுத்தன மாகப் பாய்ந்தான்.

'மடார், மடார், மடார்' என்று கம்பு விளாசிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடவும் முடியாமல், ஒதுங்கவும் முடியாமல் மாட்டிக் கொண்டவன், மூச்சுத்திணறிப்போய் குப்புறவிழுந்தான்.

வீரமுத்துவுடன் விளையாடிக்கொண்டிருந்த மற்றவன் பயந்து போய் கத்திவிட்டான். கம்பு எங்கோ படாத இடத்தில் பட்டு அவன் செத்து விழுந்துவிட்டாதாகவே அவன் எண்ணி அலறினான். கூட்டத்தில் இருந்தவர்களும் அப்படியே தான் எண்ணினர். அவனும் அப்படிக் கிடந்தான் பிணம்போல்.

"டேய் ராமா, இங்கே ஓடியா! இந்த றாசுக்கோலைக் கெட்டியாப் புடிச்சிக்கோ, நீ ஓடிப்போயி ஒரு கயிறு எடுத்துக்கிட்டுவா."

தன்னுடன் கம்படி பழகிக்கொண்டிருந்தவனை ஈரப்பலா மரத் துடன் சேர்த்துக் கட்டிப்போட்டான் வீரமுத்து.

கண்ணுச்சாமி கம்பை வீசிட்டு விழுந்து கிடந்தவனைப் புரட்டிப் பார்த்தான். அவனுடைய மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகிக்கிடந்தது. மூச்சு சீராக வந்துகொண்டிருந்தது.

"ஒன்னும் பயமில்லே, சண்டாளப்பாவி அநியாயமா சாகப் பாக்கிறான்" என்று முனகியபடி ஒரு செம்பில் தண்ணீர் வரவழைத்து அவனுடைய முகத்தில் ஜில்லென்று இருக்கும் பச்சைத் தண்ணீரை அடித்தான். துணியை நனைத்துப் பிழிந்து முகம், கழுத்து, மார்பு இவை களைத் துடைத்தான்.

அடிபட்டுக் கிடந்தவன் மெதுவாக அசைவதற்கும் பாதையில் பொலிஸ் ஜீப் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

மூன்று காக்கிச் சட்டைகளும், இரண்டு சாரங்களும் இறங்கி வந்தன.

ஒருவன் மரத்தில் கட்டப்பட்டுக் கிடக்கின்றான். மற்றவன் முகத்தில் இரத்தப் பிசுக்குடன் மயக்கம் போட்டுக் கிடக்கின்றான்.

இந்தக் காட்சியைக் கண்டதும் பொலிஸ்காரர்களுக்கு இரத்தம் சூடேறியது.

இன்றைக்கோ, நாளைக்கோ உதைத்து ஊரைவிட்டுத் துரத்தப் போகின்றோம். இந்தப் பயல்களுக்கு இத்தனை திமிரா? இரண்டு சிங்கள வர்களை அடித்துப் போட்டு வைத்துக் கொண்டிருக்கிறார்களே!

இப்படி எண்ணம் ஓடிற்று அவர்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் குறைசொல்லிப் பயனில்லை. நம்மால், நமது பரம்பரையால், நமது தலைவர்களால் உருவாக்கி விடப்பட்ட ஒரு உறுதியான அபிப்பராயம் இது.

சம்பவம் நடந்த இடத்திற்கு வெளிச்சம் வீசும் விதத்தில் ஜீப்பைத் திருப்பி நிறுத்தச் சொன்னார்கள்.

ஜீப்பின் வெளிச்சத்தில் ஈரப்பலாமரத்தில் கட்டிக் கிடந்தவன் பரிதாபமாக விழித்துக்கொண்டிருந்தான்.

அவனிடம் வந்த ஒரு பொலிஸ்காரர் அவனுக்கு அருகே நின்று கொண்டிருந்த வீரமுத்துவை வினோதமாக முறைத்துப் பார்த்தார். ஒரு விநாடி அவருடைய பார்வையை நேருக்கு நேர் சந்தித்த வீரமுத்து பார்வையைத் திருப்பிக்கொண்டான்.

"ஏய்.... அந்த ஆளை அவுத்துவிடு..." இது பொலிஸ் உத்தரவு.

"அவுத்துவிட்டதும் ஓடீட்டானா...?"

இது வீரமுத்துவின் ஆட்சேபனை.

"நான் சொல்கிறேன் நீ அவுத்துவி....டு"

"நீங்க யாருன்னு நாங்க தெரிஞ்சிக்கிடலாங்களா?" மிகவும் பணிவுடன் கேட்டபடி நின்று கொண்டிருந்தான் ஆறுமுகம்.

பொலிஸ் வந்து இறங்கியதும் கண்ணம்மா கதவைத் திறந்துவிட்டு அவனை அனுப்பி வைத்தாள்.

"பாத்தா தெரியலியா பொலிசுன்னு....?"

"தெரியுதுதான்! ஏன் வந்திருக்கீங்கன்னு நாங்க தெரிஞ்சுக் கப்படாதுங்களா.....?"

"நீ கேள்வி கேட்கப்புடாது., நாங்கதான் கேக்கணும்.."

"நீங்க கேள்வி கேட்டதா தெரியலீங்களே..... வந்ததுலேருந்து அவனை அவுத்துவிடு, அவனை அவுத்து விடுன்னு தான் சொல்லிக்கிட்டு இருக்கீங்களே தவிர ஏதும் கேக்கக் காணுமே அதுனாலதான் நாங்க சந்தேகப்படுகிறாம். நீங்க உண்மையிலேயே பொலிசா? இல்லாட்டி இவனுகளை அழைச்சிக்கிட்டுப் போகவந்த கூட்டமான்னு".

"வாட் நான்சென்ஸ், ஜீப்பெல்லாம் நிக்குதே தெரியலியா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜீப்புல வந்துவிட்டாப் போதுமாங்க. எழுபத்தொன்னு ஏப்ரல்லே உட்டாணுகளே அடி. அவனுக கூடத்தான் ஜீப்புல வந்தானுக. நீங்க பொலிசு தாங்கிறதை மொதல்ல உறுதிப்படுத்திட்டு அப்புறம் ஏதும் செய்ங்க."

"நாங்க பொலிஸ்தான்னு உங்கிட்ட புரூப் பண்ணிக் கிட்டிருக்க ஒன்னும் அவசியமில்லே."

"அப்போ நீங்க சொல்லுறதுக்கு நாங்க கட்டுப் படணும்கிறதும் அவசியமில்லே...."

பொலிஸ்காரர்களின் மீசை துடித்தது. கையிலிருந்த குண்டாந்தடி. "எவன் மண்டையைப் பிளப்பேன்" என்று துடித்துக் கொண்டு கிடந்தது.

"நாங்க யாருன்னு நீயெல்லாம் இன்னும் புரிஞ்சிக்கிடலே" என்று உறுமினார்கள்.

"அது தான் அப்பவே சொன்னேனெ நீங்கல்லாம் யாருன்னு எங்களுக்குப் புரியல்லேன்னு. டேய் கண்ணுச்சாமி இந்தப் பயலைத் தூக்கு, வீரமுத்து அவளை அவுத்துக்கோ கண்டாக்கய்யா வீட்டுக்குப் போய் பாரம் குடுத்துருவோம்.."

"நிப்பாட்டு, நிப்பாட்டு, கண்டாக்கும், தொரையும் ஒனக்குத்தான் பெரிசு, எங்களுக்கில்லே! நீங்க ஏன் இவங்களை அடிச்சது?"

"எங்க லயத்துக்குள்ளே வந்து குளிச்சிக்கிட்டிருந்த பொம்புளைப் பிள்ளைக்கிட்ட வாலாட்டப்பாத்தா ஒதைக்காம வுடுவோமா?"

பொலிஸ்காரரிடம் முதல்முறையாகப் பேசினான் கண்ணுச்சாமி.

"எங்க தோட்டத்துல இருக்கிற கண்டாக்கும், தொரையும் எங்களுக் குப் பெரிசுதான்! நாங்க இந்த ஆளுரெண்டையும் அங்கே குடுத்தப்புறம் நீங்க என்ன வேணாலும் செஞ்சுக்கிடலாம்."

"எங்க லயம்கிறான் அவன். எங்க தோட்டம்கிறே நீ. இன்னும் கொஞ்ச நேரம் போனா எங்க நாடுன்னு கொடச் சொல்லுவே, ஓங்க ஆயிபுருஷனுட்டா தோட்டம்?."

"வேணாத கதை பேசாதையா" என்று கோபத்துடன் கூறிய கண்ணுச் சாமி குனிந்து, விழுந்துகிடந்தவனைத் தூக்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைத் தூக்க விடாது தடுப்பதற்காக குண்டாந் தடியை நீட்டி யது பொலிஸ்.

கண்ணுச்சாமி தனது கம்பால் பொலிசின் கம்பை விலக்கிக் கொண் டதும் அவருக்கு ஜிவ்வென்று கோபம் ஏறியது. அவனுடைய முழங் காலை நோக்கிப் பளீரென்று குண்டாந் தடியை விசிறினார்.

கண்ணுச்சாமியின் கம்பு இடம்மாறியது. 'கணீர்' என்று அவனு டைய கம்பில்மோதி அதிர்ந்தது பொலிசின் தடி.

குண்டாந்தடியால் அவனை மொத்த முடியாமல் போன ஏமாற்றத் தால் கொதித்த பொலிஸ் மேலும் நாலைந்து தடவை கம்பை அவன் மேல் வீசியும் கம்பு ஒரு தடவை கூட அவன் மேல் படவில்லை.

பொலிஸ் அடிக்க, அவன் தடுக்க, அது விஷயத்தை திசைதிருப்ப விட்டுவிட்டது.

இடம் மறுபடியும் குழம்பிளுக்கொண்டது. கூட்டத்தில் இருந்து பறந்த கல்லொன்று ஜீப்பின் லைட்டை நொறுக்கிறது.

மற்ற லைட்டை அணைத்துக் கொண்டான் சாரதி. இடம் இருள டைந்தது.

பொலிஸ்காரர்கள் சிரமத்துடன் சமாளிக்க வேண்டியதாயிருந்தது. கண்ணுச்சாமி கோபாவேசத்துடன் தாக்கிக் கொண்டிருந்தான். திணறிப் போன பொலிஸ்காரர் நன்றாக வாங்கிக்கட்டினார்.

இன்னும் சிறிது நேரத்தில் கண்ணுச்சாமி பொலிஸ்காரரை விளாசி வீழ்த்திடுவான் என்பதைத் தூரநின்ற மற்ற பொலிஸ்காரர் அவதானித் தார்.

இடுப்பிலிருந்த துப்பாக்கியை எடுத்தார்.

வெடிச் சத்தத்தைத் தொடர்ந்து. 'அம்மா செத்தேன்' என்ற அலற லுடன் மண்ணில் சாய்ந்தான் கண்ணுச்சாமி.

கண்ணுச்சாமி துடித்துக் கத்தியபடி மண்ணில் விழுந்தான். எங்கி ருந்தோ பெருகிய இரத்தம் தரையை ஈரமாக்கிக் கொண்டிருந்தது.

கிழவர்களும், சிறுவர்களும், பெண்களும் போட்ட கூச்சல் இடத் தைப் பயங்கரமாக்கிக் கொண்டிருந்தது. ஆறுமுகம் சற்றுத் திகைத்துத் தான் போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹோ' வென்று வீசிய காற்று வாழைக் கூட்டங்களில் குடுமியைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தது.

கண்ணுச்சாமி தரையில் கிடந்து துடிப்பதைப் பார்த்த வீரமுத்து வீராவேசம் கொண்டான்.

ஈரப் பலாமரத்தில் கட்டிக் கிடந்தவனை அவிழ்த்து விடும்படி பொலிஸ் கூறியதும் முதலாவதாக ஆட்சேபனை எழுப் பயவனே வீர முத்துதான். காக்கிச் சட்டைக்காரர்களைக் கண்டதும் தொடை நடுங் கசும் பேர் வழியல்ல அவன். ஆகவே கோபாவேசத்துடன் பொலிஸ் காரர்கள் மேல் பாய்ந்தான்.

காட்டுப் புலியை சுட்டு வீழ்த்திய வேட்டைக்காரன். போட்டோ கிறாப்பருக்குப் போஸ் கொடுப்பதுபோல் கண்ணுச்சாமிமேல் காலைத் தூக்கிவைக்கப்போன பொலிஸ்காரரை நோக்கிக் கம்புடன் பாய்ந்த வீரமுத்துவை இழுத்துக் தள்ளினான் ஆறுமுகம்.

"பொலிஸ்காரர்களுடன் நாம் சண்டைக்குப்போவது தப்புவீரா அவர்கள் செய்வது அநியாயமாக இருந்தாலும் நாம் அவர்களை அடிக்கப் போனோமென்று ப்ரூப் ஆயிட்டா நமக்குக் கேசே இல்லாமப் போகும் என்று அவனைச் சமாதானப்படுத்தியவாறு கண்ணுச்சாமியிடம் குனிந்து அவனுக்கு என்ன ஆகியிருக்கிறது என்று பார்க்கப் போனான்.

"ஹூம் வெலகிப் போயிறு.... யாராவது ஏதாது செய்யப் பாத்தீங் கன்னா நாயைச் சுடுறமாதிரி சுட்டுப் போட்டுறுவோம். இதோ இவன் கெதிதான் கிடைக்கும்" என்று துப்பாக்கியைத் தூக்கி ஆட்டிக் காண்பித் தான் ஒரு கான்ஸ்டபள்.

பொறுமைசாலியான ஆறுமுகத்திற்கு இப்போது கோபம் பொங்கிக் கிளம்பியது. இருந்தும் அடக்கிக் கொண்டான்.

அடிபட்டு விழுந்து கிடந்தவனையும் பலாமரத்தில் கட்டிக் கிடந்த வனையும் ஜீப்பில் ஏற்றினார்கள். கண்ணுச்சாமியை இழுத்து ஜீப்பிற்குள் தள்ளிக்கொண்டார்கள். ஜீப் கிளம்பிப் போய்விட்டது.

டோர்ச் லைட்டும், பந்தமும், லந்தருமாக ஒரு கூட்டம் கண்டக்டரய்யா பங்களாவை நோக்கி நடந்தது.

ஆண்டியப்பன் கூறியவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த கிளாக் கரய்யா பதறிப்போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் எதையோ நினைத்து இவர்களைக் கூட்டிவரப் போய் ஏதேதோ நடந்துகொண்டிருக்கிறதே! என்னுடைய பெயரும் இழுபடுமோ, அப்படியே இழுபட்டாலும் எப்படி இதைச் சமாளிக்கலாமென்று மனதிற்குள்ளாகப் புழுங்கிக் கொண்டிருந்தார்.

வெளிச்சங்களுடன் ஓடி வந்தவர்கள் தனது கார் பாதையில் நிற்பதைக் கண்டுகொள்ளுமுன்னர் தம்பி காரை ஓட்டிக் கொண்டு போய் விட்ட செய்தி அவருக்குக் கொஞ்சம் தெம்பாக இருந்தது. "அவர்கள் யாரோ எனக்குத் தெரியாது ?" என்று கூறிவிடலாம் அல்லவா?

ஆறுமுகம் கூறியவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த கண்டக்டரய்யா கிளாக்கரய்யாவுக்கு ஆளனுப்பினார்.

"அவரு எதுக்குங்க.... நமக்கு விரோதமா ஏதாச்சும் செய்வாரே தவிர, உதவி செய்யமாட்டாருங்களே..." என்று அதிருப்தியுடன் முனகிக் கொண்டான் ஆறுமுகம்.

"அப்படி இல்லை ஆறுமுகம். அவரு கொஞ்சம் வெபரம் தெரிஞ்சவரு.... பொலிஸ் அது இதுன்னா அவருக்கு நெறைய அனுபவம் இருக்கு.... அதனால் அவருகிட்டயும் சொல்லி ஒரு யோசனை கேட்டுக்கிருவோம். அதோட தொரைகிட்ட இப்பவே போய்ச் சொல்லிறனும். கிளாக்கரய்யாவும் கூட இருந்தா தொரையைக் கொஞ்சம் சுலபமா சரிக்கட்டிக்கிறலாம்....."

ஆறுமுகத்தைச் சமாதானப்படுத்தினார் அய்யா.

"நீங்க நெனைக்கிறபடி செய்ங்க...... ஆனா, எனக் கென்னமோ அவருபேரைச் சொன்னாலே வெஷமாட்டம் இருக்கு. இந்த கலாட்டாவுக்குக் கூட அவருதான் காரண மோ, என்னமோன்னு நெனைக்கிறேன்.

"சேச்சே! அப்படியேல்லாம் சொல்லப்படாது நீயும், கண்ணுச்சாமியும் ஆபீசுல தகராறு பண்ணுறீங்கங்கிறதுக்காக...."

"பண்ணுனோம்கிறதுக்காகத்தானே பிரேதம் போற வழியில் காரை நிறுத்திக்கிட்டு நின்னாரு. பொணம் போற பாதைய எவனாவது மறிப்பானா?"

கண்டக்டரய்யா பேச்சை முடிப்பதற்குள்ளாகத் தொடர்ந்தான் ஆறுமுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணம்மாகிட்ட தகராறு பண்ணுன, தடியன் கிளாக்கரய்யா வுவூட்டு கார்லெருந்து தான் எறங்கி இருக்கணும். எனக்கு சத்தத்துல சொல்ல முடியுங்க வந்த கார் யாருட்டுன்னு. இவரே இவனுகளை அனுப்பி கலாட்டாவை ஏற்படுத்திட்டு, பொலிச்சுக்கும் சொல்லியனுப் பியிருப்பாருன்னு தான் என்னால் யூகிக்க முடியிது."

"நான் போடுற கணக்கு எப்பவுமே தப்பாதுங்க..... கணபதி கார் கொண்டாந்த புதுசில யாரோ காரைப் பெரட்டி விடப் பார்த்ததாகச் சொல்லிச்சு, நான் உடனே சொன்னேன் இத மேப்படியார் வேலைதான்று. சொன்னது போல எம்பிச்சுக் காட்டுனேங்க...."

"இப்பவும் சொல்றேன், இவரு காருல வந்துதான் அவனுக எறங்குனானுங்கிறதை நான் ருசுவாக்கிக்காட்ட முடியும். இப்ப அய்யா வருவார்தானே. வந்ததும் எனக்குக் கார் வேணும்னு சொல்றேன். உடனே பொலிஸ் ஸ்டேசனுக்குப் போகனுங்க அய்யானு என்ன சொன்றாரு பார்ப்போம், அந்தி நேரம் வந்த கார் இங்கே தானே இருக்கணும்.... கார் இல்லேன்னா அதுக்கு என்ன அர்த்தம்.....?"

ஆறுமுகம் சொல்வதும் நிஜமாகவும் இருக்கலாம் என்று எண்ணி னார் கண்டக்டரய்யா.

யாரோ கதவைத் தட்டுவது கேட்டு திடுக்கிட்ட கிளாக்கரய்யா, சற்று தாமதித்தே கதவைத் திறந்தார்.

கண்டக்டரய்யா கையுடன் கூட்டிவரச் சொன்னதாகக் கூறிய வனிடம், 'ஏன்?' என்று விஷயங்களைக் கேட்டு அறிந்துகொண்டார்.

"என்ன எளவப்பா இது? மனுஷனைத் தூங்கவிட மாட்டீங்க போலிருக்கே" என்று சலித்துக்கொண்டாலும், உள்ளூர ஆசையும் இருந்தது, என்ன நடந்தது என்பதை விபரமாக தெரிந்துகொள்ள.

விஷயங்கள் தனக்குச் சாதகமாகவே நடந்திருப்பது திருப்தியாக இருந்தது.

"தனது காரை உதைத்துத் தள்ளிய கண்ணுச்சாமியை - கூலிக்காரர் களுடைய சம்பளத்தை நான் கொள்ளையடிப்பதாகக் கூறிய கண்ணுச் சாமியை, செம்மையாகப் புடைப்பதற்காக நான் தடியர்களைத் தயார் செய்து கொண்டிருக்க, பொலிஸே அவனைப் புடைத்திருக்கிறதே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூரச் சிரித்தபடி உல்லன் ஸ்வெட்டரை இழுத்து மாட்டிக் கொண்டு, காலில் செருப்பும், கையில் தடியுமாக கண்டக்டரய்யா வீட்டை நோக்கி நடந்தார்.

அய்யாமார்கள் இருவரும், சிறிது நேரம் ஏதோ பேசிக் கொண்டார்கள், பிறகு கிளம்பினார்கள்.

கிளாக்கரய்யாவும், கண்டக்டரய்யாவும் முன் நடக்க ஆறுமுகத்தைத் தொடர்ந்து ஒரு கூட்டமும் பங்களாவை நோக்கிப் படியேறியது.

பங்களா காவல்காரன் உஷாரானான். நாய்கள் தலை வெடிக்கும் வண்ணம் குரைத்துத் தொலைத்தன.

"நான்தான் டிங்கிரி" என்று கண்டக்டரய்யாவும், 'நாங்க தான்' என்ற கிளாக்கரய்யாவும் குரல்வழி அறிமுகப்படுத்திக் கொண்டதும், 'என்னங்கையா' என்றவாறு ஓடிவந்தான் டிங்கிரி பண்டா.

காவல்காரன் படியேறி ஓடிப்போன சிறிது நேரத்தில் துரை வெளியே வந்தார்.

மூவருமாக சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். ஆறுமுகம் ஆட்கள் கூட்டமும் அனல்மேல் நின்று கொண்டிருந்தது.

துரை டெலிபோனிடம் சென்று நம்பர்களை நிதானமாகச் சுற்றினார். பத்து நிமிடம்போல பேசினார். திரும்ப வந்தார்.

சிகரட் ஒன்றை உருவி இழுத்து பற்றவைத்துக் கொண்டார். நீளமாகப் புகையை ஊதியவாறு ஏதோ பலமாக யோசித்தார்.

பிறகு பேசத்தொடங்கினார்:

"லயத்து ஆட்கள் பொலிஸை அடிச்சிருக்கு. அது பெரிய குத்தம். நான் ஒ.ஐ.ஸி. கூடத்தான் இப்ப பேசினது. ஜீப்புக்கும் கல்லடிச்சிருக்கு. ஜீப் கண்ணாடி எல்லாம் உடைஞ்சிருக்குதாம். அதெல்லாம் பெரிய குத்தம்.

பேசிக் கொண்டே வந்தவர் நாலைந்து தடவை சிகரட்டை இழுத்து ஊதினார். குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டு நிதானமாகக் கூறினார்.

"பொலிஸ் வாக்குமூலம் எடுக்க முந்தியே கண்ணுச்சாமி செத்துப் போச்சாம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பேசிக்கொண்டே இருந்தார். ஆறுமுகம் மயங்கிப்போய் உட்கார்ந்துவிட்டான். அதற்கு மேல் துரை கூறியது எதுவும் அவனுடைய மண்டைக்குள் ஏறவில்லை.

கண்ணுச்சாமி போய்விட்டான் என்ற செய்தியை ஆறுமுகத்தால் இன்னும் நம்ப முடியவில்லை.

"பொலிஸ்காரர்கள் கண்ணுச்சாமியைச் சுட்டுக் கொன்று விட்டார்கள்".

ஜவ் அறுந்துவிடும் அளவுக்குப் பெரிதாய்க் குரல் எடுத்து அவன் காதுக்குள் யாரோ கத்தினார்கள். காதுக்குள் விஷப் புகைபோல் நுழைந்த விஷயம் மண்டைக்குள் கிர் கிர் ரென்று பரவியது. முகம் ஜிவ்வென்று சிவந்து கொண்டிருந்தது. கண், காது, வாய், மூக்கு என்று விஷப் புகை யின் வேகம் நெடியாய் ஏறியது.

ஒரு அந்தர் பாரத்தைத் தூக்கித் தலையில் வைத்ததுபோல் கழுத்து நொடித்தது.

தலையா இத்தனை பாரமாய் இருக்கிறது? கழுத்துக்குத் தாங்க முடியாத சுமையாய்க் கனக்கிறதே!

தலைக்குள் புகுந்து விஷத்தின் கனம் தலையை அப்படி அழுத்து கிறது. கழுத்து ஒடிந்து விட்டாலும் விடலாம்!

அவனால் தலையின் கனத்தைக் குறைத்துக் கொள்ள முடிய வில்லை. விழி பிதுங்கியது. நெற்றிப் பொட்டுக்கள் விண்விண்ணென்று புடைத்தன.

"கண்ணுச்சாமி செத்து விட்டானா? யார் சொன்னது?.... அரைமணி நேரத்திற்கு முன்புவரை என்னுடன் இருந்தானே. ராமனது லக்ஷ் மணனைப்போல்..... அவனை யார் கொன்று விட்டார்கள்?..."

அண்ணன் ஆறுமுகத்தின் மனைவியாகப் போகிறவளை அந்நியன் ஒருவன் அடாவடித்தனமாய்த் தொட்டிழுக்க முனைந்தான் என்றால் தம்பி பொறுப்பானா? லசஷ்மணனைப் போல் அம்பை எடுக்கவில்லை கம்பை எடுத்தான்.

அநியாயம் செய்தவர்களை, அக்கிரமக்காரர்களை அதட்டிக் கேட் டதற்காக சட்டம் அவனைச் சுட்டுக் கொன்று இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தானா இன்றைய ஜனநாயகம்? ஜனநாயகம் பேசுவோரின் பகவத் கீதை!

வழிமறித்து நின்ற அய்யாவின் காரைத் தனியொருவனாய் நின்று புரட்டித் தள்ளிய அந்த வீமன் எங்கே? அந்தக் கால்களின் ஆகிருதி எங்கே? எங்கே?

கத்தியைக் காட்டியவர்களின் ஜம்பத்தைக் கம்பைக் காட்டி அடக்கிய அந்தக் கைகள் எங்கே?

கண்ணா நீ போயிட்டியாடா.... உன்னை மட்டுமே நம்ப எத்தனையோ விஷயங்களில் தீவிரமாக ஈடுபட்டேனே....

"ஒங்க ஆயா செத்துப் போச்சாம்" என்று கிளாக்கரய்யா நேற்றுக் கூறியபோது கூட இப்படிக் கலங்கவில்லை ஆறுமுகம். இப்போது அப்படியே பிரமை தட்டிப்போய் உட்கார்ந்திருக்கின்றான்.

இரவு விடிவதாக இல்லை. நனைந்துவிட்ட சாக்குபோல் மதமத வென்று தொங்கிக் கொண்டிருந்தது.

இரவோடிரவாகத் தோட்டத்திலிருக்கும் அத்தனை சங்கத் தலைவர் களையும் பார்த்துப் பேசிவிட்டான் ஆறுமுகம்.

"அவன் நம்ம சங்கத்து ஆள் இல்லையே......" என்று கூறி நழுவிக் கொள்ளப் பார்த்தனர் சிலர். ஆறுமுகம் விடவில்லை.

"இது அங்கத்துவப் பரச்சினையல்ல ஒரு மனித உயிரைப் பற்றிய விவகாரம். அதுவும், நியாயத்துக்குப் போராடிய ஒரு ஏழை மகனின் விவகாரம். கொஞ்சம் கூட ஈவிரக்கம் இல்லாமல் அவன் எங்க சங்க மில்லை எங்க சங்கமில்லைன்னு சொல்லிக்கிட்டு இருக்காதீங்க. நாளைக்கு உங்களையும் சுட்டுக் கொல்லுவானுக. அப்ப நாங்களும் அப்படியே சொல்லுவோம்".

"நீங்க ரொம்பவும் உணர்ச்சிவசப்பட்டிருக்கீங்க தோழரே... சரி சரி போங்க காலையில் பாத்துக்கிடுவோம்"

"ஆமாங்க தலைவரே நான் உணர்ச்சி வசமாகத்தான் இருக்கேன். எங்க ஆயியைப் பொதைச்சி இன்னும் நாலு மணி நேரம் ஆகவே.... அதுக்குள்ளாற இப்படியெல்லாம் நடந் திருக்கு.... உணர்ச்சி வசப் படாமல் யாரும் இருக்க மாட்டான்..... காலையிலேயும் அவன் எங்க சங்கத்து ஆள் இல்லேன்னு நீங்க பேசனீங்கன்னா ஒங்க சங்கத்துல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தன் இல்லாமல் கழட்டிக் காண்பிக்கிறேன்...... அதோட மொத வேலையா உங்க ஜில்லா ஆபீசிலதான் நிப்பேன்...."

நாலைந்து தலைவர்களையும் பார்த்துப்பேசி விஷயத்தை விளக்கி வாதாடி, "விடியட்டும் பார்ப்போம்" என்று அவர்கள் கூறிய பின்பே லயத்தை அடைந்தான் ஆறுமுகம்.

"விடிந்ததும் முதல் வேலையாக ஆண்டியப்பனைப் பிடிக்க வேண்டும்" என்று அடிக்கடி நினைத்துக் கொண்டான்.

இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கிறதென்பது இன்னும் தோட்டத்திலுள்ள பாதிப்பேருக்குத் தெரியாது.

விஷயம் விளங்க விடிய வேண்டும். ஆறுமுகமும் அதற்காகவே தான் பார்த்துக் கொண்டிருக்கின்றான். ஆனால், விடியக் காணோம், இரவு நீண்டு கொண்டே இருக்கிறது.

பேயின் கைகளுக்கடியில் இருப்பதுபோல் உலகம் பயந்து போயிருக்கும் அந்த அகால வேளையில் ஆறுமுகம், வீரமுத்து ஆகியோருடன் ஒரு கூட்டமும் கொட்டு கொட்டென்று விழித்துக் கொண்டிருந்தது, விடிவுக்காகக் காத்திருக்கிறது இக்கூட்டம்.

சோர்ந்து போயிருந்த ஆறுமுகம் காதை விடைத்துக் கொண்டான். செவிப்புலனைத் தீட்சண்யப் படுத்திக்கொண்டு வீரமுத்துவுக்குக் கையால் ஜாடை காட்டினான்.

இரவின் அமைதியில் துல்லியமாகக் கேட்டது ஒரு கார் சத்தம்.

"பெரிய றோட்டுல போகுதா அல்லது நம்ம றோட்டுல வருதா....?"

தன்னுடைய சந்தேகத்தை பலமாக முனகியபடி வெளியே வந்து, மரங்கள் மறைக்காத பொட்டல் வழியாக எட்டிப் பார்த்த வீரமுத்து

"நம்ம றோட்டுலதான் வருது" என்று கூறினான்.

கூட்டம் றோட்டுக்கிறங்கியது.

நடு றோட்டில் கூட்டமாக ஜனங்கள் நிற்கவே காரின் வேகத்தைக் குறைத்துக் கொண்டு எட்டிப் பார்த்தான் டிரைவர்.

காரை நிறுத்தும்படி கூட்டம் சைகை காட்டவே காரை நிறுத் தினான். "கிளாக்கரய்யா வூட்டுக்கார்..... கிளாக்கரய்யா வூட்டுக்கார். கிளாக்கரய்யா வூட்டுக்கார்....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் முணுமுணுத்துக் கொண்டது.

"என்ன அண்ணே.... என்ன கூட்டமாக நிக்கிறீங்க....." டிரைவர் தம்பி ஆறுமுகத்திடம் கேட்டான்.

"ஒத்தையா நின்னாத்தான் அரைச்சுக்கிட்டுப் போயிருவீங்களே..... அது தான் கூட்டமா நிக்கிறோம்" என்று பேசிய வீரமுத்துவை கையமர்த்திவிட்டு ஆறுமுகம் கேட்டான்:

"என்ன இந்த நேரத்தில ?"

"ஒரு அயர் போயிருந்தேன். அல்தமுலைக்கி, திரும்ப நேரம் போச்சு அது தான் டவுன்லேயே தங்கிட்டு இப்பவர்ரது...."

"அடேயப்பா அல்தமொலைக்கா.... யாரு போனது ?"

"நம்ம தோட்டத்து ஆள் இல்லே கடைக்காரங்க நாலைஞ்சு பேரு..."

"தோட்டத்துலேருந்து எத்தனை மணிபோல போயிருப்பீங்க"

"சரியாச் சொல்லத் தெரியாது...... இருட்டுனப்பறம் தான்....அய்யா வரவேதான் நேரமாச்சு...."

"போகையிலே நம்ம லயத்துக்கிட்ட நிப்பாட்டி யாரையும் ஏறக்கி விட்டீங்களா......."

"இல்லையே... நேரம் போயிட்டதுனால நான் எக்ஸ் பிரஸ்ல போனது...."

"ஒஹோ! தனியா அதுவும் தூரத்துக்கு அயர் போனா ஆண்டியையும் கூட்டிக்கிட்டுப் போவிங்களே தொணைக்கு நேத்துக் கூட்டிக்கிட்டுப் போவலையோ...."

"லோட் கொஞ்சம் ஓவர். அதுதான் கூட்டிப் போவல... நீங்கல்லாம் என்ன.....கம்பும் தடியுமா றோட்டுல நிக்கிறிங்க.... ஏதாவது கறைச்சலா? எங்கெயாவது போறீங்களா ?"

"ஆமா, ஆமா கிளாக்கரய்யா வீட்டுக்குத்தான் வரக் கௌம்புனோம்.... வர்றதாகக் கூறிவைங்க...." மீண்டும் பேச்சுக்குள் நுழைந்த வீரமுத்துவை வெட்டிவிட்டான் ஆறுமுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் கெடக்குறான்..... கறைச்சல் ஒண்ணுமில்லே....... நீங்க போங்க.... உங்களையும் காரையும் பொலிஸ்ல பாத்ததாகக் கேள்விப் பட்டேனே....."

போகத் தயாராகியவன் கதவைத் திறந்துகொண்டு மீண்டும் இறங் கினான்.

"பொலிஸ்லயா.... என்னையும் காரையுமாக...யார் சொன்னது.....?"

படபடப்புடன் கேட்டான் டிரைவர்.

"இங்குவந்த பொலிஸ்காரர்தான் சொன்னார்".

"அது தான் எங்களுக்குத் தெரியவில்லை..... சரி சரி நீங்க போங்க" என்று காரை அனுப்பவிட்டு வீரமுத்துவை அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டான் ஆறுமுகம்.

கிளாக்கரய்யா வீட்டிலும் யாரும் தூங்கவில்லை. கார் எப்போது வரும்? என்ன நடந்தது? என்று எப்போது அறியாலாமென்று அய் யாவும் அம்மாவும் விழித்துக் கொண்டே இருந்தார்கள். ஆண்டியப்பனும் அங்கேயே தான் இருந்தான்.

நடந்த விஷயங்களை விபரமாகக் கூறிய டிரைவர், ஆ... ...ங்கு லயத்திடம் இப்போது தன்னை மறித்த கூட்டத்தைப்பற்றி... முகம் கேட்ட கேள்விகளையும் ஒன்று விடாமல் கூறினான்.

"கிளாக்கரய்யா வீட்டுக்குத்தான் வரக்கௌம்பினோம்" என்று வீர முத்து கூறியதையும் மறக்காமல் கூறினான்.

அய்யாவுக்குக் கிலி பிடித்தது.

கூட்டமாக வந்து தன்னை அடித்து நொருக்குவதாகக் கற்ப... பண்ணிக் கொண்டார்.

ஆண்டியப்பனைக் கூப்பிட்டுச் சொன்னார்: "நீ விடியயில தோட் டத்துல இருக்கப்புடாது. அடிச்சே வெஷயத்தைக் கிரகித்துடுவான் ஆறுமுகம். அதனால அம்மா கிட்ட சல்லி வாங்கிக்கிட்டு இப்புடியே போயிறு. நாலைஞ்சு நாளைக்கு இந்தப் பக்கம் தலை காட்டாதே" என்று.

ஆறுமுகம் கையில் ஆண்டியப்பன் அகப்பட்டால் விஷயம் பிழை யாகும் என்பது அவர் அறிந்ததுதான். ... ஒரு தடவை சூடுபட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராயிற்றே. ஆகவே தான், ஆண்டியப்பனை ஒளித்து வைக்க முயற்சிக் கின்றார் அய்யா.

"செம்மையா நாலு மொத்து மொத்துனா எல்லாத்தையும் சொல்லி விட்டு என்னைய உட்டுறு சாமீன்னு ஓடியாறுவான் பயந்தாறிப்பய...." என்று எண்ணிக் கொண்டவர்," காரைப் பின்னுக்குக் கொண்டுபோய்ப் போடு...... ஒரு நேரத்தைப் போல வந்தானுகன்னா...." என்று டிரைவரிடம் கூறினார்.

பொழுது விடிந்து கொண்டிருக்கிறது. புள்ளினங்கள் எதையும் லட்சியம் செய்யாமல் ஒலி எழுப்பிக்கொண்டு இருக்கின்றன.

எத்தனை பட்சி இனம் இருக்கிறதோ அத்தனை விதமான குரல்கள். கூச்சல்கள் புலரும் பொழுதுக்கு வாழ்த்துப்பாடி வரவேற்கின்றன.

பெறட்டுக்களத்தை நோக்கி ஆட்கள் கூட்டம் கூட்டமாய் நடக் கின்றனர்.

"நான்தான் மொத ஆள்" என்று வந்தவர்கள் எல்லாருமே தனக்கு முன்பதாக அங்கொரு கூட்டம் நிற்பதை உணருகின்றனர்.

ஆறுமுகமும் லயத்தில், உள்ள அத்தனை ஜீவன்களும் வேலைக் குப் போகிறவர்கள், போகாதவர்கள், பென்ஷன்காரர்கள், பிள்ளைகள் என்ற வித்தியாசமின்றிப் பெறட்டுக் களத்தை அடைத்துக்கொண்டு நின்றனர்.

பெறட்டுக்களத்துக்கு வந்து கொண்டிருந்த மற்றவர்களுக்கு இது புதுமையாக இருந்தது.

## 8

கண்டக்டரய்யா இன்னும் பெறட்டுக்களத்துக்கு வர வில்லை. அய்யா வீட்டு முன் கதவு மூடிக் கிடந்தது.

புலராத காலை, வெள்ளிக் கொடியாய் நெளிந்தோடிக் கொண்டிருக் கும் ஓடை நீரின் மெல்லிய சலசலப்பு. அரிசிக் காம்பிரா பக்கம் இருந்து குடு குடென்று ஓடி மறைந்து கொள்ளும் கொழுத்த வெள்ளெலிகள். பலா மரத்தில் ஓடிப் பிடித்துக்கொள்ளும் அணில் ஜோடி.

அய்யா வீட்டுப் பாத்ரூம் பைப் சீறுகிறது! நேற்று இரவு படுக்கப் போகும்போது வெகு நேரமாகிவிட்டதை அய்யாவின் கண்ணெரிச்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்துகிறது. வாளியில் நிறைந்திருக்கும் ஜில்லென்ற தண்ணீரை அள்ளி முகத்தில் அடித்துக் கொள்ளும் போது அவருக்கே ஒரு புத் துணர்வு பிறக்கிறது. எரியும் கண்களுக்கு ஒரு இதம்.

“கண்ணுச்சாமி பெறட்டுக்களத்திலே நிற்கமாட்டான்” என்ற நினைவு எழவே, நேற்று இரவு நடந்துவிட்டிருந்த அசம்பாவிதங்களை மனம் அசை போட்டுக்கொண்டது. குளியலறையில் இருந்து வெளியே வந்தவர் கதவைத் திறக்காமலே திரையை விலக்கிக் கொண்டு பெறட்டுக் களத்தை நோக்கினார்.

காற்றை மறைத்தாலும், பெறட்டுக்களத்தின் காட்சியை மறைக்க வில்லை கதவின் கண்ணாடிகள்.

ஆட்கள் இன்னும் வந்து கொண்டு தான் இருக்கின்றனர். ஆறுமுகத் தின் லயத்துக்குப் பொலிஸ் வந்தது, கண்ணுச்சாமியைச் சுட்டது, லயத்து ஆட்கள் கூட்டமாகக் கண்டக்டரய்யாவிடம் போய், பிறகு அங்கிருந்து பங்களாவுக்குப் போனது, துரை பொலிசுடன் டெலிபோனில் பேசி, கண்ணுச்சாமி செத்துப்போய் விட்டதாகக் கூறியது அத்தனை சங்கதி களையும் ஆட்கள் வர வர தெரிந்து கொண்டார்கள்.

ஒரு சிலர் அனுதாபப்பட்டார்கள். ஆஹா! அப்படியா என்று ஒரு சிலர் கொதிப்படைந்தார்கள். ஒன்றுமே நடவாதது போல் ஒரு சிலர் வரிசை கோர்த்து நின்றார்கள் துண்டு வாங்க.

நாம ஒருத்தரும் இன்னைக்கி மலைக்கெறங்கக் கூடாது. நம் மாலையும் சண்டித்தனம் செய்ய முடியும்னு காட்டணும். நாமபாட்டுக்கு பெறட்டைக் கலைச்சுக்கிட்டு வேலைக்குப் போயிட்டாக்க தோட்டம் பாட்டுக்கு சும்மா இருந்துடும். அநியாயமா ஒருத்தனைச் சுட்டுக் கொன்னா, அது பொலிசில்லே யாராயிருந்தாலும் தட்டிக் கேட்டே ஆகணும். ஆகவே, ஒருத்தரும் துண்டு வாங்காம அப்படியப்படியே நின்னுடுங்க, கண்ணுச்சாமி ஏன் செத்தான், எப்படிச் செத்தாங்குறதை யெல்லாம் தொரை விசாரிச்சு நமக்குச் சொல்லணும்....”

பெறட்டுக்களத்தில் கூடி நின்றவர்களை நோக்கிஆறுமுகம் பேசிக் கொண்டிருந்தான்.

“தொரை வெசாரிக்கலேன்னா.... இல்லே வெசாரிக்க மாட்டே னுட்டா....”

கூட்டத்தில் இருந்து கேட்டது ஒரு குரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொரை வெசாரிக்காட்டியோ, அல்லது வெசாரிக்க மாட்டேன் னாலோ அவரை வெசாரிக்க வைக்கணும். வெசாரிக்க வைக்க நம்மால முடியும். கண்ணுச்சாமியைத்தானே சுட்டான், என்னைய சுடலியேன்று நாமபாட்டுக்கு இருந்துட்டோ முன்னா நாளைக்கு என்னையும் சுட்டு, நம்ம சமூகத்தையும் சுட்டுப் பொசுக்கிப் புடுவானுங்க..... அதனால தொரை வெசாரிக்கச் சொல்ற அருதி நாம ஒருத்தரும் கூடையைத் தூக்கித் தலையில் மாட்டப்பிடாது மம்பட்டி முள்ளெத்தூக்கித் தோள்ல வைக்கப் புடாது"

கேட்ட குரலுக்குப் பதில் குரல் கொடுத்தான் வீரமுத்து.

நாலு நாளைக்கு வேலைக்குப் போகாட்டி யாருக்குக் குண்டி காயும்? நமக்குத்தானே! அவம்பாட்டுக்குத் திமிர்ப்பிடிச்சுப்போய் பொலிஸ் காரனோட சண்டைக்குப் போனா சும்மா உடுவானுகளா சுடாம...! நேத்து கிளாக்கரய்யா வூட்டுக் காரைப் பெறட்டிவிடயிலேயே நெனைச் சேன். அய்யா பொலிசுக்குச் சொல்லாமயா உடப்போறாருன்னு.... இருந்தாலும் அவனுக்கு ரொம்ப அதிகப்பிரசங்கித்தனம்! நமக்கு அதெல் லாம் தெரியாதுப்பா..... நீங்களெல்லாம் ஆயிரத்தைச் சொன்னாலும் நான் துண்டு வாங்கிக்கிட்டு வேலைக்குப் போறது போறது தான்".

"நீ மட்டும் துண்டு வாங்கிக்கிட்டு மலையில் எறங்கிறு அந்திக்கு ஒம் பொணந்தான் கெடக்கும் பெறட்டுக் களத்துல!"

இது கணபதி.

"நானும் வேலைக்குப் போறதா முடிவு கட்டிட்டன்........ என்னைய என்ன செய்வியாம்....."

இன்னொரு குரல் கணபதியைக் கேட்டது.

"நீயும் மட்டுமில்லே, இன்னும் எத்தனைபேர் வேலைக்குப் போனாலும் சரி, அத்தனை பேரையும் கொல்றது கொல்றது தான்..... புல்லு புடுங்கையிலே நெல்லும் ஒன்னு ரெண்டு புடுங்கு பட்டுறுதே அந்த மாதிரி...."

"அப்போ ஒரு கண்ணுச்சாமியொட உயிர் போயிட்டது னாலே எங்க எத்தினிபேருட்டு உயிரை வேணுமின்னாலும் பறிக்கத் தயாரா இருக்கீங்க, அப்படித்தானே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது தப்பு சுப்ரமணி பெத்தவ புள்ளையை அடிக்கிறதுக்கும் பக்கத்து வீட்டுக்காரி அடிக்கிறதுக்கும் வித்தியாசம் இல்லியா? எங்கிருந்தோ வந்த ஒரு பொலிஸ் கூட்டம் நம்மள்ல ஒருத்தனை நாயைச் சுடுற மாதிரிச் சுட்டுத் தூக்கிப் போட்டுக்கிட்டுப் போயிட்டா நாமெல்லாம் சும்மா இருந்துடுறதா? அப்படியே "சரி தொலையிறானுக, சரி தொலையிறா னுகன்னு" இருந்து இருந்து தானே இன்னமும் இப்புடியே இருக்கோம். எதையாவது தட்டிக் கேட்டிருக்கோமா?"

ஆறுமுகம், சுப்பரமணியத்தைச் சமாதானப்படுத்துவதுடன் தங்களுடன் ஒத்துழைக்கவும் அவனைத் தயார்படுத்திக்கொண்டிருந் தான்.

"நல்லா யோசனை பண்ணிப்பார் சுப்ரமணி, வெள்ளையன் சொன்னானே, கண்ணுச்சாமி அதிகப்பிரசங்கித்தனமா பொலிஸ்கார னோட சண்டைக்குப் போனான்னு. அது நெசமா? அவன் சண்டைக்குப் போனதை இவன் கண்டானா? அப்படியே அவன் சண்டைக்குப் போனான்னே வச்சுக்கிட்டாலும் ஏன் போனான்? பொலிஸ் லயத்துக்கு ஏன் வந்துச்சு? இதெல்லாம் ஆராய்ஞ்சி பாக்குறதில்லையா?"

"கௌாக்கரய்யா பொலிசுக்குச் சொல்லாமயா விடப் போறார்ன்னு அப்பவே நெனச்சேன்னு வெள்ளையன் சொன்னானே, அப்படீன்னா அய்யா பொலிசுக்குப் போய்ச் சொல்லிக் கண்ணுச்சாமியை அடையாளம் காட்டி தீர்த்துக் கட்டிடச் சொன்னது இவனுக்கும் தெரியுமா? கிளாக் கரய்யா பக்கம் சேர்ந்துகிட்டு நம்மளைக் காட்டிக் குடுக்கப் போறானா வெள்ளையன், கோடாலிக் காம்பாட்டம்!"

"ஆபீசுல ஏதோ எதுத்துப் பேசிட்டாங்கிறதை மனசுல வச்சுக்கிட்டு இப்படி ஒரு ஏழை மேல் பழி தீர்த்துக்கிட்டிருக்காறே கிளாக்கரய்யா, அதை நாம் ம்மா விட்டுட்றதா. அப்படித்தான் அவன் என்னத்தைப் பேசிப்புட்டான்? குடுக்கிற சம்பளத்துக்கு வெவரம் வேணுமின்னு கேட்டான். இது ஒரு குத்தமா? அப்படிப் பார்த்தா ஜன்னலுக்கு வெளியே நிக்கிற நாம் ஜன்னலுக்கு உள்ளுக்கிருக்கிறவங்க கிட்ட ஒன்னுமே கேக்க முடியாதே!"

"என்னய்யா சம்பளம் கொறையுதே" ன்னு நாளைக்கு வெள்ளையன் கேட்டால் அவனுக்கும் இதே கதிதானே? இது என்ன நாயம்? நம்ம கையால் ஒரு பொலிஸ்காரன் செத்திருந்தா சும்மா விட்டுறுவானுகளா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னேரம் தோட்டத்தையே பொசுக்கி இருப்பானுகளே! அவனு களுட்டுது மட்டுந்தான் உயிரு, நம்மளுட்டுது உயிரில்லையா?"

"கண்ணுச்சாமியைக் கொல்லுறதுக்குன்னே பொலிஸ் அங்கேயிருந்து வந்துதா? லயத்துல கலாட்டா நடந்தது என்னமோ உண்மை தான். ஆனால், கலாட்டாவுக்கு நாங்க காரணம் இல்லே! அதுவும் பொலிசுக்குப் போற அளவு பெரிய கலாட்டா இல்லே. லயத்துல ஒரு கறச்சலை உண்டாக்கிட்டு அதை உடனே பொலிசுக்கும் சொல்லிப் பொலிசை வரவழைச்சி தமக்கு வேண்டாதவர்களை ஒழிச்சிக்கட்டிக் கிட்டு உல்லாச மா இருக்கு ஒரு கூட்டம். அதைப் பார்த்துக்கிட்டு நாமெல்லாம் இன்னும் சும்மாவே இருக்கணுமா? எறுமை மாட்டு மேலே மழைபேயுற மாதிரி".

"கூடாது. கூடவே கூடாது, ஆறுமுகம் சொல்றதுக்கு நாங்க கட்டுப் படுறோம். அநியாயமா கண்ணுச்சாமியைக் கொன்னுப் போட்ட நாசகாரக் கும்பலைச் சும்மாவிட மாட்டோம்."

ஆறுமுகத்தின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த கூட்டம் எதிரொலித்தது.

கண்டக்டரய்யா இறங்கி வந்தார். அரிசிக் காம்பராவின் முன்னுள்ள சின்னஞ் சிறு விராந்தையில் போடப்பட்டிருக்கும் டெஸ்க்கில் அமர்ந்து கொண்டார்.

ஆறுமுகம் அய்யாவிடம் வந்தான். கட்டியிருந்தகையை இழுத்து 'சலாம்' வைத்துவிட்டு மறுபடியும் கைகளைக் கட்டிக் கொண்டான்.

"என்ன ஆறுமுகம்" என்பதுபோல் அவனை முகம் நிமிர்ந்திடப் பார்த்தார் அய்யா.

மேலே அடித்திருந்த கருப்பு றீப்பையில் வரிசையாகத் துளைகள் போடப்பட்டிருந்தன. ஓரிரண்டு துளைகளிலிருந்து 'ஸ்ஸ்' சென்று சங்கீதம் பாடிக்கொண்டு பறந்தோடின கரிய வண்டுகள்.

"இன்னைக்கு நாங்க ஒருத்தரும் வேலைக்குப் போறதில்லேன்னு முடிவு கட்டியிருக்கோம்"

"ஏன்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணுச்சாமியை பொலிஸ் அடாவடித்தனம சுட்டுக் கொன்னது ஏன்னு எங்களுக்குத் தெரியனும், தொரை இவை யெல்லாம் விசாரிக்கச் சொல்லுற வரைக்கும் நாங்கள் வேலைக்குப் போறதா இல்லீங்க".

"அது சரி ஆறுமுகம் இதுக்கெல்லாம் பொலிஸ் வெளக்கம் குடுக்கு முன்னு நான் நம்பல்லே. அவனுக செஞ்சது சரின்னு நிப்பானுக, உன்னுடைய கோரிக்கையை தொரை கிட்ட சொல்லிப் பார்ப்போம்" என்றவர் எழுந்து, "சரி சரி வா! நியூ கிளியறிங் ஆளெல்லாம் மொதல்ல! கொழுந்தாளெல்லாம் சின்னவர் கிட்டப் போய்த் துண்டு வாங்கிக்கோ" என்று பெலத்துக் கூறினார்.

ஒருவரும் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

"என்னது எல்லோரும் அப்படியே நிக்கிறீங்க மர மாட்டம். ஒருத் தரும் வேலைக்குப் போறதா உத்தேசம் இல்லையா?"

"இல்லை".

"ஆறுமுகம் தான் ஒங்க கிட்ட சொல்லிச்சே".

"நாங்க வேலைக்குப் போக மாட்டோம்".

பல குரல்கள் திடும் திடுமென்று ஒலித்தன.

"கண்டக்டரய்யா எழுந்து நின்றார். "சரி ஆறுமுகம் ஆளுகளை ஒன்னும் கொளப்பம் செய்யாம நிக்கச் சொல்லு" என்று கூறிவிட்டு டக் டக் கென்று படியேறி மேலே சென்றார்.

சிறிது நேரத்தில் திரும்ப வந்தவர், "கணபதி இங்கேவா, இந்தக் கடுதாசியை மேலே ஆபீசுல குடுத்துட்டு வா" என்றார்.

கணபதி திரும்பி வந்து பெறட்டுக்களத்தில் நின்று கொண்ட சிறிது நேரத்தில் பங்களா முகப்பில் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது.

துரை பெறட்டுக்களத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

முரட்டுத்தனமாக ஓடிவந்த மோட்டார் சைக்கிள் அரிசிக் காம்பரா விறாந்தை அருகில் நின்றது. டெஸ்கில் அமர்ந்திருந்த கண்டக்டரய்யா எழுந்து நின்றார்.

மோட்டார் சைக்கிள் பின்னுக்கும், துரை முன்னுக்குமாக சிறிது நேரம் புகை விட உள்ளே கொதிப்பது 'கப் கப்' என்று புகையாகக்கப் பட்டுக்கொண்டிருந்தது. சைக்கிளைப் பின்னுக்கிழுத்து நிறுத்தி விட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் மட்காட் பக்கம் ஊன்றி வைக்கப்பட்டிருந்த பிரம்பை இழுத்து உருவிக்கொண்டு விராந்தைக்கேறினார் துரை.

இலை கொள்ளாப் பனியால் ஏங்கிப்போய் நிற்கும் மரங்களைப் போல் பெறட்டுக்களத்தில் நின்ற அத்தனை பேரும் கூனிக்குறுகி நின்றனர்.

"உனக்கெல்லாம் என்ன வந்தது? ஏன் மரமாட்டம் நிற்கிறது? துண்டு வாங்கிட்டு மருவாதையா வேலைக்குப் போறதா இல்லியா?"

துரை நின்ற நிலையில், முன் நின்றவர்களை நோக்கிச் சத்தம் போட்டுக்கூறிவிட்டு அண்ணாந்து புகையூதினார்.

அரிசிக் காம்பராவின் தாழ்வாரம் ஏறக்குறைய துரையின் உயரமே இருந்தது. அவர் அண்ணாந்து ஊதிய புகை றீப்பையில் உள்ள ஒரு பொந்துக்குள் 'பூஸ்' என்று நுழையவே திணறிப்போன ஒரு பருத்த வண்டு விர்ரென வெளியே பாய்ந்தது. திடீரென வண்டு முகத்தில் மோதவே திடுக்கிட்டுத் தடுமாறிப் போனார் துரை.

துரை புகையூதுவதைப் பார்த்து தாங்களும் வெறும் வாயில் பனிப் படலத்தைப் புகையாக ஊதிக்கொண்டிருந்த சிறுவர்கள் வண்டுக்குப் பயந்து துரை தடுமாறியதைக் கண்டு கொல்லெனச் சிரித்தனர். இளங் கன்றுகள் அல்லவா!

துரைக்குக் கோபம் தாளவில்லை. 'ஜிவ் ஜிவ்' என்று சிவந்து துடித்தது. நாசி, கன்னங்கள் மத்தளத்தில் இழுத்துக் கட்டிய தோல் போல் விறைத்து மடிந்தன.

வெடுக்கென்று முகம் திருப்பிக் கண்டக்டரய்யாவைப் பார்த்தார்.

"ஆம் ஐ ஏ பபூன் ஹியர். வாட் ஆர் தீஸ் பிரெட்ஸ் டூயிங் அட் தி மஸ்டர்?"

இன்னொரு தாழ்வாரத்திலிருந்து இன்னொரு வண்டு ராகம் பாடிக் கொண்டு வெளியே பறந்தது, 'ஓ காட் ஓ ஹெல்' என்று முனகிய துரை ஆத்திர மிகுதியால் கையிலிருந்த பிரம்பால் அந்த றீப்பையை டொக் டொக்கென்று பலமாகத் தட்டினார். உள்ளே இருந்த வண்டுகள் 'ஹொய்ங்' என்று ராகமாலிகை இழுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆறுமுகம் இங்கே வா" என்றவாறு வராந்தாவை விட்டுக் கீழே இறங்கினார் அய்யா. "இந்தச் சின்னப் பயல்களை லயத்துக்குப் போகச் சொல்லிவிடு..... அவனுக நிற்கிறது துரைக்குப் பிடிக்கலே" என்றார்.

ஆறுமுகம் அவருக்கு ஏதோ சமாதானம் சொல்ல முனையும்போது வீரமுத்து வெளியே வந்தான்.

"அவனுக நின்னுட்டுப் போகட்டுங்க என்னா வேலையா கேக்க வந்திருக்காணுக இல்லியே! நடந்திருக்கிற அக்கிரமத்தால் ஆத்திர மடைந்து தங்களுடைய எதிர்ப்பைக் காட்ட அவனுகளும் வந்து நிற்கி றானுக..... இதிலே தப்போதும் இல்லியே! ஆள் எண்ணிக்கையும் முக்கியந் தானுங்களே. நாட்டை ஆளப் போட்டி போடும் பெரிய பெரிய கட்சிகளெல்லாம் ஒரு கண்டனக் கூட்டம், ஆர்ப்பாட்ட ஊர்வலம், அது இதுன்னா காசுக்கு ஆள் சேர்க்கிறதில்லையா.... நாங்கள் என்ன காசு கொடுத்தா இவனுகளைக் கூட்டியாந்தோம்.... அவனுகளே கொதிச்சுப் போய் வந்திருக்கானுக....."

அய்யா மூலமாக பேசாமல் துரை நேராக வீரமுத்துவிடம் போனார். அவனும் நேராக அவருக்குப் பதில் கொடுக்கத் தொடங்கினான்.

மிச்சம் பேசவானாம் மனுசன் நீ இதுகளை வெரட்டிப் போடு....

"ஐயா தொரைகளே எனக்கு ஒரு பேர் இருக்கு. என் பேர் வீரமுத்து. இந்த 'மனுஷன்' பேச்செல்லாம் நமக்கிட்ட வேணாம். அப்பறம் நான் பொல்லாதவனாகிறுவேன்....."

"ஆங்....வீ....ர.....மு.....த்....து" துரை ஏளனத்துடன் இழுத்து இழுத்துக் கூறினார்.

"ஆமா வீரமுத்துதான்.... 'பட் பட்' என்று தனது விறைத்து நிற்கும்" மார்பில் தட்டியபடி கூறினான்.

"இது ஆறுமுகம்" அதே தொனியில் அதே ஏளனத்துடன் கூறினார் துரை.

"ஆமா..... ஆறுமுகமேதான்! அவனுட்டு ரெண்டு கையும் பன் னெண்டு கையா மாறயில்தான் அவன் ஆறுமுகமா இல்லியாங்குறது உங்க எல்லாருக்கும் தெரியும்."

"கதை நிப்பாட்டு மனு..... வீரமுத்து.....இந்தச் சின்னப் பயலுகளை வெரட்டிப் போடு, அவனுகளுக்கு இங்கே வேலை இல்லே....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது தடவையாகவும் 'மனுஷன்' போடப் பார்த்து தன்னைச் சமாளித்துக் கொண்ட துரையைப் பார்க்க வீரமுத்துவுக்குப் பரிதாபமாக இருந்தது.

"இவனுக போகமாட்டானுக...... தொரைகளே நீங்க மொதல்ல சொன்னதுபோல இவைகள் எலிகள் இல்லை. எலி அங்கே இருக்கு" அரிசிக் காம்பராவைச் சுட்டிக் காட்டியபடி தொடர்ந்தான்.

இவைகள் புலிகள்... உங்கள் பரம்பரைக்கு எதிர்காலக் கிலிகள்; இவனுகளுக்கு இங்கே நிற்கிறதுக்கு உரிமையில்லேன்னு சொல்ல முடியாதுங்க. இவனுக யாரோ எவரோ இல்லே உங்க தோட்டத்து அருணா சலமும், அஞ்சலையும்.... ராமசாமியும், ரஞ்சிதமும்.... மாட சாமியும் மங்களமும். "ஐயோ நம்ம மாடா உளைச்சு சொந்த நாடா மதிச்சிருக்கிற இந்த மண்ணு நம்ம கெழண்டோ செத்தோ போனப்பறம் காடா போயிறு மேங்கிற பயத்துல தங்களுக்குப் பதிலா ஒளைக்கிற துக்காக தயார் பண்ணி வைச்சிருக்கிற சின்ன மிஷின்கள். இன்னைக்கி இல்லாட்டியும் நாளைக்குப் பெறட்டுல நிக்கப் போறவனுக. அவனுகளை ஏன் வெரட்டனும்? எதுக்காக வெரட்டனும்?"

"சின்னப் பயலுகளை மாத்திரம் இல்லே. உங்க எல்லாரையும் இந்தப் பெறட்டுக் களத்தை விட்டு வெறட்டனும்" துரை கோபத்தோடு கத்தினார்.

"அதுக்குத்தான் அய்யா இவ்வளவு அவசரமா பங்களாவிலிருந்து மோட்டார் சைக்கிளையும் எடுத்துக்கிட்டு காலங் காத்தாலெயே பெறட்டுக் களத்துக்கு வந்தீங்களோ?"

நிதானமாகக் கேட்டான் ஆறுமுகம், "பெறட்டுக் களத்தை விட்டு எங்களை வெறட்ட உங்களால் முடியுமா துரைகளே" கணபதியும் முன்னுக்கு வந்து நின்றான்.

"நீங்க விராந்தை மேலே நிக்கிறீங்க. நாங்கெல்லாம் கீழே நிக்கி றோம்.... அதுவும் உங்களுக்கு முன்னாடி கூட்டமா நிக்கிறோம்! அதுனால மேடைமேல் ஏறி கூட்டம் பேசுற நெனைப்பு உங்களுக்கும் வந்திருக் கலாம். நாட்டை விட்டு வெறட்டுறதும், தோட்டம்விட்டு வெறட்டு றதும், வீட்டை விட்டு வெறட்டுறதும் பேசிப் பேசி அலுத்து இப்ப நீங்க பெறட்டுக்களத்தைவிட்டு வெறட்டுறதுல வந்து நிக்கிறீங்க.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதெல்லாம் வெறும் பேச்சு, வெட்டித்தனமா நேரத்தைப் போக்காமெ எதை விசாரிக்க வந்தீங்களோ அதை விசாரிங்க".

பேசி முடித்த வீரமுத்து கைகளைத் தூக்கி நெஞ்சில் கட்டிக் கொண்டான்.

"நீங்கல்லாம் இன்னைக்கு வேலைக்குப் போகப் போறதா இல்லியா?"

"இல்லே போகமாட்டோம்".

"போகப் போறதில்லே?"

"மாட்டோம்".

இன்னைக்கு மட்டுமில்லே, நாளைக்கும் போக மாட்டோம் கூட்டம் குரல் கொடுத்தது.

"அந்தப் பத்தேக்கர் துண்டைப் பார்" பெறட்டுக்களத்துக்கும் எதிரே யுள்ள மலையைக் காட்டுகின்றார் துரை.

"அது ஆறு நாள் றவுண் கொழுந்து மலை. நேத்தோட ஒம்பது நாளாச்சு. இன்னைக்குப் பத்தாவது நாள். இன்னைக்கும் எடுக்காட்டி அந்தக் கொழுந்தெல்லாம் என்னத்துக்கு ஆகும்? முந்திப் பாழாப் போகாதா?"

தனது அவசரத்தைக் காட்டுகிறார் துரை.

"இது ஒரு மலை கொழுந்து. இதுக்காக இவ்வளவு கவலைப் படுறீங்களே, வெவரம் தெரிஞ்ச நாள்ளேருந்து வெய்யில், மழை, பனி, காத்து ஒன்னும் பார்க்காமல் இந்த முழுத் தோட்டத்துக்காகவும் பாடு பட்ட ஒரு ஜீவனை பொலிஸ்காரர்கள் சுட்டுத்தள்ளி, அள்ளிப் போட்டுக் கொண்டு போய் விட்டார்களே. அதைப்பத்திக் கவலைப்பட மாட் டீங்ளோ?"

"இதுல கவலைப்பட என்ன இருக்கு ஆறுமுகம். பொலிஸ் வந்தா அவங்க சொல்லுற மாதிரி கேக்கணும். அதை உட்டுட்டு, ஜீப்புக்குக் கல்லடிச்சுப் பொலிஸ் காரங்களுக்குக் கம்பு அடிச்சா அவன் சும்மா நிக்குமா சுடாமெ.... ஏழெட்டுப் பத்துப் பேரைச் சுடாமல் ஒருத்தனை மட்டும் சுட்டது மிச்சம் நல்லம்.... நீங்கள் சந்தோஷப்படுங்க. கவலைப் படாதே... சரி சரி ஆளுங்களை வேலைக்குப் போகச் சொல்லு".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் சொல்லிட்டாய் போயிருங்களா.... நீங்க சொல்லியே போகலே".

"சரி இப்ப யாரும் வேலைக்குப் போகப் போறதில்லே அப்படித் தானே?".

"அப்படியே தான்".

"என்ன துரைகளே வேலைக்குப் போங்கிறீங்க! போறியா இல்லை யாங்கிறீங்க, ஆனா வேலைக்குப் போக மாட்டேன்னு ஏன் சொல்றீங் கன்னு கேட்கவே மாட்டேங்குறீங்களே.... நாங்கல்லாம் வேலைக்குப் போகமாட்டோமுன்னா "ஏன் போக மாட்டேங்கிறேன்னு கேக்குற தில்லியா?"

துரையைக் கேள்வி கேட்டான் வீரமுத்து.

"ஏன்னு நான் கேக்கமாட்டது, ஏன்னுன்னு கேட்டா நீயெல்லாம் நூத்தி எட்டுக் காரணம் சொல்லுவே. அதை யெல்லாம் தீத்து வைக்க முடியுமா? அதுனால, ஏன் எதுக் குன்னு கேட்டுக்கிட்டு இருக்க நம்மால் முடியாது. "போகப் போறதா இல்லையா" அது தான் நம்ம கேள்வி. போறதில்லேன்னா என்ன செய்யனுங்கிறது நமக்குத் தெரியும்".

பேசிக் கொண்டே போனவர் கண்டக்டரய்யாவைத் திருப்பிப் பார்த்தார்.

உத்தரவுக்காகக் காத்திருந்த கண்டக்டரய்யாவிடம் "தலைவரோட பேசணும்" என்றார்.

கண்டக்டரய்யா ஆறுமுகத்தைப் பார்த்தார். "எந்தந் தலைவருங்க" என்று கேட்டான் ஆறுமுகம்.

"நாலு சங்கத்துத் தலைவரும்."

"ஒருத்தரும் இங்கே இல்லீங்க.... நீங்க தலைவர் மாருங்களைப் புடிச்சு காரியம் சாதிச்சிக்கிருவீங்கங்கிறது எனக்குத் தெரியும். நேத்து ராவே எல்லாத் தவைர்களையும் பாத்துப் பேசிட்டேன். அவுங்கல்லாம் அவுங்கஅவுங்க பெரிய இடத்துல "என்ன செய்றதுன்னு" கேக்கப் போயிட்டாங்க போலிருக்கு ஒருத்தரையும் காணலே.... ஒரு சங்கத்துக் காரனுகளை வேலைக்குப் போகும்படி அந்தத் தலைவரைப் புடிச்சு அனுப்பிறுவீங்க. இப்ப அதுவும் ஏலாது.... தலைவர் மாருக ஒருத்தரும் இல்லே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போறதில்லேன்னா என்ன செய்யிறதுன்னு நமக்குத் தெரியும் னீங்களே, என்ன செய்யப்போறீங்க?"

வீரமுத்து கேட்டான்.

துரை அவனை முறைத்துப் பார்த்தார். துரை கொழும்புப் பக்கம் உள்ளவர். வளவுக்காரர். தென்னந்தோட்டம், அது இது என்று ஏராள மான சொத்து இருக்கிறது. அந்தத் தைரியத்தில் கூறினார்.

"என்ன செய்வேன்னா கேக்கறே கொழும்புலேருந்து ஆள்கொண் டாருவேன் தெரிஞ்சுக்கோ."

வீரமுத்து பலமாகச் சிரித்துவிட்டான். "அவனுக நல்லா பஸ்ஸேறு வானுகளே தவிர, மலையேறமாட்டானுகளே. மரமேறமாட்டானுகளே. அதோட தோட்டக் காட்டில் வேலை செய்யிறதுக்கு கொழும்பலே யிருந்து ஆள்கொண்டாற முடியு முன்னா, ஊருக்குப் போறேன்னு ஒத்தக் கால்ல நிக்கிறவ னுகளை எல்லாம் அனுப்பிப்புட்டு அங்கேயிருந்து ஆள் கொண்டாந்து போட்டுக்கிடலாமே. இந்த ஆலோசனையை நீங்களே பெரிய இடத்துக்கும் எடுத்துச் சொல்லலாமே!"

"நீ என்ன கிண்டல் பண்ணுறியா?" என்று சீறினார் துரை. "பொலிஸ் உன்னையும் சுட்டிருக்கணும் விட்டுட்டானுக. எனக்கு வாறகோவத்துக்கு, நான் சுட்டுப் போடுவன்உன்னை"

"துப்பாக்கி கொண்டாந்திருக்கிங்களா?" அமைதியாகக் கேட்டான் வீரமுத்து.

முன் வரிசையில் நின்று கொண்டிருந்த ஒரு வாண்டுப் பயல் தனது கால்சட்டைப் பையிலிருந்து ஒரு முருக்கைத் தட்டை 'டோக்கை' கையிலெடுத்து ஏற்கனவே மென்று அடைத்திருந்த கடதாசித் துண்டைக் கழற்றி காற்றூதி அடைத்து 'டொப்' என்று ஆகாயத்தை நோக்கி வெடித் தான்.

துரை அரிசிக் காம்பராவைவிட்டுக் கீழே இறங்கினார். கூட்டத் துக்குக் கேட்கும்படி கண்டக்டரிடம் கூறினார்:

"இவனுகள் வேலைக்குப் போகவேண்டாம். லயத்துக்குப் போகட்டும். இல்லாட்டிக்கு இங்கேயே நின்னு தொலையட்டும். நான் பெரிய துரையிடம் பேசி மேல் டிவிஷனிலிருந்து ஆள் வரச் சொல்லுறேன். நீ அஜஸ்ட் செய்துக்கிரு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மத்த டிவிஷன் ஆள் நம்ம டிவிஷனுக்கு வேலை செய்ய வந்தா வீண் கரைச்சல்வரும் துரைகளே! நாங்க எடங் குடுக்க மாட்டோம்" மோட்டார் சைக்கிளில் ஏறி அமர்ந்த துரையிடம் கூறினான் ஆறுமுகம்.

"அடிச்சுக்கிட்டு சாகுங்க! எனக்கென்ன வந்தது...." என்று சிரித்தபடி மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தார் துரை.

மலைகளுக்கு மேலாக எழுந்த கதிரவன், இங்கே என்ன நடக்கிறது என்று எட்டிப்பார்த்தான்.

பாலத்திற்கு மேற்புறம் பாறைகளுக்கு மேலாக ஜிலுஜிலு வென்று வடிந்திறங்கிய தண்ணீரில் பட்டு கண்களைப் பறித்த சூரிய வெளிச் சத்திலிருந்து ஒதுங்கிக்கொள்வதற்காகப் பார்வையை மழித்து மலை யுச்சியில் கவிழ்ந்திறங்கும் பஞ்சுக் கூட்டத்தைப் பார்த்தான் ஆறுமுகம்.

மேகக் கூட்டத்தின் இள நீலம் கண்களுக்கு இதமாக இருந்தது!

வளைத்துப் போட்ட றப்பர் பாம்பைப் போல் நெளிந்து கிடக்கும் பாதையின் மேல் வளைவில் ஒரு வினாடி மிதந்து, மின்னி மறைந்து கொண்டது, துரையின் மோட்டார் சைக்கிள்.

குப்பைமேட்டில் சாம்பல் கொட்டியது போல் தேயிலைகளில் மிதந்து மேலெழும்பியது சைக்கிள் கக்கிய புகை.

"எனக்கு பெரிய துரையைப் பார்க்க ஏலாதுங்களா அய்யா? இவருக்கு ஒரு எளவும் தெரியாதுங்க. வெவரமில்லாமல் சும்மா மொறட்டுத்தனமா ஏதாச்சும் செஞ்சிப்புடுவாரு. கிளாக்கரய்யா இவரை அப்படிக் கெடுத்து வச்சிருக்காரு. அவரு சொன்னது தான் இவருக்குத் தேவவாக்கு. பாத்துக்கிட்டே இருங்க அவருக்குக் கடைசியிலே என்ன கெடைக்குதோ அதேதான் இவருக்கும் கெடைக்கும்".

கண்டக்டரய்யாவிடம் பேசிக் கொண்டிருந்தான் ஆறுமுகம்.

"பெரியதுரை தோட்டத்துல இல்லையே! ஆறுமுகம்.... லண்டன் லேருந்து டைரக்டர்மார்கள் வந்திருக்காங்களாம். இவரும் கொழும் புக்குப் போயிருக்காரு, அங்கே மீட்டிங்கெல்லாம் முடிஞ்சுதான் வருவாரு. அதருதி இவருதான் பெரியதுரை. இவர் வச்சதுதான் சட்டம் மேல் டிவிஷன்லேருந்து ஆட்களை அனுப்பச் சொல்லி ஓடர் போடத் தான் அப்படி வெரசாப் போறாரு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யா கூறியவற்றைக் கேட்டதும் ஆறுமுகத்திற்குத் திக் கென்றது.

பெரியதுரை இருந்தாரென்றால் அவரிடம் பேசி நியாயம் கோரலாம். அவருடைய போக்கே வேறு. சின்னதுரைமார்கள் சொன்னார்கள் என்றோ, அல்லது வேறுயாரும் உத்தியோகத்தர்கள் சொன்னார்கள் என்றோ, ஏதாக இருந்தாலும் தீர விசாரிக்காமல் ஒரு முடிவுக்கு வரவே மாட்டார்.

தொழிலாளர்கள் அனைவருக்கும் அவர் மேல் ஒரு அலாதி மதிப்பு. தனக்குக்கீழ் வேலைசெய்பவர்களை அவர் அப்படிப் பார்ப்பார். ஒரு கையால் அடித்து மறுகையால் அணைத்துக் கொள்வார். தோட்ட மக்கள் அனைவரும் அவரைத் தகப்பன் என்றே அழைப்பது வழக்கம்.

இன்றைய சூழ்நிலையில் கூட அவருடைய தோட்டத்தில் ஒரு கலகமோ, கலவரமோ இதுவரை இருந்ததில்லை. அதுதான் அவருடைய நிர்வாகத் திறமை.

சின்ன துரைமார்கள் தொட்டு அனைவருக்கும் அவர் என்றால் சிம்மசொப்பனம்.

தொழிலாளர்களும் டிவிஷன் ஆபீசில், சின்ன துரைமாரிடம் தடா புடாவென்று ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு, "இது நமக்கு வெசாரிக்க ஏலாது, நீ பெரிய ஆபீசுக்குப் போ" என்று சின்ன துரைமார்களால் பெரிய துரையிடம் அனுப்பி வைக்கப் பட்டால், பெரியவரிடம் மூச்சே விட மாட்டார்கள்.

செலாங்க தகப்பன் என்று ஜன்னலுக்கு வெளியே நிற்பவனை ஒரு கணம் உற்றுப்பார்ப்பார் பெரியதுரை.

"உன் செலாம் நிப்பாட்டு..... நமக்கு வாணாம்.... எங்கே உன் தலைவர்?......" என்று தொடங்கினாரென்றால் சின்ன துரையிடம் அடித்த வாய் அப்படியே ஒட்டிக் கொள்ளும். பத்து நிமிடம் போல் விசாரித்து விட்டு "ஒனக்கு பத்து ரூபாய் தெண்டம்.... நீயெல்லாம் போகலாம்" என்று முடிப்பார்.

"தகப்பன் இஷ்டங்க" என்று அவர்கள் ஜன்னலைவிட்டு விலகியதும் ஒரு சத்தம் போட்டுக் கூப்பிடுவார்.

என்னமோ ஏதோ என்று அவர்கள் ஓடி வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இப்ப செலாம்.... சரி போகலாம்” என்பார்.

அவர் யாரையும் வயிற்றிலடித்தது கிடையாது.

அவர் தோட்டத்தில் இல்லையென்றதும் ஆறுமுகம் தடுமாறித் தான் போனான்.

சின்ன துரை சிங்களவர்! அவருக்கும் கிளாக்கரய்யாவுக்கும் நெருக்கம் அதிகம். தனக்கும் கிளாக்கரய்யாவுக்கும் ஏற்கனவே பகை. இந்தச் சந்தர்ப்பத்தில் சின்னதுரை நீதிபதியாக நின்றால் நியாயம் யார் பக்கம் இருக்குமென்பது சொல்லித் தெரியவேண்டியதல்ல.

பெரியதுரை தோட்டத்தில் இருந்தால், அவருடைய அனுமதி இல்லாமல் ஒரு டிவிஷனிலிருந்து இன்னொரு டிவிஷனுக்கு ஆட்கள் வேலைக்குப் போக முடியாது. அதுவும் காரணம் என்ன என்று அறியாமல் இதற்கெல்லாம் பெரியவர் சம்மதிக்கமாட்டார். இப்போது நடந்திருப்பது போன்றதொரு சந்தர்ப்பத்தில் இப்படி ஒரு ஆள் மாற்றத்தை அனுமதிக்கவே மாட்டார்.

ஆறுமுகம் பலமாக யோசனை செய்தான். வீரமுத்து, கணபதி இன்னும் ஏழெட்டுப்பத்து வாலிபர்கள் ஒரு ஓரமாக நின்று பேசிக் கொண்டார்கள்.

ஆறுமுகம் கூறினான்:

“நாம் மூர்க்கத்தனமாக ஆத்திரமடைவதால் பலனில்லை. பெரிய துரை தோட்டத்தில் இல்லையாம். இவர் அடுத்த டிவிஷன் ஆட்களைக் கொண்டாரப் போறாராம்.....”

“கொண்டாரட்டுமே மலையில கால் வைச்சிறுவானுகளா அவனுக......” ஆக்ரோஷமாகக் கேட்டான் வீரமுத்து.

“வைக்க மாட்டானுகதான். வைக்கவும் விடமாட்டோம். ஆனாலும், நாம நன்றாக யோசனை பண்ண இருக்கு. அந்த டிவிஷனிலேருந்து ஆட்களை வரச்சொல்லி ஓடர் போட்டுட்டு இவன் பாட்டுக்கு பங்களாக்குள்ளாற பதுங்கிக்கிடுவான். நாம கூலிக்காரனும், கூலிக் காரனும் தான் அடிச்சிக்கிறப் போறோம். வெட்டிக்கப்போறோம்......”

“எங்க தோட்டத்துல கலகம் ஓடனே வான்னு பொலிசை வரச் சொல்லுவான். அவனுக வந்து இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுத்தள்ளிட்டுப் போவானுக....” ஆறுமுகம் தொடர்ந்ததை கணபதி முடித்துவைத்தான்.

“அது தான் நல்லது. பொலிசை இவனுக கூப்பிடட்டும்....” கோபம் கொண்ட புலிபோல் கிறீச்சிட்டான் வீரமுத்து. “நாம அங்கே போகாட்டியும், அவனுகளை இங்கே இழுத்து உயிருக்கு உயிர் வாங்காமல் விடக் கூடாது. கண்ணனைக் கொன்னதுக்காக காக்கிச் சட்டைக்காரன் ஒருத்தனையாவது நான் கொல்லனும். அவனுககிட்ட துப்பாக்கி இருக்கு. எங்கிட்ட கம்பு இருக்கு பாத்துடுறேன்....”

பொலிஸ்காரன் எதிரே நிற்பதுபோல் எகிறிக் குதித்தான் வீரமுத்து.

“அதுக்காக நாமலே அடிச்சுக்கிறணுமா? மேல் டிவிஷன் ஆளுகளை வரச் சொல்லாதீங்க, வீண் கறச்சல் தான் வரும்ணு நான் சின்ன துரை கிட்ட சொன்னதுக்கு அவன் என்ன சொல்லி விட்டுப் போனான் தெரியுமா? அடிச்சிக்கிட்டு சாகுங்கண்ணு சொன்னான் தானே. அதிலிருந்தே அவனுடைய நாசகாரச் சூழ்ச்சி தெரியலியா வீரா? நம்ம கையை எடுத்தே நம்ம கண்ணைக் குத்தப்பார்க்கிறான்.... அதுக்கு நாமளே இடம் கொடுக்கலாமா......?”

“இப்ப என்னதான் செய்யணுங்கிறீங்க? அந்த டிவிஷன் ஆளுகளை வேலைசெய்யவுட்டுட்டு இப்படியே கையை கட்டிக்கிட்டு இருந்துடுறீங்களா?”

“நம்ம தோட்டத்துல இன்னொருத்தனை வேலை செய்ய விடுறதா? அதுவும் நாம வேலைசெய்ய மாட்டோம்ணு தகராறு பண்ணிக்கிட்டு இருக்கையிலே....”

“அப்படி நான் சொல்லலியே! என்னைப்பத்தி என்ன நெனைக்கிறீங்க... தன்மானமில்லாதவனா...?”

கோபமாகக் கேட்டான் ஆறுமுகம்.

“பின்னே என்னதான் செய்யச் சொல்றே ஆறுமுகம்? நடததையெல்லாம் மறந்துட்டு மலைக்கேறணுங்கிறியா?”

“நீ சொல்றதிலே பாதி கரெக்ட் வீரா. மலைக்கு ஏறுங்கன்னுதான் சொல்லுறேன். ஆனால் நடந்ததை மறந்துடுங்கன்னு சொல்லல்லே?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலைக்கு ஏறணுமா? கூடையைத் தூக்கி தலையில போடணுமா? என்னையைவிடு. கண்ணம்மாகிட்ட சொல்லிப் பாரு!"

"கண்ணம்மாகிட்டே மட்டுமில்லே எல்லோர்கிட்டயும் சொல்லத் தான் போறன். இப்ப நீயே சொன்னியே வீரா! நாம பொலிஸ் ஸ்டேஷனுக்குப் போக ஏலாட்டியும் அவனுகளை இங்கே இழுத்து நல்லா ஒதைச்சி அனுப்பனுமின்னு அதுக்கு நம்மலைத் தயார்படுத்துகிறதில்லையா? துப்பாக்கித் தோட்டாவோட வாரவனுக்கிட்ட நாம கம்போட பாஞ்சி சூடுபட்டுச் செத்துட்டாப் போதுமா.... 'பழிக்குப் பழி' அது நம்ப நெஞ்சுல ஆழமாப் பதிஞ்சிருக்கு...."

"நாமெல்லாம் இன்னைக்கு வேலைக்குப் போகணும்னு நான் சொல்லுறது கேவலம். இன்னைக்குக் கெடைக்கப்போற பிச்சைக்காசு அஞ்சு ரூபாய்க்காசு இல்லே! அந்த அஞ்சு ரூபா நோட்டுல இருக்கிற சிவப்பைவிட கண்ணுச்சாமி சிந்தின ரத்தத்தின் சிவப்பு மகத்தானது....."

ஓரமாக நின்று பேசிக்கொண்டிருந்த நாலைந்து வாலிபர்களும் கண்டக்டரய்யாவிடம் வந்துநின்றார்கள்.

"நாங்கஎெல்லாம் வேலைக்குப் போறதா முடிவுகட்டி இருக்கோமுங்க..... தொரைகிட்ட சொல்லிடுங்கள். மேல் டிவிஷன் ஆளுகளை வரவேண்டாமுன்னு சொல்லச் சொல்லிடுங்க....."

"தொரை என்ன சொல்லுதோ தெரியலையே" என்று முனகிக் கொண்ட அய்யா மறுபடியும் ஒரு கடிதம் எழுதி ஆபீசுக்கு அனுப்பினார்!

கணபதியும், ஆறுமுகமும் பதுளைக்குப் போவதாக முடிவு செய்து கொண்டனர். மற்றவர்களை சமாதானப்படுத்தி வேலைக்குப் போகச் சம்மதிக்கவைத்தாகிவிட்டது.

கூடையும், தலையுமாக முதல் ஆளாக துண்டுவாங்கத் தயாராக இருந்தாள் கண்ணம்மா.

## 9

தோட்டத்துப் பாடசாலைக்குக் கீழே உள்ள விளையாட்டு மைதானத்தில் ஒரு கூட்டத்துக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்து இளைஞர்கள் 'வொலிபோல்' விளையாடுவதற்காக நிர்வாகம் ஒதுக்கிகொடுத்த இடம் தான் இந்த மைதானம். அதில் தான் கூட்டம் நடக்கப்போகிறது!

மேசை, கதிரையும், வாங்குகளும் கிடக்கின்றன. சுலபமாகக் கூட்டத்தை நடத்திவிடலாம். ஆனால் தோட்ட நிர்வாகம் சம்மதிக்க வேண்டும்! துரை சம்மதம் தெரிவித்தாலும் மாஸ்டர் ஒத்துக்கொள்ள வேண்டுமே.

கீழேயுள்ள மைதானத்தில் வாலிபர்கள் பந்தாடுவதற்கே பதறிப் போல் நிற்பார் மாஸ்டர். "இவனுகளும், இவனுகளோட பந்தடியும்! ஒரு பாடம் படிப்பிக்க ஏலுதா? கத்தித் தொலைக்கிறானுகள் காட்டுத் தனமா! ஒரு நாள் பாக்கியில்லாமல் டாண்ணு மூணு மணிக்கு வந்து தொலைக்கிறானுக என்னமோ பெரிய வெளையாட்டு வீரருகமாதிரி, சனி ஞாயிறுலவந்து வாங்கு வாங்குன்னு வாங்குங்களேன் பந்தைப் போட்டு. யாருகேக்கப் போறா....." என்று பொருமிக் கொள்வார். இவரா பள்ளிக்கூடத்துக்குள் கூட்டம் நடத்த விடுவார்.

அடாது மழை பெய்து கொண்டிருக்கும் காலமெனும் அனுதாபத் துடன் ஒரு அவசரமான செயற்குழுச் சந்திப்பற்கோ, ஒரு பொதுக் கூட்டத் திற்கோ, பாடசாலைக் கட்டிடத்தை துரை அனுமதித்துவிட்டார் என்றால், அடுத்த நாள் எங்கே விடிந்தது ஆபீஸில் விடிந்தது என்று நிற்பார் மாஸ்டர்.

ரெண்டு முணு வாங்குகளை ஒடச்சி மூலையில போட்டிருக்கு!

செவுரெல்லாம் பேந்து கெடக்கு!

தரையெல்லாம் ஒரே வெத்தலை எச்சி.....

இதுபோன்ற பிராதுகளுக்குப் பயந்துகொண்டு பாடசாலைக்குள் கூட்டம் போட துரை அனுமதிப்பதில்லை.

துரை அனுமதிக்கமாட்டார் என்பதற்காக இவர்களும் கேட்காமல் இருந்துவிடுவதில்லை. இம்முறையும் போய்க் கேட்டார்கள்.

"என்ன கூட்டம்....?" என்று கேட்டார் கிளாக்கரய்யா.

"கண்ணுச்சாமிக்கு அனுதாபக் கூட்டமுங்க...."

கிளாக்கரய்யா துரையிடம் சிறிதுநேரம் ஏதோ ஆங்கிலத்தில் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரையும் ஆங்கிலத்தில் ஏதோ கூறினார்.

கிளாக்கரய்யா ஜன்னலிடம் வந்து கூறினார்.

"கூட்டம் போட பள்ளிக்கூடத்தைக் குடுத்தா வாத்தியாரய்யா சும்மா மொணகுவதாம்... அதனால வொலி போல் கிறவுண்டுல வச்சிக்கிடு வீங்களாம்...."

தலைவருக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

"மாஸ்டரய்யா சும்மா இருந்தா நீங்க நோண்டி விடுவீங்க நீங்க சும்மா இருந்தா அவரு நோண்டி விடுவாரு" என்று முனகியபடி ஜன் னலை விட்டு விலகினார்.

பின்னால் நின்று கொண்டிருந்த ஆறுமுகமோ, "வொலி போல் கிறவுண்டுல கூட்டம்போட இவுக சொல்லணுமாக்கும். கண்ணுச் சாமின்னாலே கிளாக்கருக்குச் சிம்ம சொப்பனம், எடம் குடுப்பாரா.....? குடுக்கத்தான் விடுவாரா......" என்று அய்யாவுக்குக் கேட்கவே கூறிவிட்டு படியிறங்கி நடந்தான்.

பள்ளிக்கூடத்துக்குள் கிடக்க வேண்டிய மேசையும், நாற்காலியும், வாங்குகளும் கிறவுண்டில் கிடந்தன.

போர்ட் பலகை ஸ்டாண்டில் கண்ணுச்சாமியின் படம் மாட்டப் பட்டு, மாலை சூட்டப்பட்டிருந்தது.

கண்ணுச்சாமி அங்கத்துவம் வகித்த சங்கத்தின் பிரதிநிதிகள் இருவர் பதுளையில் இருந்து வந்திருந்தனர். இந்தக் கூட்டத்தில் பேசு வதற்காக!

தோட்டத்திலுள்ள சகல கட்சித் தலைவர்களும் பிரசன்னமாகி இருந்தார்கள். ஒரு தொழிலாளியின் அகால மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் கூட்டமல்லவா! என்ற பரந்த நோக்கத்துடன்.

கண்ணுச்சாமி வீரன். வெறும் வீரனல்ல, தியாகி, நமது காளையர் அனைவருக்கும் கண்ணுச்சாமியின் வீரம் வேண்டும். அவனுடைய ரத்தம் இவர்களுடைய உடலிலே ஓட வேண்டும். அதிலேதான் நம் சமூக விடிவு இருக்கின்றது!"

இப்படி அதட்டிப் பேசினார் மாவட்டப் பரதிநிதி! கூடி நின்றவர்கள் கைதட்டி ஆமோதித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் அனைவரும் ஆத்திரமடைந்திருந்ததில் வியப்பில்லை. ஏசுவின், "இன்னொரு கன்னத்தைக் காட்டு" எனும் உபதேசமும், காந்தியின் அகிம்சைக் கொள்கையும் இந்தக் காலத்திற்குச் சரிவருவதில்லை. ஆனால், உணர்ச்சி வசப்பட்ட வாலிபர்களின் வெறும் அதிருப்திப் போராட்டமாக, அவசரப் போராட்டமாக இது அமைந்துவிடக் கூடாது. எனவேதான், "வேலை நிறுத்தம்; என்றதற்கு நாங்கள் மறுத்துரைத்தோம். இருந்தும் உங்கள் தோட்டத் தலைவர், ஜில்லா ஆபீஸில் இருந்து வருவதற்குள் ஏதேதோ நடந்து விட்டது. இருப்பினும் தோழர் ஆறுமுகம் தனது புத்திக்கூர்மையாலும், திறமையாலும் விஷயத்தை அழகாகச் சமாளித்துவிட்டார். அவருடைய சாதுரியத்திற்கும், சமயோசிதத்துக்கும் நமது இயக்கத்தின் இணையற்ற தலைவர் பதவியை என்றாவது கைப்பற்றுவார் என்பது திண்ணம்.ஆறுமுகத்தைப் போல் ஆயிரம் ஆறுமுகங்கள் தோன்ற வேண்டும். நமது ஆற்றாமை அகல வேண்டும்"

ஆறுமுகத்துக்கு இதமாகத் தடவிக்கொடுத்தார் பேச்சாளர்.

தோட்டத்திலுள்ள மற்றகட்சித் தலைவர்களும் கண்ணுச்சாமியைப் பாராட்டிப் பேசினார்கள்.

"கண்ணுச்சாமி இணையற்ற வீரன். ஆனால், அந்த வீரனை நாம் இப்படி அகாலத்தில் அழியவிட்டிருக்க வேண்டாம். திடீர் திடீரென உணர்ச்சிவசப்படுதல், உத்தியோகத்தர்களை எடுத்தெறிந்து பேசல் ஆகியவையே அவனுடைய அழிவுக்கு நீர்வார்த்தன. ஆறுமுகம் போன்று அவனுடன் சேர்ந்து பழகுபவர்கள் அவனைத் திருத்தி பொறுமைசாலியாக்கியிருந்தால், அவன் இன்று நம்முடன் இருந்திருப்பான். மாறாக அவனுடைய உணர்ச்சித் தீக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தால் வீமனையொத்த வீரர்களையும் நாம் வீணாக இழக்கவேண்டித்தான் இருக்கும்.

சம்பளத்து வாசலில் என்ன நடந்தது என்பதை நாம் அறிவோம். ஆபீஸில் உள்ளவர்களிடம் நமக்கு வேண்டியவற்றைக் கேட்டுக்கொள்வதிலும் ஒரு முறை, ஒரு பண்பு, ஒரு ஒழுங்கு இருக்கிறது.

முறை தவறி நடந்து கொண்டவர்களை ஆறுமுகம் போன்றோர் தடுக்காமல், கண்டிக்காமல், கள்ளி மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு தூண்டிவிட்டுக் கொண்டிருந்தால் அது இப்படித்தான் எதிலாவது போய் முடியும். இறந்து விட்டவன் ஒருவீரன், அவனை இழந்துவிட்டதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பெரிதும் வருந்துகின்றோம். ஆனால் அவனை இப்படி ஒரு முடிவு நோக்கி விரட்டியவர்களை நாம் மன்னிக்கத் தயாராயில்லை.

காலால் உதைத்துக் காரைப் புரட்டுவதும், கம்பைச் சுழற்றி பொலிசை மிரட்டுவதும் என்ன நியாயம்?

குற்றவாளி என்றாலும் அவனைத் தண்டிக்க கோர்ட் இருக்கிறது..... இவ்வளவும் செய்துவிட்டு வேலை நிறுத்தமும் செய்வோமென்றால் யார் ஒத்துக்கொள்வார்கள்......?"

அவர் பேசிக்கொண்டே இருந்தார். கூட்டம் கப்சிப்பென்றிருந்தது. பாடசாலைக்குக் கீழே மெலிந்து போய் சன்னமாய் ஓடும் நீரின் சலசலப் புக்கூட மேலே கேட்குமளவிற்கு மைதானம் அமைதியாகக் கிடந்தது.

"நிறுத்து உன் பேச்சை.....!"

அமைதியைக் கிழித்துக்கொண்டு இடியோசை போல் கேட்டது ஒரு குரல். குரலுக்குரியவன் வீரமுத்து.

"தொடர்ந்து பேசினால் கல் வரும், கவனம்!"

"டேய் பந்தம் டோய்!"

"எறங்கு கீழே, இல்லாட்டி சாணி அடிப்போம்....."

வீரமுத்துவின் குரலைத் தொடர்ந்து பல குரல்கள் கிளம்பின. கூட்டம் சலசலத்தது. பதுளையிலிருந்து வந்தவர்கள் நைசாக காரை நோக்கி நடந்தனர்.

வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வீராவேசமாய் பேசிகொண்டி ருந்தவர் தொப்பென்று நாற்காலியில் விழுந்தார்.

கூட்டம் குழம்பிக்கொண்டது. எழுந்து நிற்பவர்களும், கையைப் பிடித்து இழுத்துக்கொள்பவர்களும், நீ போடா, நீ போடா என்று தள்ளிக் கொள்பவர்களுமாக ஒரே கலவரம். கூட்டம் இழுபறிபட்டது.

"தோழர்களே! அமைதியாய் இருங்கள், நண்பர்களே! அமைதியாய் இருங்கள். பேசியவர்களுக்கு நான் பதில் சொல்லத்தான் இருந்தேன். அதற்குள் நீங்கள் முந்தி விட்டீர்கள்..... பொறுமையாய் இருங்கள்...."

ஆறுமுகம் முன்னால் வந்து சத்தம் போட்டுப் பேசினான். கூட்டம் மெல்ல மெல்ல அமைதியடைந்தது. காரை நோக்கி நழுவ எண்ணிய மாவட்டப் பிரதிநிகள் நாற்காலிகளில் அமர்ந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவர்களுக்கு வாயால் பதில் சொல்லிப்பயனில்லை. அவர்களைப் போலவே நம்மையும் வாய் வீரர்கள் என்று கணித்துக் கொள்வார்கள். இவர்களுக்குப் பதில் கூற வேண்டியது கையால் எதிரியைத் தாக்குமுன் ஒற்றர்களைத் தாக்கி ஒழித்துவிட வேண்டும்" என்று உணர்ச்சி வசப் பட்டுக் கத்தியபடி முன்னால் வந்து கொண்டிருந்தான் வீரமுத்து.

சண்டைச் சேவல் போல் கொண்டை நிமிர்த்தி நின்ற வீரமுத்துவை அதட்டி அடக்கினான் ஆறுமுகம்.

"இது அனுதாபக் கூட்டம்டா வீரா, கண்ணுச்சாமிக்குப் போட்ட அனுதாபக் கூட்டத்துல கலவரம்னு இவனுகளே பட்டமாப் பறக்கவிடு வானுக. அவனுக்கு அனுதாபக் கூட்டம் போட்டது ஆளுகளுக்குப் பிடிக்கலேன்னு பொய்ப் பிரசாரம் பண்ணுவானுக. பேசாமப் போய்க் குந்து....." என்று அவனை அடக்கிவிட்டு தலைவரிடம் வந்து நின்றான்.

குனிந்து அவர்காதில் ஏதோ கூறிவிட்டு நிமிர்ந்து நின்றான்.

"தலைவர் அவர்களுக்கும், மற்றுமுள்ள பேச்சாளர் அறிஞர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது வணக்கத்தைக் கூறிக் கொள்ளுகின்றேன்.

கண்ணுச்சாமி இன்று மண்ணுக்குள் மக்கிப்போய் இருப்பான். ஆனால், அவன் சிந்திய ரத்தம் மண்ணில் மட்டும் சிவக்கவில்லை. நம் மனதில் எல்லாம் சிவந்துகிடக்கிறது. யார் எண்ணினார்கள் அவன் இன்று நம்முடன் இருக்கமாட்டான் என்று"

தலை தாழ்த்தி சிறிது நேரம் நிற்கின்றான் ஆறுமுகம். அவனுடைய கண்கள் கலங்கிக்கிடந்தன.

"சம்பளத்து வாசலில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியும்" என்று சற்று முன் பேசியவர் சொன்னார். சம்பளத்து வாசலில் என்ன நடந்தது என்பது தான் அவருக்குத் தெரியும். ஆனால், சம்பளத்தில் என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியுமா? தெரியும் என்றால் நமக்கேன் வம்பு என்று ஒதுங்கிக் கொண்டாரா? என்பது எங்களுக்குத் தெரியவேண்டும்.

காலமெல்லாம் உழைத்துழைத்துக் காய்த்துப்போய் கால் வயிற்றுக் கஞ்சிக்கும் ஆளாய்ப் பறந்து கொண்டிருக்கும் எனது சகோதரர்களே! எனது சகோதரிகளே! உங்களுடைய சம்பளத்தில் என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரியாது! தெரியவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கெல்லாம் அந்த உண்மையை விளங்கவைக்கவே நானும், கண்ணனும் இன்னும் பல நண்பர்களுமாக ஒரு கூட்டம் போட்டோம். ஒரு சில திட்டங்களை வகுத்துக் கொண்டோம், அதில் முதற்படிதான் கண்ணுச்சாமி சம்பளத்து வாசலில் விவரம் கேட்டது.

உத்தியோகத்தர்களிடம் பேசுவதற்கு ஒரு ஒழுங்கு வேண்டும், முறைவேண்டும் என்று கூறினார்களே! அதை நாங்கள் மறுக்கவில்லை. ஒழுங்கில்லாமல், பண்பில்லாமல், முறையில்லாமல் அன்று அப்படி என்னதான் செய்துவிட்டான் கண்ணுச்சாமி?

கொடுத்த பணத்திற்கு கையெழுத்திட்டு ரசீது வாங்குவது தான் உலகில் எங்குமுள்ள வழக்கம். முழு உலகிலுமே நடக்காத அதிசயங்கள் தானே தோட்டத்தில் நடக்கின்றன.

கூலிக்காரனுக்குக் கொடுக்கும் சம்பளமென்றால் மட்டும் அதற்கு விளக்கம் தேவையில்லையா? வாங்கிக் கொண்டேன் என்பதற்கு கையெழுத்து தேவையில்லையா?

வாங்கிக் கொண்டதை இல்லையென்று மறுக்காமல் இருப்பதற்குத் தான் வாங்கியவனிடம் கையெழுத்து வாங்குகிறார்கள். நாம் சம்பளம் வாங்கிக் கொண்டு இல்லையென்று பொய்யுரைப்பது கிடையாது. ஆகவே நம்மிடம் கையெழுத்து வாங்குவதில்லை. அப்படித்தானே தோழர்களே......!

நாம் நல்லவர்களாய் இருப்பதால் அவர்கள் பொல்லாதவர்கள் ஆகலாமா? நல்லவர்களிடம் தான் பண்போடு நடந்து கொள்ள வேண்டும். மனிதர்களிடம் தான் முறையோடு பேசவேண்டும். முரடர்களிடமும், கொள்ளைக்காரர்களிடமும் எந்த ஒழுங்குடன் நடப்பது? எந்த பண்புடன் பேசுவது?

என் தாயை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு ஓடோடி வந்த நான், ஆபீஸ் படியில் ஏறும்போதே கண்ணம்மா சம்பளம் வாங்கிக்கொண்டு வந்துவிட்டாள். அது எனக்குத் தெரியும். இருந்தும் மறுநாள் காலை அவளை ஆபீசுக்கு வரச்சொல்லி சம்பளம் கேட்கச் சொன்னேன், அது எங்களுடைய திட்டத்தின் இரண்டாவது படி!

நீ நேற்றே சம்பளம் வாங்கிவிட்டாய் என்று அவர்களால் ருசுப் படுத்த முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி முடியும்? கையெழுத்தா போட்டிருக்கிறாள் கண்ணம்மா? இதோ பார் வாங்கிக் கொண்டதாக நீ போட்ட கையெழுத்து என்று அவர்கள் அடித்துக் கூறுவதற்கு!

நேற்றே நீ வாங்கிவிட்டாய். இதோ பார் நான் பென்ஸி லால் 'ரைட்' போட்டிருக்கிறேன். பொய் பேசாதே இது பெரிய குற்றம். நாங்கள் சும்மாவிட மாட்டோம், பற்றுச்சீட்டுக் குடுப்போம் என்று மிரட்டினார் கிளாக்கரய்யா பொம்பளைப் பிள்ளைதானே என்ற தைரியத்தில். நானும், கண்ணுச்சாமியும் ஜன்னலெதிரே வந்தோம்.

சம்பளம் கேட்டா, பற்றுச்சீட்டா என்று நான் கேட்டேன். உனக் கிதில் பேச்சில்லை என்றார் அய்யா.

நானும் விடவில்லை, கடைசியில் அவரே இறங்கி வந்தார். இதோ பார் நேற்று சம்பளம் வாங்காதவர்கள் வந்திருக்கின்றார்கள். இவர்களுக் கெல்லாம் நான் இல்லையென்று கூறவில்லையே! கண்ணம்மாவின் சம்பளத்திற்கு நேராக 'ரைட்' போட்டிருக்கிறேன் என்றார்.

நீங்கள் தவறுதலாக ரைட் போட்டுக் கொண்டால் அதற்கு இந்த ஏழையா பழி என்றேன், அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. துரையிடம் சொன்னார். துரை தனக்குத் தெரியாதென்றும் கடைசியில் கணக்குப் பார்த்து மீதி கூடுதலாக இருந்தால் தருவதாகவும் ஒத்துக் கொண்டார்.....

"இதுதான் முறைகேடான செயலென்று நான் கூறுகிறேன். சம்பளத்தை வாங்கிக்கொண்டு எதற்காக வாங்கவில்லை என்று வாதாட வேண்டும். அவர்களிடம் அடாவடித்தனம் பண்ண வேண்டும்?"

ஆறுமுகம் பேசிக் கொண்டிருக்கும்போதே துள்ளிக் குதித்தவர் முதலில் பேசியவர். மற்றவர்கள் அனைவரும் கோவிலில் செபம் கேட்பதுபோல் ஆறுமுகத்தின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

தலையை நொடித்து ஆறுமுகம் அவரைப் பார்த்தான். ஒரு புன்ன கையுடன் தலையை ஆட்டிக் கொண்டான்.

"இது சிறுபிள்ளை வெள்ளாண்மை அல்ல, நாங்கள் நடத்த எண்ணி யுள்ள போராட்டம் வெறும் விளையாட்டும் அல்ல, சிந்தித்து சிந்தித்துப் போட்ட திட்டங்கள் இவைகள். நண்பரின் மூளைக்கு அது எட்டாதிருக் காலாம். நானே விளக்குகிறேன்....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹுய்' என்று ஆர்ப்பரித்து அடங்கியது கூட்டம், ஆறுமுகம் தொடர்ந்தான்.

"சம்பளம் போட்டது போக உள்ள மீதிப் பணம் இருக்க வேண்டியதைவிடக் கூடுதலாக இருந்தால் கண்ணம்மாவுக்கும் கொடுக்கத் துரை சம்மதித்ததிலிருந்து கண்ணம்மா இரண்டாவது முறையாகவும் சம்பளம் வாங்குகின்றாள் என்னும் உண்மை துரைக்குத் தெரியவில்லையென்பது தெளிவாகின்றது. ஆகவே கிளாக்கரய்யா நினைத்தால் நேற்றுச் சம்பளம் வாங்கிய எந்த ஒரு ஆளுக்கும் மறுபடியும் சம்பளம் கொடுக்க முடியும். இந்த ஆளுக்கு நேற்று சம்பளம் கொடுத்தோமே என்று துரை சந்தேகப் படப் போவதில்லை....."

ஆறுமுகம் விளக்கம் சொன்னது பதுளைப் பிரதிநிதிகளுக்கும் விளங்கவில்லை, தலையைச் சொறிந்து கொண்டார்கள். ஒரு ஆளுக்கு இரண்டு தடவை சம்பளம் கொடுக்க பணம் எப்படிக் கட்டி வரும்? எண்ணித்தானே பணம் கொண்டு வருவார்கள் என்று மூளையைக் குழப்பிக் கொண்டார்கள். ஆனால், ஒன்றும் கேட்கத் துணியவில்லை.

முன்பு பேசியவர் மீண்டும் துள்ளிக் குதித்தார். "இது மடத்தனமான விளக்கம். சம்பளத்துக்கான பணம் எப்படிக் கணக்கிடப்பட்டு, எப்படிக் கொண்டுவரப்படுகிறது என்பதை யெல்லாம் அறியாதவர்கள் பேசும் பேச்சு! எந்த எண்ணிக் கையில் பேங்கில் இருந்து பணம் தோட்டத்துக்கு வருகிறது என்பது தோழருக்குத் தெரியாது என எண்ணுகிறேன். கூட்டம் அமைதியாக இருந்தால் விஷயம் தெரிந்தவன் என்ற நிலையில் அதை சற்று விளங்கப்படுத்தலாம் என்று எண்ணுகின்றேன்" என்று கூறினார்.

"தட்ஸ் கரெக்ட் தே காண்ட் பே சம்பொடி டுவைஸ்நோ ஆறுமுகம் ஏதோ தவறு விடுகின்றார்" என்று பதுளையிருந்து வந்தவர்கள் கிசு கிசுத்துக் கொள்ளுகின்றனர்.

விளக்கம் தர முன்வந்தவர் காதுகளிலும் இது விழவே அவர் உற்சாகமடைந்தார். பயம் தெளிந்தவராகப் பேசுவதற்கு தயாராக நின்றார்.

மாவட்டப் பிரதிநிகள் தலைவரிடம் ஏதோ கூறினார்கள். தலைவர் எழுந்து, மற்றவர் கூறப்போகும் விளக்கத்தையும் அமைதியுடன் கேட்கும் படி கூட்டத்தினருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

"விளக்கம் தேவையில்லை".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேசாதே நிப்பாட்டு...."

"கூட்டத்தை விட்டு வெளியேறு".

"பந்தம்.... பந்தம்".

குரல்கள் பின்னி வெளிக்கிளம்பன. பேசத் தயாராய் நின்றவர் பரிதாபமாய் அமர்ந்து கொண்டார்.

ஆறுமுகம் மீண்டும் பேசினான்:

தோழர்களே! நமக்கு வேண்டாதவர்களிடமிருந்தும் நாம் எதை யாவது கற்றுக் கொள்ளவேண்டும். இவருடைய விளக்கம் நம்மை விலைக்கு வாங்கிவிட முடியாது..... செத்துப்போன இந்தத் தியாகி மீது ஆணை, அவன் சிந்திய இரத்தத்திற்கு இவர்களும் சேர்ந்துதான் பதில் சொல்லப் போகிறார்கள். இவரே கூட இரண்டு தடவை சம்பளம் வாங்கி யிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கிளாக்கரய்யாவின் நம்பிக்கைக் குப் பாத்திரமானவர்களில் இவரும் ஒருவர் என்பது நம்மனைவருக்கும் தெரியும்....."

"ஆறுமுகம் நீ இப்போது கூறியவற்றை வாபஸ் வாங்க வேண்டும்.... இல்லாவிட்டால் என்ன நடக்குமென்பது தெரியாது...."

கோபாவேசமாகக் கூறியபடி எழுந்தார் மற்றவர்.

"வாபஸ் வாங்கத் தேவையில்லை"

கூட்டம் எதிரொலித்தது. கூட்டத்தை கையமர்த்திய ஆறுமுகம் தொடர்ந்து கூறினான். "நான் பேசியவைகள் மடத்தனமானவை என்று கூறியதை நீங்கள் முதலில் வாபஸ் வாங்கினால் நானும், நான் கூறியதை வாபஸ் வாங்கிக் கொள்ளத் தயார்".

கூட்டம் கைதட்டி ஆரவாரம் செய்தது. தலைவர் இருவரையும் சமாதானப்படுத்தி ஆறுமுகத்தை அமரச்செய்து விட்டு மற்றவரைப் பேசச் சொன்னார்.

"சம்பளம் போடும் செக்றோல் நமக்கெல்லாம் தெரியும். அதில் தான் நம்முடைய பெயர்கள் எல்லாம் இருக்கின்றன" தன்னுடைய விளக்கத்தை மிகவும் விரிவானதாகத் தொடங்கினார் அவர். எனக்கு இந்த ஆபீஸ், செக்றோல் எல்லாம் அத்துபடி என்று காட்டிக் கொள்ளும் பெருமை அவருடைய பேச்சில் தொனித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நம் ஒவ்வொருவருக்கும் இத்தனை நாள் வேலை, இவ்வளவு சம்பளம், கூடக்கொழுந்து இத்தனை றாத்தல், அதற்கு இவ்வளவு, ஆக மொத்தம் இவ்வளவு,

அரிசி, மாவு, டோபி, பாபர், கோயிலுக்கு, சங்கத்துக்கு என்று இவ்வளவு கழிவு, மீதிச்சம்பளம் இவ்வளவு என்று தனித்தனியாக ஒவ்வொருவருக்காக செய்து முடிக்கின்றார்கள். அஞ்சலைக்கு மீதிச் சம்பளம் அறுபது ரூபா நாற்பது சதம். அமராவதிக்கு அம்பத்தேழு எண்பது.... என்று நம் தோட்டத்திலுள்ள ஆறு நூறு பேர்களுக்கும் உள்ள மீதிச் சம்பளத்தைச் கணக்குப் பார்த்து கொண்டு வருகின்றார்கள். கொண்டுவந்த பணத்தைப் பெயர்ப்படி வாசித்துக் கொடுத்துக் கொண்டே வந்தால், எல்லாருக்கும் சம்பளம் போட்ட பின் மீதி எப்படி இருக்கும்.....? இரண்டு தடவை ஒரு ஆளுக்கு எப்படிச் சம்பளம் கொடுக்க முடியும்? கிளாக்கரய்யாவுக்கு வேண்டு மென்றால் மட்டுமல்லாது துரைக்கே வேண்டுமென்றாலும் எப்படி இது முடியும்?”

“முதலிலேயே யாராவது ஒருவனுக்கோ அல்லது ஒருத்திக்கோ இரண்டு தடவை சம்பளம் கொடுத்து விட்டால் கடைசியில் ஒரு ஆள் சம்பளம் குறைந்து விடாதா?”

உற்சாகமாகக் கேள்வி எழுப்பினார் பேசிக்கொண்டிருந்தவர். கூட்டம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்ததது.

ஆறுமுகம் தலை குனிந்து அமர்ந்திருந்தான்.

தனது பேச்சில் கூட்டம் லயித்திருக்கின்றது என்பது தெரிந்தால் பேசிக்கொண்டிருப்பவரின் உற்சாகத்திற்குக் கேட்கவா வேண்டும்.

“ஆறுமுகம் கூறுவது தவறு! கண்ணுச்சாமியின் சாவு அநியாயச் சாவு! அவர்கள் கூறிக் கொண்டது போல் சம்பளத்தில் ஏதும் தகிடு தத்தங்கள் நடப்பதில்லை நடக்கவும் முடியாது” என்பதை மேசையில் குத்திக் குத்தி நிலைநாட்டிக் கொண்டிருந்தார் அவர்.

பதுளைப் பிரதிநிதிகளில் ஒருவர் திடீரென எழுந்தார். “ஆறுமுகமும் தோழர்களும் கூறுவதில் ஏதும் உண்மை இருக்க முடியாது. உங்கள் சம்பளத்தில் ஆபீஸில் உள்ளவர்கள் கையாடல் செய்யமுடியாது. ஏனெனில் காசு இருப்பது துரையிடம். கணக்கும் செக்றோலும் மட்டுமே இவர்களிடம் இருக்கிறது. ஆகவே, ஆறுமுகம் கூறியது போன்ற கையாடல் எப்படி சாத்தியம் ஆகும்?....”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கூட்டத்தைப் பார்த்துக் கேட்டதாகத் தெரியவில்லை. ஆறு முகத்திடம் கேட்பது போலிருந்தது அவருடைய தொனி.

ஆறுமுகம் எழுந்து மேசையிடம் வந்தான், அலைகடலாய் ஆர்ப் பரித்து அடங்கியது கூட்டம்.

"ஆறுமுகம் சொல்வது தவறு! அதுபோல் எதுவும் உங்கள் சம்பளத் தில் நடக்க முடியாது.... கண்ணுச்சாமி செத்தது அவனுடைய தடித்தன த்தால் என்பவைகளை ஊர்ஜிதப்படுத்திவிடத் துடிப்பவர்களாகவே தோன்றினார்கள் எனக்கு முன் பேசியவர்கள். கண்ணுச்சாமியை உயிருடன் திருப்பத் தாருங்கள் என்று நாங்கள் கேட்டு விடுவோமோ என்ற பயத்தில் சங்கத்துத் தலைவர்கள் எங்களைக் குற்றவாளிகளாக்கிப் பார்ப்பதில் ஈடுபட்டுள்ளார்கள்போல் தெரிகிறது. பாவம் அவர்கள்!

ஒரு பெண்ணின் கற்பைக் காக்கப் போராடி மாண்டவன் கண்ணன். சம்பளத்து வாசலில் நடந்த தகராறுகளுக்கோ, சம்பளத்தில் நடப்பதாக நாங்கள் கூறும் தில்லுமுல்லுகளுக்கோ இந்த அனுதாபக் கூட்டத்தில் சம்பந்தமில்லை. ஆனாலும், சம்பளத்து வாசல் சம்பவத்தை இதுக்குள் இழுத்து என்னைப் பேச வைத்து, சம்பளத்தில் அப்படியொன்றும் நடப்பதில்லை யென்று ருசுப்படுத்துவதன் மூலம் நாங்கள் செய்வ தெல்லாம் தவறென்று கூற எத்தினிக்கும் இவர்களைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.

எங்கோ இருக்கும் தலைவர்மார்களுக்கு எங்களுடைய பரிதா பங்கள் தெரியப் போவதில்லை. இருந்தும், நம் தோட்டத்து மாற்றுக் கட்சி மாரிசாமித் தோழருக்குக்கூட அவைகள் புரியவில்லையென்றால், அவர்கள் பெரிய இடத்துடன் இணைந்து கொண்டு எங்களுக்குத் துரோகம் செய்கின்றார் என்றோ, அல்லது ஒன்றும் தெரியாத ஏமாளியாய் இருக்கின்றார் என்றோதான் ஆகிறது.

கண்ணுச்சாமியின் சாவுக்கு அனுதாபம் கூறவந்த தோழர் மாரிசாமி, ஆபீஸில் அதுவும், சம்பளத்து வாசலில் கிளாக்கரய்யாவுடன் நடந்த வாக்குவாதத்தையும், காலால் உதைத்து அவன் காரைத் தள்ளியதையும் ஏன் பெரிதுபடுத்திப் பேசினார் என்பது நமக்குத் தெரிய வேண்டும். அப்படியென்றால் தோழர்களே கண்ணனின் சாவுக்கும் மேற்படி சம்ப வங்களுக்கும் தொடர்பு இருக்கின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு சம்பவங்களிலுமே முன்னால் நிற்பவர் கிளாக் கரய்யா. ஆபீஸில் அவன் எதிர்த்துப் பேசியது அவரை, பிரட்டி விட்டது அவருடைய காரை. ஆகவே அவருக்கும் கண்ணுச்சாமியின் சாவுக்கும் சம்பந்தம் இருக்கிறதா?

இல்லையென்று தோழர் கூறுவாரேயாகில் இவைகளை ஏன் அவர் சம்பந்தப்படுத்திப் பேசவேண்டும்..... கிளாக்கரய்யாதான் இவனுடைய சாவுக்குக் காரணகர்த்தாவா? தோழர் மாரிசாமியே பதில் சொல்லட்டும் ...."

ஆறுமுகம் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தான். கூட்டம் மீண்டும் குழம்பத் தொடங்கியது.

"பதில் சொல்...."

"பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்......"

"எழுந்து வா.... பதில் கூறும்".

தோழர் மாரிசாமிக்குக் கோபம் தாளவில்லை. "முதலில் உங்கள் சம்பளத்தில் ஏதோ நடப்பதாகக் கூறினார் ஆறுமுகம். அதற்கு நான் விளக்கம் கொடுத்தேன். அதை மறுக்கவோ, ருசுப்படுத்தவோ முடியவில்லை. ஆகவே, தோல்லிவியை மறைப்பதற்காக இப்படி ஒரு புதுக் கதையைக் கூறுகின்றார். இது எத்தனை பாரதூரமானதென்பது அவருக்குத் தெரியவில்லை. இது போன்ற முரட்டுப் பேச்சுக்களால் தான் நாம் ஒரு வீரனை இழந்திருக்கின்றோம்.

ஒரு தொழிலாளியின் சாவுக்குச் கிளாக்கரய்யா தான் காரணம் என்று கூறினால் அய்யா சும்மா இருப்பாரா?... வழங்குப் போடுவாரே......"

அவர் பேசிக்கொண்டேயிருக்கையில் இடைமறித்தான் ஆறுமுகம்.

"கிளாக்கரய்யாவின் வழக்குக்குத் தோழர் ஏன் வக்கீலாக மாறுகின்றார் என்பது எனக்கு விளங்கவில்லை. எங்களுடைய சம்பளத்தில் தில்லுமுல்லுகள் நடக்கின்றன என்பதை ருசுப்படுத்த வேண்டிய அவசியம் இப்போது இல்லை. இப்போது செய்வதால் அதில் பயனும் இல்லை. எங்கள் சங்கப் பிரதிநிதிக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். தோட்டத்துரைமார் சங்கப் பிரதிநிதிகளுடன், நமது பெரிய துரையும் இருக்கும்படி ஒரு சந்திப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். அதில் தோழர் மாரிசாமிக்கும் அனுமதி கிடைக்கும்படி செய்தால் இந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லுமுல்லுகள் எப்படி நடக்கின்றன என்பதை அவரும் தெரிந்து கொள்ளலாம். நம் தோட்டத்து மக்களுக்கு மட்டுமல்லாமல், சகல தோட்டத்து மக்களுக்கும் உண்டான ஒரு பிரச்சினை இது. ஆகவே, அது இப்போது அவசியமில்லை.

இப்போது நமக்குத் தெரிய வேண்டியது கண்ணுச்சாமியின் சாவுக் கும், கிளாக்கரய்யாவுக்கும் தொடர்பருக்கிறதா இல்லையா என்பதே! தோழருடைய பேச்சின் சாயல் தொடர்பு இருப்பதாகவே கூறியது. இது போன்ற முரட்டுப் பேச்சுக்களால்தான் கண்ணுச்சாமி செத்தான் என்று அவர் கூறுகின்றார். அவருக்கு நான் ஒன்று கூறி வைக்க விரும்பு கின்றேன்.

"நேற்றுக் கண்ணுச்சாமி செத்தான். இன்றைக்கு நான் சாகலாம் நாளைக்கே வீரமுத்து சாகலாம். ஆனால், காலங்கள் சாவதில்லை! காலம் இவர்களுக்கு நல்ல பதில் காட்டியே தீரும்...."

கண்ணுச்சாமியின் சாவுக்கும், கிளாக்கரய்யாவுக்கும் சம்பந்தம் உண்டா இல்லையா என்று மாரிசாமி கூறத் தேவையில்லை. ஆறுமுகம் இதோ இவன் கூறுவான்" என்று குரல் கேட்டு அனைவரும் திரும் பினர்.

ஆண்டியப்பனைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு வந்து கொண்டிருந்தான் கணபதி.

## 10

ஆண்டியப்பனின் மனைவி அலமேலு ஒரு வாயில்லாப் பிராணி, வீர முத்து எப்படி எப்படியோ கெஜகர்ணம் போட்டுப் பார்த்து விட்டான். புருஷன் எங்கே போனான் என்ற செய்தி இம்மிகூட வெளியே வர வில்லை.

கிளாக்கரய்யாவின் கார் டிரைவரை "பொலிஸில் உங்களைப் பார்த்ததாகக் கேள்விப்பட்டோமே" என்று ஆறுமுகம் மிரட்டியபோது அவன் பதைபதைத்துப் போனதை வீரமுத்து அவதானிக்கத் தவற வில்லை. கிளாக்கரய்யாவின் டிரைவர் தம்பி பொலிசுக்குச் சொல்லித் தான் பொலிஸ் தோட்டத்துக்கு வந்தது! கட்டிக்கிடந்தவனை அவிழ்த்து விடச் சொல்லித் துப்பாக்கியைத் தூக்கியது! கதறக் கதறக் கண்ணுச்சாமி யைச் சுட்டுத் தள்ளியது! அப்படியென்றால் லயத்துப் பெண்ணிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயமைத்தனம் பண்ணி கண்ணனின் கம்புக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் கதறித் துடித்த குண்டர்களுக்கும், கிளாக்கரய்யாவுக்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டும்.

இதை வீரமுத்து சுலபமாய்ப் புரிந்து கொண்டான். அய்யா வீட்டில் எது நடந்தாலும் அது ஆண்டியப்பனுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. ஆண்டியப்பனைத் தேடிப்போன வீரமுத்துவுக்கு அலமேலுவை மட்டுமே பார்க்க முடிந்தது. "அவரூட்டு அக்கா புருஷனோடு தங்கச்சி புள்ளைக்கு அம்மா வாத்துக்கெடந்து மொதத் தண்ணி ஊத்தறாங்கன்னு போயிறிச்சே" என்று கூறியவள் "எந்தத் தோட்டத்துக்குப் போனாரு" என்ற வீரமுத்துவின் கேள்விக்கு "தெரியாதுப்பா" என்று பதில் கூறினாள்.

கண்ணுச்சாமி சூடுபட்ட நாளிலிருந்து அவனுக்கு அனுதாபக் கூட்டம் நடந்த இன்று காலை வரை ஆண்டியப்பனை எங்குமே காணாததால் அவன் தோட்டத்தில் இல்லை என்ற முடிவுக்கே இவர்கள் வந்தார்கள்.

அய்யாவின் திருவிளையாடல்தான் இதுவும் என்பது இவர்களுக் கெங்கே புரியப் போகிறது!

அய்யா கூறியபடி அம்மாவிடம் ஒரு பத்து ரூபாவை வாங்கிக் கொண்டு தன்னுடைய தூரத்துச் சொந்தக்காரர் ஒருவர் இருக்கும் தூரத்துத் தோட்டத்துக்கு வந்துவிட்டான் ஆண்டியப்பன்.

"இந்தக் கௌாக்கரய்யாவாலேல்லியா நமக்கு இத்தனை எடைஞ் சல்" என்று கறுவிக் கொண்டான்.

மாலையில் வேலைவிட்டு ஆட்கள் லயத்துக்கு வந்து விட்டால் அவனால் வீட்டில் இருக்கமுடியாது. அவர்கள் பேசிக்கொள்வதெல்லாம் தன்னைக் குத்துவதற்காகவே என்று எண்ணிக் கொள்வான். அதற்கா கவே சொற்களைத் தேடிச் சம்பாஷிப்பதாகப்படும் அவனுக்கும்.

அந்த லயத்துக்கு அண்மையில் ஒரு ஆலமரம் இருக்கிறது. ஆயிரம் சொந்தங்களை அரவணைத்துக் கொண்டு ராட்சத உருவில் ராஜாபோல் இருக்கும் இந்த மரத்துக்கு முன் மனிதன் மகா அற்பம்.

பெஞ்ச் பெஞ்சாய் மண்ணுக்கு மேல் நிற்கும் வேர்கள் மரத்துடன் மனிதனும் உறவு கொண்டாடுவதற்காகத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டிக் கொண்டிருக்கும் ஒரு வேர்மேல் அமர்ந்து அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான் ஆண்டியப்பன். கூட்டம் கூட்டாமாய்ப் பறந்த வண்ணத்துப் பூச்சிகள் சூன்யத்தில் கோலம் போட்டுக் கொண் டிருந்தன.

தேயிலைமார்களால் பாப்பாத்திப்பூச்சி அடித்துக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன் கேட்டான், "இதெல்லாம் எங்கேடா போகுது கூட்டம் கூட்டமாய்?" என்று.

"செவனொளி பாதத்துக்குடா சாமி கும்பிட" என்று பதில் கூறிய சிறுவன், "அதோ பார்டா காரு, அதோ பார்டா காரு" என்று கூக் குரலிட்டான்.

மனிதர்கள்தான் சாமி கும்படுவதற்காக சிவனொளிபாதம் போவ தில்லை. இவைகளாவது போகட்டுமே!

வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஆண்டியப்பனுக்குச் சிறுவர் களின் "அதோ பார் கார்" கூச்சல் கேட்டது.

"யாருட்டா இருக்கப் போகுது! கணபதியா இங்கே வரப் போறான்" என்று அசட்டையாகத் திரும்பிப் பார்த்தவன் அசந்தே போனான்.

ஒரு புதுமையே நடந்திருக்கிறது. கணபதியேதான் ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறான்.

ஆறுமுகம், கணபதி, வீரமுத்து அனைவரும் ஒரு கோஷ்டி என்பதும், அவர்களிடம் அகப்படாமல் இருப்பதற்காகத்தான் அய்யா தன்னை இங்கே தலைமறைவாக அனுப்பயிருக்கின்றார் என்பதும் ஆண்டியப் பனுக்குத் தெரியாததல்ல.

அயல் தோட்டத்தில் இரண்டு, மூன்று நாட்கள் கிடந்த ஒரு அலுப்பு, உள்தோட்டத்து ஆள் ஒருவளைக் கண்டதும் திடீரென ஓடி ஒளிந்து கொண்டது. கணபதியைக் கண்டதும், தான் மறைந்து கொள்ளவேண்டும் என்பது ஏனோ அவன் மனதில் படவில்லை.

காரைக் கண்டதும் கூச்சலிட்ட சிறுவர்களைவிடக் கூடுதலான குஷியுடன் "அண்ணே கணபதியண்ணே" என்று கத்திக் கொண்டு காரிடம் ஓடி வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதியும் திடுக்கிட்டுத்தான் போனான். "என்ன ஆண்டியப்பா ஒன்னைய தோட்டத்துல காணலே, இங்கே என்ன செய்யிறே? வறியா எங்கூட?" என்று கேட்டான்.

"இப்பவே வர்றேண்ணே" என்று கூறியவன் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

தோட்டத்தில் நடந்தவைகளைக் கணபதியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டவன் அய்யா வீட்டுக்கு வந்தவர்கள்தான் என்பதையும் கூறினான்.

கணபதியையும், ஆண்டியப்பனையும் கண்டதும் கூட்டத்தினருக்கு ஒன்றும் புரியவில்லை. கணபதி கூறுகின்றானே "தோழர் மாரிசாமி கூறத் தேவையில்லை. இவன் கூறுவான்" என்று "அப்படியானால் கண்ணுச் சாமியின் சாவுக்கு ஆண்டியப்பனும் காரணமா?" என்று கூட்டம் குழம் பியது.

வீரமுத்துவுக்கு விஷயம் விளங்கியது. அவன் ஆண்டியப்பனிடம் ஓடி வருவதற்கும் கண்ணம்மாவை யாரோ தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு போகிறார்கள் என்று மேல் லயத்துச் சிறுமி ஓடி வருவதற்கும் சரியாக இருந்தது.

ஆறுமுகம் பேச்சை நிறுத்திக்கொண்டு கணபதியிடம் வந்தான்.

"கணபதியண்ணே இது யார் வேலையா இருக்குமுன்னு எனக்குத் தெரியும்...... காரை எடுத்துக்கிட்டு வாங்க. நாம போவோம். அந்தப் பெண்ணைக் காப்பாத்தணும்." என்று கணபதியைத் துரிதப்படுத்தினான் ஆண்டியப்பன்.

கணபதியின் கார் வருவதற்குள் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்கு நன்றி கூறி அனுப்பினான் ஆறுமுகம்.

கணபதியின் கார் மேல் லயத்தை நோக்கிப் பறந்தது.

வீரமுத்துவும், ஆறுமுகமும் பின் சீட்டில் இருக்க, ஆண்டியப்பன் முன் சீட்டிலிருந்தான்.

கணபதியின் கார் மேல் லயத்திடம் நின்றதும், பெண்கள் கூட்டம் ஓடிவந்து காரை மொய்த்துக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாரி வைப்போரும், ஓலமிடுவோரும் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறுவோருமாக அந்த இடம் சாவு வீடாகவே காட்சியளித்தது.

லயத்து ஆண்கள் ஏறக்குறைய அத்தனை பேருமே கூட்டத்திற்கு போயிருந்தனர். சம்பவம் நடந்தபோது, லயத்தில் இருந்தவர்கள் அனை வருமே பெண்கள். ஆகவே வந்தவர்களுக்கு வேலை சுலபமாக இருந்து விட்டது.

பட்டப்பகலில்தான் இது நடந்திருக்கிறது தோட்டத்தில்! அதுவும் கூட்டம் கூட்டமாய் மக்கள் வாசம் செய்யும் லயத்தில் தான் இப்படி யொரு பெண் கடத்தல் நடைபெற்றிருக்கிறது.

எதற்காகவோ வெளியே வந்த கண்ணம்மாவை துணியை வீசி முரடன் அந்த ஒரு நிமிடத்தில் அவள் போட்ட கூச்சல் கேட்டு ஓடிவந்த லயத்துப் பெண்கள் என்ன நடக்கிறது, என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, உணர்ந்ததை ஜீரணிக்கும் முன்பாக அவளைத் தூக்கிக்கொண்டு நடந்தவன் அப்போது தான் வருவது போல் வந்து நின்ற ஒரு காரில் ஏறிவிட்டான்.

அழுவதையும், ஆர்ப்பாட்டம் பண்ணுவதையும், கூடி நின்று ஒப்பாரிவைப்பதையும் தவிர இனி ஏதும் அவர்களால் செய்வதற் கில்லை.

அழுகையினூடே ஒருத்தி கூக்குரலிட்டாள் ஓடிப்போய் சொல்லுங் களேன் யாராச்சும் ஓடிப்போய்ச் சொல்லுகளேன் என்று .

அதன் பிறகுதான் ஒரு சிறுமி கீழே பள்ளிக் கூடத்தை நோக்கி ஓடினாள்.

நமது சினிமா கதாநாயகர்கள் கதாநாயகிகளைத் தூக்கிக் கொண்டு நடப்பது போல் அந்த முரடன் நடந்தான்.

மயங்கி விழும்வரை அவனுடைய கொழுத்த புஜங்களில், தடித்த தோளில், உரோமம் மண்டிக்கிடந்த மார்பில் குத்தினாள், அடித்தாள், கிள்ளினாள்.

அவன் கேலியாக நகைத்தபடி அவளுடைய முகத்துக்கு நேராக நாக்கை நீட்டி, வலது கரத்தை உயர்த்தினான், உயர்ந்த அவளுடைய முகத்தில் உதட்டை நோக்கி நீண்ட அவனுடைய எச்சில் ஒழுகும் நாக்கு அவள் திமிறித் திரும்பியதால் கன்னத்துக் கதுப்புகளை ஈரமாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரின் பின் சீட்டில் உட்கார்ந்த பிறகும் கூட, அவளை மடியை விட்டு இறக்கவில்லை அவன். தனக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த மற்றவனுடைய மடியில் அவளுடைய தலையை அமுக்கிவைத்தபடி அவனிடம் ஏதோ ஜாடை காட்டினான்.

ஒரு கையால் அவளுடைய வாயைப் பொத்திப் பிடித்துக் கொண்டு, மறுகையால் அவளுடைய கைகளையும், உடலையும் சேர்த்து அமுக்கிப் படித்துக் கொண்டான் மற்றவன். கால்களால் உதைத்துப்பிரள எத்தனித்தவளை, தனது இடது கையால் சுற்றிப் பிடித்துக் கொண்டான் அவளைத் தூக்கி வந்தவன்.

அவனுடைய வலதுகை அவளது இடுப்புச் சேலையை உருவி விடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது.

ஒரே துள்ளாகத் துள்ளி எழுந்தவளை அமுக்கிவைத்த முரடன், அருகில் இருந்தவனை முறைத்துப் பார்த்தான். எஜமானுக்குப் பயந்த ஊழியனைப் போல் "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சும் பார்வையுடன் அவளை அசுரத்னமாக அமுக்கிப்பிடித்துக் கொண்டான் மற்றவன்.

இரண்டு முரடர்களுடன் போராடி மீள முடியாத அந்தப் பேதை, 'அய்யோ கடவுளே எனக்கு மயக்கம் கூட வரமாட்டேங்கிறதே' என்று உருகிக் கசிந்து கொண்டிருக்கையில், அவளுடைய உடலின் சூடான இடங்களில் ஊர்ந்து கொண்டிருந்தது அந்த முரட்டுக் கரம்.

பதுளையை நோக்கிப் பறந்து கொண்டிருந்த கணபதியின் கார் பாலத்து வளைவில் குலுங்கி நின்றது. எதிரே வந்துகொண்டிருந்த காருடன் மோதிக் கொள்ளாமல் ஒரு இழையில் தப்பி நின்றது.

"கணபதிட்ட பாற தெங்டொய்ஸ்வாகே நேத!" என்ற கணபதியின் காரோட்டத்திற்குத் தட்டிக்கொடுத்தான் எதிரே நினற கார் டிரைவர் களுமாத்தியா.

களுமாத்தியா ஒரு பிரைவேட் அயரிங்கார் டிரைவர். பதுளையில் உள்ள அத்தனை கார்களையும், அவைகளின் சாரதிகளையும் கணபதிக்குத் தெரியும். அவனும் அயருக்குக் காரோட்டும் டிரைவர்தானே! தோட்டத்துக்குள்ளே தான் கூலிக்காரன்.

களுமாத்தியா கூறியதைக் கேட்டு சிரித்துக்கொண்ட கணபதி, "நம்ம றோட்டுத்தானே இன்னைக்கு நேத்தா ஓட்டுறேன் இதுல; என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுமாத்தியாவுக்குத் தமிழில் கூறியபடி அது சரி இப்ப கார் ஒண்ணு போச்சா எதுக்க.....?" என்று கேட்டான்.

சிறிது நேரம் யோசித்த களுமாத்தியா ஆமாம் என்பது போல் தலையை ஆட்டினான்.

"அளுத் காரெ க்காக் கியா.... பதுளை கார் இல்லே அது.... பின்னுக்கு இரண்டு பேர் இருந்தது.... யாரோ சொகமில்லாத பொம் பளையைக் கொண்டு போனான் போலிருக்கும். ஏ காரெக்கமே பாறே மம அதமாய்தெக்கெ....."

களுமாத்தியா பேசிக்கொண்டிருக்கும் போதே, சர்ரென்று காரைப் பின்னுக்கிழுத்து, வங்கியை ஒட்டி வெட்டி ஒரு ஒடி ஒடித்துக் கொண்டு "நான் அவசரமாப்போறது யன்னாங்" என்றபடி காரை மறுபடியும் பறக்க விட்டான் கணபதி. இரண்டு பக்கமும் தேயிலைகள் விரைந்தோடின. பாதை ஓரத்தில் வளர்ந்து நின்ற சவுக்கு மரங்கள், விர்க் விர்க்கென்று ஓடி மறைந்தன.

'கொம்பு முறிச்சான் கோயில்' மொடக்கில் கார் திரும்பும் போது ஒரு கையில் லாம்பெண்ணை கலனும் தோளில் ஒரு சிறு மூட்டையுமாக களைத்துத் துவண்டு வந்து கொண்டிருந்தான் குப்புசாமி.

குப்புசாமி, கணபதி இருக்கும் அதே தோட்டத்தின் உரப்பட்டிக் காவல்காரன். அவனுடைய உத்தியோகம் இரவில். அதுதான் இருட்டு முன் தோட்டத்தை அடைந்து விட வேண்டும் என்று விரைந்து கொண்டி ருக்கிறான், கணபதியின் கார் அவனருகில் வந்து நின்றதும், "என்னண்ணே நானு ஓங்களை பதுளை முழுக்க தேடிட்டு சரி நடந்தாவது போயிறு வோமின்னு ஓடியாறேன். நீங்க என்னடான்னா இப்ப தான் கீழே போறீங்க; என்றான்.

"ஆமா காவக்காரரே ஒரு பெரிய அவசரம். அதான் இப்பப் போறேன். எனக்கு முன்னாடி ஏதாவது கார் போச்சா."

"ஒரு புதுகார் போச்சி அது நம்ம றோட்டுல வழமையா ஓடுற காரில்லே. பின் சீட்டுல ரெண்பேர் வீமன் காமனாட்டம் இருந்தானுக. அவ்வளவுதான்.....;

"இப்பத்தான் களுமாத்தியா வூட்டு காரு போச்சே நீங்க அதுல தொத்தியிருக்கலாமே......"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவரூட்டு றேட்டு ஜாஸ்த்தி அதான்...."

"சரி சரி நாங்க வர்றோம். அந்தக் காரைத்தான் விரெட்டிப் போறோம் கண்ணம்மாளைத் திருட்டுத்தனமாக தூக்கிக் கிட்டுப் போறானுக...."

"ஐயய்யோ நெஜமாவா கணபதியண்ணே" என்ற குப்புசாமியின் கூச்சலைக் கேட்க அங்கு ஒருவரும் இல்லை,

கார் பறந்து கொண்டிருந்தது.

டவுனை அடைந்ததும் ஆண்டியப்பன் கூறியபக்கமாக விரைந்தது கார்.

"இதுதான் இடம், இங்கே இருந்துதான் ஆட்கள் வந்திருக்க வேண்டும்" என்று ஆண்டியப்பன் கூறியதும், சற்றுத் தள்ளி ஒரு ஓரமாக காரை நிறுத்தினான் கணபதி.

ஆண்டியப்பனைத் தொடர்ந்து ஆறுமுகமும் வீரமுத்துவும் திடுதிடு வென ஓடிவந்தனர்.

அன்றொருநாள் கிளாக்கரய்யா காரை நிறுத்தி நாலைந்து பேரைத் தூக்கிப்போட்டுக்கொண்டு வந்தாரே. அந்த கராஜின் முன்தான் இப்போது இவர்கள் நிற்கின்றனர்.

கராஜ் பூட்டிக்கிடந்தது. பலகை இடுக்கு வழியாக உற்றுப் பார்த் தார்கள். உள்ளே சலனம் ஏதும் இல்லை. மீண்டும் உற்றுப் பார்த்தார்கள். ஒன்றையும் காணவில்லை.

வீரமுத்து கராஜ் வாயிலை பலமாகத் தட்டினான். பலங்கொண்ட மட்டும் உரக்க ஆட்டினான். ஒரு சில வினாடி அமைதிக்குப்பின் ஏதோ முணு முணுப்புகள் லேசாகக் கேட்டன.

மீண்டும் அமைதி.

வீரமுத்து சும்மா இருக்கவில்லை. தடதடவென்று தட்டினான். மீண்டும் மீண்டும் தட்டினான்.

உள்ளே லேசாக முனகல் கேட்கத் தொடங்கியது. முனகல்களைத் தொடர்ந்து "யாரது?" என்று பலமாகக் கேட்டது ஒரு கரகரத்த குரல்.

"திற கதவை.... இல்லாட்டி ஒடைப்போம்" என்று கூறிய படி மீண்டும் பலமாகத் தட்டினான் வீரமுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமுத்து விடாமல் தட்டிக் கொண்டே இருந்ததால் கராஜின் முன் பக்கத்துக் கதவு போன்ற பலகை இலேசாகத் திறபட்டது.

திறபட்ட கதவை வீரமுத்து பாய்ந்து பிடித்துக் கொண்டான். கதவு மறுபடியும் மூடிக் கொள்ளுமோ என்று அதைத் தள்ளிப் பிடித்துக் கொள்ளும் எண்ணத்துடன் அந்த இடத்தை நோக்கிப் பாய்ந்தான் அவன். ஆனால் நடந்ததோ வேறு.

திறப்பட்ட விளிம்பல் தெரிந்த ஒரு முரட்டுக்கை அவனை உள்ளே இழுத்துப் போட்டுக் கொண்டு கதவைப் பூட்டிக் கொண்டது.

உள்ளே வந்துவிழுந்த வீரமுத்துவுக்கு ஒரு வினாடி ஒன்றுமே புரியவில்லை, எதிர்பாராத ஒரு குழப்ப நிலையில் இருந்த அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு உள்ளே இருப்பவர்களுடைய தாக்கு தலுக்கு ஈடு கொடுப்பதற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்குள் 'குபீர்' என்று அவனுடைய முகத்தில் இறங்கியது ஒரு குத்து.

திகைத்துப் போய் வெளியே நின்றுவிட்ட ஆறுமுகத்துக்கு கதவு ஆடியது தெரிந்தது. யாரோ அடிபட்டு கதவில் மோதியது கேட்டது. வீரமுத்துத்தான் அடிவாங்குகிறானோ? தனியாக மாட்டிக்கொண்டானோ என்று துடி துடித்தபடி பலகை இடுக்கால் உள்ளே பார்த்துக்கொண்டிருந் தான்.

விழுந்தவன் எழுந்திருக்க முயலுகையில் அவனுடைய நெஞ்சில் விழுந்தது ஒரு உதை. 'நங்' கென்று உதையை வாங்கிக் கொண்டவன், தன்னை எத்தனை பேர் தாக்குகிறார்கள் என்பதை நோட்டம் பார்த்தான். ஒரு முரடன் மட்டுமே அவனுடைய கண்ணுக்குத் தெரிந்தது. வேறு ஒருவரையும் காணவில்லை.

"அட ஒருத்தன்தான்! இது தான் நியாயம்! ஆறுமுகமும் உள்ளே வந்திருந்தால் இரண்டு பேர் சேர்ந்து ஒருத்தனை அடித்ததாக அல்லவா இருக்கும். அது வீரமாகாதே" என்று நினைத்துக் கொண்டவன் தரையி லிருந்து நிமிர்ந்து கதவில் சாய்ந்து கொண்டான்.

ஒரே குத்தில் அவனை வீழ்த்திய முரடன் அவனை எழுந்திருக்க விடாமல் நெஞ்சில் ஒரு உதைவிட்டு, வேகமாக மறுகாலை ஓங்கி அவனுடைய முகத்துக்குக் குறிபார்த்து உதைத்தான். அது மட்டும் அவனுடைய முகத்தில் தாக்கியிருந்ததென்றால் வீரமுத்துவுக்கு முகம் இருக்காது. பாதி வாய் கிழிந்து தொங்கும். மூக்கு உடைந்து கொடகொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இரத்தம் கொட்டும். நீட்டிக் கொண்டிருக்கும் முரனுடைய கட்டை விரல் நகம் அவனுடைய கண்ணைப் பொட்டையாக்கியிருக்கும். முரடனுடைய குறியும் அதுதான். 'இந்த உதையுடன் அவன் காலி! எழும்பவிடக்கூடாது' என்று எண்ணிக்கொண்டு தான், தனது முழுப் பலத்துடன் அசுரத்தனமாக உதைத்தான்.

"ஒருத்தனுக்கு ஒருத்தன் தானே" என்று தன்னைத் தைரியப்படுத்திக் கொண்ட வீரமுத்து அடிப்பவனை மடக்க ஆயத்தமாக்கி கொண் டான். அதன் முதற்படி தான் கதவில் சாய்ந்து கொண்டு அமர்ந்தது.

ஓங்கியிருக்கும் அவனுடைய கால் எந்த இடத்தில் உதைக்கு மென்பதை வூகித்துக்கொண்டவன் சர்வ ஜாக்கிரதையுடன் அந்த உதைக் காகக் காத்திருந்தான்.

முகத்தை நோக்கி கால் விரைந்து கொண்டிருக்கையில் 'விசுக்' கென்று மீண்டும் தரையில் சரிந்தான் வீரமுத்து.

அரக்கத்தனமாக வந்த உதை அதே வேகத்துடன் கதவில் விழுந்தது. நிலைப்படியுடன் கதவை இணைக்கும், நீட்டிக் கொண்டிருக்கும் அந்த இரும்பு அவனுடைய காலை நன்றாகப் பதம்பார்த்துவிட்டது.

'அம்மே' என்று அலறியவன் பொறி கலங்கிப் போனான். அவனுக்கு அது எதிர்பாராத அடி! அவன் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு திரும்பு வதற்குள் அவனை அடித்து நொறுக்கி விடவேண்டும். அது தான் வீரமுத்துவின் அப்போதைய உத்தி.

அம்மே என்று காலைத் தூக்கிப் பிடித்துக் கொண்டவனுடைய மற்றக்காலில் முழங்காலிடம் பின்புறம் ஒரு உதை விட்டான் வீரமுத்து. ஒற்றைக் காலால் நின்று கொண்டிருந்தவனுக்கு இது இரண்டாவது எதிர்பாராத அடி, மற்றக் காலும் மடங்கவே தடுமாறி விழுந்தான் அவன்.

அவன் விழுந்ததும் இவன் எப்படித்தான் எழுந்தானோ தெரிய வில்லை 'பளார்' என்று பலமாக ஓர் உதைவிட்டான் அவனுடைய முகத்தில்.

உதையை வாங்கிக்கொண்டவன் முகத்தை உதறிக் கொண்டான். உதடு கிழிந்து இரத்தம் ஒழுகியது. அவனை எழுந்து நிற்கவிட்டான் வீரமுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க முடியாமல் தடுமாறியபடி நின்றவனிடம் வீரமுத்து கேட்டான் "எங்கே அந்தப் பொண்ணு?"

"எந்தப் பொண்ணு?" என்று தடுமாறியவனுடைய முகத்தில் 'பளீர்' என்று விழுந்தது ஒரு அறை.

"ம்ம்.... சுருக்குனா சொல்லு. எங்கே அந்தப் பொண்ணு?"

"அதோ பார் அந்த மூலையிலே" என்று அவன் கூறியதும், அவன் காட்டிய பக்கம் திரும்பினான் வீரமுத்து.

திரும்பியது தான் தாமதம், அவனுடைய இடுப்பில் விழுந்தது பலமான உதை. சாக்குப் படங்கால் கட்டப்பட்டிருந்த திரை போன்ற ஒரு மறைவின் பின்னால் எகிறிப் போய் விழுந்தான் வீரமுத்து.

விழுந்தவன் எழுந்திருப்பதற்காகத் தலை நிமிர்த்துகையில் எதிரே தெரிந்த காட்சி கண்டு திடுக்கிட்டுவிட்டான்.

உடம்பில் ஒரு சிறு துணிகூட இல்லாமல் ஒரு பெண் கட்டிலில் கிடந்தாள். அவளுடைய முதுகுப்புறம் மட்டுமே அவனுக்குத் தெரிகிறது. மொட்டையாகக் கிடக்கும் அந்த இடுப்பைச் சுற்றிக்கொண்டிருந்தது ரோமம் மண்டிக் கிடக்கும் ஒரு கை.

நிர்வாணமாக ஒரு பெண்ணைப் பார்த்தது கிடையாது. அவனுடைய வயதுக்கு! அப்படி ஒரு பெண்ணையும், அவளுடைய உடலைத் தழுவியபடி ஒரு ஆணையும் திடீரெனப் பார்த்ததும் வெலவெலத்துப் போனான் வீரமுத்து.

கண்ணம்மாவா இது? அட கடவுளே அவளைப் பிணமாக்கிப் போட்டுக் கொண்டு அந்த அழகிய உடலுடன் விளையாடுகின்றார்களா இந்தப் பாவிகள்"

அவனுடைய தலை சுற்றியது. கிர்ரென்று பலமாகச் சுற்றியது. அவனுள்ளே ஒரு ஆக்ரோஷம் பொங்கியது. பேய் போல் எழுந்து நடந்தான் அந்தக் கட்டிலை நோக்கி.

அவன் இரண்டடி எடுத்துவைத்திருப்பான். அவனை இழுத்துத் திருப்பி, அவனுடைய முகத்தில் குத்தினான் மற்றவன். குத்து வந்த அந்தக் கையைப் பிடித்து மடக்கிப் பலம் கொண்டமட்டும் ஒரே திருப்பாகத் திருப்பினான் வீரமுத்து. அவன் இப்போது வெறிபிடித்தவனைப் போல் காணப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை முறுக்கப்பட்டதால் "தெய்யனே" என்று கத்தி விட்டான் அவன். முறுக்கிய கையை முதுகுடன் சேர்த்துப் பிடித்தபடி அவனுடைய விலாவில் குத்தினான் வீரமுத்து.

விலாவில் அடிவிழுந்ததால் மூச்செடுக்க முடியாது சிரமப் பட்டவன் சுருண்டுபோய் விழுந்தான்.

அவன் விழுந்ததும் கட்டிலை நோக்கி நடந்தான் வீரமுத்து. அதோ இருக்கிறது கட்டில். இன்னுமொரு வினாடியில் அவன் கண்ணம்மாவின் உயிரற்ற உடலை நெருங்கிவிடுவான்.

"ஆம்! அவள் செத்துப்போய்விட்டாள். உயிர் இருக்கும் வரை இப்படியொரு இழிவுக்கு உடன்பட்டிருக்கவே மாட்டாள். அவளை இணங்க வைக்க முடியாத இம்மிருகங்கள் அவளைக் கொன்றுவிட்டுக் கொஞ்சுகின்றன."

அவனுடைய மனம் இப்படி எண்ணிக்கொண்டது.

அவன் இன்னும் இரண்டடி வைத்தால் கட்டிலை அடைந்து விடலாம். அப்போது மிகவும் பயங்கரமாக எழுந்து நின்றான் அந்த மனிதன். அவனுடைய கைகளையும், கால்களையும், உடலையும் பார்க்கும் போதே குலை நடுங்கும்.

அவன் இருந்த நிலையில் அவனைப் பாதியில் குழப்பியவனை நோக்கி அவன் எப்படிப் பாய்வான் என்று கூறத் தேவையில்லை.

அவனுடைய கொழுத்த உடலும், கோரமுகமும், கோபம் பொங்கும் கண்களும் வீரமுத்துவை ஒன்றும் செய்துவிடவில்லை.

கட்டிலைவிட்டு எழுந்து நின்றவனை மறுபடியும் இழுத்து அணைத்துக்கொண்ட கண்ணம்மாவின் செய்கை தான் அவனை வெலவெலக்கச் செய்தது.

சீ மானங்கெட்ட ஜென்மம். நீயும் ஒரு பெண்ணா? உனக்காகவா இத்தனை சிரமப்படுகின்றோம்..... "ஆறுமுகம் நீ ஏமாந்துட்டே....." என்று நினைத்தவாறு கதவை நோக்கித் திரும்பினான்.

அவன் திரும்பிவிட்டதும் பயந்துகொண்டு பின் வாங்கி விட்டதாக எண்ணிப் பலமாகச் சிரித்தான் அந்த மனிதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரத்தில் விலாவில் அடிபட்டுக் கிடந்தவனும் எழுந்துவந்து பலமாகச் சிரித்தான். இருவரும் சிரிக்கவே வீரமுத்துவுக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

"பயந்துகிட்டு ஓடுறேன்னு நெனைக்காதேடா" என்றபடி அவனைப் பிடித்து இழுத்து "இந்தா வாங்கிக்கோ" என்று ஒரு உதைவிட்டான்.

அவன் எகிறிப்போய் கட்டிலில் விழவும். கத்தியபடி எழுந்த அந்தப் பெண் கையில் கிடைத்த ஒரு துணியால் தன்னை மறைத்துக்கொண்டு நின்றாள்.

வீரமுத்து உண்மையிலேயே திடுக்கிட்டுப் போய் விட்டான். அது கண்ணம்மா இல்லை. வேறு யாரோ ஒருபெண்.

"ஐயோ! நமக்கேன் வம்பு" என்று ஓடிப்போய் அவன் கதவைத் திறப்பதற்கும் ஆறுமுகமும், ஆண்டியப்பனும் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

கதவு மறுபடியும் மூடிக்கொண்டது.

"கண்ணம்மா இங்கே இல்லே ஆறுமுகம். ஆண்டியப்பன் நம்பளை அநியாயமா இங்கே இழுத்தாந்திருக்கான்" என்று ஆறுமுகத்திடம் வீரமுத்து கூறிக்கொண்டிருக்கும்போதே, கட்டிலிலிருந்து எழுந்து நின்ற மனிதன் ஆறுமுகத்தைத் தாக்கினான்.

அரையும் குறையுமாக நின்று கொண்டிருந்த அந்தப் பெண் சாக்குத் திரைக்குப் பின்னால் ஓடி மறைந்து கொண்டாள்.

இரண்டு கைகளையும் ஒன்றாகக் கோர்த்துப் பிடித்துக் கொண்டு கீழிருந்து மேலாக அவனுடைய மோவாயில் மோதினான் ஆறுமுகம்.

நிலை தடுமாறி மல்லாந்து விழப்போனவனை இரண்டு கைகளாலும் மறுபடியும் மோதினான் ஆறுமுகம். திடீர் திடீரென்று விழுந்த தாக்கு தல்களுக்குத் தாக்குப்படிக்க முடியாதவனாக எகிறிப்போய் விழுந்தான் அவன். "இவர்களை இங்கே நான் கூட்டி வந்தது தப்போ.... கண்ணம்மாவை இவர்கள் தூக்கிவரவில்லையா.....! அப்படியானால் இந்தப் பெண் யார்? அவளுக்கு இங்கு என்ன இந்த நேரத்தில் வேலை.?" என்று மூளைக் குழப்பிக் கொண்ட ஆண்டியப்பன் கராஜின் மூலை முடுக்குகளை யெல்லாம் ஆராய்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசர அவசரமாகச் சட்டையை இழுத்துவிட்டுப் 'பின்' குத்திக் கொண்டிருந்த பெண்ணிடம் மெதுவாகப் பேச்சிக் கொடுக்க ஆண்டியப்பன் முயற்சி செய்கையில் 'தடால்' என்று வந்து அவர்கள் மேல் விழுந்தான் அந்த முரட்டு மனிதன்.

ஆறுமுகத்தின் அடி எப்படி இருக்கும் என்பது ஆண்டியப்பனுக்கு தெரியாததல்ல. ஆனால் இவனைப் போல் இவ்வளவு பெரிய உடலை வைத்துக்கொண்டிருப்பவன் கூட இப்படி வந்து விழுவது அவனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது. "நான் பரவாயில்லை" என்று நினைத்துக் கொண்டவன் அந்தக் தடியனை மறுபடியும் திரும்பிப் பார்த்தான்.

ஒரு நீண்ட இரும்புக் கம்பியுடன் எழுந்து கொண்டிருந்தான் அவன்.

அந்த இரும்புக் கம்பியுடன் அவன் எழுந்து விட்டானென்றால், எதிரே யார் வந்தாலும் மண்டையைப் பிளந்து விடுவான். எத்தனை பேர் வந்தாலும் மண்டையைப் பிளந்து விடுவான்.

ஆண்டியப்பன் ஒன்றும் யோசிக்கவில்லை. பளீரென அவன் மேல் பாய்ந்து அவனுடைய நெஞ்சில் உட்கார்ந்து கழுத்தை அமுக்கிக் கொண்டான்.

இவனை உதறிவிடுவதில் தான் முரடனுடைய கவனம் போகுமே தவிர இரும்புக் கம்பியைத் தூக்குவதில் போக முடியாது.

அது தான் ஆண்டியப்பனின் குறி.

அதே போலவே அவனும் ஆண்டியப்பனை உலுக்கு உலுக்கித் தள்ளிவிடுவதிலேயே கவனமாய் இருந்தான். இரும்புக் கம்பியை மறந்து விட்டான். ஆண்டியப்பனை இழுத்தெறிந்துவிட்டு, அவன் எழுந் திருக்கும் போது ஓங்கிய கரத்துடன் அவனருகே தயாராய் நின்று கொண்டிருந்தான் ஆறுமுகம்.

எழுந்தவன் நிற்பதற்குள் 'பளார்' என்று விழுந்தது மூக்குத் தண்டில் ஒரு குத்து. முகத்தை உதறிக்கொண்டவன் மறுபடியும் கீழே விழுந்தான்.

மற்ற முரடனைத் துவைத்தெடுத்துக்கொண்டிருந்தான் வீரமுத்து.

சேலையைக் கட்டிக்கொண்ட அந்தப் பெண் நைசாகக் கதவை நோக்கி நழுவினாள். மோதிக்கொள்ளும் நால்வரும் தன்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்கமாட்டார்கள் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். ஐந்தாவதாக இருப்பவன் தன்னைக் கவனிக்கிறானா என்பதை அவதானித்தாள். ஆண்டியப்பன் அப்போது தான் ஆறுமுகத்துக்கு ஏதோ உதவி செய்து கொண்டிருந்தான்.

இதுதான் சரியான தருணம். கதவைத் திறந்து கொண்டு வெளியே போய்விட்டால் அவளை யாரும் எதுவும் செய்ய முடியாது.

இரண்டு ஆண்களுடன் பூட்டிய வீட்டுக்குள் ஆபாசமாக அவள் இருந்தாள் என்பதற்கெல்லாம் யாரும் சாட்சி கிடையாது. உள்ளே இருந்தால் ஒரு நேரத்தைப் போல் உள்ளே நுழைந்து தாக்கும் இவர்கள் மற்ற இருவரையும் பிடித்துக் கொண்டால் தானும் அநியாயமாகக் குற்றவாளியாக வேண்டும். தாசித்தனம் இன்னும் அங்கீகரிக்கப்பட வில்லையே குதிரை ரேஸைப் போல!

"இந்த மூவரும் யார்? ஏன் உள்ளே நுழைந்து அடிக்கின்றார்கள். இவர்கள் என்னைக் கூட்டிக்கொண்டு வந்ததைக் கவனித்துப் பின் தொடர்ந்து வந்த சி.ஐ.டி.மார்களா? பார்த்தாலும் அப்படித் தெரிய வில்லையே யாராய் இருந்தால் நமக்கென்ன? உள்ளே இருக்கும் வரை நமக்கும் ஆபத்துதான்" என்று எண்ணியவளாக மெதுவாகக் கதவைத் திறந்தாள்.

உள்ளே சண்டை உக்கிரமாக நடந்து கொண்டிருக்கிறது. லேசாகத் திறந்து கொண்ட கதவிடையால் அவள் நைசாக வெளியே நழுவிக் கொண்டிருந்த அதே சமயம் நீட்டிய துப்பாக்கியுடள் அவளையும் சேர்த்துத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தது பொலிஸ். கடைசியாக வந்து கொண்டிருந்தான் கணபதி.

முரடனை அப்படியே விட்டுவிட்டு பொலிஸ் பக்கம் திரும்பினான் வீரமுத்து.

"ஆஹா பயல்களே வந்தீர்களா" என்று ஆக்ரோஷமாகத் துடித்தது அவனுடைய நெஞ்சு. "அம்மா செத்தேன்" என்று கதறிய கண்ணுச் சாமியின் முகம் அவன் முன்தோன்றித் தோன்றி மறைந்தது.

"நாம் பொலிஸ் ஸ்டேஷனுக்குப் போக முடியாவிட்டாலும் அவர்களை இங்கு வரவழைத்துப் பழி வாங்குவோம். பழிக்குப் பழி. உயிருக்கு உயிர் வாங்கியே தீருவோம்" என்று அன்று சபதமெடுத்தது அவன் மூளைக்குள் மின்னலாய் வெட்டியது. வேர்த்துப் பிசுபிசுத்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளைப் பிசைந்து பிசைந்து புஜங்களுக்கு முறுக்கேற்றிக் கொண்டிருந் தான்.

அவன் என்ன யோசிக்கிறான். எப்படி யோசிக்கிறான் என்பதை யூகித்துக் கொண்டான் ஆறுமுகம். காக்கிச் சட்டையைக் கண்டதும் அவனுக்குமே முதலில் ஆத்திரம் தான் வந்தது. ஆனால் அவர்களைக் கூட்டி வந்திருப்பதோ கணபதி.

இவர்களே பொலிஸை வரச் சொல்லிவிட்டு இவர்களே பொலி ஸைத் தாக்கினால் அதைவிட மோசமான கேசே இருக்கமுடியாது. ஆகவே தன்னை அடக்கிக் கொண்டவன் வீரமுத்துவை அவதானித் தான். எந்த வினாடியும் அவன் பொலிஸ்காரர் மேல் பாயலாம் என்பதை அறிந்துகொண்ட ஆறுமுகம் அவனைப் பற்றிப் பிடித்துக் கொண்டான்.

பொலிஸ்காரர்களைப் பின் தொடர்ந்து வந்த கணபதியைப் பார்த் தான் வீரமுத்து. தன்னை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் ஆறுமுகத் தைப் பார்த்தான். மறுபடியும் ஆறுமுகத்தைப் பார்த்தான். அவனுடைய ஆவேச உணர்ச்சி மெதுவாக இறங்கியது.

"எங்கே அந்தப் பெண்....?"

பொலிஸ்காரரில் ஒருவர் கணபதியைக் கேட்டார்.

"இங்கே தாங்க இருக்கணும்....." என்றான் கணபதி.

"இங்கே இல்லை....." இது ஆறுமுகம்!

ஆறுமுகத்தின் பதிலைக்கேட்டதும் கணபதி திடுக்கிட்டு விட் டான்.

கடத்திக்கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் பெண் உள்ளே யில்லை என்றால் இந்தக் கலாட்டாவுக்கே அர்த்தம் கிடையாதே! கராஜினுள் நுழைந்து எங்களை அடித்தார்கள் என்று அவர்கள் இவர்கள் மேல் பழியைப்போட்டுவிட்டால்!

"இங்கே எந்தப் பொம்புளையும் கெடையாதுங்க. இவனுக தான் கதவைத் தட்டித் தொறந்து எங்களை வம்புக் கிழுத்தானுக!"

ஆறுமுகத்திடம் அடிபட்ட முரடன் 'எஸ்.ஐ.' யிடம் கூறினான். அவனுடைய குரலில் ஒரு அசாதாரணப் பணிவு இருந்தது.

கைப்பிரம்பை உள்ளங்கையில் உருட்டியபடி கராஜுக்குள் உலவினார் சப் இன்ஸ்பெக்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பெண்ணைக் கடத்தி இருக்கின்றார்கள். அந்தப் பெண் இங்கே இல்லை. ஆனால் வேறொரு பெண் இருக்கின்றாள்.... அப்படி யென்றால்.... அப்படியென்றால். என்று யோசித்தபடி நடந்து கொண்டிருந்தவர், அந்தப் பெண்ணைச் சுற்றிவந்தார். அவளை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு, மறுபடியும் நடந்தார். அவளுடைய முதுகுப்புறம் அவருடைய கண்ணில் பட்டது. ஒரு மின்னல் வெட்டியது.

ரவிக்கைக்குக் கீழே, நடுமுதுகின் பள்ளத்தில் தொங்கிக் கொண்டிருந்தது பிரேஸியரின் ‘ஹுக்’ லேசாகப் புன்னகைத்துக் கொண்டவர் நடக்கத் தொடங்கினார்.

“அப்படியென்றால் கழட்டிவிட்டிருந்ததை அவசரத்தில் மாட்டிக் கொண்டு கிளம்பியிருக்கின்றாள்..... ரைட்” அது போதும் அவருக்கு.

“இங்கே எந்தப் பொம்பளையும் இல்லேங்கிறியே, இது யாரு டாப்பா......?”

அந்தப் பெண்ணைச் சுட்டிக்காட்டியபடி கேட்டான் ஆண்டியப்பன்.

“இவதாங்க மேல்ல ஒரு துணிகூட இல்லாம் இவனோடு படுத்துக் கெடந்தா....” என்றான் வீரமுத்து.

ஐயய்யோ பொய் அத்தனையும் பொய். இது யாருன்னு கொட எங்களுக்குத் தெரியாதுங்கடவுன்லே தெரியும் தானுங்களே பொலிஸ் வந்தா ஒரு கூட்டமும் கூடவே வந்துடாதா வேடிக்கை பார்க்க, அப்படி வந்த பொண்ணாயிருக்கும்”

இன்ஸ்பெக்டரின் முகம் இறுகியது. நாசித்துவாரம் விரிந்து சிவந்தது. வெளியே ஓடப்போனவளை அவர் தான் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தார்..... அவரிடமே பொய்யா.....

“பளார், பளார்!”

அனைவரும் திடுக்கிட்டுவிட்டனர்.

இன்ஸ்பெக்டரின் கை அவனுடைய முகத்தில் விழுந்து, விழுந்து எழுந்தது.

“மெயா கவுத....?” உறுமினார் இன்ஸ்பெக்டர்.

“அப்பி தன்னினே” என்ற வாக்கியத்தை அவன் முடிக்க முன்பதாக, அவருடைய தடியின் தலை அவனுடைய வயிற்றில் இறங்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெய்யனே" என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டவன் "காசுக்கு வந்தவள்" என்னும் உண்மையை ஒத்துக்கொண்டான்.

கண்ணம்மாவைப் பற்றித் தங்களுக்கு எதுவுமே தெரியாது என்று அவர்கள் சாதித்துவிட்டனர். பொலிசாரால் எதுவுமே செய்ய முடிய வில்லை.

வேசித்தனம் செய்வதற்காக மூவரையும் ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டனர். இதாவது கிடைத்ததே!

ஆறுமுகம், வீரமுத்து, கணபதிக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. கண்ணம்மாள் என்ன ஆனாள்? அவளை எங்கே என்று தேடுவது?

ஆண்டியப்பன் தீவிரமாக யோசித்தான். அவனுடைய மூளையில் பளீரென ஒரு மின்னல்!

"அன்னைக்கு கிளாக்கரய்யா வீட்டுல அய்யாவோடவே இருந் தானே, அந்தத் தடியன் எங்கே....? கண்ணம்மாவைக் கண்டுட்டு விர், விர்ருன்னு இருட்டுல ஏறிப் போனானே லயத்துக்கு. அவன் எங்கே?"

அந்த மூவரையும் இழுத்துக்கொண்டு பொலிஸ்கோஷ்டி கிளம் பையில் ஆண்டியப்பன் கேட்டான். "உங்கமொதலாலி எங்கேப்பா...?"

"நான்தான் மொதலாளி" முரடன் கூறினான்.

"நியூட்டன் கராஜ்ன்னு இருக்கே உன் பேர்தான் நியூட்டனா" இது கணபதி.

"இல்லே.... அவரு இங்கே இல்லே."

"அப்போ எங்கே இருக்காரு?"

"எனக்குத் தெரியாது" என்று கூறப்போனவன் இன்ஸ்பெக்டரின் ஓங்கிய பிரம்பைக் கண்டதும், "அடிக்காதீங்க சொல்லிடறேன்" என்றான்.

நகரின் சந்தடிகளை ஒதுக்கிக்கொண்டு ஒரு சந்துக்குள் புகுந்தோடி யது பொலிஸ் ஜீப்.

கணபதியைத் தவிர மற்றைய அனைவரும் ஜீப்பல் இருந்தனர். தன்னுடைய காரில் ஜீப்பைத் தொடர்ந்து கொண்டிருந்தான் கணபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ்காரர்கள் மேல் வீரமுத்துவுக்கு விழுந்திருந்த தப்பபிப் பிராயம், அவநம்பிக்கை, ஏற்பட்டிருந்த ஆத்திரம் இத்தியாதிகள் படிப்படி யாகக் குறைந்து கொண்டிருந்தன.

கணபதியின் கம்பிளேயினைத் தொடர்ந்தல்லவா அவர்களுடன் ஒத்துழைக்கின்றனர்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் தங்களுக்கே உரித்தான சந்தேக உணர்வி னால் நியாயத்துக்கு விரோதமான செயல்களைச் செய்து விடுகின்றார்கள் தான் என்றாலும், அவர்கள் கூடுமான வரை நியாயத்துக்காவே போராடு கின்றனர் என்ற உண்மை அவனுக்குப் புரியத்தொடங்கியது.

"வீடு தூரமா?" என்ற இன்ஸ்பெக்டரின் கேள்விக்கு "இல்லீங்க" என்று பதில் கூறிய முரடன், "அதோ, அதோ, அந்த வீடுதாங்க" என்று சுட்டிக்காட்டினான்.

பெரிய, பெரிய பலாமரங்களின் அடியில் தனியாக நின்று கொண்டி ருந்தது அந்த வீடு.

இன்ஸ்பெக்டரும், ஒரு கான்ஸ்டபிளும் இறங்கிக் கொண்டனர். ஆறுமுகமும், ஆண்டியப்பனும், வீரமுத்துவும்இறங்கிய பிறகு ஜீப் புறப்பட்டு போய்விட்டது!

அந்தப் பெண்ணையும் மற்ற இரு முரடர்களையும் ஸ்டேஷனில் விட்டுவிட்டு ஜீப் திரும்பி வரவேண்டுமென்பது இன்ஸ்பெக்டரின் உத்தரவு.

மூடிக்கிடந்த அந்த வீட்டை நோக்கி அவர்கள் நடந்தார்கள். பொலிஸ் பூட்ஸ்களுக்கடியில் பலாச் சருகுகள் சரசரத்தன.

ஒருமுறை வீட்டைச் சுற்றியாகிவிட்டது. உள்ளே யாரும் இருப்பதா கவோ, ஏதும் நடப்பதாகவோ தெரியவில்லை. இருந்த இரண்டு ஜன்னல் களுக்கும் முழுத்திரை போடப்பட்டிருந்தது.

பயங்கரமான இந்த இடத்தில், தனியாக அகப்பட்டுக் கொண்ட அந்த அபலைப் பெண் என்ன ஆனாளோ? வெறி பிடித்த அந்த காட்டு மிருகம் அவளை என்ன செய்ததோ? கோரப் பற்களுடன் கொடூரமாய்ப் பாயும் புலியிடம் சிக்கிக் கொண்ட மான் என்ன செய்யும்? எதிர்த்துப் போராடவா முடியும்? அதற்கான சக்தி தான் அதனிடம் இருக்கிறதா? விதியே என்று சரணடைவதைத் தவிர வேறு வழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியென்றால் கண்ணம்மாவின் கற்பை அந்தக் கயவன் "சூறை யாடி இருப்பானா? பலவந்தமாகத் தனது கற்பை இன்னொருவன் "சூறையாட எந்த மானமுள்ள பெண்ணாவது ஒப்புவாளா? கேவலம் காசுக்காகத் தன்னுடலை விற்கும் தாசி கூட தன்னுடைய இணக்கத் துடன் தானே இடம் கொடுக்கின்றாள். கண்ணம்மாள் என்ன செய்திருப் பாள்" கண்ணுச்சாமியின் கதிதானோ அவளுக்கும்.....!

ஆவேசம் கொண்டவன் போல் கதவை இடித்தான் ஆறுமுகம். கதவு ஆடியதே ஒழிய வேறெதுவும் நடக்கவில்லை.

பொலிஸ்காரர்கள் சரக்சரக்கென்று வீட்டைச் சுற்றி நடந்தனர்.

அணில் குதறிய பலாப்பழம் ஒன்று சதக்கென விழுந்து சிதறியது.

"கதவைத் திற..... கதவைத் திற.... இல்லாவிட்டால் உடைத்துக் கொண்டு உள்ளே வருவோம்... பொலிஸ் வந்திருக்கின்றோம். மரியாதை யாகக் கதவைத் திறந்துவிடு." என்னும் குரல்கள் தமிழிலும், சிங்களத் திலும் மாறிமாறிக் கேட்டன.

ஏதோ மேசைகள் இழுபடுவது போல் உள்ளே சத்தம் கேட்டது. உள்ளே ஆட்கள் இருக்கின்றார்கள் என்பதை ஊர்ஜிதப்படுத்திக்கொண்ட இன்ஸ்பெக்டர் ஆகாயத்தை நோக்கிச் சுட்டார்.

அதன் பிறகும் கதவு திறபடவில்லை. உடைபடவும் இல்லை. கான்ஸ்டபிள் இன்ஸ்பெக்டரைப் பார்த்தார். இன்ஸ் பெக்டர் கணபதி யைப் பார்த்தார். ஒரு வினாடி அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இன்ஸ் பெக்டரின் கண் ஏதோ ஜாடை செய்ததைப் பொலிஸ்காரர் உணர்ந்து கொண்டார்.

கிளிங்.... கிளிங்.... கிளிங்.... ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கிக் கொட்டின. கான்ஸ்டபிளைத் தொடர்ந்து ஆறுமுகமும். வீரமுத்துவும் உள்ளே பாய்ந்தனர்.

ஆளுக்கொரு அறைப் பக்கம் ஓடினர். கான்ஸ்டபிள் முன் கதவுப் பக்கம் ஓடினான். வீரமுத்து ஓர் அறைக்குள் பாய்ந்தான். இன்னொரு அறைக்குள் அடிவைத்த ஆறுமுகம் அப்படியே துடித்துப் போய் நின்றான்.

"அய்யோ தெய்வமே" என்று பலமாகக் கத்தியதை அவன் உணர்ந் தான். ஆனால் யாருக்கும் சத்தம் கேட்கவில்லை. அவன் தொண்டைக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து சத்தம் வெளியே வரமறுத்தது. அப்படியே ஸ்தம் பித்துப் போய் நின்று விட்டான்.

தரையில் அலங்கோலமாகக் கிடந்தாள் கண்ணம்மாள். வாயில் திணிக்கப்பட்டிருந்த துணிப்பந்து கழுத்தில் தொங்கிக்கிடந்தது. தலை மயிர் அலங்கோலமாக இழுபட்டு முகத்தில் விசிறிக்கிடந்தது.

கண்ணாடி வளையல்கள் உடைந்து கைகளிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. இடுப்புக்குமேல் சேலை இல்லை. ரவிக்கை மட்டும் பாய்ந்து தொங்கிக் கொண்டிருக்க மார்பில் நகங்களின் பிராண் டல்கள் தடித்திருந்தன. ஒரு கால் விரிந்து மடிந்திருந்தது. மற்றக் கால் நேராகக் கிடந்தது.

கால்களின் விரிப்பால் இறுக்கமான சேலை துடையிடம் விண் ணென்று சுற்றிக்கிடந்தது. தரையில் இன்னும் காயாத இரத்தம் இரண் டொரு இடங்களில் பிசிறிக்கிடந்தன.

தான் உயிருக்குயிராக விரும்பிய கண்ணம்மாவை, இந்தக் கோலத் தில் கண்டதும் ஆறுமுகம் பிரமை பிடித்தவன் போல் நின்றான்.

வீரமுத்து பாய்ந்த அறையின் நடுவில் ஒரு மேசை இழுத்துப் போடப்பட்டிருந்தது. மேசைக்கு மேல் ஒரு நாற்காலி நிற்கவும் வீரமுத்து அண்ணாந்து பார்த்தான். ஆகாயம் தெரிந்தது. "ஆஹா பயல் பாய்ந்து விட்டான்" என்று எண்ணிக் கொண்டவன், "ஆறுமுகத்தண்ணே இங்கே ஓடியாங்களேன்" என்று கத்தியபடி அடுத்த அறைக்குள் பாய்ந்தான்.

கண்ணம்மாள் கிடந்த கோலத்தையும், ஆறுமுகம் நிற்கும் நிலை யையும் பார்த்தவனுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. அதே நேரத்தில் இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் உள்ளே நுழைந்தனர்.

தரையில் கிடந்த பெண்ணிடம் குனிந்த இன்ஸ்பெக்டர் அவளு டைய நாசியில் கைவைத்துப் பார்த்துவிட்டு தலையை ஆட்டிக் கொண்டார்.

திறந்து கிடந்த அவளுடைய மார்பை மூடிவிட்டு எழுந்தவரை, வீரமுத்து அடுத்த அறைக்குக் கூட்டிச் சென்றான்.

ரிவால்வரை கையில் எடுத்துக்கொண்டு வெளியே பாய்ந்த இன்ஸ் பெக்டர் உடைபட்ட அந்தக் கூரையை அண்ணாந்து எட்டிப்பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து வளைந்து நின்ற ஒரு பலாக்கிளை லேசாக ஆடிக் கொண்டிருந்தது.

ஏறக்குறைய இருட்டும் நேரமானபடியால் மரத்தின் அடர்ந்த இலை களுக்கடியில் யாராவது பதுங்கி இருக்கின்றார்களா என்று பார்க்க முடியவில்லை. கைவசம் டோர்ச்சும் கிடையாது.

நாம் வந்து வீட்டை முற்றுகையிட்ட பிறகுதான் ஆள் கூரை வழி யாகப் பாய்ந்திருக்கின்றான் என்பது உள்ளே மேசை இழுபட்ட சத்தத்த லிருந்து அவருக்கு ஊர்ஜிதமாகியிருந்தது. ஆகவே அவன் எங்காவது மறைந்திருக்கலாமே தவிர, ஓடியிருக்க முடியாது என்று உறுதியாக நம்பினார் இன்ஸ்பெக்டர்.

கூரை வழியாக மரத்தில் தொத்தியிருந்தால் இன்னும் கீழே இறங்கி யிருக்க முடியாது என்னும் எண்ணத்துடன் மிகவும் அவதானமாகக் கவனித்துக்கொண்டிருந்தவர் மற்றவர்களையும் வெளியே அழைத்துக் கொண்டார்.

தூரத்தில் ஜீப் வரும் சத்தம் கேட்டது. ஜீப்பின் வெளிச்சம் இருளை விலக்கிக் கொண்டிருக்கையில் பலாமரத்தின் உச்சியில் ஏதோ சலசலத்தது.

இன்ஸ்பெக்டர் உஷாரானார்.

அருகே வந்து நின்ற ஜீப்பை சற்று தூரத்துக்குப் போய் லைட்டை 'போக்கஸ்' பண்ணச் சொன்னார் இன்ஸ்பெக்டர். கணபதியும் தன்னு டைய கார் லைட்டைப் போட்டு வைத்தான்.

இடம் பயங்கர அமைதியுடன் மயானம் போல் கிடத்தது. அவ்வப் போது பூட்ஸ் அடியில் சரசரக்கும் பலாச்சருகுகளைத் தவிர்த்து வேறு சத்தமே கேட்கவில்லை.

அமைதியின் பயங்கரத்தில் பலாமரத்தின் உச்சியில் ஒரு கிளை வளைந்து உயர்ந்தது. சப்தம் லேசானதாக இருந்தாலும் இன்ஸ்பெக்டரின் பாம்புச் செவியிலிருந்து அது தப்பவில்லை.

சுறுசுறுப்புடன் இடம் பெயர்ந்து நின்ற இன்ஸ்பெக்டர் ரிவால்வரின் விசையை அழுத்தினார்.

"அம்மே..... தெய்யனே....." என்ற அவலக்குரல் காற்றைக் கிடு கிடுக்கச் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடசடவென்று இலைகளிடையே மோதி உருண்ட ஒரு உருவம் சுருண்டு விழுந்தது மண்ணில்.

## 11

பெரியதுரை கொழும்பலிருந்து திரும்பிவிட்டார். லண்டனிலிருந்து வந்த டைரக்டர்களுடன் நடந்த 'கான்பரன்ஸ்' நல்லபடியாக முடிந்திருந்த திருப்தி அவருடைய முகப் பொலிவில் இழைந்தது.

தான் தோட்டத்தில் இல்லாத நாட்களில் என்ன நடந்தது என்ப வற்றை அறிந்து கொள்ளும் பொருட்டு டிவிஷன்களில் இருந்து சின்ன துரைமார்கள் அனுப்பி இருந்த "டையரிகளை; மேலோட்டமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் பெரியவர்.

பெரியதுரை தோட்டத்தில் இருந்தாலோ, இல்லா விட்டாலோ டிவிஷன்களிலிருந்து தினசரி அந்த 'டையரி' வாசிப்பின் மூலம் எங்கே என்ன நடக்கிறது என்பது பெரிய துரைக்குத் தெரியும்.

மலைகளின் கொழுந்து வீதம், வேலைக் காட்டு நிலவரங்கள், உத்தியோகத்தர்கள் தொழிலாளர்கள் தகராறுகள், லயத்துச் சண்டை, (ஆபீஸ்வரை வந்தவை மட்டும்) விசாரணைகள், இன்னபிற விஷயங் களை டையரி சுருக்கமாகக் கூறும்.

துப்பறியும் நாவல் வாசிப்பவன்போல் விழிகளை வரிகளில் ஓட விட்டுக் கொண்டிருந்த பெரியவர் நிமிர்ந்து அமர்ந்தார். அவருடைய நிர்வாகத் திறமைக்கு சவால் விடுவது போன்ற அந்த வரிகள் அவருடைய விழிகளில் தைத்து நின்றன. கால்வாசி மட்டுமே முடிந்திருந்த 'கோல்ட் லீபை' ஆஷ்டிறேயில் நசுக்கி விட்டவர் தாவாயைத் தடவிக் கொண்டார்.

தன்னுடைய இருபத்தைந்து வருட சர்வீசில் 'ஸ்டிரைக்' என்ற வார்த்தையை அவருடைய தொழிலாளர்களிடமிருந்து அவர் கேட்டதே கிடையாது. எத்தனையோ பெரிய பெரிய விஷயங்களை அவர் காதும் காதும் வைத்தாற்போல் தீர்மானித்திருக்கின்றார். தீர்த்திருக்கின்றார். நிர்வாகத் திறமையென்பது வெறும் பள்ளிப் படிப்பால் மட்டும் வந்து விடப்போவதில்லை. அவரைப்போல் அடிபட்டு எழுந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் பட்டப்படிப்பு படித்து விட்டு, சின்னதுரைமார்களாக வந்துவிடும் தன்னுடைய 'அஸிஸ்டண்ட்' மார்கள் மேல் அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

"இது தொழிலாளர்கள் யுகம்! அவர்களை அடக்கி வைத்து வேலை வாங்கவும் வேண்டும்; அணைத்துக் கொள்ளவும் வேண்டும் இரண்டில் எது கூடினாலும் ஆபத்து ஆபத்துத் தான். ஆள்பலத்தை மட்டுமே நம்பி ஆட்சியேறும் அரசியல் வாதிகள் ஒரு புறம் அப்பாவிகளான தொழிலாளர்களைத் தங்களால் முடிந்தளவு உணர்ச்சி வசப்படுத்தி வைத்துக் கொள்கின்றனர். தங்களுடைய அரசியல் லாபத்துக்காக அறிவுப் பலத்தை ஆள் பலத்துக்கு அடிமையாக்கிவிட முயலும் இவர்கள் தேசத் துரோகிகள்".

யார் மேலோ வந்த ஆத்திரத்தை யார் மேலோ தீர்த்துக் கொண்ட பெரியவர் வாசிப்பதில் இருந்து விழிகளைப் பெயர்க்காமல் வலது கையால் சிவப்புப் பென்சிலை எடுத்துடையரியில் கோடிழுத்தார். பென்சில் கூர்மையாக இல்லாததால் கோடு மொத்தமாக விழுந்து அடுத்த வரியின் எழுத்துக்களையும் மறைத்தது.

இடது கையால் பெல்லை அழுத்தினார். ஒரு கிளார்க் எழுந்து உள்ளே வந்து "குட்மோர்னிங் சார்" என்றபடி பவ்யமாக நின்றார்.

மிகவும் அசட்டையாக அந்த அப்பாவி கிளார்க்கை ஒரு பார்வை பார்த்துவிட்டு, மொன்னையாகக் கிடந்த பென்சிலை முகத்துக்கு நேரே தூக்கிப்படித்து, "பார்த்தாயா உன் மூஞ்சி போல் இருக்கிறது" என்பது போல் உதட்டைப் பிதுக்கினார் துரை.

"சொரி சார்" என்று முனகிக்கொண்ட கிளார்க், அவரிடம் இருந்து பென்சிலைக் கேட்கவும் முடியாமல் அவராகக் கொடுக்கு முன் கைநீட்டி வாங்கவும் முடியாமல் ரெண்டும் கெட்டான் தனமாக விழித்துக் கொண்டு நின்றார்.

பெரியதுரைக்கு பென்சில் சீவி வைப்பது ஒரு கிளார்க்கின் வேலை யில்லை என்றாலும், அந்தப் பதவிக்கு இது போன்றவை இழிவானவை என்றாலும் யாரும் அதைப் பற்றி யெல்லாம் அலட்டிக்கொள்வது கிடையாது - கூடாது.

வானவில்லின் வர்ணங்கள் போல் பச்சை, நீலம், சிவப்பு என்று துரையின் மேசையில் அடுக்கி இருக்கும் அத்தனை பென்சில்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் காலையில் பார்த்து சீவி வைப்பது இந்த கிளார்க்கின் வேலையுடன் சேர்ந்தது. இன்று எப்படியோ மறந்து போய்விட்டது!

"உனக்குப் பென்சில் சீவிக் கொடுப்பது எனது உத்தியோகமல்ல" என்று துரையின் முகத்தில் அடித்தாற்போல் கூறி விடலாம். அதுதான் நியாயமும் கூட.

பென்சில் சீவும் விஷயங்கள் ஆபீசுக்குள்ளேயே நடப்பவை. 'எங்கூட்டுக்காரருக்கும் அரண்மனையில் சேவகம் என்று போய் விடும். வேலை போய்விட்டால் நடுச் சந்திக்கல்லவா வந்துவிட வேண்டி யிருக்கும்.

இது தொழிலாளர் யுகம், இதில் பென்சில் சீவ மறுத்ததற்காக ஒருவனை வேலை நீக்கம் செய்ய இயலுமா என்று கேட்கிறீர்களா?

நீளக் காற்சட்டை போடும் இந்தக் கிளார்க்கர்மார் கூட்டம் இருக்கி றதே, இது ஒரு பரிதாபத்திற்குரிய கூட்டம்.

ஒரு தொழிலாளியை வேலைநீக்கம் செய்ய எவ்வளவோ யோசிக் கும் ஒரு முதலாளி, காற்சட்டை போட்ட ஒரு கிளார்க்கை வேலை நீக்கம் செய்யக் கவலைப் படுவதேயில்லை "அந்தக் கிளார்க்கை திரும்ப எடு" என்று போராட்டம் நடத்த யார் இருக்கின்றார்கள்? கொடி பிடிக்கக் கூட்டம் எங்கே இருக்கிறது?

அப்படியே ஏதும் எதிர்ப்புத் தெரிவிப்பதென்றால் ஒரு தோட்டத் தில் உள்ள நாலைந்து கிளார்க்மார்களும் அபீசுக்கு வராமல் விடலாம். அதிலும், துரையின் நன்னோக்கில் இருக்க விரும்பும் ஹெட் கிளார்க் அன்றைக்குப் பார்த்து அதிகாலையிலேயே வந்து விடுவார். தோட்ட உத்தியோகத்தர்கள் யூனியனில் சொல்லிக் கேட்கச் சொல்லலாம்! அங்கேயும் அதே கதைதான் நடக்கும், 'நான் ஹெட்கிளார்க் அவன் ஸ்டனோ நான் சீனியர்' அவன் வெறும் கிறீப்பர் என்ற ஏற்றத் தாழ்வு தான் பேசும் நியாயம் பேசாது.

இந்தத் தொந்தரவுகளுக்கெல்லாம் பயந்து கொண்டு சொன்னதைச் செய்து கொண்டிருக்கும் அப்பாவிகள் எத்தனையோ பேர் இருக்கின் றார்கள்!

"போய்த் தொலைய முடியுதில்லையே. இவன்களிடமிருந்து கழட்டிக் கொள்ள வழியில்லையே" என்று புழுங்கிச் சாகும் திறமை சாலிகள் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பென்சில் சீவி வைக்காததால் கைதிபோல் நிற்கும் இவரும் அந்தப் பரிதாபத்திற்குரிய கூட்டத்தைச் சேர்ந்தவர்தான்.

பங்களாவிலிருந்து ஆபீசுக்கிறங்கும் படிகளில் டப் டப்பென்று ஸ்லிப்பர் சத்தம் கேட்டது. நின்று கொண்டிருந்த கிளார்க்கிற்கு எதிரே படிக்கட்டு இருப்பதால் துரையின் தோளுக்கு மேலாக இறங்கி வருவது யாரென்று தெரிந்தது.

லண்டனிலிருந்து பாடசாலை விடுமுறையில் வந்திருக்கும் துரை யின் மகள் தான் இறங்கி வந்து கொண்டிருந்தாள். ஒரு பத்து பன்னிரண்டு வயதிருக்கும்.

ஒரு நிக்கர், நிக்கரில் பாதிவரை மறைக்கும் ஒரு மெல்லிய மேலா டையில் அழகான ஆடம்பரமான பூ வேலைப்பாடுகள். சிறிய வயதுதான் என்றாலும் வயதுக்கு மீறின வாளிப்பான உடம்பு படியிறங்கும் கால்கள் ஒவ்வொன்றும் மொழு மொழு வென்று வாழைக் கன்று போல் அவரு டைய கண்ணைக் குத்தின.

பெரியதுரையின் மகள் சீமையிலிருந்து வந்திருப்பதாகவும், செருப் புக்கூடப் போடாமல் தேயிலை மலைகளில் ஏறி விழுவதாகவும் கேள்விப்பட்டிருந்தாரே ஒழிய இன்றுவரை பார்த்ததில்லை. வெறும் உடம்பில் ஒரு மெல்லிய சட்டையைப் போட்டுக்கொண்டு அந்தப் பெண் ஒவ்வொரு படியாக இறங்கி இறங்கி முன்னே வர வர ஒரு அழகிய் பூவின் நினைவுதான் அவருக்கு வந்தது.

உள்ளத்துக் கிளுகிளுப்பு உதட்டுவரை வந்துவிடாமல் பார்த்துக் கொண்டார். முன்னே துரை உட்கார்ந்திருக்கின்றாரே!

"ஹலோ டார்லிங் டடி" என்றவாறு இரண்டு படிகளை ஒரே தாவாகத் தாவி துரையின் முதுகு வழியாகக் கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்சினாள் மகள்.

"இந்த அப்பன் - மகள் கொஞ்சல்" கூட தனக்குக் கீழ் ஊழியம் செய்யும் ஒருவன் முன் நிகழ்வதை விரும்பாதவர் போல் அந்தச் சீவப் படாத சிவப்பு பென்சிலை அவனிடம் நீட்டிவிட்டு மகளுடைய சிவந்த தொடைகளில் பளீர் எனத் தட்டினார் துரை.

வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை வெள்ளைக் கோட்டு அதில் வரிசையாகத் தங்க நிறப் பொத்தான்கள். இத்தியாதி அலங்காரங்களுடன் வந்து நின்றான் பங்களாவின் 'செக்கன்ட் அசிஸ்டண்ட்' என்று அழைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படும் பட்லர். அவனுடைய கையிலிருந்த ட்றேயில் வெல் வெட் துணி மூடிக்குள் இருப்பது துரையின் 'காலை டீ'

"யூ டேக் இட்ஐ ஆம் கமிங் அப்" என்று அவனிடம் கூறியவர், "யூ வாக் அப் டோட்டி, டடா கமிங்" என்று மகளை முத்தமிட்டு அனுப்பி வைத்தார்.

மகள் இப்போதுதான் எழுந்திருக்க வேண்டும். தகப்பனைக் காணோமே என்று இறங்கி ஓடி வந்திருக்கிறாள்.

மறுபடியும் டைரியில் ஆழ்ந்தார் பெரியவர். மேசையிலிருந்த நீலப் பென்சில் கூர்மையானதாக இருக்கவே அதை எடுத்து 'அண்டர் லைன்' செய்து கொண்டார்.

'பெறட்டுக்களத்துக்கு வந்தவர்கள் வேலைக்குப் போக மறுத் தார்கள். ஆறுமுகம் என்பவனே முன்னால் வந்து பேசினான். மேல் டிவிஷனிலிருந்து ஆட்களை வரவழைத்து வேலை செய்யப் போவதாகப் பயமுறுத்தினேன். ஆட்களை வரவும் சொன்னேன்....!'

துரை மேசையில் குத்தினார். "மை ஜீஸஸ், வாட் ஏஃபூலிஷ் அப் ரோச்.... தீஸ் ராஸ்கல்ஸ் தேநெவர் நோ தி ஆர்ட் ஆஃப் லேபர் மெனேஜ் மண்ட்"

அடுத்து என்ன நடந்தது என்பதை அறிய ஆவல் மேலிட்டவராக திடு திடுவென்று வாசித்தார்.

"மேல் டிவிஷன் ஆட்கள் வரத் தொடங்கவே ஆறுமுகம். கண்டக்டர் மூலம் செய்தி அனுப்பினான், அவர்கள் வர வேண்டாம். நாங்கள் வேலைக்குப் போகிறோம் என்று...."

இந்த இடத்தில் ஆறுமுகம் என்ற பெயரை நன்றாக 'அண்டர் லைன்' செய்து மார்ஜினில் இரண்டு புள்ளிகள் வைத்துக் கொண்டார் பெரியதுரை.

"திஸ் செப் சீம்ஸ் டு பி ஏ ஜீனியஸ்..... ஐ மஸ்ட் - டாக் டு ஹிம்" என்று எண்ணியவாறு மணியை அழுத்தினார். ஹெட்கிளார்க் உள்ளே வந்தார்.

"ஐ வாண்ட் திஸ் செப் இன் ஆபீஸ் இன் த ஈவினிங்" என்றார் துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் என்று டையரியை வாசித்து அறிந்து கொண்ட ஹெட் கிளார்க், "ஹி இஸ் இன் த பொலிஸ் ஸ்டேஷன் சார்..... இப்போதுதான் செய்தி கிடைத்தது" என்றார்.

பெரிய கிளார்க்கை ஏறிட்டுப் பார்த்தார் துரை.

"ஏன் அவன் பொலிசில் இருக்கிறான்" என்று கேட்பது போல் அந்தப் பார்வை இருக்கவே, "அவன் ஒரு தினுசான ஆள் சார். ஆபீசுக்குப் போனால் கலாட்டா பண்ணுவானாம். யார் சொற்படியும் நடக்க மாட் டானாம். எதற்காகவோ லயத்துக்கு வந்த பொலிசையே ஆட்களைச் சேர்த்துக் கொண்டு அடித்தானாம்" என்று அடுக்கிக் கொண்டே போனார்.

தன்னுடைய காரை வீரமுத்து காலால் உதைத்துப் பிரட்டிவிட்ட செய்தியை பெரிய கிளார்க் வீட்டுக்கு மனைவி சகிதம் 'விஸிட்டிங்' போய் ஆறுமுகம் பற்றியும், வீரமுத்து பற்றியும் நன்றாக ஏற்றி வைத் திருந்தார் கிளாக்கரய்யா.

அதில் கொஞ்சத்தைத்தான் பெரியதுரையிடம் நாசூக்காக இறக்கிக் கொண்டிருந்தார் பெரியவர்.

"ஆறுமுகம் ஏன் பொலிசில் இருக்கிறான்" என்பது பெரிய துரைக்கு வேண்டியிருக்கவில்லை. அதை அவர் கேட்கவும் இல்லை. ஆகவே பெரிய கிளார்க் ஆறுமுகத்தைப்பற்றி அடுக்கிக் கொண்டு போகவே அவருக்குக் கோபம் வந்தது.

"நான்சென்ஸ், ஐ டின்ட் வாண்ட் ஆல் தட்..... கெட் எவே" என்று கத்தினார்.

பெரிய துரைக்கு கோபம் வந்துவிட்டல் என்ன ஆகும் என்பது பெரியவருக்குத் தெரியாததல்ல. கோட் பாக்கெட்டில் கைகளை விட்டுக் கொண்டு நைசாக வெளியே நழுவிக் கொண்டார்.

"மேல் டிவிஷன் ஆட்களை வரச் சொல்லி உத்தரவிட்டேன்" என்று டையரியில் கண்டிருந்த வரிகளை அழுந்த கோடிட்டு மார்ஜினில் சிறிதாக இரண்டு கோடு போட்டு 'ஸ்பீக்' என்று எழுதி டைரியை மூடிவைத்தார்.

ஒரு டிவிஷன் ஆட்கள் ஏதோ மனக்குறை காரணமாக வேலைக்குப் போக மறுத்தால் அவர்களுடைய குறை என்ன, அதை எப்படி தீர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கலாம் என்று ஆலோசியாமல் அடுத்த டிவிஷனில் இருந்து ஆட்களை அழைத்து வேலைக்குப் போகச் சொல்வதா?

அப்படியே தனது சக்திக்கு மீறிய பிரச்சினையாக இருந்து விட்டால் "பொறுங்கள், பெரியதுரை வந்ததும் உங்கள் கோரிக்கையை நானே அவரிடம் கூறித் தீர்த்து வைக்கிறேன்" என்று கூறிச் சமாளிக்க தெரியாமல் இன்னொரு டிவிஷனில் இருந்து ஆட்களை அழைத்து வேலைக்குப் போ என்றால் அவர்கள் இருவரையும் மோதவிடும் வேலை அல்லவா அது!

இரண்டு டிவிஷன் ஆட்களும் அடித்துக் கொண்டால் என்ன நடக்கும்? ஒரு டிவிஷன் ஆட்கள் வேலைக்குப் போக மறுத்தது போய் இரண்டு டிவிஷன் ஆட்களும் வேலைக்குப் போக மறுப்பார்கள்.

இவர்களைப் பார்ப்பதா? அவர்களைப் பார்ப்பதா? இருவரும் நமது தொழிலாளர்கள்தானே? நாமே தலைவலியை உண்டாக்கிக் கொண்டு அதைக் கூட்டியும் கொள்வதா? இவர்கள் எல்லாம் என்ன துரைமார்கள்?

'நானும் ஒரு பிளாண்டர்' என்று பிளாணடர்ஸ் அசோஸியேஷனில் மெம்பராகி விட்டால் போதுமா.....?

அப்படி ஏதும் அசம்பாவிதங்கள் வந்து என்னுடைய தோட்டத்திலும் ஒரு 'ஸ்ட்ரைக்' வராமல் மிகவும் சாதுரியமாக நடந்து கொண்டுள்ள அந்தப் பயலையா ஒரு தினுசானவன் என்று பெரிய கிளார்க் கூறினார். சேச்சே கெனாட் பீ....

டையரியைத் தூக்கி அவுட் டிரேயில் போட்டவர் ஏதேதோ சிந்தித்த வண்ணம் அமர்ந்திருந்தார்.

முன்பொரு தடவை ஆட்களெல்லாம் கூட்டமாத் தனது பங்களா முகப்புரை வந்து ஆர்ப்பாட்டம் செய்தது அவர் நினைவில் ஓடியது. அதையுமே அவர் என்னமாய் சமாளித்தார்!

தனது திறமையில் அவருக்கு எப்போதுமே ஒரு அசாத்திய நம்பிக்கை. தன்னுடைய கெட்டித்தனத்தை மறுபடியும் அசை போட்டு நினைவுபடுத்திக் கொள்வதும் ஒரு சுகானுபவம் தான்!

இருபது இருபத்தொரு வயதுக் கூடாக ஒரு துரை சின்னதுரையாக வந்திருந்தார். தோட்டத்து மக்களுக்கு நிறத்தால் அவர் வெள்ளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரனாக இருந்தாலும் பெரியவருக்குத் தெரியும், அவர் ஒரு அவுஸ்தி ரேலியக்காரர் என்பது.

தகப்பன் ஒரு ஆட்டுப் பண்ணைக்காரர். மகன் எதிலும் சிரத்தையில் லாமல் ஊதாரியாய்த் திரியவே, தனது நண்பரான தேயிலைத் தோட்டத்து டைரக்டர்களில் ஒருவர் மூலம் அவனைப் படித்து இலங்கைக்கு அனுப்பிவிட்டார்.

தோட்டத்துக்குள் நுழைந்தவனுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் இருந்தது.

ஒரு டைரக்டரால் சிபாரிசு செய்யப்பட்டவன் என்பதைத் தவிர வேறு எதுவிதத் திறமையும் அவனிடம் இல்லையென்பதை பெரிய துரை கண்டுகொள்ள நாளாக வில்லை. தோல் வெள்ளையாயிற்றே என்பதற்காக அவனுடைய படுமுட்டாள்தனமான செய்கைகளைக்கூட பூசி மெழுகிச் சமாளித்துக் கொண்டிருந்தார்.

'ப்றெஷ் ப்றம் ஸ்கூல்' என்று கூறுவார்களே அதைப் போல இதுவும் 'ப்றெஷ் ப்றம ஆஸ்ட்ரேலியா' கேஸ்தான். இந்த நாட்டு நடப்பு 'பேச்சு' பழக்க வழக்கம் இத்தியாதிகளைப் பற்றி இன்னும் படிக்க எவ்வளவோ இருக்கிறது.

பச்சை உரத்துக்காகவென்று பொட்டல்களிலும், கான்களிலும் காட்டுச் 'சூரியகாந்திச் செடியை வளர்த்திருப்பார்கள். 'வைல்ட் சன் ப்ளவர்' என்று ஆங்கிலத்தில் கூறப்படும் இதை இந்த ஆஸ்திரேலியத் துரைசுன் ப்ளவர் என்றுதான் கூறுவதுண்டு, எஸ்.யு.என். என்ற ஆங்கிலச் சொல்லின் உச்சரிப்புன்னாம், இதைக் கேட்டுத் துரைமார்களின் அடிமை களான கிளார்க், கண்டக்டர், கணக்குப்பிள்ளைமார்கள் பலமாக சிரிக்க முடியாவிட்டாலும் மனதுக்குள்ளாக நையாண்டியாகச் சிரித்துக் கொள் வது பெரிய துரைக்கும் தெரியும்.

"சுன் இல்லே மேன் சன்" என்று அவனை அறைந்து கூற வேண்டும் போல் ஒரு வெறி ஏற்பட்டாலும் மற்றவர்கள் முன்னிலையில் அதைச் சமாளித்துக் கொண்டு தனியாக இருக்கையில் ஏசித்திருத்தவும் மறக்க மாட்டார்.

இந்த 'சுன் பளவர் துரை' ஒருநாள் கொழுந்துக் காட்டில் இறங் கினார். சீமை மாடு படிக்கட்டில் இறங்குவது போல் தடாபுடாவென்று இறங்கிச் சறுக்கிக் கொண்டு வந்து ஒரு கானில் அவர் நிற்பதற்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்ந்த கொழுந்தைக் கூடையில் வீசத் தலைவர் தங்கை கையை உயர்த்து வதற்கும் சரியாக இருந்தது.

உயர்த்திய கையை அவள் கீழே போட்டால் அவருடைய முகத்தில் தான் விழும். ஆகவே, ஒரு வினாடி அப்படியே தூக்கிய கையுடன் நின்று விட்டாள் அந்தப் பெண்.

எடுப்பான அவளுடைய மார்பின அடியில் ஒரு வினாடி நிற்க நேர்ந்த துரைக்கு உடலில் புல்லரித்தது. அவருடைய வயதும் அப்படி! ஒரு ஆண் ஒரு பெண்ணிடம் ஆசையாகச் செய்யும் சேஷ்டைகள் ஒன்றும் பெரிய குற்றங்கள் அல்ல, மிகச் சாதாரணமானவைகள் என்று கருதப் படும் மேல் நாட்டிலிருந்து புதிதாக இங்கு வந்துள்ளவர். கொழுந்து பறிக்கும் ஒரு பெண்ணை ஒரு துரை தொட்டால் அதனுடைய கனா கனம் என்னவென்று புரியாதவர்.

ஆகவே, உயர்ந்து நின்ற அவளுடைய கரத்தின் அடியில் 'விண்' ணென்று நின்ற மார்பைத் தனது விரலால் சுண்டினார். பார்வையும் நல்லதாக இல்லை.

தலைவர் தங்கைக்குத் தாள முடியவில்லை. விசுக்கென்று திரும்பி தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டவள் 'பளார்' என்று அவரை அறைந்தும் விட்டாள்.

இரண்டுமே அவரவர் பங்குக்கு சற்று அதிகம் தான்!

இந்தச் சின்ன துரைக்குத் தமிழ் தெரியாது என்பதாலும், தோட்டத் திற்குப் புதிதாக வந்திருப்பவர் என்பதாலும், துரை என்றால் இப்படி இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற அவர்களுடைய கணிப்பிற்கு எந்த வகையிலும் ஒத்துவராதவராக இருப்பதாலும் இவரிடம் அந்த மக்களுக்குப் பயமோ, மரியாதையோ கிடையாது. அந்த மரியாதை யின்மைதான் அவரை அறையவும் அவளைத் தூண்டியது.

துரையும் லேசானவரல்ல! வேலை பார்ப்பவர் போல் நாலைந்து நிரை ஏறி இறங்கியவர் சுப்பவைசர் மூலமாக அந்தப் பெண் யாரென் பதை அறிந்து கொண்டார்.

அன்று மாலையே கமிட்டி கூடியது. இந்தத் துரையை விட்டேனா பார் என்றார்கள். இப்போதே சின்னதுரை பங்களாவுக்குப் போய் அவனை வெளியே இழுத்து வெட்டிக் கொல்ல வேண்டுமென்று சத்தம் போட்டுக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவர் யார் நமக்கு நேற்றைய பயல்! நமக்குப் பேச்சு பெரிய துரையிடம் தான். என் தங்கச்சிமேல் இவனுக்கு ஒரு கண் என்பது எனக்கு முன்பே தெரியும்! அதனிடம் சாடை மாடையாகப் பேச்சுக் கொடுத்திருக்கின்றான்" என்று தன்னுடைய சொந்தச் சரக்குகளையும் போட்டுப் பேசினார் தலைவர்.

"நான் ஒன்றும் அவளிடம் தவறுதலாக நடக்கவில்லை என்று அவன் சாதித்து விட்டால் நமக்கு சாட்சி ஏது? ஆகவே, இதை அப்படியே விட்டு விட்டு ஒரு திட்டம் போட வேண்டும்" என்றும் பேசிக் கொண் டார்கள்.

அந்தத் திட்டத்தின்படி அடுத்தநாள் காலை தலைவர் டிவிஷன் ஆபீசில் நின்றார்.

"வீடு ஒழுகுதுங்க...... துரை வந்து பார்த்தா நல்லது..." அதை மொழி பெயர்த்த கிளார்க்கர் கூறினார் "இவர் தோட்டத்துத் தலைவர். ஆகையால் போய்ப் பார்த்து ஏற்பாடு செய்வது நல்லது".

துரை சம்மதித்தார். மறுநாள் காலையில் வந்து பார்ப்பதாகக் கூறினார்.

"நாளைக்கு நான் ஜில்லா ஆபீசுக்குப் போறேனுங்க, தங்கச்சி மட்டும் தான் வீட்டுல இருக்கும்.... அதுனாலே இன்னைக்கே வந்துட்டா நல்லது...."

பளீரென்று ஏதோ மின்னியது துரைக்கு.

"இன்னைக்கு ஏலாது, நாளைக்குப் பார்த்துக்கலாம்" என்று அடித்துக் கூறி விட்டார்.

"உங்க தங்கச்சி இருந்தாப் போதும் தலைவரே, ஒழுகிற எடத்தைக் துரைக்குக் காட்டத்தானே!" என்று சிலேடை பேசினார் கிளார்க்.

அடுத்த நாள் காலை பத்து மணிக்குப் பிறகு லயங்கள் அமைதி யாகக் கிடக்கும் நேரம் பார்த்துச் சின்னதுரை லயத்துப் பாதையில் மோட்டார் சைக்கிள் ஓட்டினார். தலைவர் வீட் டிற்குள் அவர் நுழைந் ததும் தேயிலைக்குள் மறைந்திருந்த ஏழெட்டு உருவங்கள், கம்பும் தடியுமாக லயத்தை நோக்கி இறங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை காம்பராக்குள் அடி எடுத்து வைத்ததுதான் தாமதம், “ஐயையோ என்னைக் காப்பாற்றுங்களே! என்னைக் காப்பாற்றுங்களே” என்று தலைவர் தங்கை கூச்சல் போடத் தொடங்கி விட்டாள்.

துரை இதை எதிர்பார்க்கவில்லை! திடுக்கிட்டு நின்றவர் திரும்பி வெளியேறுவதற்குள் கம்பும் தடியுமாக ஒரு கூட்டம் அவரை மறித்துக் கொண்டது. அவர்களிடமிருந்து தப்பிப்பது சிரம சாத்தியமாயிற்று.

இரண்டொரு அடியை வாங்கிக் கொண்டவர் தப்பினேன் பிழைத்தேன் என்று ஓட்டம் பிடித்தார்.

அவர்கள் விரட்ட, இவர் ஓட, தோட்டம் காணாத ஒரு காட்சியாகி விட்டது அது.

மோட்டார் சைக்கிளில் ஏறியவர் பங்களாவுக்குள் ஓடிப் போய் துப்பாக்கியும் கையுமாக வெளியே வந்தார். விரட்டிக் கொண்டு வந்தவர்கள் ஒருவரையும் காணவில்லை.

ஓடிவந்தவர்கள் சின்னதுரை பங்களாவுக்கு வரவில்லை. எல்லோருமே பெரியதுரை பங்களாவை நோக்கிப்படை எடுத்தனர்.

கம்பும், தடியுமாக ஒரு கூட்டம் பெரியதுரை பங்களாவை முற்றுகை இடுவதும் தோட்டம் காணாத ஒரு காட்சிதான்!

சத்தம் கேட்டு வெளியே வந்தார் துரை. ஆர்ப்பாட்டம் ஒரு வினாடி அடங்கியது. தலைவர் தனியாகத் துரையிடம் நடந்தார்.

வீடு ஒழுகுவதைப் பார்க்க லயத்துக்கு வந்த சின்னதுரை தனது தங்கையைப் பலாத்காரம் பண்ணியதாகவும் அவளுடைய கூச்சல் கேட்டு ஒரு கூட்டம் ஓடி வந்ததாகவும் தகவல் சொன்னார் தலைவர்.

பெரியவருக்கு ரத்தம் கொதித்தது. “வாட் எ ஷேம்” என்று முனகிக் கொண்டார்.

அமைதியாக நின்ற கூட்டம் மறு படியும் ஏதேதோ சத்தம்போட்டுப் பேசிக்கொள்ளத் தொடங்கியது. தலைவர் தொடர்ந்தார்:

“இது சாமான்யமில்லேங்க. அவரு நெருப்புகூட வெளையாண்டிருக்காரு. அத என்னுட்டு தங்கச்சி தலைவருட்டுத் தங்கச்சி விஷயம் தோட்டம் முழுக்கத் தெரிஞ்சி போயிறிச்சிங்க.... கவாத்துக்காட்டு ஆளுகளும் கத்தியும் கம்புமா சின்னதுரை பங்களாவை நோக்கி ஓடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிட்டானுக என்ன ஆவுமோ தெரியாதுங்க, தொரையை உசி ரோட விட மாட்டானுக...."

தலைவர் பேசிக் கொண்டேயிருக்கையில் துரை வேலியிடம் நடந்து எட்டிப் பார்த்தார். சாரி சாரியாக ஆட்கள் சின்ன துரை பங்களா குறுக்குப் பாதையில் ஏறிக் கொண்டிருந்தனர். அவர்கள் போட்ட ஆர்ப்பாட்டக் கூச்சல் மெல்லியதாய்க் கேட்டுக் கொண்டிருந்தது.

"நீங்கள் அனைவரும் அமைதியாக வீட்டுக்குப் போங்கள், தலை வரே, நீ போய் உன்னுடைய தங்கையைப் பார். அதற்கு ஏதும் ஆபத்து வரக்கூடாது மற்றவைகளை நான் கவனிக்கின்றேன்...."

"நல்லதுங்க" என்றார் தலைவர்.

"தகப்பன் சொல்ற மாதிரி செய்ய தாங்கள் தயார்" என்றது கூட்டம்.

கோபாவேசமாகக் குறுக்கில் ஏறிக்கொண்டிருந்த கூட்டத்தையும், துப்பாக்கியுடன் நின்று கொண்டிருக்கும் சின்னதுரையையும் தொலை நோக்கிக் கண்ணாடி மூலம் பார்த்த பெரியவர் திடுக்கிட்டார்.

"அவனும் கோபத்தில் இருக்கின்றான். யாரையாவது சுட்டுத் தொலைத்து விட்டால்..... விபரீதமாகப் போய் விடுமே" என்று தடுமாறி யவர் மறுகணம் கராஜை நோக்கிப் பாய்ந்தார்.

பெரியதுரையின் கார் சின்னதுரை பங்களா முகப்பில் நிற்பதற்குள் ஏறிவந்த கூட்டம் பங்களா முகப்பை அடைந்து விட்டது.

பெரியதுரையின் காரைக்கண்டதும் கத்தியும், கம்புமாக முன் னேறிக் கொண்டிருந்த கூட்டம் சற்று திகைத்து நின்றது.

அவர்கள் நின்ற நிலை மந்திரத்துக்குக் கட்டுப்பட்டு நின்றதுபோல் இருந்தது.

"நீங்கள் எல்லோரும் உங்கள் உங்கள் வேலைகளைப் பார்க்கப் போங்கள்.... பிராது என்னிடம் வந்துவிட்டது. நான் கவனித்துக் கொள் வேன்" என்று துரை கூறியதும் நின்றவர்கள் பின்வாங்கினார்கள். பிறகு நடந்தார்கள்.

"என்னதான் செய்வார்ன்னு பார்ப்போம்....!"

"வெள்ளக்காரனுக்கு வெள்ளக்காரன் என்னத்தைப் பெரிசா செஞ்சிறப்போறானுக".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒன்றும் செய்யாமல் இருக்கட்டுமே. அப்புறம் பார்த்துக்கிறு வோம்” என்று பலவாறாகப் பேசிக் கொண்டே கலைந்தனர்.

கார்ச் சத்தம் கேட்டதும் எட்டிப் பார்த்த சின்னதுரை முன் கதவை அறைந்து மூடிக்கொண்டு உள்ளே போய் விட்டார்.

கதவைத் தட்டித் திறந்த பெரியவர், “கம் அவுட் அன் கெட் இன் மை கார்” என்று மெதுவாகக் கூறினார்.

இருவரையும் ஏற்றிக்கொண்டு பெரிய பங்களாவை நோக்கிப் பறந்தது கார்.

“அந்தப் பெண் அறைக்குள் இருந்ததை நான் பார்க்கக்கூட இல்லை. இது உண்மை” என்று கூறினார் சின்னவர்.

சின்னத்துரை இதற்கெல்லாம் பொய் சொல்லமாட்டார் என்பதைப் பெரியவர் நம்பினார். இருந்தும் அவரால் சின்னத்துரைக்குச் சாதகமான ஒரு தீர்ப்பு வழங்க முடியவில்லை. இருவரும் நீண்ட நேரம் பேசினார்கள். அடுத்த நாள் காலையிலும் சின்னத்துரை பங்களா பூட்டியே இருந்தது.

“ஒரு தொழிலாளிக்காக சின்னத்துரையையே காலி செய்து விட்டாரே!” என்று பெருமைப்பட்டுக் கொண்டது தடி எடுத்த கும்பல், தோட்டத்தில் மீண்டும் அமைதியாக வேலை நடக்கத் தொடங்கியது.

பெரியவர் மாத்திரம் கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்திருந்தால் என்னென்ன நடந்திருக்குமோ....?

இது போன்ற பிரச்சினைகளையே சாதுர்யமாக அவர் சமாளித் திருக்கும் போது, ஒன்றுமில்லாததற்கு இத்தனை பெரிய ஆர்ப்பாட்டமா? என்று நினைக்கையில் சின்னதுரை மேல் அவருக்குக் கோபம் கோபமாய் வந்தது.

“லெட் ஹிம் கம் இன் த ஆப்டர்நூன்.....” என்று கருவியபடி எழுந்து பங்களாவை நோக்கி நடந்தார்.

“பெரியதுரை ஆறுமுகத்துடன் பேச வேண்டுமாம்....! அவன் தோட் டத்திலே இல்லை, பொலிஸ் ஸ்டேஷனில் இருக்கிறான் என்று கூறிச் சமாளித்திருக்கின்றேன்”.

பெரிய கிளார்க் போனில் கூறிக் கொண்டிருந்தார் டிவிஷனல் கிளார்க்கிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுக்கிட்டுப் போனார் டிவிஷன் சின்ன கிளார்க். இந்த ஆறுமுகம் பயலோட தொந்தரவாப் போச்சே.....” என்று எண்ணிக் கொண்டவர் “ஹெந்தாவ ஹம்புவென்னங்” என்று போனைக் கீழே வைத்தார்.

இந்த உதவிக்கு பெரியவர் எதை எதிர்பார்க்கின்றாரோ!

கண்ணுச்சாமி அனுதாபக் கூட்டத்தில் ஆறுமுகம் ஏதோ ஆபீஸ் விஷயங்களையெல்லாம் அலசியதாகக் கேள்விப்பட்டிருந்தார்.

சம்பளம் சரியாகக் கொடுபடுவதில்லை. சம்பளபணத்தில் தில்லு முல்லுகள் நடைபெறுவதாகக் கூட்டத்தில் பேசியதாகவும் கேள்விப் பட்டார்.

ஆண்டியப்பன் பயல் கணபதியிடம் சிக்கிக்கொண்டு காரில் ஏறி ஆறுமுகத்துடன் போன செய்தியும் அவர் காதுக்கு எட்டியிருந்தது.

கண்ணம்மாவை யாரோ கடத்திக்கொண்டுபோய் விட்டதாகக் கேள்விப்பட்டாலும் யாராக இருக்கும் என்பதை யூகித்துக் கொண் டார்.

“அவளால் தானே அன்று அடிபட்டார்கள். பழிவாங்காமல் சும்மா விடுவார்களா” என்று மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டவர், “பெரியதுரை உண்மையிலேயே ஆறுமுகத்துடன் பேச வேண்டுமென்று கூறியிருப்பாரா, அல்லது நம்ம ஆசாமி என்னைப் பயங்காட்டி வைப்பதற் காக இப்படி ஒரு குண்டைப் போடுகின்றாரா?” என்றும் சந்தேகப் பட்டார்.

தபால் பையன் உள்ளே வந்தான். அவனிடமிருந்து டைரியை வாங்கி அவசரமாகப் பரித்துப் பார்த்தார்.

ஆறுமுகம் சம்பந்தமான வரிகளை பெரிய துரை அன்டர் லைன் செய்து ‘ஸ்பீக்’ என்று எழுதியதைக்க கண்டதும் பெரிய கிளார்க் கூறியது உண்மையாகவும் இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டார். அடிவயிற் றைக் கலக்கியது எழுந்து வெளியே வந்தார். அவரால் வேலை செய்ய முடியவில்லை. வேலையில் மனம் செல்லவில்லை. “பெரியதுரையை ஆறுமுகம் சந்திக்காமல் செய்துவிட்டால்...!”

ஆம் அதுதான் சரியான யோசனை என்று முடிவு கட்டிக் கொண் டவர் உள்ளே வந்து நாற்காலியில் பொத்தென்று விழுந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கண்ணம்மாள் லேசாக கண் விழித்தாள்.

ஆறுமுகம், வீரமுத்து, கணபதி இன்னும் ஏழெட்டுப் பேர் கொண்ட கூட்டமும் இரண்டு பொலிஸ்காரர்களும் அவளைச் சுற்றி நின்றனர்.

தனக்கு என்ன நடந்தது? தான் ஏன் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்திருக்கின்றேன் என்று கடந்தவற்றை நினைவு கூர்ந்த கண்ணம்மா ஆறுமுகத்தைப் பார்த்தாள்.

அவளுடைய விழிகள் கரைந்து ஒழுகின. கால்கள் போர் வைக்குள்ளாக திமிறி நிமிர்ந்தன. தலையணைக்கடியில் மடிந்திருந்த கைவிரல்கள் சில்லிட்டு உணர்வற்றுக் கிடந்தன. உதடுகள் பலமாகத் துடித்தன. ஏதோ கூற வேண்டும் போல் கெஞ்சிய விழிகள் ஆறுமுகத்தை உற்று நோக்கின. கண்களில் ஒரு கோடிக்கும் மறு கோடிக்குமாக ஊர்ந்து அலைந்த விழிகள் ஏதோ ரகசியம் சொல்லப் பரபரத்தன.

அவளுடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்ய எழுந்த பொலிஸ் காரர்கள் அவளை நோக்கி நடக்கின்றனர். ஒரு வினாடி அவர்களைப் பாரத்தவள் 'வீல்' என்று கத்தியபடி மறுபடியும் மயங்கிக்கிடந்தாள்.

ஆண்டியப்பனைப் போட்டு நோண்டி எடுத்துக் கொண்டிருந்தான் வீரமுத்து.

கண்ணம்மாவை யாரோ தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள் என்றதும் இந்தக் கராஜுக்கு எப்படி எங்களைக் கூட்டிவந்தாய் என்று தான் தொடங்கினான்.

"நம்ம கிளாக்கரய்யாவா இவ்வளவும் செய்றாரு?" என்று ஆச்சரியத்துடன் வினவிக் கொண்ட வீரமுத்துவின் கரங்கள் துறுதுறுத்தன. "கராஜுக்குள்ளே இருந்தவனுக்குக் குடுத்தேனே அது அடி இல்லை. தோட்டத்துக்கு வந்து பாரு அய்யாவுக்கு விடுறேன்......" என்று கொதித்தான்.

கண்ணம்மாள் மயக்கம் தெளிந்து எழுந்ததும் சற்று சாந்தமாக இருந்தவன் அவள் மீண்டும் மயங்கி விழவே வெறி பிடித்தவனானான்.

ஆறுமுகத்தை மட்டும் ஆஸ்பத்திரியில் கண்ணம்மாவுடன் விட்டு விட்டு கணபதியை இழுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இப்பவே தோட்டத்துக்குப் போவனும்” என்று ஒற்றைக் காலில் நின்றவனைக் கணபதி சமாதானப்படுத்தி ஒரு சாராயக் கடைக்குள் இழுத்துகொண்டு போனான்.

அதிகமாகக் குடிக்கக் கொடுத்து அவனைக் காரில் இழுத்துப் போட்டுக் கொள்ள வேண்டும் என்பது தான் கணபதியின் எண்ணம். அதைச் செயல்படுத்தவே பாருக்குள் நுழைந்தான்.

கண்ணம்மா மறுபடியும் மயங்கி விடவே பொலிஸ்காரர்கள் ஸ்டேச னுக்குப் போய்விட்டார்கள் பிறகு வருவதாகக் கூறிவிட்டு.

கண்ணம்மாவின் கைகளை லேசாக தடவிக்கொடுத்துக் கொண்டிந் தான் ஆறுமுகம். நர்ஸ் ஒருத்தி ஏதோ ஒன்றை அவள் முகத்தில் தேய்த்து விட்டு நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டுப் போனாள். அவளுடைய தலைமாட்டில் அமர்ந்து அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் ஆறுமுகம்.

கண்கள் லேசாக திறந்தன. விழிகள் மேலும் கீழும் அலைந்தன. ஆறுமுகத்தை அவை அடையாளம் கண்டு கொண்டன.

இமைகள் கனத்துக்கொண்டு வந்தன. அவளுடைய நெஞ்சு மிகவும் சுமையாக இருப்பதாக உணர்ந்தாள். கனத்த இமைகள் மூடிக் கொண்டன. கன்னங்களில் கோடாக ஊற்றியது கண்ணீர்.

ஆறுமுகத்தின் கைகளிருந்து தனது கைகளை விடுவித்துக் கொண்டவள் “என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று மட்டுமே கூறிவிட்டு விழிகளை அழுந்த மூடிக் கொண்டு பிதுங்கிப் பிதுங்கி அழுதாள்.

ஆறுமுகம் கலங்கிப் போனான். அவளை எப்படிச் சமாதானம் செய்வது என்று அவனுக்குத் தோன்றவில்லை. மூடிய விழிகளைக் திறக்காமலே அவள் குமைந்து கொண்டிருந்தாள். ஆறுமுகத்துக்கு தர்ம சங்கடமாகப் போய் விட்டது.

“இந்தக் கழுதைகள் எங்கே போய்த் தொலைந்ததுகள்” என்று வீரமுத்துவையும், கணபதியையும் சபித்துக் கொண்டிருந்தான்.

எதேச்சையாக ‘பாரை’ விட்டு வெளியே வந்த வீரமுத்து வெறித்துப் பார்த்தான். கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு மீண்டும் பார்த்தான். சந்தேகமில்லை கிளாக்கரய்யா வீட்டுக் கார்தான் நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிரைவிங் சீட்டிலிருந்து இறங்கிய கிளாக்கரய்யா தனது வாடிக் கைக்கடையை நோக்கி நடந்தார்.

வீரமுத்துவின் வெறி உச்சந்தலைக்கு ஏறியது.

"டேய் அயோக்கிய ராஸ்க்கல் நில்லு, இதோ வர்றேன்" என்று கத்தியபடி இறங்கி ஓடினான்.

அவனுடைய சத்தம் கேட்டு வெளியே வந்த கணபதி "வீரா நில்லுடாட...... வீரா நில்லுடா" என்று சத்தமிட்டபடி அவன் பின்னால் ஓடினான்.

இதொன்றையும் கவனியாத கிளாக்கரய்யா சாவதானமாக நடந்து கொண்டிருந்தார், கடையை நோக்கி.

## 12

ஆறுமுகம் பெரியதுரையைச் சந்திப்பதை எப்படியாவது தடுத்து விட வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்ட கிளாக்கரய்யா சிறிது நேர யோசனைக்குப் பின் பெரிய கிளார்க்கை போனில் அழைத்தார்.

"என்ன" என்று கேட்ட பெரியவரிடம், "எனக்கு உடல் நிலை சரியில்லை நான் வீட்டுக்கு போக வேண்டும்"

"நான் சொன்னதைக் கேட்டதும் வயிற்றுவலி வந்து விட்டதோ......!" என்ற பெரிய கிளார்க்கின் நகைச்சுவையை ரசிக்கும் மனநிலையில் அவர் இருக்கவில்லை.

இவர் லீவில் போவதென்றால் பெரிய ஆபீசுக்குப் பேசி அங்கிருந்து ஒரு கிளார்க்கை வரவழைத்து ஆபீசில் வைத்து விட்டுத்தான் போக வேண்டும். ஆபீசை மூடிவிட்டுப்போகும் வழக்கம் கிடையாது. ஆள் இல்லாவிட்டாலும் அலுவல்கள் நடந்தாக வேண்டுமே!

"திடீரென்று சொன்னால் எப்படி?" என்று இழுத்தார் பெரியவர்.

"ப்ளீஸ்...... ஐ ஆம் நொட் வெல்..... ஐ மஸ்ட் கோஹோம் அன்ட் ரெஸ்ட்...." என்று குழைந்தவா "நீங்கள் ஒரு ஆளை அஜஸ்ட் பண்ணி அனுப்பும்வரை என்னால் ஆபீசில் இருக்க முடியாது. மயக்கமாக இருக்கிறது. நான் சாவியை பங்களாவில் கொடுத்து விட்டுப் போகி றேன்.... கவனித்துக்கொள்ளுங்கள்" என்று கெஞ்சினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கென்றால் பெரியவர் எதையும் செய்வார் என்பது அவருக்கு நன்றாகத்தெரியும். அவருக்கு மட்டும் மல்ல, ஆபீஸிலுள்ள அத்தனை பேருக்குமே தெரியும். அவருக்கும் இவருக்கும் அப்படியொரு உறவு. அப்படி ஒரு நெருக்கம்.

பெரியவர் நல்ல திடகாத்திரமான பேர்வழி, நல்ல உயரம். அதற் கேற்ற பருமன், பீமனைப் போல் இருப்பார். அவருடைய மனைவியோ சீக்காளி! ஏழுநாட்களில் ஐந்து நாட்கள் படுக்கை, மீதி இரண்டு நாளும் ஆஸ்பத்திரி. இந்த லட்சணத்தில் தாய் வீட்டுக்குப் போய்த்தங்கிக் கொள்வது வேறு.

ஆபீஸ் முடிந்து களைப்புடன் பெரியவர் வீட்டுக்கு வந்தால் உப சரணை கிடையாது.

"எனக்கு இங்கே வலி, அங்கே பிடித்துக் கொண்டிருக்கிறது. மூச் செடுக்க முடியவில்லை" என்று இதே பாட்டுத் தான்.

பெரியவருக்கு இவைகளைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய் மனைவியைக் கண்டாலே ஒரு வெறுப்பு, "செத்துத் தொலையுதில்லியே" என்று கறுவிக்கொள்வார் அடிக்கடி, அந்தம்மாவும் சாவதாகக் காணோம்.

சின்னவரின் மனைவியையும் குறை சொல்ல இயலாது. இவர் தான் பெரிய கிளார்க். தோட்டத்தின் பிரதம மந்திரி என்று விஷயமறிந்து நடந்து கொண்டாள். பெரியதுரை என்ன கவர்னர் ஜெனரல் தானே! குசினிக் கதவுக்குப் பின்னே நின்று கொண்டு "வந்து உட்காருங்கள் அவர் இன்னும் வரவில்லை" என்று தடுமாறும் 'டைப்' இல்லை யென் பதை முதல் விஸிட்டிலேயே கணித்துக் கொண்ட பெரியவர், அதன் பிறகு தனது அந்தஸ்தை விட்டு சின்னவர் வீட்டுக்கு அடிக்கடி விஸிட்டிங் போனார்! அதுவும் தனியாக!

அப்போது சின்னவருக்கு இரண்டு பிள்ளைகள். அம்மாவின் உடல் கட்டு மோகிக்கும்படி இருந்தது. ஒரு நாள் பேசிக் கொண்டிருந்து விட்டு, "நான் வருகிறேன் நேரமாகி விட்டது" என்று கிளம்பிய பெரியவர் கதவிடம் நின்று கொண்டிருந்தவளைத் தாண்டிப்போகும் போது வசதி யாக தெரிந்து கொண்டிருந்த அவளுடைய இடையைத் தொட்டு "யன்னாங் குட் நைட்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய கை தன்மேல் இருப்பதைக் கண்டு எந்த விதத்திலும் அலட்டிக்கொள்ளாமல் "எய் எச்சர அதிஸி....." என்று கேட்டாள் அவள்.

கிளம்பப்போன பெரியவர் மீண்டும் வந்து அமர்ந்து கொண்டார்.

அதன் பிறகு அய்யா வந்து சாய்வு நாற்காலியில் அமர்ந்தால், சின்னவரின் மனைவி நாற்காலிக் கம்பில் ஒய்யாரமாகக் குந்திக் கொண்டு நிலக்கடலை உரித்து விரலால் நெருடி ஊதிக் கொடுப்பதுண்டு.

இப்படி உபசாரம் பெரியவருக்குத் தன்மனையிடம் கூடக் கிடைத்த தில்லை. பிறகு கேட்பானேன் பெரியவரின் 'வீக் பாயின்ட்' சின்னவர் கையில், 'டக் டக்' கென்று ப்றமோஷன் கிடைத்தது. பெரிய ஆபீஸில் கிடந்து மாடாய் உழைப்பதை நைசாக மாற்றிக் கொண்டு டிவிஷன் ஆபீசுக்குப் போய் விட்டார்.

அவர் டிவிஷன் மாறிப் போய்விட்டது பெரியவருக்கும் கொஞ்சம் சங்கடம் தான். அந்திக்கு ஆபீஸ் முடிந்து அங்கே போய்க் கொஞ்சம் இளைப்பாற முடியாதே!

அந்தக் குறையைப் பெரியவர் உணராமல் இவர்களும் பார்த்துக் கொண்டார்கள். டிவிஷன் ஆபீசில் இருந்து அவரைப் பெரிய ஆபீசுக்கு இழுக்க இவருக்கும் ரொம்ப நேரம் பிடிக்காது.

ஆபீஸ் விஷயங்களில் சின்னவர் மாட்டும்போது பெரிவர் அழுத்திப் பிடிப்பார். அன்று மாலையே சின்னவர் மனைவியை விரட்டுவார் பெரியவர் வீட்டுக்கு. அதன்பின் விஷயங்கள் சுமூகமாக முடியும்.

இந்த உறவின் பலத்தில் தான் விஷயங்கள் நடந்து கொண்டிருந்தன. நான் ஆபீசைப் பூட்டி சாவியை பங்களாவில் கொடுத்து விட்டுப் போகின் றேன். நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்; என்று பெரியவரிடம் கூறுமளவுக்கு இவருக்கும் தைரியம் இருக்கிறது.

"ஆப்டர் லஞ்ச் யூ கோடு த டிவிஷனல் ஆபீஸ்" என்று யாரோ ஒருவரிடம் ஆர்டர் போட்டுக்கொண்டிருந்தார் பெரியவர்.

அந்த கிளார்குக்கு அன்று சாப்பாட்டுக்குப் பிறகு என்னென்ன முக்கிய அலுவல்கள் இருந்தனவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நீங்கள் என்னை டிவிஷன் ஆபீசுக்குப் போகச் சொன்னதால் தான் என்னால் இந்த வேலைகளை முடிக்க முடியவில்லை” என்று அவரிடம் கூறமுடியுமா?

இந்த வேலையையும் முடித்துக் கொள்ளவேண்டும். பெரியவர் சொன்ன அந்த டிவிஷன் ஆபீஸ் வேலையையும் கவனித்துக்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் அவருடைய சொந்த வேலையைப் பார்த்து கொண்டு போக வேண்டியிருக்கும்.

ஆபீசைப் பூட்டி சாவியை பங்களா வேலைக்காரனிடம் கொடுத்தவர், “சின்னத்துரை கேட்டா எனக்கு சுகமில்லையன்னு சொல்லு. பெரியாபீஸ்லேருந்து ஆள் வரும்னு சொல்லு என்று கூறிவிட்டு நடந்தார்.

மேலே வந்து கொண்டிருந்த அவருடைய பகல் சாப்பாட்டையும் திருப்பி அனுப்பிவிட்டு வீட்டை நோக்கி நடந்தார்.

சாப்பாட்டுக்கு வீடு வந்ததும் பதறி போனாள் மனைவி. “உடம்புக்கு ஏதும் ஆச்சோ..... ஆபீசில் ஏதும் கரைச்சலோ.....” என்று குழம்பிய வளைப் பார்த்து அய்யா கூறினார், “கேம லேஸ்தி கறன்ன..... மம அதிஸியென் டவுமட்ட யன்ட தியனவா......” என்று.

“கராஜ்காரர்களைத்தான் முதலில் பிடிக்கவேண்டும். அவர்கள் மூலமாகத்தான் ஆறுமுகத்தைத் தோட்டத்துக்கு வர விடாமல் தடுத்து வைக்கமுடியும்..... மிஞ்சிப்போனால் ஆளை வரவிடாமலே செய்து விடச் சொல்ல வேண்டியது தான்” என்று எண்ணியபடி கராஜிடம் காரை நிறுத்தியவருக்கும் பெரிய ஏமாற்றமாக போய் விட்டது.

கராஜ் பூட்டிக்கிடந்தது.

என்ன செய்வதென்று தீர்மானிக்கமுடியாதவராக டவுனில் காரை நிறுத்திவிட்டு இறங்கி நடந்தவர் ஏதோ கூச்சல் கேட்டுத் திரும்பினார்.

தன்னை நோக்கி வீரமுத்து ஓடிவருவது தெரிந்தது. அவன் ஆவேசமாக ஓடிவருவதையும், பலமாக கூச்சல் போடுவதையும் கண்டவர் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதென்று எண்ணியவராக கடைக்குள் நுழைந்து கொண்டார்.

முன்னால் நின்ற கூட்டத்தை மூர்க்கத்தமாகத் தள்ளிக் கொண்டு கடைக்குள் நுழைந்த வீரமுத்துவை எட்டிப் பிடித்து வெளியே இழுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கணபதி. இவன் இழுக்க அவன் திமிற அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் கூடி விட்டது. வீரமுத்துவை காரில் ஏற்றுவதற்குள் அவனுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

பெரியதுரையின் ஆணைப்படி அன்று மாலையே பெரிய ஆபீஸுக்குப் போய்ச் சேர்ந்தார் சின்னதுரை.

இரண்டு துரைமார்களும் நீண்டநேரம் துரையின் ஆபீஸ் அறைக்குள் அடைபட்டுக் கிடந்தனர்.

"தொழிலாளர்களுடன் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்! அதுவும் இந்த நாட்களில் அவர்களுடன் பழகுவது கத்தி முனையில் நடமாடுவது போன்றது. ஒரு சிறிது தவறினாலும் ரத்தக் களரிதான் ஏற்படும்" என்ற உண்மையைச் சின்ன துரையின் மனதில் ஆணியடித்துமாட்டிக் கொண்டிருந்தார் பெரியதுரை.

தன் பக்கம் நியாயம் தேடிக்கொள்வதற்காக ஆறுமுகம், கண்ணுச்சாமி, வீரமுத்து ஆகியோரின் அடாவடித்தனங்களை அள்ளி வைத்தார் சின்னதுரை.

ஆபீஸில் அன்று அவர்கள் சம்பளம் வாங்க மறுத்ததைக் கூறினார். வாங்கும் சம்பளத்துக்கு விளக்கம் கூறாவிட்டால் வாங்க முடியாதென்று தகராறு பண்ணியதைக் கூறினார். நேற்றே சம்பளம் வாங்கிவிட்ட ஒரு பெண்ணை மறுநாளும் காலையில் ஆபீஸுக்கு கூட்டிவந்து சம்பளம் வாங்காத ஆள் போல் நடிக்கச் செய்த நாசகார வேலையைப்பற்றிக் கூறினார். எல்லாவற்றுக்கும் மேலாக நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில், "ஆபீஸில் நடக்கும் அக்கிரமங்கள்" என்று ஆறுமுகம் பேசிய பேச்சுக்களையும், துரைமார் சங்கத்தில் பேச தனக்கொரு சந்தர்ப்பம் கேட்டுத் தரும்படி கூறிய அவனுடைய அடங்காத்தனத்தையும் பற்றிக் கூறினார்.

வேட்டைக்காக காட்டில் புகுந்தவனைப் போல் காதைத் தீட்டிக் கொண்டிருந்தார் பெரியதுரை. பிளாண்டர்ஸ்ல் அஸோஸியேஷன் கதையெல்லாம் வருவதாக இருந்தால் இதில் ஏதோ விஷயம் இருக்கிற தென்பதை யூகித்துக் கொண் டவர், "ஆறுமுகத்தை நாளைக் காலையில் தன்னைப் பார்க்க வரும்படி கூறு" மாறு சின்னதுரையிடம் கூறி அனுப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதியின் கார் ஈரப்பலாமரத்தடியில் வந்து நின்றதும், அந்த இடத்தில் இருக்கும் நாலைந்து லயத்து ஆட்களும் வந்து காரைக் குழுமிக்கொண்டனர்.

"கண்ணம்மாவுக்கு என்ன ஆச்சுது.....?"

"எந்தப் பாவி அதைத் தூக்கிக்கிட்டுப் போனான்?"

"அவனுகளை பொலீசுல புடிச்சிக் குடுத்திட்டியா தம்பி?" என்று பலவாறான கேள்விகள் கிளம்பின.

பெண்கள் கூட்டம் மீண்டும் ஓலமிட ஆரம்பத்துவிட்டது.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு காரிலிருந்து இறங்குவதே கஷ்டமாய்ப்போய்விட்டது.

"இந்தா புள்ளைங்களே கொஞ்சம் வெலகிக்கிறுங்களேன் இங்க என்ன கடலையா அவிக்கக் கொண்டாந்திருக்கோம் ஒதுங்கு ஒதுங்கு....." என்று காரை மொய்த்துக் கொண்டிருந்த சின்னதுகளை விரட்டிக் கொண்டிருந்தான் ஆண்டியப்பன்.

காரிலிருந்து இறங்கிய கணபதி ஆட்களை ஒதுக்கிக் கொண்டு பின் கதவைத் திறந்து பிடித்துக்கொண்டான்.

கண்ணம்மாவைக் கைப்பிடியில் தாங்கியவாறு மெதுவாக இறக்கினான் ஆறுமுகம். அவளுக்கு மறுபுறமாக அவளை அணைத்துத் தோளில் சாய்த்துப் பிடித்தவாறு இறங்கினான் வீரமுத்து.

அவள் மிகவும் களைத்துப்போயிருந்தாள். காற்றில் அகப்பட்ட பூவைப்போல் கசங்கிப்போயிருந்தாள். கால்கள் தரையில் ஊன்றியிருந்தாலும் உறுதியற்றுத் துவண்டன.

"சுருக்குனா ஓடிப்போய் ஒரு படுக்கை தயார் செய்.... கொஞ்சம் சுடுதண்ணியோடு..... அதைக் குளிப்பாட்டித் தூங்கப்போடணும்..... நல்லா பயந்திருக்கு."

யாரையோ விரட்டிக்கொண்டிருந்தான் ஆறுமுகம்.

கம்புகளுக்கிடையில் தொங்கி நடக்கும் நொண்டி போல் இருவருக்குமிடையில் சோர்ந்து தொங்கிக் கொண்டு நடந்தாள் கண்ணம்மா.

முழுக் கூட்டமும் அவளைக் கண்களால் மொய்த்தது. யாருடைய விழிகளையும் சந்திக்க மறுப்பதுபோல் சந்திக்க விரும்பாதது போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்க சக்கதியற்றுதுபோல் அவர்களுடைய பார்வைகளில் இருந்து விழிகளை ஒதுக்கிக் கொண்டிருந்தாள் கண்ணம்மா.

காரிலிருந்து இறங்கியவர்கள் லயத்தை நோக்கி நடக்கவும் கூட்டம் திப்பித் திப்பியாய் சிதறிக் கிடந்தது.

தங்கள் தங்கள் உத்தேசத்தின்படி தங்கள் தங்கள் மூளைக்கு எட்டிய வாறு பலவாறாகப் பேசிக்கொண்டார்கள்.

கண்ணம்மாவைக் கவனமாகப் பார்க்கும் பொறுப்பை பெண் களிடம் ஒப்படைத்துவிட்டு வெளியே வந்த ஆறுமுகம் அப்போதுதான் சோர்வை உணர்ந்தான். "ஆற்றில் விழுந்து எழும்பினால் தான் களைப்புத் தீரும்" என்று எண்ணியவனாக, சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு, துண்டை எடுத்துத் தோளில் வீசியவாறு குறுக்கில் இறங்கினான்.

நாலைந்து படி இறங்கியவன், ஏதோ நினைத்துக் கொண்டவனாய் "விர்; என்று ஏறிவந்து வீரமுத்துவைத் தேடினான்.

கிளாக்கரய்யாவைத் தாக்குவதற்காக, டவுனில் அவரை விரட்டிக் கொண்டு இவன் ஓடியதை கணபதி மெதுவாகக் கூறி வைத்திருந்தான்.

"அவனுடைய கோபம் இன்னும் அடங்கியிருக்காது. அதே கோபத் துடன் கிளாக்கரய்யா பங்களாவை நோக்கிப் படையெடுத்து விட்டா னென்றால்....."

வீரமுத்துவைக் காணாததால், கணபதியைக் கூப்பிட்டான் ஆறு முகம். கார் இன்னமும் பலாமரத்தடியிலே தான் நிற்கிறது.

"எனக்கு ரொம்பச் சோர்வா இருக்கு கணபதி. குளிக்காட்டிச் சரி வராது. நீ வீரமுத்துமேல் ஒரு கண் வச்சிக்கோ..... சின்ன பிள்ளைத் தனமாக ஏதாச்சும் செஞ்சுட்டான்னா...." என்று கணபதியிடம் கூறிவிட்டு ஆற்றை நோக்கி நடந்தான்.

அதேநேரத்தில் பாபர் குடிலுக்குப் பக்கத்தில் உள்ள பொட்டலில் ஒரு உயர்ந்த கல்லின்மேல் உட்கார்ந்திருந்தான் வீரமுத்து.

அவனைச் சுற்றி ஒரு ஏழெட்டுப் பேர் பொட்டலில் அமர்ந்திருந் தனர். அத்தனை பேரும் அவனொத்த வயதுப் பையன்கள். சீறும் இரத்தம் கொண்ட வாலிபர்கள்.

தனது கைகளை உயர்த்தி, ஆட்டி, முஷ்டி மடக்கிக் குத்திப் பேசிக் கொண்டிருந்தான் வீரமுத்து. அவனுடைய அசைவுகளிலிருந்து அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலெக்ஷன் கூட்டம் பேசும் மந்திரிபோல் ஆவேசமாக, ஆக்ரோஷமாகப் பேசிக் கொண்டிருக்கிறானென்பது புலனாகியது.

கேட்டுக்கொண்டிருந்த வாலிபர்களின் உணர்ச்சிகளை தன்னுடைய பேச்சால் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தான் வீரமுத்து.

ஆம்! படை திரட்டிக்கொண்டுதான் இருக்கிறான் அவன்.

எங்கெல்லாமோ வீரமுத்துவைத் தேடி அலைந்த கணபதி, பாபர் கொட்டகையிடம் வந்தபோது அந்தப் பொட்டல் காலியாகக் கிடந்தது.

தான் பேசிக்கொண்டிருந்த அந்த நாலைந்து பேருடன் அவன் டவுனை நோக்கிப் போய் வெகு நேரமாகிவிட்டிருந்தது.

தலை சீவிக்கொண்டிருந்த ஆறுமுகத்திடம் தபால் பையன் ஓடிவந்து கூறினான், "சின்னதுரை ஆபீஸுக்கு அவசரமாக வரச்சொன்னாரு" என்று.

"ஆபீஸுல யாரு இருக்கா......?"

"நம்ம கிளாக்கரய்யா இல்லங்கண்ணே, அவரு சொக மில்லையாம். பெரியாபீஸ் கிளாக்கரய்யாவும், தொரையும், கண்டக்டரய்யாவும் இருக் காங்க...."

"ஓஹோ சொகமில்லையோ.... அது தான் டவுனில் சுத்திக்கிட்டிருக் காரோ...."

"எனக்குத் தெரியாதுங்கண்ணே" என்றவாறு கண்களால் சிரித்து விட்டு நடந்தான் தபால் பையன்.

"ஒரு அஞ்சு நிமிசத்துல வர்றேன்னு சொல்லு" என்று கத்திக் கூறியபடி கண்ணம்மாவைப் பார்க்கப் போனான்.

அவள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். கட்டிலில் இருந்து கீழே தொங்கிய ஈரக் கூந்தலை அள்ளி எடுத்துத் தலையணைமேல் போட்டான். கட்டிலுக்கடியில் தலை மாட்டிலிருந்து கிளம்பிய சாம்பராணிப் புகை ஈரக் கூந்தலுக்குள் பின்னிக் கிளம்பியது. கமகமவென்று வாசனை அந்தக் காம்பராவை நிறைத்துக் கொண்டிருந்தது.

"தூங்கட்டும்" என்று மனதுக்குள் திருப்திப்பட்டுக்கொண்டவன் ஆபீஸை நோக்கி நடந்தான்.

ஜன்னலைத் திறந்துவிட்டார் கிளார்க்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செலாங்க....."

"செலாம் ஆறுமுகம்..... எப்ப வந்தது......?"

"எங்கேருந்துங்க.....?"

"போலீஸ்லேருந்து...." துரையின் குரலில் சூடும் ஏளனமும் ஒன்றாகத் தொனித்தன.

"போலீஸ்ல இருந்து மாத்திரம் இல்லீங்க, போலீஸ், ஆஸ்பத்தரி ரெண்டுலேருந்தும் இப்பத்தான் வந்தேன். ரெண்டு எடத்திலயும் றிப் போர்ட் அழகாகக் குடுத்திருக்கேன்.... ஒங்களைக் கூப்பிடுவான், அப்ப நீங்களும் போகலாம். ஒரு பொண்ணு அநியாயமா செத்துக்கிட்டிருக்கு. அதோட சாவுக்கு இந்த நெலமைக்கு நீங்கதான் காரணம்னு சொல்லிட்டு வந்திருக்கேன்..... நீங்கதான்னா உங்க கூட்டம்.... உள்ளுக்கு இருந்து விட்டு ஓட்டை அதிகாரம் பண்ணுறீங்களே அந்தக் கூட்டம்....."

"வாட்....?" என்று கத்தினார் துரை.

"வாட்டுனது போதும்ங்க" துடிக்கும் உதட்டைப் பற்களால் பிடித்துக் கொண்டான் ஆறுமுகம். பிறகு தொடர்ந்தான்:

"லயத்துல இருக்குற ஒரு பொம்மனாட்டியை டவுன்ல இருக்குற ஒரு காடப் பய கார்ல வந்து தூக்கிட்டுப் போறதுன்னா....! என்னங்க தொரைகளே..... உங்க தோட்டத்துல அப்படி நடந்திருக்கே வெட்கமா இல்லே... உங்களுக்கு.....! அதைப்பத்தி ஏதாச்சும் நடவடிக்கை எடுத்தீங் களா.....?"

"எப்படி எடுக்குறது? யாரு மேன் றிப்போர்ட் பண்ணுனது?"

"ஹப்பா இந்த மேன்ல கொறைச்சல் கெடையாது... றிப்போர்ட் பண்ணுனா மட்டும் என்னத்தைப் பெரிசா செஞ்சிடுவீங்க தூக்கிட்டுப் போக ஆளனுப்பினதே நீங்க தானே....."

துரைக்கு கோபம் தாளமுடியவில்லை. "யூஷட் அப் ஆறுமுகம்" என்று கத்தியவர் கண்டக்டரை கூப்பட்டார்.

"லுக் வாட் திஸ் செப் இஸ் டாக்கிங்....."

"நீ அப்படி பேசக்கூடாதில்லையா ஆறுமுகம்....தொரையா அப்படிச் செய்வாரு. அப்படிச் செய்யிறவருன்னா உன்னைக் கூப்பட்டுக் கேப் பாரா.....?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னங்க செய்யிறது..... சந்தர்ப்பம் அப்படி நெனைக்கவும் பேச வும் சொல்லுதே. ஐயாவே ஞாபகப்படுத்திப் பாருங்க. கண்ணுசாமி அன்னைக்கு ஆபீசுல தகராறு பண்ணுனான் தானுங்களே! இப்ப அவன் இருக்கானா? போயே போயிட்டான்.

பொலீஸ் வாராப்புல வந்தது, சுட்டுப் போட்டிறிச்சு. அதேபோல கண்ணம்மாவும் ஆபீசுக்கு வந்து சம்பளம் கேட்டுது. நேத்தே நீ சம்பளம் வாங்கியாச்சுன்னு ஐயா சொன்னாரு, நாங்க இல்லேன்னோம், அது சம்பளம் வாங்கிறிச் சுன்னு புரூவ் பண்ண முடியல்லே. அதுக்காக அதே காடப் பயலை விட்டு இந்தப் பெண்ணையும் தூக்கிட்டுப் போகச் சொல்லியாச்சு...."

துரை அப்படியே களைத்துப் போய் உட்கார்ந்திருந்தார். கண்டக்ட ரய்யா துரையைப் பார்த்தார். துரைக்கு பேச வரவில்லை.

"ஐ ஐஸ்ட் காண்ட் அன்டர்ஸ்டான்ட் இட், லெட்ஹிம் கோ டு த ஹெட் ஓபீஸ்" என்று கண்டக்டரிடம் கூறியவர், ஆறுமுகம் பக்கம் திரும்பி, "எனக்கு ஒன்னும் வௌங்குதில்லே ஆறுமுகம்... நீ சொன்ன மாதிரி ஏதும் நடத்திருந்தா நான் ரொம்ப வருத்தப்படுறேன்.... நீ பெரிய தொரைகிட்ட பேசு. நாளைக்குக் காலையில பெரியதுரை உன்னை வரச் சொன்னது. நானும் வர்றேன்...."

"அப்ப செலாங்க" என்றவாறு ஆறுமுகம் படியிறங்கினான். படியில் வைத்த கால் வழுக்கி சேற்றில் விழுந்தது சதக்கென்று.

தன்மேல் முட்டிக்கொள்ளுமாப்போல் நின்று கொண்டு அன்று கண்ணம்மா நொடித்த அந்த நொடி அவன் நினைவில் ஓடியது. விர் ரென்று இறங்கி ஓடினான்.

## 13

அடுத்தநாள் காலை ஆறுமுகம் பெரிய ஆபீஸை அடையும் போது ஒருவித தீவிர முடிவுக்கு வந்திருந்தான். டிவிஷன் ஆபீஸில் நடக்கும் அட்டூழியங்களைப் புட்டுப் புட்டு வைத்துவிட வேண்டுமென்பதே அவனுடைய முடிவு.

ஆண்டியப்பனையும் அழைத்துக்கொண்டு சரியாக ஒன்பது மணிக் கெல்லாம் பெரிய ஆபீசுக்கு வந்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை பங்களாப் பக்கம் இருந்து வீசிய காற்று பூக்களின் நறுமணத் துடன் நிறைந்திருந்தது. வாடும் தேயிலைக் கொழுந்தின் ஒரு மயக்க மூட்டும் போதை மணமும் இடையிடையே எழுந்து, ஸ்டோர், ஆபீஸுக்கு மேலே இருப்பதை ஞாபக மூட்டிக்கொண்டிருந்தது.

பெரட்டுப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த பெரிய துரையிடம் "தட் ஆறுமுகம் ஹாஸ் கம்சார்......" என்று கூறினார் பெரிய கிளார்க்.

"ப்றிங் ஹிம்....." என்று கூறியவர், டின்னில் இருந்து ஒரு சிக ரெட்டை உருவி உதட்டில் திணித்துக் கொண்டார்.

"செலாங் நான் ஆறுமுகம்" என்றதும், ஜன்னலுக்கு வெளியே நிற்பவனை உற்று நோக்கினார் பெரியவர்.

கறுத்த முகம், பரந்த நெற்றி, கூர்மையான நாசிக் கடியில் ஒழுங்காகக் கத்தரிக்கப்பட்ட மீசை, லேசாகத் துடித்துக் கொண்டிருக்கும் உதடுகளின் பிரிவில் தெரியும் பல்வரிசை.

அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட விதம், நிற்கும் நிலை யிலேயுள்ள ஒரு அடக்கமான கம்பீரம் ஆகியவைகள் அவருக்குப் பிடித்திருந்தன.

"டீஸன்ட் செப் ஹி இஸ்; என்று மனதுக்குள் முனகிக் கொண்டவர், "என்ன ஆறுமுகம் இதெல்லாம் கரைச்சல்?" என்று கேட்டார்.

"எதைப் பத்திங்க சொல்றது அய்யாவுக்குத் தெரியாமல் எத்தனை அட்டூழியம் நடக்குது! வேலைநிறுத்தம்கிற அளவுக்குப் போயிறிச்சுங்க பெறகு ஒருவிதமாகச் சமாளிச்சோம்" என்று பேசிக்கொண்டே வந்தவன், பெரியதுரையின் கதவில் விழுந்த தட்டலைக் கேட்டு நிறுத்திக் கொண்டான்.

"கம் இன்" என்றார் பெரியதுரை,

சின்னதுரைமார்கள் இருவரும் உள்ளே நுழைந்தனர். தன் தோட் டத்து சின்னதுரையைக் கண்டதும் ஆறுமுகம் புன்னகைத்தபடி, "செலாங்"க என்றான்.

துரைமார் இருவரும் பெரியதுரைக்கு சற்று விலகிப் போடப்பட்டி ருந்த நாற்காலிகளில் அமர்ந்துகொண்டனர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சின்னதுரைகளை நான்தான் வரச்சொன்னேன்.... துரைமார் சங்கத்தில் பேசவேண்டுமென்று நீ கூறினாய் தானே.... இப்போது இங்கே மூன்று துரைமார்கள் இருக்கின்றோம். போதுமா.....? நீ அங்கே கூறவேண்டுமென்று நினைத்தவைகளை இங்கேயே கூறலாம்.....”

ஆறுமுகத்தின் முகம் சிவந்து கொண்டது. வெட்கம் அவனைக் குலுக்கியது. “அடேயப்பா! இது கூட பெரியதுரைக்கு வந்துவிட்டதே” என்று எண்ணிக்கொண்டவன், “இது எல்லாம் வந்துவிடுகிறது. உண்மையாகவே வரவேண்டியவைகள் வரக்காணோம்” என்றும் அலுத்துக்கொண்டான்.

“இவனைத் தெரியுதா தொரைகளே யாருன்னு...?” திடீரென ஒருவனை இழுத்து ஜன்னலுக்கு முன் நிறுத்தினான் ஆறுமுகம்.

பெரியதுரையும் ஒரு சின்னதுரையும் பேசாமலிருக்க, ஆறுமுகத்து டிவிஷன் துரைமட்டும் லேசாகச் சிரித்துக் கொண்டார்.

“இது வந்து என் தோட்டத்து ஆள்....”

“அவ்வளவுதானுங்களே தெரியும்....பேர் தெரியாது இல்லியா....”

பெரியதுரை சின்னதுரையைப் பார்க்க, சின்னதுரை சீலிங்கை பார்த்தார், “இம்பொசிபல்........” என்று முனகியபடி.

“இது யாருன்னு சொல்ல முடியுமா?” ஒரு பெண்ணை இழுத்து நிறுத்தினான் ஆறுமுகம்.

“என் டிவிஷன் ஆள்” மறுபடியும் ஆறுமுகத்து டிவிஷன் துரையே கூறினார்.

“இது?”

“மை மேன்.....” இப்போது கூறியவர் மற்ற துரை.

“உங்களுக்கும் பேர் நினைவுல இல்லே தானுங்களே...?”

“தட்ஸ் கரெக்ட்....”

“அது சரிதானே ஆறுமுகம், நம்ம சின்னதுரைமார்கள் ரெண்டு பேரும் மும்மூணு டிவிஷன் பார்க்கிறது. ஒவ்வொரு தொரைக்கும் கீழே ஆயிரம் பேர் இருக்கு. அத்தனை பேரையும் பெயர்ப்படி தெரிஞ்சு வச்சிருக்க முடியாதுதானே....?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞாயங்க.....! முடியாதுதான்.....! ஆனா அதை ஒரு சாதகமா வச்சிக் கிட்டு எத்தனைபேர் எத்தனை விதமான அக்கிரமங்கள் செய்யிராங்க தெரியுங்களா? ரெண்டொரு ஆளுக்கு ரெண்டு தரத்துக்கு சம்பளம் குடுக்குறாங்க...."

"வாட்?" என்று துள்ளிக் குதித்தார் பெரியதுரை.

"நெவர்டன்" என்று தங்களது மறுப்பைத் தெரிவித்தார்கள் சின்ன துரைமார்கள்.

"நடக்க முடியாதுன்னு லேசா சொல்லிவிட்டா போதாதுங்க போது மான சாக்கி இல்லாமல் நான் பேச வந்திருக்க மாட்டேன். இதோ இருக்கானே இவன்" பேரு தெரியாதுன்னு நம்ம சின்னதுரை சொன் னாரே" இவனைக் கூப்பிட்டுக் கேளுங்க. ஒவ்வொரு மாதமும் எத்தனை தடவை சம்பளம் வாங்கியிருக்கான்னு! அதேபோல அந்தப் பொண்ணு இருக்கே. அது இவனூட்டு சம்சாரம். அதையும் கூப்பட்டு வெசாரிங்க..."

ஆறுமுகம் ஆண்டியப்பனைக் கூப்பட்டு துரை முன் நிறுத்தினான்.

"உன் பேர் என்ன?" என்று கேட்டார் பெரியதுரை.

"ஆண்டியப்பனுங்க...."

"இங்கே ஏன் வந்தே ...?"

"ஆறுமுகம் வரச்சொல்லிச்சுங்க...."

"ஏன்னு சொல்லலையா.....?"

"இல்லீங்க...."

"அது யாரு....?"

"எம் பொஞ்சாதிங்க..."

"அதையும் ஆறுமுகமாக கூட்டியாறச் சொன்னது....?"

"ஆமாங்க...."

"ஏன்னு அதுக்கும் தெரியாது.....?"

"தெரியாதுங்க...."

"நீ ஒரு தடவைக்கு மேலே போன பத்தாம் திகதி சம்பளம் வாங் குனியா....?"

"ஆமாங்க! ரெண்டு தடவை வாங்குனேன்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு ஆள் எப்படி ரெண்டு தடவை சம்பளம் வாங்க முடியும்.....? அது குத்தமில்லையா?"

ஆண்டியப்பன் பயந்துவிட்டான், பெரிய துரையின் முன்னால் அவன் நின்றதேயில்லை.

பயந்தபடியே கூறினான்: "எனக்குத் தெரியாதுங்க சாமி. கிளாக்கரய் யாதான் வந்து வாங்குன்னாரு.... நான் வந்து வாங்குனேன்."

"யாரு சம்பளம் குடுத்தது?

"நம்ம துரை தாங்க...." சின்னதுரையைக் காட்டினான் ஆண்டி யப்பன்.

"நீயும் ரெண்டு தடவையா போனமாசம் சம்பளம் வாங்னது?" பெரியதுரை அலமேலுவைக் கேட்டார்.

"ஆமாங்கப்பா."

"ரெண்டாவது தடவையா வாங்குனதை என்ன செஞ்சே?" ஆறு முகம் குறுக்கே கேட்டான்.

"கிளாக்கரய்யவூட்டு அம்மாகிட்டே குடுத்திட்டேனுங்க"

"ஆண்டியப்பா நீ..."

"நானும் அந்தம்மாகிட்டத்தான் குடுத்தேன்."

பெரியதுரைக்கு தலை சுற்றுவதுபோல் இருந்தது. "இது எப்படி நடக்கமுடியும்" என்பது போல் ஆறுமுகத்தைப் பார்த்தார்.

'சம்பளம் போட்ட மறுநாள் நான் ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு ஆபிஸுக்கு வந்தேன் தானுங்களே' சின்னதுரையைப் பார்த்துக் கேட்டான் ஆறுமுகம்.

'ஆமாம். ஏற்கனவே சம்பளம் வாங்குன ஒரு பெண்ணை மறுபடியும் கூட்டிப்போய் தகராறு செய்தாயாம்....' என்று கூறினார் பெரியதுரை.

"ஏற்கனவே அந்தப் பொண்ணு சம்பளம் வாங்கிறிச்சுன்னு ஆபீசல உள்ளவங்களுக்கு எம்பிக்க முடிஞ்சுதான்னு கேளுங்க? எனக்குத் தெரியும் அது சம்பளம் வாங்கிட்ட சங்கதி கிளாக்கரய்யாவுக்கு தெரியும் அந்தப் பொண்ணுக்கும் தெரியும். ஆனா சின்னதுரைக்குத் தெரியாது. வாங்குன சம்பளத்துக்கு அந்தப் பொண்ணு கையெழுத்துப் போட்டிருந்தா அதைக் காட்டிறலாம். அது இல்லாததுனாலே மீதிக் காசை சரிபார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இருந்தா தருவதாக சின்னதுரை ஒத்துகிட்டாரு. அதுலேருந்து என்னங்க தெரியுது. காசு கூடுதலா இருந்தா நேற்றே சம்பளம் வாங்குன ஒரு ஆளுக்கு இன்னைக்கும் சம்பளம் குடுப்பாங்க. அப்படித் தானுங்களே தொரைகளே! இன்னொன்னையும் தொரை மைனூட்டா கவனிக்கனுங்க. கிளாக்கரய்யா, தகராறு பண்ணுனதுனாலதான் இவ்வளவும் நடந்துச்சி. அந்தப் பொண்ணு பொய் சொல்லுறதாக சின்னதொரைக்குத் தெரிய வந்தது. கிளாக்கரய்யா எதுவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் சம்பளத்தைச் சொல்லியிருந்தால் சின்னதுரையும் குடுத்திருப்பார் தானுங்களே! அப்படீன்னா கிளாக்கரய்யா தனக்கு வேண்டிய ஆளுகளுக்கு ரெண்டு தடவை சம்பளம் குடுத்துக்கிறலாம். அதுல தகராறு இல்லே. நான் கேக்கச் சொன்னது மட்டும் தான் தகராறு! அப்படித் தானுங்களே!"

"கிளாக்கரய்யாவா இருந்தாலும் சரி, அவங்கப்பனா இருந்தாலும் சரி ஒரு ஆளுக்கு ஒரு தடவைக்கு மேலே சம்பளம் குடுக்கச் சல்லி எங்கேயிருந்து வரும்....?" சீறினார் சின்னதுரை.

"கோவப்பட்டா சரிவராதுங்க துரைகளே! இதெல்லாம் நடக்குது....! எப்படி நடக்குதுங்கிறதை நான் ஒருவருசமாக ஆராய்ஞ்சு தெரிஞ்சு கிட்டிருக்கேன். ஆனா ருசுப்படுத்த ஏலாது. அதனாலதான் பெரியதொரை கிட்ட வந்திருக்கேன்..... நான் சொல்லுறதுக்கு மன்னிக்கணும் தொரை களே. அய்யாவும் சிங்களவர், கிளாக்கரய்யாவும் சிங்களவர். அதுனால நீங்க ரெண்டுபேரும் ஒன்னாச் சேர்ந்துக்கிட்டு ஆளுகளுக்கு அநியாயம் பண்ணுறதாத் தான் ஆளுகளுக்கு நல்லபிப்பராயம் இல்லே, அதே நேரத்துல கிளாக்கரய்யா சொல்லுறதைத்தான் துரையும் நம்பவேண்டி யிருக்கு......"

"ஆளுக என்னவேண்னாலும் சொல்லட்டும். ஐடோன்ட் கேர்" என்று ஆறுமுகத்தை இடைமறித்தார் சின்னதுரை.

"அது தப்புங்க....! ஆளுக என்ன சொல்றாங்கங்கன்னு தான் அர சாங்கமே பாக்குது அதுனால ஜனங்களுக்கும் நீங்கள் மத்திப்புக் குடுக் கணும் அதுதான் நீங்க செய்யிறதப்பு" என்று கூறினான் ஆறுமுகம்.

"ஹி இஸ் கரெக்ட்" என்று ஆமோதித்தார் பெரியதுரை.

"தோட்டத்தில் சின்னதுரையாய் இருப்பவரிடமிருந்து சில விசேஷ தனித்தன்மைகளைத் தோட்டத்து மக்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை தானுங்களே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகமே தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

"சின்னதுரை அய்யாவை நான் குற்றப்படுத்துவதாக நினைக்கக் கூடாது.... ஜனங்கள் கூறுவதைப் பற்றி எனக்குக் கவலை இல்லைன்னு சின்னையா சொன்னாருங்களே, அதைப்பத்தித்தான் கூறவர்றேன்.... கிளாக்கரய்யாவூட்டு காரை தொரை ஓசி வாங்கிட்டுப் போகலாமாங்க....! நம்ம அய்யா அப்படிச் செய்யிராறு. அதுனால ஆளுக என்ன பேசிக் கிறாங்க....." சின்னதுரை என்னோட நல்ல சிநேகம்ங்கிற தைரியத்தில் கிளாக்கரய்யா துணிஞ்சிட்டாரு....."

சின்னதுரை மௌனமாக உட்கார்ந்திருந்தார். பெரியவர் ஆறுமுகத் தின் பேச்சை மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருதார். தனக்குத் தெரியாமல் சில அநியாயங்கள் நடந்திருப்பதை அவரால் எடைபோட முடிந்தது. ஆறுமுகம் பொய் பேசுவதாகவோ அதிகப் பிரசங்கித்தனம் பண்ணுவதாகவோ அவர் நினைக்கவில்லை.

"கிளாக்கரய்யாவுக்கு வேணும்கிறவங்களுக்கு ஒருதரத்திற்கு மேலே சம்பளம் குடுத்து, மேலதிகமாகக் குடுக்கிற அந்தச் சல்லியை அய்யா எடுத்துக்கிறாரு எங்கிறது எல்லாருக்கும் தெரிஞ்சுபோன ரகசியம், ஆனா இது எப்படி நடக்குதுங்கிறதுதான் ஒருத்தருக்குமே தெரியாத ரகசியமாக இருக்குது. இது எப்படி சாத்தியமனு அய்யாகூடத் திகைப்பீங்க. சின்ன துரையே இப்ப கொஞ்ச முன்னாடி சொன்னாரு சல்லி எங்கேருந்து வரும்னு! சல்லி கூட இருந்தா அப்படி ரெண்டாவது தடவையும் குடுபட லாம்ங்கிறதை ருசுப்படுத்தத் தான் மொத நாள் சம்பளம் வாங்குன பெண்ணை அடுத்த நாளும் போய் சம்பளம் கேக்கும்படி நான் தூண்டினேன்.

"நீ நேத்தே சம்பளம் வாங்கிட்டே"ன்னு ப்ரூவ் பண்ணமுடியாத துரையும் "சல்லி கூடுதலாக இருந்தா தர்றேன் போ"ன்னு சொல்லிட் டாரு.

அதே போல பெரியதுரை அய்யாவும் சொல்லிட்டீங்க: "நம்ம சின்ன துரைமார்களுக்குக் கீழே, ஆயிரம் ஆளுகளுக்கு மேலே இருப்பதாலே இன்னார் இன்னார்னு பேர்படி ஞாபக வச்சிக்கமுடியாதுன்னு!"

இது ரெண்டையும் மனசுல வைச்சுப்பாருங்க. சம்பளம் வாங்க முதல் ஆளா வந்த ஒருத்தன் மறுபடியும் அடுத்தநாள் காலையிலே வந்து துரை முன்னால் நின்றால் "இவனுக்கு நான் நேத்தே சம்பளம் குடுத்தேனே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படீங்கிற நினைவு துரைக்கு வரமுடியுமாங்க...... முடியாது. நீங்களே ஒத்துக்கிட்டீங்க எத்தனை பேரை ஞாபகப்படுத்திக்க முடியும்னு...."

"துரைக்குத்தான் தெரியாதுன்னு வச்சிக்கிடுவோம் ஆறுமுகம் கூடி நிக்கிற அத்தனை பேர்ல ஒருத்தனுக் காச்சும் தெரியாதா அவன் முதல் லேயே சம்பளம் வாங்கினது? பெரிய கங்காணிக்குத் தெரியாதா"

தன்னுடைய சந்தேகத்தைக் கேட்டார் பெரியவர், மற்றத் துரை மார்கள் இருவரும் உதடு காய்ந்துபோய் உட்கார்ந்திருந்தனர்.

"அய்யா கேட்டது ஞாயங்க ஆளுகளுக்கும் தெரியத்தான் செய்யும் அதுனாலதான் கடைசியில எல்லாரும் போனப்பறம், துரையும் காசுப் பெட்டியை மூடுனப்பறம் அவசர அவசரமாக ஓடியாற மாதிரி ஓடியாந்து கெஞ்சுறது. கேக்கிறது. அப்ப கூட்டம் இருக்காது தானுங்களே! ஆளு களுக்குத் தெரியாதா? பெரியாணிக்குத் தெரியாதான்னு கேட்டமாதிரி கிளாக்கரய்யாவுக்கு தெரியாதான்னும் கேட்டுடாதீங்க வரச் சொன்னதே அவருதானுங்களே"

ஆறுமுகம் முதல் முறையாகச் சிரித்தான்.

"தோட்டத்துக் காசை கிளாக்கரய்யா கொள்ளையடிச்சிட்டுப் போகட்டுமுங்க. அதைப் பார்க்க நீங்க இருக்கீங்க, கம்பனி இருக்குது, ஆடிட்டர்மார்கள் இருக்காங்க! ஆனா இது கால் வயிறு, அரை வயிறு காய்ஞ்சு ஒழைக்கிற ஏழை பாழைங்கவூட்டு காசுங்க. அதுக்கு நாம எடம் குடுக்க ஏலாது. அய்யாவூட்டு இந்த அட்டூழியமெல்லாம் ஏழைங் களுட்டுப் பணத்துல தாங்க நடக்குது.....நஷ்டம் துரைக்கு இல்லே. தொழிலாளிகளுக்கு! ரொட்டி திங்கிறவன் ரொட்டியும், கேக் திங்கிறவன் கேக்கும் திங்கட்டுங்க..... எங்களுக்கும் குடு, இல்லாட்டி நீயும் ரொட்டி தின்னுன்னு நான் சொல்லவல்லே! நாங்க திங்கிற ரொட்டி மாவை களவாண்டு நீ கேக் திங்காதே! அப்படீன்னுதான் சொல்ல வந்தேன்

சம்பள செக்றோல்படி எட்டாயிரம் ரூபாய்கொண்டு வந்தீங்கன்னா சம்பளம் போட்டது போக மீதி இவ்வளவு இருக்கணும்னு கணக்குப் பாக்கையில் மீதி சரியாக இருந்தால் துரைக்குத் திருப்தி. அதை வச்சித் தானே சொல்றீங்க ஒரு ஆளுக்கு ரெண்டு தரம் குடுக்க சல்லி எங்கே இருந்து வருமுன்னு. சல்லி எப்படி வருதுன்னு நான் சொன்னா அய்யா தெகைச்சுப் போயிடுவீங்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டியல் குலுக்கையில பத்து சதம், பதினைந்து சதம், இருபது சதமுன்னு தான் விழும். கடைசியில எண்ணிப் பார்த்தா எப்படி இருக்கும்? மொத்தமா அம்பது அறுபது ரூபா ஆகிவிடும். அதேமாதிரி பிச்சைதாங்க இதுவும்

ஸ்டாப் மார்களுக்குச் சம்பளம் குடுக்கையில் ஒரு கூட்டுல விவரம் எழுதித்தானே குடுக்கிறீங்க. மொத்த சம்பளம் இவ்வளவு, கழிவுகள் இன்னின்ன, மீதி இவ்வளவுன்னு, மீதி எண்பது ரூபாய் தொண்ணூறு சதம்னா காணும்தானுங்களே. எந்தக் கூலிக்காரனுக்காவது இந்த விவரம் தெரியுங்களா? தனக்குச் சம்பளம் எவ்வளவு? அதில் என்னென்ன கழிவு? மீதி எவ்வளவுங்கிற விவரம் எவனுக்காவது தெரியுங்களா? தெரியாது!

“ரெங்கசாமி கங்காணி ஆறுமுகம் அம்பது ரூபாய் இருபது சதம்” கிளாக்கரய்யா என்ன சொன்னாரோ அதை வாங்கிட்டுப் போயிற வேண்டியது. நான் எத்தனை நாள் வேலை செய்தேன்? எனக்கு என்ன சம்பளம்? அய்யா சொன்ன அம்பது ரூபாய் இருபது சதம் எப்படி வருதுங்கிற விவரம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தெரியனுங்க..... அது தெரியாதவரைக்கும் இப்படியான திருகுதாளங்கள் நடந்துக்கிட்டே தான் இருக்கும்

நல்ல வெவரம் தெரிந்த ஒருசிலருக்கு அவர்களுடைய சம்பளக் கணக்குத் தெரியும். மற்ற தொண்ணூறு வீதத்தினருக்கு அய்யா என்ன சொன்னாரோ அது தான் சம்பளம். செக்றோல்ல நாப்பது ரூபா எண்பது சதமுன்னு இருக்கும். அதை அய்யா முப்பது சதமுன்னு வாசிப்பாரு. செக்றோல்ல இருக்கிறதைத்தான் அய்யா வாசிக்கிரதா எல்லோரும் நெனைக்கிறாங்க. ஆனா அது இல்லே நடக்கிறது. யாராரு முழிச்சவன், யாராரு அப்பாவிங்கிறது அய்யாவிற்குத் தெரியும். கிழடு கட்டை ஊமை, ஒன்னும் தெரியாதது போன்றவர்களுக்கு அய்யா சொன்னது தான் சம்பளம்......

பாம்புக்கும் நோகாமல், கம்புக்கும் நோகாமல் அடிச்சே பழக்கப் பட்டவர் அய்யா, ஒரு ஆளுக்கிட்டேருந்து அம்பது சதத்துக்குமேலே புடிக்கமாட்டாரு, நாற்பது ரூபா எண்பது சதங்கிறதை நாற்பது ரூபா முப்பது சதன்னு வாகிச்சா அம்பது சதம் மிஞ்சுது. சம்பளம் வாங்கிற வனுக்கு ஒரு அம்பது சதம் வித்தியாசப்படுறது பெரிசாத் தோணாது..... சகட்டு மேனிக்கு அம்பது சத முன்னே இல்லாட்டியும் ரெண்டு பேருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டேருந்து அம்பது சதம் புடிச்சா நானூறு பேருகிட்டே என்ன ஆகும்? அந்தா இந்தான்னு நூறு நூத்தைம்பது மிஞ்சாதா...

சல்லி எங்கேருந்துவரும்? எங்கேருந்துவரும்னு சின்னய்யா பாய்ஞ் சாரே இப்படி வந்தாலும் சல்லி தானுங்களே. ஒவ்வொரு ஆளுகிட் டேயும் பத்து சதம் இருபது சதமா மிச்சம் பிடிச்சி அதை மொத்தமாக வெளியே எடுத்திடுறாரு அய்யா! துரை கிட்டே இருக்கிற இந்த கூடுதல் காசை வெளியே எடுக்கத் தான் இந்த ஆண்டியப்பன் அலமேலு மாதிரி ரெண்டொரு கையாள்! அய்யா சொன்னாரேங்கிறதுக்காக அவரை விரோதிச்சிக்க இஷ்டமில்லாமல் இதுகளும் இரண்டாவது தடவையும் துரைக்கு முன்னாடி நின்று கையில் விழுந்ததை அப்படியே கொண்டு போய் அய்யா வீட்டுல குடுத்திடுதுக.....

இது அக்கிரமமா இல்லியாங்க! இதை நிப்பாட்டணுங்கிறதுக்காக தான் ரெண்டொருத்தரை செட்பண்ணி கையில சம்பளத்தை வாங்கு முந்தி விவரம் கேட்கச் சொல்லியிருந்தேன்.... அதாவது அய்யா வாசிக் கிற தொகை எப்படி வந்திச்சீங்கிற விவரம். ரெண்டொருத்தன் கேட்டத் துக்கு கிளாக்கரய்யாவுக்கு வந்த கோபம் பேசிக் கொண்டே வந்த ஆறுமுகம் சின்னதுரையை சுட்டிக் காட்டிக் கேட்டான் "துரைகளே! அப்படி விவரம் கேட்டது கண்ணுச்சாமிதானுங்களே...."

"ஆமாம்" என்பதுபோல் தலையை ஆட்டினார் துரை.

"அந்தக் கண்ணுச்சாமி இப்ப எங்கேன்னு சின்னதுரையையே கேளுங்க."

பெரியதுரையிடம் கூறினான் ஆறுமுகம்.

ஏற்கனவே அவன் கூறிய செய்திகளால் திகைத்து வெளுத்துப் போயிருந்த பெரியதுரை, சின்னதுரையைப் பார்த்தார்.

"ஹி இஸ் டெட்!"

"வாட்..." என்று கத்திய பெரியதுரையிடம் அமைதியாகக் கூறினான் ஆறுமுகம்.

"அவன் சாகலீங்க..... அய்யா ஆளுவச்சி கொன்னுட்டார்."

பெரியதுரையால் இவைகளை நம்பவே முடியவில்லை. உதட்டை மென்றபடி சின்னதுரையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் கண்களைக் துடைத்துக்கொண்டான்.

“இதோ இருக்கானே ஆண்டியப்பன். இவனைக் கேளுங்கள். அய்யா வீட்டுக்கு வந்த ஆறேழு தடியன்களிடம் என்னையும், கண்ணுச்சாமி யையும் அடையாளம் காட்டும்படி அய்யா இவனிடம் கூறினாரா? இல்லையா? என்று.... அத்துடன் கண்ணுச்சாமி செத்த மறுநாளில் இருந்து இவனையும் காணோம். நாங்கள் சந்தேகத்தில் தேடினோம். கிளாக்கரய்யாதான் காசு குடுத்து எங்கேயாச்சும் நாலைஞ்சு நாளைக்கு தலைமறைவா இருன்னு அனுப்பயிருக்காரு.....

கடைசியா இன்னொன்னையும் கேட்டுக்கங்க. சம்பளம் வாங்கிட்ட பொண்ணு ஒன்னை மறுநாளும் நான் ஆபீசுக்குக் கூட்டிப் போனதாகச் சொன்னேன் தானுங்களே, நாங்க கிளாக்கரய்யாவுக்கு ஏதோ கரைச்சல் குடுக்கக் கெளம்பயிருக்கிறதா அவருக்குப்பட்டிருக்கு. அந்தப் பொண் ணையும் யாரோ காடையன்களைவிட்டு தூக்கிட்டுப் போயி இது அநியாயங்க அதை எனக்கு வாயால் சொல்ல ஏலாது...... உயிர் இருக்க அந்தப் புள்ளையை உரிச்சி எடுத்திட்டானுக.....

வேகாத வெய்யில்ல காஞ்சி, அஞ்சி பத்து ஒழைச்சு கஞ்சிகுடிக்கிற இந்த சனங்களை இப்படி பழிவாங்கலாமாங்க. சின்னதுரை அய்யாகிட்ட நான் பேசப்போயி வாயைத் தொறந்தா, ராங்கிக்காரன்னு சொல்லி வெறட்டிப்புடுவாரு. அதுவும் அய்யாவுடைய வேலைதான். நீங்க இப்ப ஏங்கூட பேசுறமாதிரி அமைதியா நம்ம துரை எப்பவாவது பேசியிருப் பாரா கேளுங்க”.

ஆறுமுகம் பேசிக்கொண்டே இருக்கும் போது பெரியதுரை பெரிய கிளாக்கரைக் கூப்பிட்டார்.... ஏதோ கூறினார். சின்னதுரை உடனே போய் டிவிஷன் ஆபீஸைப் பூட்டச் சொன்னார்.

சின்னதுரைமார்கள் கிளம்பும் போது பெரிய ஆபீஸை நோக்கி ஓடிவந்தான் கணபதி.

“ஆறுமுகம், ஆறுமுகம் கண்ணம்மா தூக்குப் போட்டுக்கிறீச்சி” என்று மேல்மூச்சு வாங்கிக்கொண்டு ஓடி வந்தான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

பெரியதுரையால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. ஆறுமுகம் கூறிய செய்திகள் அவரைத் திடுக்கிட வைத்திருந்தன. "இப்படி நடக்க முடியுமா?" என்று அவர் சந்தேகப்படவில்லை. ஆகவேதான் டிவிஷன் ஆபீஸைப் பூட்டி வைக்கும்படி சின்னதுரையிடம் கூறி அனுப்பினார்.

பெரிய கிளார்க்கை அழைத்து சம்பள செக்றோல் செய்யும் கிளார்க் மார் அனைவருக்கும் ஒரு 'செர்க்கியூலர்' அனுப்பும் படி உத்தரவிட்டார்.

அதன்படி ஒவ்வொரு டிவிஷன் ஆபீசிலும் சம்பள நாளன்று ஒரு 'பே லிஸ்ட்' தயாரித்து அதை வெளியே தோங்கவிட வேண்டும். அந்த லிஸ்டில் ஆட்களின் பெயரும், பெயருக்கு நேராக அவர்களுக்குள்ள சம்பளமும் குறிக்கப்பட்டிருக்கும். செக்றோலில் கையெழுத்திடும் துரையே இந்த லிஸ்ட்டிலும் கையெழுத்திட்டிருப்பார்.

சம்பளம் வாங்க வருபவர்கள் அந்த லிஸ்டிலிருக்கும் தொகை தன் கைக்கு வருகின்றதா என்று பார்த்துக் கொண்டால், அந்த மீதிச் சம்பளத்துக்கான விபரம் வேண்டுமென்றால் ஆபீசில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்த மாத லிஸ்ட் ஆபீஸ் சுவரில் ஏறும் போது ஏற்கனவே தொங்கிக் கொண்டிருக்கும் லிஸ்ட் பெரியதுரையின் பைலுக்கு வந்து விடவேண்டும்.

இந்த முறை கையாளப்பட்டால் செக்றோலிலிருக்கும் தொகையை கூட்டியோ, குறைந்தோ வாசிப்பதால் நடக்கும் ஏமாற்று முற்றாக நீங்க வழியுண்டு.

அடுத்தபடியாக ஆறுமுகத்தின் டிவிஷனல் கிளார்க்குக்கு ஒரு 'சஸ்பென்ஷன் ஓடர்' தயார்பண்ணி வைக்கும்படி உத்தரவிட்டார்.

"தான் நடத்தப்போகும் ஒரு விசாரணையில் கிளார்க் சுற்றவாளி எனக் காணப்படும் வரை ஆபீசுக்குப் போகக் கூடாது. ஆபீஸ் அலுவல் களைக் கவனிக்க பெரியாபீஸிலிருந்து ஒருவர் போகவேண்டும்."

இந்த முறையால் ஏற்படும் நன்மைகள், இப்படிச் செய்யும்படி தன்னைத் தூண்டிய காரணங்கள் ஆகியவற்றை விபரமாக அந்தக் கடிதத் தில் விளக்கியிருந்தார் பெரியதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய ஆபீஸை விட்டுக்கிளம்பிய சின்னதுரையும் குழம்பிப் போய்தான் இருந்தார்.

"ஆபீஸைப்பூட்டி சாவியை எடுத்துக்கொள்" என்று பெரியவர் சுலபமாகக் கூறிவிட்டார். என்ன சொல்லி கிளார்க்கை வெளியே அனுப் புவது? எப்படி அந்த மனிதரிடம் பேசுவது என்று யோசித்தவாறு தயங்கியபடி டிவிஷன் ஆபீஸை அடைந்த துரைக்கு ஆபீஸ் இன்னும் பூட்டிக் கிடந்தது ஆச்சரியமாக இருந்தது.

"கிளாக்கரய்யா ஏன் காலையிலிருந்து ஆபீஸுக்கு வரவில்லை" என்று யூகிக்க முடியாவிட்டாலும் தனக்கு வேலை சுலபமானதைக் குறித்து மகிழ்வே அடைந்தார்.

ஏழெட்டுப் பேருடன் டவுனை அடைந்த வீரமுத்து கிளார்க்கரய்யா வைத் தேடினான். முதலில் அவரை விரட்டிக் கொண்டு நுழைந்த அந்த கடைக்குப் போய் விசாரித்தான். அது அய்யாவின் வாடிக்கைக் கடை என்பது அவனுக்குத் தெரியும்.

கடைக்காரர் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு அய்யா அப்போதே போய்விட்டதாகக் கூறினான். அய்யா இன்னும் டவுனைவிட்டுப் போயிருக்க முடியாதென்று வீரமுத்துவுக்குப்பட்டது.

டவுனை அலசத் தொடங்கினான்.

நேற்றிரவு தாங்கள் சண்டைபோட்ட அந்த கராஜ் பக்கம் அவன் நோட்டம் விட்டுவிட்டுத் திரும்பிக்கொண்டிருக்கையில் அடுத்த சந்தில் கிளார்க்கரய்யாவின் கார் நுழைவதைக் கண்டு விட்டான்.

மற்றவர்களையும் கூட்டிக்கொண்டு குறுக்கே நுழைந்து அவன் அடுத்த சந்தை அடைவதற்கும அச்சாபீஸ் முன்னால் கிளாக்கரய்யா காரை நிறுத்துவதற்கும் சரியாக இருந்தது.

திடுதிடுவென்று ஏழெட்டுபேர் காருக்கு முன்னால் மறித்துக் கொண்டு நிற்பதைக் கண்டதும் அய்யா முதலில் தடுமாறினாலும் பிறகு சமாளித்துக் கொண்டார்.

"என்ன வீரமுத்து, என்ன இதெல்லாம் கலாட்டா"

என்று தனது அதிகாரத்தை விட்டுக்கொடுக்கா வண்ணம் இறங்கி யவர் காரின் கதவை ஓங்கி அறைந்தபடி விறைப்பாக நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுவும் உங்க தோட்டமுன்னு நினைப்பா வாலாட்டுறதுக்கு கவனமாயிரு படவாளுங்க ஒரு கை ஜாடையில அத்தனை பேரும் தூசியாப் போயிருவே, ஜாக்கிரதை!"

உறுமி மேளம் போல் கதறிவிட்டு காருக்குள் ஏறிபடாரென்று கதவைச் சாத்திக்கொண்டார்.

அய்யா சாத்திய கதவை அதே வேகத்தில் திறந்தான் வீரமுத்து.

"என்னங்க! இதுவும் உங்க ஆபீஸ் இல்லே காட்டுத்தனமா நடந்துக் கிட்டு ஜன்னலைப் பூட்டிக்கிறதுக்கு. இதே டவுனில் இருந்து ஆளு கொண்டாந்து தோட்டத்துல வச்சி ஒருத்தனை அடிக்க உங்களுக்கு முடியுமுன்னா ஒரு பெண்ணை தூக்கியாந்து கெடுக்க உங்களுக்கு முடியு முன்னா அதே தோட்டத்துலேருந்து ஆளு கொண்டாந்து உங்களை அடிக்க எனக்கும் முடியும்".

"ஒஹோ! அடிக்க ஆள் கூட்டியாந்திருக்கியோ! தெமல வேசிக்கப்புத் தாலட்ட எச்சிற் தெலத" என்றவாறு தடபுடா வென்று காரைவிட்டு இறங்கி, வீரமுத்துவை அடிக்க கையோங்கினார்.

ஓங்கிய கையை அடித்துப் பிடித்தான் வீரமுத்து.

"உன்னுடைய திமிர் இன்னும் இறங்கவில்லை இல்லையா?" என்றவாறு புறங்கையால் ஒரு அறை அறைந்தான்.

அவன் அடிக்க, இவர் அடிக்க, மற்றவர்களும் சேர்ந்து கொண்டு அவரை நொறுக்க செய்வதறியாது திகைத்தவர் காரைப் போட்டுவிட்டு ஓடத்தொடங்கினார்.

அவர் ஓட, இவர்கள் விரட்ட, பின்னால் ஒரு கூட்டம் ஓடிவர ஒரு விரசமான காட்சியாகிவிட்டது அது.

துரத்திக் கொண்டு வருபவர்கள் தன்னைப் பிடித்து விட்டால் ஆபத்து என்பதை உணர்ந்த அய்யா உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினார்.

வீரமுத்துவும் மற்றவர்களும் அவரைப் பிடித்துக் கொள்ளுமுன் தப்பிக்க எண்ணியவர் ஒரு கடைக்குள் பாய்ந்துவிட்டார். பின்னால் ஓடிவந்தவர்களும் கடைக்குள் நுழைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுக்கிட்ட கடைக்காரர் என்ன நடக்கிறது என்பதை உணருவதற் குள்ளாக சாமான்கள் பறந்தன. போத்தல்கள் நொறுங்கின. கண்ணாடிகள் கலகலத்தன.

கடைக்காரர் மெதுவாக அடுத்த கடைக்கு நழுவி பொலிசுக்குப் போன் செய்தார்.

பொலிஸ் வருவதற்குள் வீரமுத்து கிளாக்கரய்யாவை விளாசித் தள்ளிவிட்டான்.

எந்த மக்களின் வயிற்றில் அவர் அடித்தாரோ அதே மக்கள் அவரின் உடலைப் புண்ணாக்கிக்கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டருக்கு வீரமுத்துவைக் கண்டதும் ஏதோ நினைவுகள் தோன்றின.

"இந்த ஆளை எங்கேயோ கண்டிருக்கிறோம் அல்லவா?" என்று யோசித்து "அடடே பெண் கடத்தல் கேஸ் இல்லியா" என்று கண்டு பிடித்துக் கொண்டதும் அறிமுகமான ஒரு புன்னகை சிந்தினார்.

"செலாங்க" என்று பணிவுடன் கூறியவன், "இந்த ஆளுதாங்க ஒரு கொலைக்கும், ஒரு பொம்பளைக்கேசுக்கும் காரணமான ஆளு" என்றபடி அவரை இழுத்துப் பொலிஸ் முன் தள்ளினான்.

ஜீப் ஸ்டேஷனை நோக்கி விரைந்து கொண்டிருக்கையில் ஜீப்பலி ருந்து அய்யா திடீரென்று றோட்டில் பாய்ந்து விட்டார்.

ஆறுமுகமும், கணபதியும் குறுக்கில் உருண்டு விழுந்து ஓடி வந்தார்கள்.

கண்ணம்மாள் தூக்குப் போட்டுக் கொண்டாள் என்றதைக் கேட்டதி லிருந்து ஆறுமுகத்துக்கு ஒன்றும் ஓடவில்லை. நான்கு எட்டில் இறங்கி ஓடிவிடும் குறுக்குப் பாதை நாலைந்து மைலாய் நீண்டது.

"இந்தாப்பா ஆறுமுகம், நீந்தான் எம்மவளைப் பாத்துக்கிடனும்" என்று என்னிடம் உன்னை ஒப்படைத்து விட்டு ஊருக்குக் கப்பலேறிய அந்த வயோதிப ஜீவன்களுக்கு எப்படி இதைக் கூறுவேன்....? எதற்காக இந்தப் பெண் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்? யாரோ ஒரு அந்நியனால் கெட்டுப்போன இந்த உடம்பை எப்படி என் அத்தானுக் குக் கொடுக்க முடியும்? என்ற நல்லெண்ணத்தைத் தவிர வேறு ஏதாவது இருக்க முடியாதே.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யோ கண்ணம்மா, உன்மேல் நான் எத்தனை அன்பாக இருந் தேன் என்பது உனக்குத் தெரியாதா... உன்னுடைய உடலைத்தானே அந்தக் கொடுமைக்காரன் தீண்டினான். மனதைத் தீண்டவில்லையே! நீ அப்பாவி, அப்பழுக்கற்றவள், பரிசுத்தமானவள் என்பது எனக்குத் தெரியாதா?....

உன்னை நான் தள்ளிவைத்து விடுவேன் என்று கலங்கி இப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாயா?... கழுத்தில் கயிற்றை மாட்டும் போதா வது என்னை ஒரு தடவை எண்ணிப் பார்த்திருந்தால், நாம் அன்பாகப் பழகிய அந்த நினைவுகளை எண்ணிப் பார்த்திருந்தால், இறுகும் சுருக்கைக் கூட இழுத்து வீசிவிட்டு இறங்கியிருப்பாயே.....

வாழும் இந்த வயதில் இப்படி மாய்ந்துபோக எப்படிக் கண்ணா துணிந்தாய்..... இப்படி உன்னைப் பறிகொடுக்கவா உயிரைப் பணயம் வைத்து அந்த முரடர்களுடன் மோதி உன்னைக் காப்பாற்றித் தூக்கி வந்தோம்....."

காய்ச்சல்காரன் மூச்சு விடுவதுபோல் முனகியபடி இறங்கி ஓடிக் கொண்டிருந்தான் ஆறுமுகம். அவனுடைய ஓட்டத்துக்கும் நடைக்கும் ஈடுகொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தான் கணபதி.

"நீ அவளைப் பார்த்தியா கணபதி.....? அவளுடைய முகத்தைப் பார்க்க என்னால் முடியுமா.....? என்னுடன் அவள் இனிப் பேசவே மாட்டாளா?"

வாழ்க்கையில் தனக்கு இனி ஒன்றுமே இல்லாதது போல் பட்டது அவனுக்கு.

கடந்த சில தினங்களுக்குள் ஒன்றுக்குமேல் ஒன்றாக எத்தனை துன்பங்கள் அவனுக்கு.

பெற்று வளர்த்த தாய் போனாள். அவன் பெரிதும் நம்பியிருந்த உடன் பிறவாத் தம்பி போன்ற கண்ணுச்சாமி போனான். இப்போது உயிருக்கு உயிராக நேசித்த கண்ணம்மா

"முத்துப் பழனியை கூட்டியாந்து விட்டுட்டுத்தான் ஓடியாந்தேன். கயித்தை வெட்டி நான் ஆளை எறக்கையில் கண்ணு முழியெல்லாம் பிதுங்கிறிச்சி..... ஆனா மூச்சு இருந்துச்சு.... பயப்புடாதீங்க, உசிரு இருக்குன்னு அந்த அப்பச்சி என்னமோ செஞ்சகிட்டு இருந்துச்சி.... நான் ஆபீசுக்கு ஓடியாந்துட்டேன்..... அந்தப் பய வீரமுத்துவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணோம்.....” என்று கூறிக்கொண்டே ஓடி வந்துகொண்டிருந்தான் கணபதி.

“இன்னும் உயிர் இருக்கு” என்ற செய்தி ஆறுமுகத்துக்கு ஆறுதலாக இருந்தது.

“முத்துப் பழனி வந்திருக்கும் செய்தி அதைவிட ஆறுதலாக இருந்தது.

அறுபதைத் தாண்டிய அனுபவமிக்க வைத்தியன் பழனிக் கிழவன். அவன் கையில் அதிர்ஷடம் இருப்பது தோட்டம் அறிந்த சங்கதி.

விளக்கெண்ணெய்ப் போத்தலுடனும் த்னது மூலிகைப் பெட்டியு டனும் கை வைத்தியத்தில் பழனிக் கிழவன் இறங்கி விட்டால் பத்து டாக்டர்களின் பணி நடைபெறும். எந்த உயிரையும் லேசில் போக விடமாட்டான் கிழவன். ஆனால் ஆளைப் பிடிப்பதுதான் சிரமம்.

பயப்படாதீங்க என்று பழனிக் கிழவனே கூறியதாகக் கணபதி கூறியதும் ஆறுமுகம் தெம்படைந்தான்.

“வீரமுத்துவையும் காணோம்” என்று கணபதி கூறியது அவனை மற்ற விஷயங்களை நினைக்கச் செய்தன.

பெரியதுரையிடம் பேசத் தனக்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கு மென்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

சொல்லியாயிற்று! எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லியா யிற்று! இனி அவர் பார்த்துக் கொள்ளுவார். கிளாக்கரய்யாவை ஆபீசை விட்டு வெளியேற்றி ஆபீசைப் பூட்டச் சொன்னதிலிருந்து தீவிர நடவடிக் கையில் அவர் இறங்கி விட்டது விளங்கிற்று.

அதற்கு அவன் பட்ட சிரமங்கள் எத்தனை? வீமனைப் போன்ற தொரு வீரனை, லட்சுமணனைப் போன்றதொரு தம்பியை அநியாயமாக இழந்து விட்டான்.

ஆபீசில் நடக்கும் அக்கிரமங்களை எதிர்த்து அவன் உயர்த்திய போர்க்கொடியின்கீழ் ஒரு கண்ணுச்சாமி என்ன ஓராயிரம் கண்ணுச் சாமிகள் சாகலாம். கண்ணம்மாக்கள் சாகலாம். ஆனால் காலம்!.....

அது சாவதில்லை

பண பலத்தால் பதவிப் பலத்தால் சாட்சிப் பலத்தால் இன்று ஒளிந்து கொள்பவர்கள் நாளைக்கு வெளியே இழுத்துப் போடப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கும், நாளை மறுநாளும் வசதியாக ஒளிந்து கொள்பவர்கள் மறுநாளைக்கு மறு நாள் வெளியே இழுத்து வீசப்பட்டே ஆவார்கள்.

நிரந்தரமாக ஒளிந்து கொள்ள எவராலும் முடியாது! புதிது புதிதான கொள்கைகளை, கருத்துக்களை, தைரியங்களை மக்களுக்கு ஊட்டிக் கொண்டே இருக்கிறது காலம். அதுதான் மனிதர்களிடையே தோன்றும் மாறுதல்கள்" புரட்சிகள்" போராட்டங்கள்.

"வீரமுத்து என்ன ஆனான்?" என்ற கேள்வி ஆறுமுகத்துக்குள் பெரிதாக எழுந்து வளைந்து நின்றது.

"கிளாக்கரய்யாவூட்டுக் கார் வந்திறிச்சா கணபதி?" என்று கேட்டான்.

"காரையும் காணோம் ஆளையும் காணோம்" சுலபமாகக் கூறிவிட்டான் கணபதி.

"அப்படி என்றால்?" அதற்குமேல் யோசிக்கவே அவனால் முடியவில்லை. பயங்கரமாக ஏதோ நடந்துகொண்டிருப்பதை மட்டுமே அவன் உணர்ந்தான்.

ஈரப்பலா மரத்தை அவர்கள் அடைந்த பிறகும் லயத்தில் ஏதும் கூச்சல் இல்லாதது அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது.

பாய்ந்து சென்ற ஆறுமுகம் படுக்கையில் கிடந்த கண்ணம்மாவைப் பார்த்தான். அவனுடைய கண்கள் நிரம்பி விட்டன.

பெயருக்கேற்ற அந்தப் பெரிய கண்களுக்குள் விழிகள் அலை மோதின.

"இனி ஒரு நாளும் இப்படிச் செய்யமாட்டேன் உங்களைத் தனியாக விட்டு விட்டுப் போகத் துணிய மாட்டேன்" என்பது போல் அவை கெஞ்சின. மன்னிப்புக் கேட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய கையை அள்ளித் தனது நெஞ்சுக்குள் பதித்துக் கொண்டான் ஆறுமுகம்.

கட்டுப்படுத்த முடியாத துடிப்பு கண்ணீராய் வழிந்து பொட் பொட்டென்று அந்தக் கரங்களில் விழுந்தன.

"கண்ணம்மா உன் உயிர் என்னுடையது" அவனுடைய உதடுகள் அசைந்தன.

உள்ளங்கையில் எதையோ வைத்து கட்டை விரலால் நசித்தபடி உள்ளே நுழைந்த முத்துப் பழனியைக் கட்டிப் பிடித்துத் தனது மகிழ்வை, நன்றியைத் தெரிவித்துக் கொண்டான் ஆறுமுகம்.

"கண்ணம்மா நீயும் போயிட்டியா......" என்ற கத்தல் லயத்துத் தகரத்தைத் தூக்கிப் போட்டது.

ஆறுமுகமும், கணபதியும், மற்றவர்களும் வெளியே ஓடி வந்தனர்.

அலங்கோலமாக ஓடிவந்து கொண்டிருந்தான் வீரமுத்து.

அவனைத் தொடர்ந்து ஒரு வாலிபக் கூட்டமே வந்தது. "ஒண்ணு மில்லே வீரா இதோ பார் கண்ணம்மா படுத்திருக்கு இன்னும் பயம் தெளியலே நீ எங்கே போய்த் தொலைஞ்சே" என்று குரலில் எரிச்சலைக் காட்டினான் ஆறுமுகம்.

"எங்கே போனேனா.... அதோ பாருங்க"

அவன் காட்டிய திக்கில் நின்றது பொலிஸ் ஜீப்.

"என்ன..... என்ன" என்று ஆறுமுகம் பதற, வீரமுத்து பேசினான்.

"இந்தப் பொண்ணை இந்தக் கதிக்கு ஆளாக்குனவனைச் சும்மா விடலாமா?...."

"அவனைத்தான் பொலிஸ்ல பிடிச்சி..." குறுக்கிட்டான் ஆறுமுகம்.

ஆறுமுகத்தைப் பேசவிடாமல் தொடர்ந்தான் வீரமுத்து. "அவன் என்ன செய்வான் அவனும் நம்ம ஆண்டியப்பன் மாதிரி அவனைத் தூண்டி விட்டவனைச் சும்மா விடுவேனா ரெத்தத்துக்கு ரெத்தம்"

"கிளாக்கரய்யாவை என்ன செஞ்ச நீ?"

"நொறுக்கிப் புட்டேன் நொறுக்கு நொறுக்குன்னு நொறுக்கிப் புட்டேன் ஆளு இப்ப றிமாண்டுல"

பேய் போல் நின்றான் வீரமுத்து.

"நீங்கதானே ஆறுமுகம்..... நீங்க ஒரு வாக்குமூலம் கொடுக் கணும்...... அந்தப் பொண்ணு எப்படி இருக்கு?...." என்றபடி ஏறி வந்தார் இன்ஸ்பெக்டர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டரைக் கண்டதும் மற்றவர்கள் விலகி நின் றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் வீரமுத்து பக்கம் திரும்பி, "அவரை நொறுக்குறதுக்கு நீ யார்டா வீரா? இதோ இவங்க இருக்காங்களே" என்று இன்ஸ்பெக்ட ரைக் காட்டியபடி நாற்காலியை இழுத்துப் போட்டான் அவருக்கு.

"ஞாயம் இருக்குற பக்கம் நாங்களும் இருப்போம் எங்களுக்கே கொட வெளங்காம சில நேரம் தவறு நடந்தாத்தான் உண்டு"

புன்னகையுடன் பேசியபடி ஆறுமுகம் இழுத்துப் போட்ட பலகை யடித்த நாற்காலியை ஒரு கையால் தூக்கிக் கொண்டு காம்பராவின் இருட்டு மூலைக்குள் நடந்தார் இன்ஸ்பெக்டர்.

கண்ணம்மாவைப் போட்டிருந்த கட்டிலின் அருகே கதிரையைப் போட்டு அமர்ந்து கொண்டவர், பழனிக் கிழவன் ஏதோ மூலிகைகளை உள்ளங் கையில் வைத்து நசுக்குவதைப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் வந்து கட்டிலின் அருகே அமரவும் திடுக்கிட்ட கண்ணம்மா எழுந்திருக்க முயன்றாள்.

"வேண்டாம் வேண்டாம்" என்று அவளை கையமர்த்தியவர். "என்ன பெரியாஸ்பத்திரி மருந்து முடிஞ் இப்ப நாட்டு மருந்தா?" என்றார்.

"தமிழய்யாவா" என்று முனகிக் கொண்ட இரண்டொருவர் தாங் களும் உள்ளே நுழைந்து கொண்டனர்.

"ஆமாங்க நாட்டு மருந்துதான்" என்றவாறு கட்டிலின் மறுபுறம் நின்றான் ஆறுமுகம்.

அவளின் தற்கொலை முயற்சி அய்யாவுக்குத் தெரிந்துவிடக்கூடா தென்னும் அவசரம் அவனுடைய தொனியில் தெரிந்தது.

"பச்சைப்புள்ளை மாதிரிங்க! மருந்து குடிக்காம இப்படியே கெடந்து சாகப் போகுதாம்ங்க.... அதுக்காங்க அவ்வளவு செரமப்பட்டுப் பொளைக்க வச்சோம்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சை திசை திருப்பினான் ஆறுமுகம்.

"நீங்கதானே இந்தப் பொண்ணோட" என்று ஏதோ தொடங்கினார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம் கார்டியன், கட்டிக்கப்போறது எல்லாம் நான் தானுங்க இதுதான் மாட்டேங்குது...."

ஆறுமுகம் முடிக்குமுன் கட்டிலின் மறைவில் அவனுடைய கரத்தைப்பற்றி விரலை நெரித்தாள் கண்ணம்மா "என்ன பேச்சுங்க இதெல்லாம்" என்பதுபோல்.

அவளுடைய கன்னங்கள் வெட்கத்தால் சிவந்து குழம்பிக் கிடந்தன. கருநீலக்கண்கள் 'பட பட' வெனத் துடித்தன தேன் சிட்டின் இறக்கை போல்.

"நீங்கள் இங்கே இருந்தா என் வேலை முடிஞ்சாப்புல தான்.... ஒரு சின்ன ஸ்டேட்மெண்ட் எடுக்கணும் வாங்க வெளியே போவோம்" என்றவாறு இன்ஸ்பெக்டர் எழுந்து வெளியே நடந்தார்.

அவளுடைய தலையை அன்போடு வருடியபடி வெளியே நடந்தான் ஆறுமுகம்.

"நீ எனதின்னுயிர் கண்ணம்மா" என்று அவனுடைய அந்தராத்மா இசைமீட்டிக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

## காலங்கள் சாவதில்லை: ஒரு மதிப்புரை

பேராசிரியர் க. அருணாசலம்

மலையகத் தோட்டப் புறங்களில் பேரினவாத சக்திகளின் செயற்பாடுகளினால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டவாற்றையும், தோட்ட அதிகாரிகளின் அடாவடித்தனங்களையும், தோட்டங்களில் அதிகரித்து வந்த ஊழல்களையும் சித்திரிக்கும் தரமான மலையக நவால்களுள் இதுவும் ஒன்றாகும். 'சொந்தக்காரன்' நாவல் காட்டும் மலையகச் சூழ்நிலைக்கும் இடைப்பட்ட கால மலையகச் சூழ்நிலையை இந் நாவல் சித்திரிக்கின்றது.

'சொந்தக்காரன்', 'குருதிமலை', 'காலங்கள் சாவதில்லை' ஆகிய மூன்று நாவல்களையும் ஒப்புநோக்குமிடத்துச் சில உண்மைகள் புலப்படும். 1960களின் பிற்பகுதிவரையிலான மலையக நிலைமைகளைச் 'சொந்தக்காரன்' நாவல் சித்திரிக்கின்றது. 'வெள்ளையனே வெளியேறு' என்னும் குரல் நாவல் முழுவதும் ஓங்கி ஒலிக்கின்றது. அதேசமயம் இன, மொழி, மத பேதமற்ற தொழிலாளி வர்க்க ஆட்சியின் அவசியம் மிக அழுத்தமாக வற்புறுத்தப்படுகின்றது.

1970களில் வெள்ளையன் படிப்படியாக வெளியேற்றப்பட்டான். அதே சமயம் தொழிலாளி வர்க்க ஆட்சிக்குப் பதிலாகப் பேரினவாத சக்திகளின் கொடிய கரங்கள் சிறிது சிறிதாகத் தோட்டப்புறங்களில் நுழைந்து அப்பாவித் தொழிலாளர்களின் குரல் வளையை ஈவு இரக்கமின்றி நெரிக்கலாயின; தோட்டங்களில் வெள்ளைக்காரன் காலத்திற் காணமுடியா அளவிற்கு நிர்வாகச் சீர்கேடுகள் பெருகலாயின; ஊழல்கள் மலியலாயின; திருட்டுகளும் அதிகரிக்கலாயின; 'தெமல வேசிக்கப் புத்த' எனக் கூறிக் கொண்டு பெரேராக்களும் பண்டாக்களும் பொடிசிங் கேக்களும் ஆரியதாசாக்களும் தோட்டத் தொழிலாளர் மீது குதிரை விடலாயினர். தேயிலை உற்பத்தியும் மிக மோசமாக வீழ்ச்சியடையலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றினது முதலாம் கட்ட வளர்ச்சியினையே 'காலங்கள் சாவதில்லை' நாவல் சித்திரிக்கின்றது. இரண்டாம் கட்ட வளர்ச்சியினை மிகச் சிறந்த முறையில் 'குருதிமலை' நாவல் சித்திரிக்கின்றது. தோட்டங்கள் தேசியமயமாதல் என்ற போர்வையில் சிங்களமயமாகிக் கொண்டிருந்த உண்மையினைத் திரு.ஞானசேகரன் துல்லியமாகவே

வெளிப்படுத்தியுள்ளார். வெள்ளையன் என்னதான் குள்ளநரித் தந்திரம் கொண்டவனாகவும் வஞ்சகனாகவும் விளங்கியபோதும் தோட்டத் தொழிலாளர்களை அற்பத்தனமாக இனவாதக் கண்ணோட்டத்தில் நோக்கியதில்லை; இன சங்காரச் செயல்களில் ஈடுபட்டதுமில்லை.

தோட்டங்களிலிருந்து வெள்ளையன் வெளியேறியதும் வெளியே றாததுமான ஈரடிநிலையினையே இந்நாவல் சித்தரிக்கின்றது. வெள்ளைத் துரைமார் எல்லோரும் குரூரமானவர்களல்லர்; அவர்களுள்ளும் நல்ல வர்கள் இருக்கலாம். இனவெறி முதலைகளான சின்னத்துரை, கிளாக்கர் முதலியோரால் அல்லற்பட்ட தோட்டத் தொழிலாளர் வெள்ளையனும் நல்லவனுமான பெரியதுரையைத் தகப்பன் மாதிரி எனக் கருதியதில் வியப்பெதுவுமில்லை. அதற்கான காரணங்களையும் இந்நாவலின் பிற்பகுதியிலேயே நாவலாசிரியர் விரிவாகக் காட்டியுள்ளார்.

"தோட்டத் தொழிலாளரின் பிரதான எதிரியாகக் கிளாக்கரைக் காட்டி, பெரியதுரையான ஆங்கிலேயனை நல்லவனாகக் காட்டுவது உண்மைக்குப் புறம்பானதென்றும் வகுப்புவாத உணர்வைத் தூண்டுவதாக அமைந்துள்ளதென்றும் இந்நாவல் பற்றி விமர்சிக்கப்பட்டுள்ளது" என ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

'சொந்தக்காரன்', 'காலங்கள் சாவதில்லை' ஆகியவற்றின் தொடர்ச் சியாக அமையும் 'குருதிமலை' யிலும் பண்டா, கண்டக்டர், சங்கக் கடை மனேஜர், பெரிய கிளாக்கர் முதலியோரே தொழிலாளரின் பிரதான எதிரிகளாகக் காட்டப்பட்டுள்ளனர். இவையெல்லாம் உண்மைக்குப் புறம்பானவையா? வகுப்புவாத உணர்வைத் தூண்டுவனவா? இவ்விரு நாவாலாசிரியர்களும் தோட்டப்புறங்களின் யதார்த்த நிலைமைகளை நன்கு புரிந்துகொண்டவர்கள்; உண்மைக்குப் புறம்பாக அவர்கள் அவற்றைக் கூறவில்லை; எந்த ஒரு இடத்திலும் வகுப்புவாத உணர் வைத் தூண்டவுமில்லை என்பதை அவ்விரு நாவல்களையும் கருத் தூன்றிப் படித்தவர்களும் தோட்டப்புறங்களின் யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டவர்களும் ஏற்றுக் கொள்வர்.

இந்நாவலில் வரும் அத்தனை பாத்திரங்களும் மலையகத்துத் தோட்டங்களில் ரத்தமும் சதையுமாக வாழ்பவர்கள். உழைப்பையே நம்பி வாழும் ஒரு மக்கள் கூட்டத்தின் அபிலாஷைகள், விருப்பு வெறுப்புகள், நலிவு நம்பிக்கைகள் பற்றியும், அவர்களுக்கு இழைக்கப் படும் அநீதிகள், கொடுமைகள் பற்றியும் இந்நாவல் கூறுகின்றது.

"இனம், மொழி, மதம், அரசியல் போன்ற எந்தவித பிரிவினாலும் மக்கள், மக்களை வெறுக்கக் கூடாதென்று திடமாகக் கருதுகின்றவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்....." எனத் தமது கருத்தினை மிகமிகத் தெளிவாகவே தெளிவத்தை ஜோசப் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது. ஒருமுறையைப் போலப் பலமுறை கிளாக்கரையா தனது அடாவடித்தனங்களுக்கு எதிர்ப்புக் காட்டிய வீரமுத்து, ஆறுமுகம் போன்றவர்களிடம், "தெமல வேசிக் கப்புத்தா" எனவும், "தெமல வேசிக்கப்புத்தாட தன்னனே மம கவுத கியலா" எனவும் "ஒன ஜாதிட அப லேஸ்திசு" எனவும் கூறுவதும், அவரால் ஏவப்பட்ட பொலிஸ்காரர்களும் காடையர்களும் தொழிலாளரை நோக்கிப் பலமுறை இவ்வாறு கூறுவதும், வெறுமனே நாவலாசிரியரின் கற்பனை அன்று. தோட்டப்புறங்களில் மட்டுமன்றி நாட்டின் சகல பகுதிகளிலும் 1950களின் பிற்பகுதியிலிருந்து இற்றைவரை இத்தகைய பேரினவாத வெறியைத் தாராளமாகக் காணமுடிகின்றது. ஆயின் எத்தகைய சந்தர்ப்பங்களிலும் ஆறுமுகமோ வீரமுத்துவோ கண்ணுச் சாமியோ ஏனைய தொழிலாளர்களோ இத்தகைய இனவாதம் பேசிய தில்லை. மாறாகத் தோட்டப்புறங்களை அண்டியுள்ள நாட்டுப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் அப்பாவிச் சிங்களத் தொழிலாளர்களுடன் ஒற்றுமையாகவும் இணைந்தும் பிணைந்தும் திருமணம்செய்தும் நீண்ட காலமாக வாழ்ந்து வந்துள்ளனர்; வாழ விரும்புகின்றனர் என்னும் யதார்த்த நிலையைச் 'சொந்தக்காரன்', 'காலங்கள் சாவதில்லை', 'குருதிமலை' முதலிய நாவல்கள் மிக மிகத் தெளிவாகவே வெளிப் படுத்தியுள்ளன.

ஆயின், இவ்வாறு தொழிலாளர்களும் அப்பாவிச் சிங்கள மக்களும் இணைந்தும் பிணைந்தும் வாழ்வதை அறவே விரும்பாத பேரினவாத சக்திகளே அவர்களைப் பிரித்து வைக்கும் வகையிற் செயற்பட்டு வருகின்றனர் என்னும் யதார்த்தத்தைக் 'குருதிமலை' நாவல் விண்டு காட்டுதல் இவ்விடத்தே மனங் கொளத்தக்கது. இந்நாவலிலும் அத்தகைய கருத்துக்கள் இடம்பெறுகின்றன. எடுத்துக்காட்டாகத் தொழிலாளரின் லயத்துள் புகுந்து இரவிற் குளித்துக் கொண்டிருந்த கன்னிப் பெண்ணான கண்ணம்மாவை எங்கிருந்தோ வந்த காடையன் கற்பழிக்க முயலலாமா? எனக் கண்ணுச்சாமி பொலிசாரிடம் வினவியபோது, "எங்க லயம்கிறான் அவன். எங்க தோட்டம் கிறே நீ. இன்னும் கொஞ்ச நேரம் போனா எங்க நாடுன்னு கூடச் செல்லுவே. ஒங்க ஆயிபுருஷனூட்டா தோட்டம்" எனப் பொலிசார் கூறுவதில் பேரினவாத வெறி மேலோங்கி நிற்பதும் இத்தனைக்கும் பிறகு கண்ணுச்சாமி "வேணாத கதை பேசாதையா" என மட்டுமே கூறுவதும் சிந்திக்கத்தக்கவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கான காரணத்தையும் நாவலாசிரியர் ஆங்காங்கே புலப் படுத்திச் செல்கின்றார். ஓரிடத்தில் "....அவர்களைக் குறை சொல்லிப்

பயனில்லை; நம்மால், நமது பரம்பரையால், நமது தலைவர்களால் உருவாக்கிவிடப்பட்ட ஒரு உறுதியான அபிப்பராயம் இது" என இரத்தினச்சுருக்கமாகக் கூறியுள்ளமை மனங்கொளத்தக்கது. தெளி வத்தை ஜோசப்பின் 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம்' என்னும் நாவலும் இவ்வகையில் கூர்ந்து நோக்கத்தக்கது.

தொழிலாளரின் அண்மைக்கால 'எரியும் பிரச்சினை' களான குடியுரிமை, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவசதியற்றநிலை, முதலாளி வர்க்கத்தின் அடக்குமுறை என்ப வற்றுக்கு இந்நாவலில் முக்கியத்துவமளிக்கப்படவில்லை என்றும் தொழிலாளரது பிரச்சினைகளுக்கான திட்டவட்டமான தீர்வு இந் நாவலிற் புலப்படுத்தப்படவில்லை என்றும் விமர்சகர் ஒருவர் குறைப் பட்டுள்ளார்.

தெளிவத்தை ஜோசப்பின் 'பாலாயி', 'ஞாயிறு வந்தது', 'மனம் வெளுக்க' முதலிய குறுநாவல்களையும் 'காலங்கள் சாவதில்லை', 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம்' முதலிய நாவல்களையும் கூர்ந்து நோக்கினால் அவர் என்றுமே 'எரியும் பிரச்சினை' களுக்கே முக்கியத்து வமளித்துள்ளதையும் 'எரியாத பிரச்சினை' களுக்கு முக்கியத்துவமளிக் காமையையும் அவதானிக்கலாம். 'பாலாயி' நாவல் குடியுரிமைப் பிரச்சினைக்கு முக்கியத்துவமளிக்கின்றது. வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள வசதியற்ற நிலை, முதலாளி வர்க்கத்தின் அடக்குமுறை ஆகியன மட்டுமன்றிப் பேரினவாத சக்தி களின் அடக்குமுறையும் அடாவடித்தனங்களும் கூட 'காலங்கள் சாவதில்லை', 'ஞாயிறு வந்தது', 'மனம் வெளுக்க', 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம்' முதலிய நாவல்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளமையை அவதானிக்கலாம்.

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளையே நிறைவு செய்து கொள்ளமுடியாது தவிக்கும் அப்பாவித் தொழிலாளர்களின் மிகவும் சொற்பவருவாயையும் கிளாக்கரையா, சின்னத்துறை அதிகாரிகள் ஈவு இரக்கமின்றிச் சுரண்டிக் கொழுக்க முயல்வதையும் அதனைத் தட்டிக் கேட்க புறப்பட்ட ஆறுமுகம், கண்ணுச்சாமி முதலியோரையும் அவர் களுக்குத் துணை நின்ற வீரமுத்து, கண்ணம்மா முதலிய தொழிலாளர் களையும் இனவெறியைக் கிளப்பிப் பழிவாங்க முயல்வதையும் அவற்றுக் கெதிராகத் தொழிலாளர்கள் மேற்கொண்ட தீரம்மிக்க போராட்டத் தையும் அவர்கள் இறுதியில் ஈட்டிய வெற்றியையும் 'காலங்கள் சாவ தில்லை' என்னும் நாவல் முதன்மைப்படுத்தியுள்ளதை அவதானிக் கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை மலையக நாவலாசிரியர்கள் சித்தரிப்பது தவிர்க்க முடியாததே. 'காலங்கள் சாவதில்லை' என்னும் நாவலில் இடம்பெறும் ஆறுமுகம், கண்ணுச்சாமி, வீரமுத்து முதலிய தொழிலாளர்களது போராட்டங்களும் இவ்வகையானதே. அவை வெறுமனே சம்பவச் சுவை பொருந்திய வீரசாகசங்களல்ல. காடையன் ஒருவன் இரவில் குளித்துக் கொண்டு நிற்கும் கன்னிப் பெண் மீது பலாத்காரம் பிரயோகிக்க முயன்றால் அதனைப் பார்த்துக் கொண்டு கைகட்டி வாளாவிருக்க முடியுமா? காடையர்கள் கன்னிப் பெண்ணைக் கடத்திச் சென்று கற்பழிக்க முனைந்தால் பெண்ணின் உறவினர்கள் கண்களை இறுக மூடிக்கொண்டிருப்பார்களா?

இவற்றையுணராத விமர்சகர் ஒருவர், 'இந்நாவலிற் பிரச்சினைக்கு அழுத்தம் கொடுப்பதற்குப் பதிலாக வீரம், காதல், சோகம் முதலிய உணர்ச்சி முனைப்புகளுக்கு முதன்மை தரப்பட்டுள்ளது. அவ்வகையில் முதற் பாதி பிரச்சனைகளைச் சித்திரிப்பதாகவும் பிற்பாதி சம்பவச் சுவை பொருந்திய வீர சாகசக் கதையாகவும் அமைந்துவிட்டது' எனக் குறைப் பட்டுக் கொள்கிறார்.

'காலங்கள் சாவதில்லை' என்னும் தலைப்புப் புலப்படுத்தும் பொருள் பற்றி நாவலின் சில இடங்களில் தெளிவான விளக்கம் கொடுத் துள்ளார். அவரது விளக்கத்தில் வாழ்க்கையின் அடிப்படைத் தேவை களை நிறைவு செய்து கொள்ளத் தவிக்கும் தொழிலாளர்களையும் அவர்களது உழைப்பினைக் குள்ளத்தனமாகத் திருட முயலும் தீய சக்தி களையும் ஒருங்கே காணலாம்...........

.........இந்நாவலில் இரண்டு இடங்களிலேயே 'வீர சாகசங்கள்' (பிரபல விமர்சகர் குறிப்பிடுவது போல) இடம் பெறுகின்றன. முதலா வதாக, இரவில் குளித்துக் கொண்டிருந்த கண்ணம்மாவைக் கெடுக்க முயன்ற காடையர்களுக்கும் கண்ணுச்சாமி, வீரமுத்து முதலியோருக்கு மிடையிலான மோதல். இச்சம்பவத்தில் வீமன் எனப் புகழப்பட்ட கண்ணுச்சாமி பொலிசாரால் சுட்டுக் கொல்லப்படுகின்றான். இரண்டா வதாக, கண்ணம்மாவைக் கடத்திச் சென்று கற்பழித்துக் கொண்டிருந்த காடையர்களிடமிருந்து கண்ணம்மாவை மீட்கும் பொருட்டு நடத்திய வீரசாகசம். இதில் வீரமுத்து முக்கிய இடம் பெறுகிறான். மலையக மக்களின் முக்கியமான சமய பண்பாட்டு நடவடிக்கைகளில் சிலம்படி வித்தை (கம்புவீச்சி)யும் அன்று தொட்டு இன்றுவரை முக்கியமான இடத்தைப் பெற்று வருதல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும் 'சீனடி சிலம்படி' என்ற தொடரும் இவ் வகையில் மனங் கொளத்தக்கது. இவ்வகையில் நோக்கும் போது நாவலில் இடம்பெறும் கண்ணுச்சாமியின் உக்கிரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பு வீச்சு வெறுமனே நாவலாசிரியரின் கற்பனையோ வீரசாகசச் சித்திரிப்போ அல்ல என்பது புலப்படும். இன்றும் கூடத் தோட்டத்துக்குத் தோட்டம் கம்பு வீச்சில் வல்ல இளைஞர்களைக் காணலாம்.

மலையகத் தொழிலாளர்கள் ஏழைகளாக இருக்கலாம்; கல்வி அறிவற்றவர்களாக இருக்கலாம்; நாளும் பொழுதும் கடினமான உடலுழைப்பை மேற்கொள்ளும் அவர்களுட் கணிசமானவர்கள் உடலுரமும் உளவலிமையும் வாய்க்கப் பெற்றவர்கள், தியாக உள்ளம் படைத்தவர்கள், துணிச்சல் மிகுந்தவர்கள் என்பதை நாம் மனங்கொளல் வேண்டும். சோகமும் வேதனையும் அவலங்களும் நிறைந்த அவர்களது நீண்டகால வரலாற்றில் அவர்கள் நடத்திய தீரம் மிக்க போராட்டங்கள்! செய்துள்ள உயிர்த்தியாகங்கள்! எதிர் நோக்கிய சவால்கள்! ஏற்பட்ட பேரிழப்புகள்! எண்ணிலடங்காதவை. மாத்தளை ரோகிணி அவர்களால் எழுதி வெளிடப்பட்ட ‘உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள்’ (1993) என்னும் நூல் இவ்வகையில் உற்று நோக்கத்தக்கது. அத்தகைய ஆயிரக்கணக்கான தியாகிகளுள் ஒருவனே இந்நாவலில் இடம் பெற்றுள்ள கண்ணுச்சாமியுமெனலாம்.

‘தொழிலாளரது பிரச்சினைகளுக்கான திட்டவட்டமான தீர்வு இந்நாவலிற் புலப்படுத்தப்படவில்லை’ என்பது இன்னொரு குறையாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவ்வகையில் தெளிவத்தை ஜோசப்பினைச் சற்றே மறந்து விட்டு மலையகத்தின் ஏனைய நாவலாசிரியர்ளை நோக்கலாம். அவர்களுள் எவராவது ‘திட்டவட்டமான’ தீர்வுகளைக் காட்டியுள்ளனரா? மலையக நாவலாசிரியர்களைச் சற்றே மறந்துவிட்டு, ஈழத்தின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த நாவலாசிரியர்களைச் சற்றே மறந்துவிட்டு, தமிழகத்து நாவலாசிரியர்களையும் வேண்டுமானால் உலகின் புகழ்பூத்த நாவலாசிரியர்களையும் நோக்கலாம். அவர்களுள் எவராவது மனிதகுல வர்க்கத்தின் பிரச்சினைகளுக்குத் திட்டவட்டமான தீர்வுகளைக் காட்டியுள்ளனரா? அவ்வாறு காட்டப்பட்டிருப்பின் அவை யாவும் நடைமுறைப்படுத்தப்பட்டனவா? நடைமுறைப்படுத்த முடியாது போயிருப்பின் அவற்றுக்கான காரணங்கள் யாவை? இவை பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

நாவலாசிரியர்களைச் சற்றே மறந்துவிட்டு உலகின் மாபெரும் அவதார புருஷர்களையும் ஞானிகளையும் தத்துவ மேதைகளையும் மனிதகுல விமோசனத்தின் பொருட்டு அவர்கள் செய்த தியாகங்களையும் கூறியுள்ள அறிவுரைகளையும் காட்டியுள்ள நெறிமுறைகளையும் கூர்ந்து நோக்கலாம். ஆயின், மனிதன் தோன்றிய நாள் முதல் இற்றை வரை பிரச்சினைகள் தான் தீர்ந்தபாடில்லை. ஒரு பிரச்சினை தீர ஒன்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் உருவாகும்; ஒன்பது பிரச்சினைகள் தீர தொண்ணூறு பிரச்சினைகள் உருவாகும். இவற்றுக்கு முடிவே இல்லைப்போலும்!

காலம் காலமாக மனிதகுலம் எதிர்நோக்கி வந்துள்ள மாபெரும் சவால்களுக்கும் பாரிய பிரச்சினைகளுக்கும் மேற்கொண்டு வந்த தீரம்மிக்க போராட்டங்களுக்கும் சொல்லொணாத் துயரங்களுக்கும் அவலங்களுக்கும் மாபெரும் இழப்புகளுக்கும் கௌதம புத்தர் முதல் பகவான் சத்திய சாயிபாபா வரை, கிறிஸ்து முதல் முஹம்மது நபிவரை, அரிஸ்டோட்டில், பிளேட்டோ முதலியோர் தொடக்கம் கார்ல்மாக்ஸ் வரை,..... எவராவது திட்டவட்டமான தீர்வுகளைக் கண்டனரா? காட்டினரா? என்பது சிந்திக்கத்தக்கது.

இந்நிலையில் நாம் தெளிவத்தை ஜோசப்பை நோக்கி, 'ஏனப்பா, மலையகத்தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் 'திட்டவட்ட மான' தீர்வுகளாக, சர்வரோக நிவாரணியாக ஒன்றும் சொல்லவில்லையே' என ஒப்பாரி வைப்பது சிறுபிள்ளைத்தனமானது; சகிக்க முடியாதது; ஓரவஞ்சகமானது; உண்மைகளை உணர மறுப்பது எனலாம்.

'வீரம், காதல், சோகம் முதலிய உணர்ச்சி முனைப்புகளுக்கு முதன்மை தரப்பட்டுள்ளது' என்பது இன்னொரு குறைபாடாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. யானறிந்தவரை 'மலையக' நாவலாசிரியர்களோ சிறுகதையாசிரியர்களோ கவிஞர்களோ இதுகாலவரை தமது படைப்பு களில் காதல் கீதத்தையோ வீரதீரத்தையோ முற்றுமுழுதாகக் காட்டிக் கொண்டிருக்கவில்லை. கல்கியையும் அகிலனையும் பார்த்தசாரதி யையும் சாண்டியல்யனையும் மணியனையும் அவர்களைப் போன்ற பிறரையும் மலையகத்தில் காண்பது அரிது.

'காதல்'! அது மனித இயற்கை, அனைத்து உயிர்களின் சுபாவம். வீரமும் அத்தகையதே. ஆயின் காதலும் வீரமும் தான் வாழ்க்கை என்பதல்ல. அவை வாழ்க்கையின் பிரிக்க முடியாத ஓரங்கமே. இந் நாவலில் இடம்பெறும் ஆறுமுகம் கண்ணம்மா காதல் நிகழ்ச்சிகள் 'பரந்த வானில் மின்னல் கீற்றுப்போல்' சிற்சில இடங்களில் தொட்டுக் காட்டப்படுகின்றனவே தவிர அவை எந்த ஒரு இடத்திலும் கதை யினை ஆக்கிரமிக்கவோ கதையோட்டத்தைத் தடைப்படுத்தவோ இல்லையென்பது மனங்கொளத்தக்கது.

மேலும் பரம ஏழைகளாகவோ கல்வி அறிவற்றவர்களாகவோ தோட்டத் தொழிலாளர்கள் விளங்கினாலும் அவர்களும் எலும்பும் சதையும் கொண்ட மனிதர்களே. 'வெறுமனே உழைக்கின்ற இயந்திரங் களோ மரக்கட்டைகளோ அல்லர்; அவர்களுக்கும் நாடி நரம்புகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி உண்டு; நெஞ்சம் நிறைந்த ஆசாபாசங்கள் உண்டு; காதல் உண்டு; வீரம் உண்டு; அவர்கள் கோழைகளல்லர். சோகம்? மனித வாழ்வில் வேறு எவற்றுக்குப் பஞ்சம் ஏற்பட்டாலும் சோகத்துக்கு பஞ்சமே கிடையாது. உலகின் தலை சிறந்த எந்த இலக்கியப் படைப் பிலும் சோகச் சுவை துருத்திக் கொண்டு நிற்பதை அவதானிக்கலாம். 'வாழ்வில் சோகம்' என்பது பொதுவாகப் பல சமூகத்தினருக்கும் பொருந்தக் கூடியதே. ஆயின், மலையகத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை 'சோகமே வாழ்க்கை' என்பதே மிகமிகப் பொருத்தமானது. அவர்களது வரலாறே சோக வரலாறுதான். 'உலகின் ஒவ்வொரு சமூகத் தினருக்கும் சோகத்தைப் பங்கிட்டுக் கொடுத்துக் கொண்டு வந்த இறைவன் இறுதியில் மலையகத் தோட்டத் தொழிலாளரிடம் வந்த போது சோகம் அதிக அளவில் மிஞ்சியிருந்தது. அவை அத்தனையையும் அவர்களிடமே கொட்டி விட்டு தப்பியோடி விட்டார் போலும்'.

புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி' முதல் மாத்தளை சோமுவின் 'அவள் வாழத்தான் போகிறாள்' என்னும் நாவல் வரை மலையகத் தொழிலாளர் பற்றிய சகல படைப்புகளிலும் சோகச் சுவை கூடவோ குறையவோ இடம்பெற்றுள்ளமை மனங்கொளத்தக்கது.

இந்நாவலிற் காணத்தக்க முக்கியமான அம்சங்களுள் ஒன்று, எழுச்சி யுற்று வரும் தோட்டத் தொழிலாளரின் இளைய தலைமுறையினரது செயற்பாடுகள் எனலாம். தோட்டத்து இளைய தலைமுறையினர் முதிய தலைமுறையினர் போன்று எல்லாவற்றுக்கும் 'ஆமாம் சாமி' எனத் தலைகுனியத் தயாரில்லை; தோட்டத்து அதிகாரிகள் செய்யும் அட்டூழியங்களையும் திருட்டுத்தனங்களையும் கண்டு பொறுத்துக் கொண்டிருப்பவர்களுமல்லர்; உலக நடப்பியல்புகளை அறிந்து கொள் வதில் நாட்டம் கொண்டவர்கள்.

அதிகமானோர் ஓரளவாவது எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள்; தோட்டப்புறங்களில் ஆதிக்கம் செலுத்த முனைந்து கொண்டிருந்த பேரினவாத சக்திகளுக்கெதிராகவும் தோட்ட அதிகாரிகளின் கெடுபிடி களுக்கும் அடாவடித்தனங்களுக்கும் எதிராகவும் அவர்கள் உக்கிரமாகப் போராட வேண்டியிருந்தது. இந்நாவல் சித்தரிக்கும் காலப்பகுதியினது தோட்டப்புறங்களின் யதார்த்த நிலைமை இதுவேயாகும். நாவலின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை இவ்வுண்மையினை நாவலாசிரியர் வெளிப்படுத்தத் தவறவில்லை.

தோட்டத்தின் இளைய தலைமுறையினருள்ளும் 'புல்லுருவிகள்' உள்ளனர் என்பதை ஆண்டியப்பன், அலமேலு ஆகிய பாத்திரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாக நாவலாசிரியர் உணர்த்தத் தவறவில்லை. ஆண்டியப்பனும் அலமேலுவும் தங்களது அறியாமையும் வறுமையும்காரணமாகத் தொழிலாளர்களின் பிரதான எதிரிகளுக்கு அனுசரணையாக நடந்து கொண்டபோதும் நாளடைவில் உண்மையை உணர்ந்துகொண்டதும் தொழிலாளர்களுக்கு உதவியாகச் செயற்படுவதும் தொழிலாளர்களின் எதிரிகளை வீழ்த்துவதில் முக்கிய பங்குகொள்வதும் மனங்கொளத் தக்கவை.

காலத்தின் போக்கினை உணர்ந்து செயற்படத் தவறிய சின்னத்துரை, கிளாக்கர் முதலியோரைப் பெரியதுரை கண்டிக்குமிடத்து, “இது தொழிலாளர் யுகம்! அவர்களை அடக்கிவைத்து வேலைவாங்கவும் வேண்டும், அணைத்துக் கொள்ளவும் வேண்டும். இரண்டில் எது கூடி னாலும் ஆபத்து ஆபத்துத்தான். ஆள்பலத்தை மட்டுமே நம்பி ஆட்சியேறும் அரசியல்வாதிகள் ஒருபுறம் அப்பாவிகளான தொழிலாளர் களைத் தங்களால் முடிந்தளவு உணர்ச்சி வசப்படுத்தி வைத்துக் கொள் கின்றனர். தங்களுடைய அரசியல் லாபத்துக்காக அறிவுப்பலத்தை ஆள்பலத்துக்கு அடிமையாக்கிவிட முயலும் இவர்கள் தேசத்துரோகிகள்” எனவும், “தொழிலாளருடன் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்! அதுவும் இந்த நாட்களில் அவர்களுடன் பழகுவது கத்தி முனையில் நடமாடுவது போன்றது. ஒரு தவறினாலும் ரத்தக் களரிதான் ஏற்படும்” எனவும் கூறுவது சிந்திக்கத்தக்கது.........

..........தெளிவத்தை ஜோசெப்பின் எழுத்தாற்றல் விண்டுரைக்கத்தக்க ஒன்றாகும். அவர் பாத்திரங்களின் உரையாடல்கள், சிந்தனைகள், செயற்பாடுகள், குணசித்திர வளர்ச்சி முதலியவற்றைத் துல்லியமாக வெளிப்படுத்துவதில் வல்லவர். பாத்திரங்களின் மிக நுட்பமான மன உணர்வுகளையும் மனச்சலனங்களையும் கூடத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். நாவல் முழுவதும் கறிக்கு உப்புப் போட்டது போல் அளவாகவும் அதே சமயம் உள்ளத்தில் ஆழமாகப் பதியுமாறும் பலவகைச் சுவைகளையும் கையாண்டுள்ளமை விதந்து கூறத்தக்க தொன்றாகும்.............

...........இந்நாவலின் மிக முக்கியமான பகுதிகளுள் ஒன்றாக ஒன்ப தாம் இயல் அமைகின்றது. பொலிசாரால் அநியாயமாகச் சுடப்பட்டு மரணமான கண்ணுச்சாமிக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நடாத் தப்பட்ட கூட்டத்தில் கருத்து முரண்பாடு கொண்ட கட்சியினர், தோட் டத்து டிவிசன் தலைவர்கள், பல்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந் தவர்கள், தோட்டத் தொழிலாளருக்கு அக்கிரமங்கள் செய்து கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்த அதிகாரிகளின் வால்பிடிகள், பாடசாலை ஆசிரியர், அதிகாரிகளின் அட்டூழியங்களை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தத் துடித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் முதலியோர் பங்குபற்றினர். அவர்களது காரசாரமான விவாதங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட கருத்துகள் மிக முக்கியமானவை. தோட்டத்தில் நடந்துகொண்டிருந்த அக்கிரமங்களையும் அநீதிகளையும் ஊழல்களையும் தொழிலாளர்களிடையே பிளவினை ஏற்படுத்தி மோதவிட்டு அவற்றின் மூலம் சுய லாபம் தேட முனையும் கயவர்களின் வஞ்சகச் செயல்களையும் தகுந்த ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துபவை.

இதேபோன்று இந்நாவலின் பதினோராம் பன்னிரண்டாம் பதின்மூன்றாம் பதினான்காம் பதினைந்தாம் இயல்களும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன; நாவலாசிரியரது நோக்கத்தினை நிறைவு செய்கின்றன. இடையறாப் போராட்டத்தின் மூலமும் தியாகங்களின் மூலமுமே தீய சக்திகளை அழித்து அப்பாவி மக்களைக் காப்பாற்றலாம், அமைதி காணலாம் என்னும் உண்மையையும் எழுச்சியுற்றுக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளரின் முன்னேற்றத்திற்குக் குறுக்கே எத்தனை நந்திகள் படுத்துக்கொண்டாலும் எத்தனை பேரினவாத சக்திகளும் நயவஞ்சகம் படைத்த அரக்கர்களும் சொல்லொணாக் கொடுமைகளையும் ஈவிரக்கமற்ற அரக்கத் தனமான செயல்களையும் மேற்கொண்டு வந்தாலும் அவர்களது முன்னேற்றத்தை எத்தகைய அசுர சக்திகளாலும் தடுத்து நிறுத்த முடியாது. அத்தகைய கொடூர சக்திகள் அப்பாவித் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற் பெரும் பின்னடைவினை ஏற்படுத்தலாம், ஆயின், அதன்பின் ஏற்படும் முன்னோக்கிய திடீர்ப் பாய்ச்சலை எவ்வித தீய சக்திகளாலும் தடுத்து நிறுத்த முடியாது என்னும் உண்மையையும் 'சத்தியமே இறுதியில் வெல்லும்' என்னும் மெய்ப்பொருளையும் விண்டு காட்டுவதாக இப்பகுதிகள் விளங்குதல் மிகவும் கருத்தூன்றி நோக்கத்தக்கவை. இதுவே இந்நாவலின் தனிப்பட்ட சிறப்பும் எனலாம்.


நன்றி

'மலையகத் தமிழ் நாவல்கள்: ஓர் அறிமுகம்',

(குமரன் புத்தக இல்லம், 2000) பக். *359 - 381.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெளிவத்தை ஜோசப்: மலையக இலக்கியத்தை செழுமைப்படுத்தி எழுதி வரும் மூத்த எழுத்தாளர். மலையக மக்களின் வாழ்வை மண் மணங்கமழ எழுதி, இலக்கிய முன்னோடியாகத் திகழ்பவர். மலையக எழுத்தாற்றலை வெளிப்படுத்திய மலையக எழுத்தாளர் மன்ற சிறுகதைப் போட்டிகளில் இரண்டுமுறை முதற்பரிசு பெற்றவர். இக்கதைகள் 'கதைக் கனிகள்' என்ற தொகுதியாக வெளியாயிற்று. 'மலைமுரசு' நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது 'நாமிருக்கும் நாடே' முதற் பரிசைப் பெற்றது. 'காலங்கள் சாவதில்லை' (1974), 'நாமிருக்கும் நாடே' (1979), 'பாலாயி' (1997), 'மலையக சிறுகதை வரலாறு' (2000), 'குடை நிழல்' (2010) என்று நாவல், சிறுகதைத் தொகுதி, குறுநாவல் தொகுதி, ஆய்வு என பல நிலைகளில் நூல்களை வெளியிட்டுள்ள இவரின் 'நாமிருக்கும் நாடே' என்ற சிறுகதைத் தொகுதி 1979ஆம் ஆண்டின் சிறந்த படைப்பிற்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. கலைமகளில் இவர் நிறைய எழுதியிருக்கின்றார். இலங்கையின் எல்லா இதழ்களிலும், பத்திரிகைகளிலும், வானொலியிலும் இவரது கதைகள் இடம்பெற்றுள்ளன. திரைப்படத்துறையிலும் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. 'புதிய காற்று' என்ற படத்தின் வசனகர்த்தா இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-955-0350-04-9
9 789550 350049
விலை ரூபா 650.00
P 005